எல்லாம்
உன்னாலே...
இன்பா அலோசியஸ்
சுபா வெளியீடு

எல்லாம் உன்னாலே

இன்பா அலோசியஸ்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

எல்லாம் உன்னாலே

1

இந்த உலகம் அழகாய்த் தெரிவது
என் இதயம் துடிக்கும் உணர்வு
என் சுவாசத்தின் ரிதம்
இவையனைத்தும் புதிதாய்...
எல்லாம் உன்னாலே!

காலை நான்கு மணிக்கு சுப்பிரமணி எழுந்து வரும் முன்னரே, அரக்கப் பரக்க, காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தான், தமிழ் என்ற தமிழன்பன்.

தந்தைக்குப் பிடித்த இட்லி, சாம்பார், வடை என மிகச் சாதாரணமான உணவைத் தயார் செய்து கொண்டிருந் தாலும், அதைத் தயாரிக்கும் முன்பே வியர்வையில் குளித்திருந்தான்.

''ஆண்டவா! எப்படித்தான் தினமும் சமைக்கிறாரோ? ஒருநாள் சமைக்கும் முன்னாடியே, எனக்கு நாக்கு தள்ளுதே!'' வாய் அதன் போக்கில் புலம்பினாலும், தந்தையின் பிறந்தநாளுக்காகச் சமைப்பது அவனுக்குப் பிடித்திருந்தது.

தமிழ் பிறந்த இரண்டே வருடங்களில், அவன் தாய் பார்வதி இறந்துவிட்டார். அதன் பிறகு தன் மகனுக்காக வென்றே வாழும் சுப்பிரமணி, உற்றார் உறவினர் எவ்வளவோ சொல்லியும் மறுமணத்தை மறுத்தார். ''என் மனசில் மட்டுமல்ல; வாழ்க்கையிலும் ஒரே பெண்தான்! அது என் பார்வதி மட்டும்தான்...'' என உறுதியுடன் இருந்த அவரிடம் போராடிக் களைத்து, இந்த உலகத்தை விட்டும் போய்விட்டார்கள், அவரது பெற்றோர்கள்.

சுப்ரமணியோ, பார்வதி அவரை விட்டு எங்கும் செல்லாமல், தன்னோடே இருக்கிறார் என்று நம்பினார். நம்புவது மட்டுமல்ல, அவர் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அது வெளிப்படும். காலையில் எழுந்தவுடன் மனைவியின் புகைப் படத்தைப் பார்த்து, காலை வணக்கம் சொல்வது துவங்கி, இப்போது இந்தச் சமையல் செய்யப் போகிறேன் எனத் தொடர்ந்து, வேலைக்குச் செல்லும் போது, போயிட்டு வரேன்ம்மா! என முடிக்கும் வரை, அவரது நாட்கள் பார்வதியுடனே கழியும்.

தமிழாசிரியரான சுப்பிரமணி, தமிழ் மேலிருந்த பற்றின் காரணமாகவே, மகனுக்குத் தமிழன்பன் எனப் பெயர் சூட்டினார். தமிழுக்கு, அவனது தாயைப் புகைப்படத்தில் பார்த்த ஞாபகம் மட்டுமே! மற்றபடி, அவனுக்குத் தாயாக, தந்தையாக, வழிகாட்டியாக, ஆசானாக என்ற அனைத்தும்,

அவனது தந்தைதான். ஒரு சின்னக் குறைகூட வைக்காமல் அவனை வளர்க்கவே, தாய் இல்லாதது பெரிய குறையாகவே தெரியவில்லை அவனுக்கு.

சொல்லப்போனால், அவர் அப்படி தெரிய விட்டதில்லை என்பதுதான் சரியாகயிருக்கும். சிறுவயது முதலே, அவர் தாயின் புகைப்படத்துடன் உரையாடு வதைக் கண்டு வளர்ந்ததால், அவனுக்குமே தாயின் மேல் அதிகப் பிடிப்பு வளர்ந்திருந்தது.

அவனும், எதைச் செய்வதாக இருந்தாலும், தந்தையிடம் சொல்வதைப் போல, தாயிடமும் சொல்லிவிடுவான். அவன் குழந்தையாக இருந்தபோது, தந்தையின் தியாகம் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால்,, வளர வளர, தந்தை தாயின் மேல் கொண்ட அன்பும், பாசமும் குறையாததைக் கண்டு வியந்தான்.

தாயின்மேல் எப்படியொரு அன்பிருந்திருந்தால், இரண்டேவருடத் தாம்பத்திய வாழ்க்கையைக் கொண்டு, இருபதுவருடம் அவரால் வாழமுடிந்தது என்பது அவனுக்கு ஆச்சரியமே.இப்படியொரு அன்பை அனுபவிக்கக் கொடுத்து வைக்காமல் சென்றுவிட்ட தாயை எண்ணி மிகுந்த வருத்தப்பட்டான். அப்படி அவர்கள் மட்டும் இருந்திருந் தால், தானும் தந்தையும் இப்படித் தனியாக்க் கஷ்டப்பட வேண்டியிருக்காதே என்பதை நினைத்த போது, அவனையறியாமலேயே ஒரு பெருமூச்சு கிளம்பியது.

அவனது யோசனைகளைக் கலைப்பதுபோல், குக்கரின் விசில்சத்தம் கேட்கவே, ''சூ! எதுக்கு இப்படிச் சத்தம் போட்டு அப்பாவை எழுப்புற? என்னோட சர்ப்ரைஸைக் கெடுத்திருவ போல!'' என்று குக்கரிடம்

சண்டைக்குப் போனான். அதற்குள் அடுத்த விசிலும் வரவே, கிச்சன் கதவை மூடினான்.

அவன் சமையலை முடித்து காஃபி போடும் வேளையில், கிச்சனுக்குள் உள்ளே வந்த சுப்பிரமணி திகைத்துப் போனார். இரவு உடையுடன், தலையில் ஒரு டவலைக் கட்டிக் கொண்டு சமையல் செய்தவனிடம், ''தமிழ்! நீ கிச்சனுக்குள் என்னப்பா செய்யிற?'' என வேகமாகக் கேட்டார்.

''காலை வணக்கம் அப்பா! இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள். இந்தாங்க! முதல்ல காஃபி குடிங்க!''

''ரொம்ப நன்றிப்பா. அதெல்லாம் சரி, நீ கிச்சனுக்குள் என்ன செய்யிறன்னு கேட்டேன்!'' என்றார் காப்பியை அருந்தியவாறே.

''கிச்சனுக்குள்ளே என்னப்பா செய்வாங்க? சமையல் தான்! ஹி ஹி!'' சொல்லிவிட்டு, காப்பியை எடுத்துக் கொண்டு ஹாலுக்குச் சென்றான்.

''அதான், நீ எதுக்குச் செய்யிறன்னு கேட்டேன்! எல்லாம் நான் செய்ய மாட்டேனா? உங்க அம்மா இருந்திருந்தால், உன்னைக் கிச்சன் எந்த பக்கம் இருக்குன்னு பார்க்க்கூட விட்டிருக்க மாட்டாள். அவளோட மனசு என்ன பாடுபடும்?'' மனைவியின் நினைவில் அவர் முகம் கனிந்தது.

''அம்மா இருந்திருந்தால், உங்களைக் கூடத்தான் கிச்சனுக்குள்ளேயே விட்டிருக்க மாட்டாங்க. நீங்க மட்டும் செய்யலையா? அதெல்லாம், நான் உங்களைக் கவனிக்கிறதைப் பார்த்து, சந்தோசம்தான் படுவாங்க!'' அவனும் விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

''பார்த்தியா பார்வதி! உன் பையன் என்ன சொல்லுறான்னு? நான் வேற, நீ வேறயா? உன் இடத்திலிருந்து, நான்தானே அவனைப் பார்த்துக்கணும்'' என்று ஹாலில் மாட்டியிருந்த, தன் மனைவியின் புகைப்படத்தைப் பார்த்துக் கேட்டார். புகைப்படத்திலிருந்த பார்வதியோ, அன்பொழுகத் தன் கணவனையும், மகனையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

''இன்னைக்கு உங்க பிறந்தநாளாச்சேன்னு, ஒரு சேஞ்சுக்காகச் சமைச்சேன். ஏதாவது சமையல்காரரை வைக்கலாம்னு சொன்னாலும், நீங்கதான் கேக்கவே மாட்டேங்கறீங்க!''

சமையல்காரியைக் கூட வேண்டமென்று சொல்லும் மகனை வேதனையாகப் பார்த்த சுப்பிரமணி, 'நான் நம்ம பையனை சரியா வளக்கலையா பார்வதி? பொண்ணுங்க என்றாலே, காதத் தூரம் ஓடுறானே! நீ இருந்திருந்தால், இப்படி ஆகியிருக்காதோ?'' அவர் முகம் வேதனையைப் பிரதிபலித்தது.

''என்னப்பா! ஏன் உங்க முகம் வாடிடுச்சு? பிறந்த நாளும் அதுவுமா, சந்தோசமா இருக்குறதை விட்டுட்டு!'' -குறைபட்டான் தமிழ்.

''வயசான காலத்தில் எனக்கென்ன பிறந்தநாள் வேண்டிக் கிடக்கு?'' -அலுத்துக் கொண்டார்.

''நாம அதுக்காகவா கொண்டாடுறோம்? வருஷத்தில் நாம பண்டிகை எதையுமே கொண்டாட முடியலன்னுதான், இப்படிக் கொண்டாடுறோம்?'' அவன் குரலில் மெல்லிய ஏக்கமிருந்தது.

''நம்ம வீட்டுக்கு ஒரு மகாலஷ்மியைக் கூட்டி

வரேன்னு சொல்லு. இன்னைக்கே நான் கிச்சனுக்குள் போறதை நிறுத்திடுறேன். அதை விட்டுட்டு... வேலைக்கு ஆளெள்ளாம் வேண்டாம்!'' கோபமும், கண்டிப்புமாகச் சொன்னார்.

''நினைச்சுட்டே இருங்க; வரப்போறவளுக்கும் சேர்த்து, நீங்கதான் ஆக்கிப்போட வேண்டியிருக்கும்!'' கேலி பேசினான்.

''அதுக்கென்னடா? அதுவும் என் மக தானே! என் மகளுக்கு நான் சமைச்சுப் போட்டால் குறைஞ்சுடுவேனா?''

''உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை? ச்சே! நான் கிறிஸ்தவனா பொறந்திருந்தால், ஃபாதராவாவது ஆயிருப்பேன்! இப்போ, அதுக்கும் வழியில்லாமல் போச்சு!'' -அலுத்துக் கொண்டான். ''நான் பார்க்குக்குப் போறேன். நீங்க வரீங்களா?'' கேட்டுக் கொண்டே, உடைமாற்றச் சென்றான்.

தமிழுக்குப் பெண்கள் என்றாலே ஒரு பெரிய ஒதுக்கம். அதற்காக, அவனுக்குப் பெண்களைப் பிடிக்காதென்று அர்த்தம் இல்லை. அதென்னவோ, தந்தையுடனே வளர்ந்ததால், பெண் வாசனை இன்றியே அவன் வளர்ந்தான்.

சுப்ரமணியம் ஆண்கள் பள்ளியில் வேலை பார்த்ததால், அவனையும் தன்னோடே அழைத்துச் சென்று விடுவார். பள்ளியில் அவனுடன் பழகியவர்கள் அனைவருமே ஆண் நண்பர்கள்தான். கல்லூரியிலும் சிவில் இன்ஜினியரிங் படித்ததால், அங்கேயும் அனைவரும் ஆண்கள் தான்.

இப்படியாக அவனது உலகம் ஆண்களைச் சுற்றியேச் சுழன்றது. அவன் சந்தித்த ஒன்றிரண்டு பெண்களிடம் கூட,

பிரச்சனைகளையும் சேர்த்தே சந்தித்ததால், பெண்கள் என்றாலே கூச்சமும், பயமும் அவனுக்கு வந்துவிடும்.

பத்து ஆண்களைக் கூட புரட்டித் தள்ளிவிடும் வீரம் கொண்டவன், ஒரு பத்துவயதுச் சிறுமியிடம்கூட பேச மாட்டான். அப்படியே பேசும் சூழல் வந்தால், அங்கிருந்து எவ்வளவு முடியுமோ, அவ்வளவு வேகமாக ஓடியே போவான்.

வெள்ளை நிற ட்ராக் சூட்டில், காலில் ஸ்போர்ட்ஸ் ஷூவுடன் வெளிவந்த மகனுடன், தானும் சேர்ந்து கொண்டார். தமிழ் மெதுவாக ஓட, சுப்பிரமணி வேகமாக நடைபயின்றார்.

தமிழ் ஆறடி உயர ஆண்மகன், அலையலையான கேசம், அடர்த்தியான புருவங்கள், கூர்மையான நாசி, மோவாயை மறைத்த மீசை. சிரித்தால் தெரியும் தெத்துப்பல், இது அவனுக்குப் பெரிய வசீகரத்தையே கொடுத்தது.

ஆனால், பெண்களிடம் அவன் இதுவரை சிரித்ததே இல்லை ஆகையால், பெண்கள் இவனைச் சுற்றி வட்டமிட்ட தில்லை. அப்படியே இவன் யாரையாவது பார்த்துச் சிரித்தால், நிச்சயம் அவன் சிரிப்பில் அவள் இடறி விழுவது உறுதி.

படிப்பை முடித்து, ஒரு பெரிய கம்பெனியில், கட்டட வடிவமைப்பாளராக இருக்கிறான். மிகுந்த திறமையானவன் அது மட்டுமில்லை; இவனைத் தனியாக அணுகும் வாடிக்கையாளர்களுக்கு, சுமார் ஐந்நூறு சதுர அடி இடத்தில் கூட, அழகான, பாந்தமான, சிக்கனமான வீட்டை அமைத்துக் கொடுப்பதால், நிறைய வாடிக்கையாளர்கள் உண்டு.

எதிரில் ஜாகிங் செய்தவாறு வந்து கொண்டிருந்த ஒரே உயிர் நண்பன், இவர்களைக் கவனிக்கவில்லை. அவனது

கவனம் முழுவதும், சற்று முன்னால் ஓடிக் கொண்டிருந்த பெண்ணின் மீதே நிலைத்திருந்தது.

''தமிழ்! வர்றது, நம்ம தேவநாதன் தானே...?''

'அட ஆண்டவா! இந்தத் தேவா என்னைக்குத்தான் திருந்துவானோ' மனதுக்குள் புலம்பியவன், ''ஆமாப்பா. அவனேதான்...!'' அவர்கள் நெருங்கி வந்து விட்டாலும், தேவா இவர்களைக் கண்டுகொள்ளாமல் அவள் பின்னாலேயே ஓடினான்.

''உனக்கு, இப்படியொரு ஃபிரண்டு!'' தலையிலடிக் காத குறையாகச் சொன்னார் சுப்பிரமணி.

'இந்தத் தடியனை என்ன செய்தால் தகும்?' பற்களைக் கடித்தவன், ''அப்பா! நீங்க போயிட்டே இருங்க; நான் இதோ வரேன்...'' எனவும், சுப்பிரமணி எதுவும் சொல்லாமல் தன் நடையைத் தொடர்ந்தார்.

தன்னைத் தாண்டிச் சென்ற தேவாவை ஐந்தே எட்டில் ஓடிப் பிடித்தவன், அவன் போட்டிருந்த டி-ஷர்ட்டில், அட்டாச் ஆகியிருந்த தொப்பியைப் பிடித்து இழுத்து நிறுத்த முயன்றான்.

ஆனாலும், அதைக்கூட உணராமல், ஓடிக் கொண்டே இருந்தான் அவன். தானும் ஒரு மூன்று எட்டு ஓடிய தமிழ் தன் கால்களை அழுந்த ஊன்றி, சட்டென அவனைப் பிடித்து நிறுத்தினான்.

தமிழ் உடும்புப் பிடியாக நிறுத்தவே, ''ஐயோ! அண்ணா! நான் ஜாகிங்தான் போறேன். முன்னாடி போறது, எனக்குத் தங்கச்சி மாதிரி. நீங்க நினைக்கிற மாதிரி, எதுவுமே இல்லை!'' என்றவன், விட்டால் காலில் விழுந்திருப்பான் போல.

''அடச்சே! நிறுத்துடா... தொடநடுங்கி! இவ்வளவு பயம் இருக்குறவன், ஏண்டா இப்படி பொண்ணுங்க பின்னாடி ஜொள்ளு விட்டுச் சுத்துற? உன்னையெல்லாம் திருத்தவே முடியாது.''

''டேய் தமிழ்! நீயாடா? நான், யாரோ எவரோன்னு பயந்துட்டேன்!'' ஈயென்று இளித்தவாறே சொன்னான் தேவா.

''யாரோ எவரோன்னு இல்லை, அந்தப் பொண்ணோட அண்ணன்காரன் வந்துட்டானோன்னு தானே, பயந்த?'' தமிழ் நேரடியாகக் கேட்க, அதற்கும் அசட்டுச் சிரிப்பையே உதிர்த்தான்.

''இப்படி இளிச்சுத் தொலையாதடா! சகிக்கலை. எதிர்ல நாங்க வர்றது கூடத் தெரியாமல், அப்படி உலகமே இருண்டு போய், அவ பின்னாடி ஓடுறியே... உனக்கு வெக்கமாவே இல்லையாடா?'' -காறித் துப்பாத குறையாகக் கேட்டான்.

''நாங்களா? அப்பாவும் உன்னோட வந்துருக்கா ராடா? இதை முதல்லையே சொல்லுறதில்ல. நீ வா. நாம அப்பாவைப் பாக்கப் போகலாம்.'' எதுவுமே நடவாததுபோல் அவன் சொல்ல, தமிழ்தான் நொந்து போனான்.

''ஏண்டா! நான் காறித் துப்பாத குறையா கேக்குறேன்... நீ அதுக்குப் பதிலே சொல்லாமல் போற?''

''நீ என்னடா கேட்ட? நான் என்ன உன்னை மாதிரி... சாமியாரா? என் உடம்பில் இளரத்தம் ஓடுதுடா. நாங்கலாம்... இப்படித்தான் இருப்போம். இதெல்லாம் யூத்து செய்யும் வேலை. உனக்குப் புரியாது. நீ வாடா!'' தமிழை விட்டுவிட்டு முன்னால் செல்ல, அவனைப் பின்தொடர்ந்தான் தமிழ்.

2

புல்லில் உறங்கும் பனித்துளி
காலைச் சூரியன்
வானில் பறக்கும் பறவைகள்
இவையனைத்தும் புதிதாய்...
எல்லாம் உன்னாலே!

''லுங்கி டான்சு... லுங்கி டான்சு... லுங்கி டான்சு...!'' ஸ்டீரியோவில் ஹிந்திப் பாடல் அலற, அதோடு சேர்ந்து பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள் பாரதி. ஐந்தரையடி உயரம், பிறை நெற்றி, கழுத்துவரை வெட்டிவிட்ட கூந்தல், வில்லாக வளைந்த புருவம், உருண்டை நாசி, ஆரஞ்சுச் சுளையென உதடு, ஆப்பிள் கன்னம், சங்குக் கழுத்து, பார்ப்பவரை வசீகரிக்கும் அழகு அவள்.

''பாரதி! ஏய் பாரதி!'' அவளது தாய் கீழிருந்து குரல் கொடுப்பது, அவளதுச் செவிகளை தீண்டமுடியாத அளவுக்குப் பாடலின் சத்தம் இருக்க, பற்களைக் கடித்தவாறு, வேகமாகப் படியேறினார் சுதா.

போன வேகத்தில் சாத்தியிருந்த பாரதியின் அறைக்கதவைத் தட்ட, 'இதற்கெல்லாம் நான் அசையவே மாட்டேன்' என்பது போலிருந்தது பாரதியின் நிலை.

உள்ளே பாரதியோ, அந்தப் பாடலின் சரணத்தில் இப்போது புகுந்திருந்தாள். ''இப்படிப் பாட்டை அலற விட்டுக் கேக்கலன்னா, இவ காதுல விழாதா?'' என

வாய்விட்டுப் புலம்பியவர், அவளாக வந்து கதவைத் திறக்கப் போவதில்லை என்பது புரிய, கதவைத் தள்ளித் திறந்தார்.

செவிப்பறை கிழிந்துவிடும் அளவுக்கு ஒலி அவர் காதில் மோதவும், 'எங்கே காது செவிடாகி விடுமோ' என்று ஒரு நொடி பயந்தார். பார்வையோ, 'பாரதி எங்கே?' என்று தேடியது.

தாய் வந்ததைக்கூட உணராமல், டிரெசிங் டேபிள் முன்னால் நின்று, கண்ணுக்கு மை தீட்டிக் கொண்டிருந் தாள் அவள். வாயோ, அதன் வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது.மகளின் அழகில் பெருமிதம் கொண் டாலும், அடுத்த நொடியே கோபம் தலைக்கேறி யதில், வேகமாகச் சென்று, ரிமோட்டை எடுத்து, ஸ்டீரியோவைப் பட்டென நிறுத்தினார்.

''லுங்கி டான்சு...'' பாடலோடு சேர்ந்து கத்திக் கொண்டிருந்த அவளது குரல் மட்டும் இப்போது கேட்க, அதை நிறுத்தியவள், ''கோன் ஹே?'' என்று ஆத்திரத்தில் கோபமாகக் கேட்டாள்.

''என்னடி கோன்...? அதைத் தமிழ்ல கேட்கமாட்டியா? எவ்வளவு ஆசையா, பாரதின்னு பேர் வச்சேன். நீ என்னன்னா, வாயைத் திறந்தாலே ஹிந்தி பேசுற!'' -அவளைக் கடிந்தார்.

'' ஏ க்யாஹே மா? ஓகே. ஓகே. கோபப்படாதீங்க. நீங்க எனக்குப் பாரதின்னு பேர் வச்சீங்க என்பதற்காக, என்னால் 'போயம்' எல்லாம் எழுத முடியாது.

''உங்க நியாயம் நல்லா இருக்கே! பாரதின்னு பேர் வச்சால், தமிழ்ல தான் பேசணும்; அப்போ, அண்ணனுக்குக்

கூட ஜகதீஷ்னு பேர் வச்சிருக்கீங்க. ஒரு நாளைக்காவது, ஜகதீஷ் சந்திரபோஸ் போல, ஏதாவது புதுசாக் கண்டுபிடின்னு சொல்லி இருக்கீங்களா?

''அதென்ன, என்கிட்ட மட்டும் எப்போப் பாத்தாலும் தமிழ்ல பேசச் சொல்லுறது?ஏ பில்கூல் டீக் நஹி ஹே மா!'' ஹிந்தியும் தமிழும் கலந்துத் தாயைச் செல்லமாக வறுத்தெடுத்தாள்.

''ஏண்டி! தாய்மொழியில் பேசச் சொல்லுறது, அவ்வளவு பெரிய குத்தமா? காலங்காத்தாலே... சுப்ரபாதம் கேட்டால் பரவாயில்லை; இதென்ன காட்டுக் கத்தல்?'' -கோபமாகக் கேட்டார்.

''சுப்ரபாதம் போட்டால் மட்டும், அப்படியே பொறுமையா கேட்டுடுவீங்களா?'' என்றவள் வேகமாக சட்டென்று அதைப் போட, அதுவும் ஹிந்தியிலே பாடியது.

''பாரதி! என்ன இது? முதல்ல அதை நிறுத்து. எப்போடா இங்கே இருந்து ஓடிப்போவோம்னு இருக்கு. இந்த ஹிந்தியைக் கேட்டாலே, இப்போல்லாம் ஆத்திரமா வருது. முதல்ல, சென்னைக்கு மூட்டை முடிச்சைக் கட்டணும்.

''ஏற்கனவே, சென்னையிலிருந்து இங்கே ஓடித்தானேம்மா வந்தீங்க?'' -அலுப்பாகக் கேட்க, அதைக் கவனிக்கும் நிலையில் சுதா இல்லை. அவர் தன்போக்கில் புலம்பிக் கொண்டிருந்தார்.

''அஞ்சு வருஷம்னு சொல்லி, இங்கே கூட்டி வந்தார். அஞ்சு, அஞ்சு வருஷம் முடிஞ்சுடுச்சு, இன்னும் சென்னை போன பாட்டைக் காணோம். எப்போதான், இதுக்கெல்லாம் ஒரு முடிவு வருமோ?'' என்றவர், கலங்கிய தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

ஒருபோதும் தாயை இப்படிக் கலங்கிக் கண்டிராத பாரதி, ''பைட்டியேமா! (உக்காருங்கமா), சென்னையில, நமக்கு யார் இருக்கா? அங்கே உங்களை ஏத்துக்காமல்தானே, மும்பை வந்தீங்க? இங்கே வந்து இருபது வருஷத்துக்கு மேலே ஆகுது; இப்போ என்ன புதுசா...? சரி, நான் ஹிந்தி பேசக் கூடாதுன்னா... பேசலை!'' என்று சொல்லிக் கொண்டிருந்தவள், அப்போதுதான், தான் பேசிய அனைத்துமே ஹிந்தி என்பதை உணர, நாக்கை கடித்துக் கொண்டு, பரிதாபமாகத் தாயைப் பார்த்தாள்.

அதே நேரம், ''அம்மா! நான் உங்களைக் கீழே தேடினால், இங்கே என்ன செய்யிறீங்க? ஏய் குட்டிச் சாத்தான்! காலையிலேயே அம்மாவோட என்ன வம்பு?'' என ஜகதீஷ் கேட்க, சிலிர்த்து எழுந்தாள் பாரதி.

''டேய் கோட்டான்! என்னை ஏண்டா, குட்டிச் சாத்தான்னு சொன்ன? இரு. நைட், உன் ரூமுக்கு வந்து சாமியாடுறேன்! அப்போதான், நீ வழிக்கு வருவ.'' -எகிறினாள்.

''இப்போவே அதைத்தான் செஞ்சுட்டு இருக்க; இதில், புதுசா வேற ஆடணுமா?'' அவன் விடாமல் வழக்கடிக்க, பாரதியின் கோபம் எல்லை கடந்தது.

''ஜக்கு! இன்னைக்கு நீ காலிடா...'' என்று சொன்னவள், ஜக்கிலிருந்த தண்ணீரைத் தூக்கிக் கொண்டு அவனைத் துரத்த, ''பாரதி! அவன் உன் அண்ணன்...'' என்று சுதா கடிந்தார்.

''இவன் என் அண்ணனா? இல்ல... கோட்டான்.''

''ஏய் பாரதி! சொன்னா கேளு... நான் ஆபீஸ் கிளம்பிட்டேன். ப்ளீஸ் பாரதி! வேண்டாம்...'' என்றவாறு

அறையை விட்டு ஓடினான்.

''ஜக்கு! நில்லுடா! சொன்னா கேளு... இன்னைக்கு இந்தத் தண்ணியால், உன்னை அபிஷேகம் செய்யாமல் விடமாட்டேன்!'' இரண்டுமுறை ஊற்ற முயன்றும், அவன் விலகிவிடவே மிஸ் ஆனது.

அந்தக் கோபமும் சேர, அவனை விடாமல் துரத்தினாள். ஓடியவன், ஒரு கட்டத்தில் நிற்கவே, அவன்மேல் நீர் ஊற்றும் வேளையில், சரியாக அவன் விலகிவிட, அவன் பின்னால் நின்ற சிவத்தின் மேல் அந்த நீர் அபிஷேகமாகப் பொழிந்தது.

''ஐயோ! அப்பா! சாரிப்பா... நான், இல்லை இவன்தான்...'' ஜக்கை வேகமாக அங்கிருந்த ப்ளவர் வாஸ் அருகில் வைத்துவிட்டாள்.

''அதானே பாத்தேன்... என்னடா, நான் பார்த்து பார்த்துக் கட்டிய வீட்டுக்குள்ளே எப்படிடா மழை பெய்யிதுன்னு? எல்லாம் உங்க வேலை தானா? ஏண்டா! பெரியவன் தானே நீ? தங்கச்சிகிட்ட பார்த்து நடந்துக்கத் தெரியாது?''

ஜகதீஷோ, திடீரெனச் சுற்றும் முற்றும் வேகமாகத் தேடினான். ''ஜக்கு! நான் உன்கிட்ட பேசிட்டு இருக்கேன்; நீ என்னடா தேடுற?'' மனைவி கொடுத்த டவலை வாங்கியவாறே கேட்டார்.

''இல்ல. என்னோட தங்கச்சின்னு சொன்னீங்களே... எங்கேன்னு தேடுறேன்!'' அவன் சிரிக்காமல் சொல்ல, சிவன் பக்கெனச் சிரித்துவிட்டார்.

''ஜக்கு! உனக்கு, என்னைப் பாத்தால் எப்படித் தெரியுது? கொஞ்சம் முன்னாடி குட்டிச்சாத்தான்னு சொன்ன.

இப்போ, தங்கையே இல்லன்னு சொல்லுற. என்ன இது?'' கால்களைத் தரையில் உதைத்துச் சிணுங்கினாள் பாரதி.

''ம்ம். இப்போ வேணா ஒத்துக்கறேன், நீ என் தங்கச்சின்னு...'' அவள் சிணுங்குவதைக் கேலி செய்தான்.

''பாருங்கப்பா...'' ஓடிப் போய், தந்தையின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

இதுதான் சிவன். மகள் என்ன செய்தாலும், கடிந்து கொள்ளவே மாட்டார். ஜகதீஷும், தந்தையும், அவளும் சேர்ந்தால் வீடே ரணகளமாகும். அவர்களுக்கு இணையாகப் பேசுவது மட்டுமல்ல; தொழிலிலும் அவர்களுக்கு இணையாக இருந்தாள்.

பாரதியையும், தனது இன்னொரு மகன் என்றே அறிமுகம் செய்வார் சிவன். அவர்களது தொழில்முறை நண்பர்களுக்கும் அவளைப் பற்றித் தெரியுமாதலால், அதை ஒத்துக் கொள்வார்கள்.

''நல்லா இருக்கு நீங்க செய்யிறது. அண்ணனும், அப்பாவும் சேர்ந்து... அவளை, இப்படிக் கோவில் மாடுமாதிரி ஏத்திவிடுங்க. ஏற்கனவே இவ ஆம்பளை மாதிரி திரியிறா; எனக்கு, அதுவே வயித்தில் புளியைக் கரைக்குது.

''இதில், நீங்க ரெண்டு பேரும் சப்போர்ட்டு வேற. பொண்ணா... லட்சணமா, டீச்சர், டாக்டர் இப்படி ஏதாவது படிக்க வைங்கன்னு சொன்னால், அதைச் செய்யாமல், தொழிலுக்கு உபயோகம்னு சொல்லி, இஞ்சினியரிங் படிக்க வச்சீங்க.

''அப்படிப் படிக்கவச்சது கூட, தப்பில்லை. ஏதோ பாஷன், இல்ல கம்ப்யூட்டர் இப்படிப் படிக்க வைக்காமல், சிவில் படிக்க வச்சு, நாப்பது ஆம்பளை மத்தியில், ஒத்தப்

பொம்பளைப் புள்ளையா படிச்சுட்டு வந்தா. அதே மாதிரி உடுப்பு வேற. இப்போ ஒரு கம்பெனிய வேற தனியா வச்சுக் கொடுத்து, எம்.டி.யா உட்கார்த்தி வச்சாச்சு. வேலை செய்யிறது ஃபுல்லா... ஆம்பளைங்களோட. இதெல்லாம் எங்கே போய் நிக்கும்னு, எனக்குத் தெரியலை?

''அவளுக்குக் கல்யாணம் காட்சி செஞ்சு வைக்கணும்னு, எண்ணம் இருக்கா... இல்லையா? அவ பொண்ணு. இப்படி ஆம்பளை மாதிரி, அவளை ஆக்காதீங்க. ஜக்கு! நீயும் இப்போ உங்க அப்பாவோட சேர்ந்துட்டு, அவளை ஏத்தி விடுறியேடா?'' -அங்கலாய்த்தார்.

ஆனால், அவரது அங்கலாய்ப்பைக் கேட்பதற்கு, ஜகதீஷோ, பாரதியோ அங்கே இருக்கவில்லை. சிவன் மட்டுமே நின்று கொண்டிருந்தார்.

''என்னங்க நீங்க! நான் சொல்லுவதைப் பெருசாவே எடுக்க மாட்டேன்னு இருக்கீங்க அவளுக்கு இப்போ இருபத்தி மூணு வயசாச்சு. இன்னும் சின்னப் பிள்ளை மாதிரி விளையாட்டு. அதிலும், பொண்ணா... அடக்க ஒடுக்கமா இல்லாமல்... என் வேதனை... உங்களுக்கெல்லாம் சிரிப்பா இருக்கா?'' சிவன் சிரிப்பதைப் பார்த்து, அதற்கும் கத்தினார்.

''இப்போ எதுக்குத் தேவையில்லாத கவலை? அவ தைரியமா ஒரு கம்பெனியை வச்சு நடத்துறது, எனக்கு எவ்வளவு பெரிய சந்தோசமா இருக்கு! அதைப் புரிஞ்சுக்காமல்... இருபத்தி மூணு வயசு, ஒரு வயசா? இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்!''

சுலபமாகச் சொல்லிவிட்டார் சிவன். ஆனால், சுதாவின் மனம்தான் அடித்துக் கொண்டது. மகள், மகளாக இல்லாமல், உடுத்தும் உடை முதல், செய்யும் தொழில்

துவங்கி, பழகும் மனிதர்கள் வரை அனைவருமே ஆண்கள் என்றாகிப் போக, 'இவளைப் பற்றி தெரிந்த யாருமே... அவளைத் திருமணம் செய்ய முன்வர மாட்டார்களோ?' என்று பயந்தார். ஏற்கனவே இவர்களுக்குப் பிடித்த இரண்டு வரன்கள் கூட, 'எங்களுக்கு அடக்க ஒடுக்கமான பொண்ணுதான் வேணும், இப்படி ஆம்பளை மாதிரி இல்லை!' எனச் சொல்லிவிட, அன்று முதல் சுதா கலங்கிப் போனார்.

அதுவரை மகளின் தைரியம், துணிச்சல், தனித்துவம் என அனைத்தையும் வியந்தவர், குடும்ப வாழ்க்கைக்கு அவள் செட்டாகவில்லை என்று சொல்லி வரன்கள் மறுக்கத் துவங்கவே, ஒரு தாயாகக் கவலை கொள்ளத் துவங்கினார்.

''என்னடா ஜக்கு! சாப்பாட்டில் புளியைக் கரைப்பாங்க. நான் என்னமோ, அவங்க வயித்தில் கரைக்கிறதா சொல்லுறாங்க. இந்த அம்மா, வர வர... ரொம்பப் படுத்துறாங்கடா. இப்படிச் செய்யாதே... அப்படிச் செய்யாதே... குனிஞ்சு நட... இந்த டிரெஸ்ஸைப் போடு... இதைப் போடாதேன்னு... என்னமோ, அவங்க மனசை ரொம்ப அழுத்துது.

''இப்போகூட ரூமுக்கு வந்து, சென்னைக்குப் போய்டலாம்னு கண்ணில் தண்ணி விட்டுட்டாங்க. பேசாமல், அம்மாவை ஹாஸ்பிட்டல் கூட்டிப் போகலாமா? என்ன சொல்லுற?'' பிரச்சனையின் மறுபக்கத்தையும், அதற்கான தீர்வையும் யோசிக்கும் தங்கையை, பெருமையாகப் பார்த்தான் ஜகதீஷ்.

அவள் தனக்கு நிகராக இருப்பதில், அவ்வளவு பெருமை அவனுக்கு. சொல்லப் போனால், யார் அதிக

ஆர்டரைப் பிடிப்பது, எடுக்கும் வேலையை, யார் முதலில் சரியாகச் செய்து முடிப்பதென்று, இருவரின் கம்பெனிக்கும் இடையே போட்டியே இருக்கும்.

இரண்டுமே, அவர்களது தந்தையின் 'சிவம் கன்ஸ்ட்ரக்ஷனின்' கீழ் இயங்கும் நிறுவனங்கள்தான். அப்படியிருந்த போதும், ஒரு ஆரோக்கியமான போட்டியுடன் இருவரும் செயல்பட்டதால், குறித்த நேரத்தைவிட முன்பாகவே வேலைகள் முடிந்துவிடும்.

இதனாலேயே, அவர்களைத் தேடி எப்போதும் ஆர்டர்கள் வந்த வண்ணமே இருக்கும். சிவம், சுதா இருவரும் காதல் மணம் புரிந்தவர்கள். எனவே சொந்தங்களின் புறக்கணிப்பிற்கு உள்ளானார்கள்.

சென்னைதான் அவர்களின் பூர்வீகம். ஜகதீஷ் பிறக்கும்வரை அங்கேதான் இருந்தார்கள். ஆனால், சுதாவோ, சொந்தங்கள் அருகிலிருந்தும் பார்க்க முடியவில்லை, உறவுமுறை கொண்டாட முடியவில்லையே என்று கலங்கவே,

தன் தொழில் மேலிருந்த நம்பிக்கையில், சுதாவை அழைத்துக் கொண்டு பாம்பேக்கு வந்துவிட, முதல் இரண்டு வருடம், மிகுந்த கஷ்டப்பட்டார்கள். சுதாவின் வயிற்றில் பாரதி உருவான பிறகு, சிறிதுசிறிதாக முன்னேற்றம் அடைந்தார்கள்.

தாய்மொழியின் நினைவாகவே, மகளுக்குப் பாரதி என்று பெயர் சூட்டினார்கள். வெளியே எந்த மொழி பேசினாலும், வீட்டுக்குள் தமிழ் மட்டுமே பேசவேண்டுமென்று, மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்த்தார். அதைவிட, தாங்கள் சொந்தங்களுடன்

இணையும்போது, தன் குழந்தைகள் மொழி தெரியாமல் அவதிப்படக்கூடாது என்பதும் ஒரு முக்கிய காரணம்.

சாப்பாட்டு அறைக்கு வந்த இருவரும், அங்கே இருந்தவற்றை எடுத்துப் போட்டு உண்ணத் துவங்க, அந்தநேரம் வந்த சுதா, முகத்தை உம்மென்று வைத்திருந்தார்.

''அம்மா! உங்களுக்கு வாயில் ஏதாவது புண்ணா?'' பாரதி கேட்கவும், அவள் கேட்க வருவது புரிந்து, அவளை முறைத்தார்.

''நான் என்ன சொன்னாலும், கேட்கக் கூடாது என்ற முடிவோட இருக்கீங்களா எல்லோரும்? இனிமேல் நீ உன் ஆபீஸுக்கெல்லாம் போக வேண்டாம். பேசாமல் வீட்டிலிருந்து, சமையல் கத்துக்கோ!'' சுதா விடுவதாகவே இல்லை.

அந்தநேரத்தில், சிவமும் வேறு உடை மாற்றிவிட்டு, பாரதியின் அருகில் அமர்ந்தார். அவளோ, வாயருகே கொண்டு சென்ற இட்லியை, அப்படியே தட்டில் வைத்துவிட்டு, கோபமாக நிமிர்ந்து தாயைப் பார்த்தாள்.

''இப்போ உங்களுக்கு, என்னதாம்மா பிரச்சனை? என்னால் அப்படியெல்லாம் இருக்க முடியாது. இவ்வளவு நாள் நான் எப்படி இருந்தேனோ, அப்படித்தான் இருப்பேன்!'' எழுந்து, வேகமாகக் கை கழுவிவிட்டு, ஹேண்ட்பேகையும், கார் சாவியையும் எடுத்துக்கொண்டு வேகமாக வெளியேறினாள்.

சுதா திகைத்து நின்றார். பாரதி இப்படி நடந்ததே கிடையாது. எதைச் சொன்னாலும், பொறுமையோடு கேட்டுக் கொள்பவள், இன்று அப்படி நடந்ததைப் பார்த்த

சுதாவின் கண்களை நீர் திரையிட்டது.

''நீ செய்யிறது கொஞ்சம் கூட சரியே இல்லை சுதா!'' ''ஏம்மா இப்படிச் செய்யிறீங்க?'' சிவத்தின் குரல் கோபத்துடனும், ஜகதீஷின் குரல் அலுப்பாகவும் வெளி வந்தது.

''அவளுக்கு ஒரு நல்லது நடக்கணும்னு, உங்க ரெண்டு பேருக்கும் அக்கறையே இல்லையா?'' -கண்ணீர் குரலில் கேட்டார்.

மனைவியின் கண்ணீரைப் பார்த்ததும், அமைதியாகி விட்டார் சிவம். ''அதுக்கும், நீங்க செய்யிறதுக்கும் என்னமா சம்பந்தம்?'' என எரிச்சலாகக் கேட்டான் ஜகதீஷ்.

''ஒரு அம்மாவோட கவலை, உனக்கெல்லாம் புரியாதுடா. நம்ம பொண்ணை... ஆம்பளை மாதிரி வளர்த்து வச்சுருக்கோம்னு சொல்லுறாங்க. என் மனசு என்ன பாடுபடும்னு உனக்குப் புரியுதா? இப்படியே போனால்... எங்கே அவளுக்குக் கல்யாணமே ஆகாதோன்னு எனக்குப் பயம்மா இருக்குடா அதான்...'' தன் கவலையைச் சொன்னார்.

''உங்ககிட்ட யாரும்மா அப்படிச் சொன்னது? யாரோ சொன்னாங்கன்னு, பாரதியோட மனசை நீங்க காயப் படுத்துறீங்களே! உங்களுக்கே இது நியாயமா இருக்கா? திடீர்ன்னு இப்படியெல்லாம் செய்தால், அவளும் என்னதான் செய்வா?

''அவளுக்குன்னு ஒருத்தன் பொறந்திருப்பானே; அவன் அவளை நல்லா பார்த்துப்பான். அப்படி ஒருத்தனை, நாங்க தேடிக் கண்டுபிடிப்போம். வீணா, நீங்க உங்க மனசைப் போட்டுக் குழப்பி, அவளையும் கஷ்டப் படுத்தாதீங்க. உங்களால, அவ சாப்பிடாமப் போய்ட்டா!''

சொன்னவன் வேகமாக இரண்டு இட்லிகளை சாப்பிட்டுவிட்டு, தாயிடம் சொல்லி, பாரதிக்கும் இட்லி வாங்கிவிட்டே சென்றான்.

அவனும் சென்றபிறகு, சிவம் சுதாவிடம் பேசினார். ''சுதா! உன்னோட பயம் நியாயமானதுதான். ஆனா, நீ நினைக்கிற மாதிரி... நம்ம பொண்ணு யாரையும் மதிக்காமலோ, எடுத்தெறிஞ்சோ பேசி, நீ பார்த்து இருக்கியா?

''அவ கொஞ்சம் தைரியமான பொண்ணு. சிலநேரம் அவளோட தொழிலும், அவளோட வெளிப்புறத் தோற்றமும், பழகும் விதமும் வேண்டுமானால் மாறி இருக்கலாம். ஆனால், அவளோட அடிப்படை குணம் மாறவே செய்யாது.

''இப்போகூட, அவளோட கன்ஸ்ட்ரக்ஷனில் நடந்த விபத்தைப் பார்த்துட்டு, ரெண்டு நாள் ஜுரம் வந்து வீட்டில் இருந்தா. அங்கே இருந்த ஜகதீஷ், திடமா இருந்தான். அதே மாதிரிதான், திருமணம் முடிந்தால், அதற்கான பொறுப்புகள் அவளுக்குத் தானே வந்துடும். அதைவிட்டு, அவளுக்குப் பொறுப்பை வர வைக்கிறேன்னு, அவளோட தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் சிதைக்காதே! புரியுதா? அதேமாதிரி, அவளோட கணவனா வரப் போறவனும், அவளை நல்லாப் புரிஞ்சவனாதான் இருப்பான்.

''தேவையில்லாமல் மனசைப் போட்டு அலட்டிக் காதே. அவளையும் கஷ்டப்பட வைக்காதே! புரியுதா?'' சிவன் நிதானமாகச் சொல்ல, புரிந்தது என தலையசைத்தார்.

சென்னையில் பெண்கள் என்றாலே ஓடி ஒளியும் தமிழும், பாம்பேயில் ஆண்களுக்கு நிகராக வலம் வரும் பாரதியும் வாழ்வில் இணைந்தால்...?

3

இமைகள் இமைப்பதும்
இதயம் துடிப்பதும்
உணர்ந்தேன் உன்னாலே!

தமிழை விட்டுவிட்டு ஓடியவன், சுப்பிரமணியைக் கண்டு, ''ஹாப்பி பர்த்டேப்பா!'' என்று வாழ்த்தினான்.

''நன்றி. ஏன் தேவனாதா... அதைத் தமிழ்ல சொன்னால் ஆகாதா? எதுக்கு இப்போ ஆங்கிலம்?''

''இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்ப்பா! போதுமா?'' சலித்துக் கொண்டவன், ''ஏண்டா! உங்க அப்பா தமிழ் வாத்தியார்ன்னு, நொடிக்கொருதரம் நிரூபிக்கணுமா? முடியலடா!'' என நண்பனின் காதில் கிசுகிசுத்தான்.

''டேய்! அப்பாவைக் கிண்டல் பண்ணாத!'' கோபம் கொண்டான் தமிழ்.

'இவன்கிட்டப் போய் சொன்னேனே!' மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்.

''தேவா! நான் உனக்கு மாமா முறைதான் ஆகணும். நீ என்னன்னா, அப்பான்னு சொல்லுற?'' குழப்பமாகக் கேட்டார்.

''மாமா... பொண்ணு பெத்திருந்தால் பரவாயில்லை. இப்படியொரு தடித் தாண்டவராயனைப் பெத்தால்...?'' அதே கம்மிய குரலில் சொன்னவன், ''எனக்கு அப்பான்னு சொல்லுறதுதான் வசதியா இருக்கு'' -அசடு வழிந்தவாறே

சொன்னான்.

''என்னவோ சொல்லிட்டுப் போ. சரி, நீ எங்கே இங்கே...?'' அவனைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டார். தேவா இதுவரை ஜாகிங் செய்ததே கிடையாது. புதிதாக வரவே, அவர் கேட்டார்.

'இவருக்கு, இந்தக் கேள்வி கேக்குற புத்தி... போகவே செய்யாதே?' அலுத்தவன், ''இல்லப்பா! உடம்பைக் கட்டுக்கோப்பா வச்சுக்கலாம்னுதான்...'' என இழுத்து நிறுத்தினான்.

அவனை நம்பாத பார்வை பார்க்க, அதை உணர்ந்தவன், ''நான் உண்மையைத்தான் சொல்லுறேன். என்னை நம்புங்கப்பா'' என வேகமாகச் சொன்னான்.

''எல்லாம் சரி. எங்களைக் கூட கவனிக்காமல் ஓடிட்டு இருந்தியே, என்ன விஷயம்?'' அவனை ஆழம் பார்த்தார்.

''ஐயோ! நான் ஏதோ நினைப்பில் ஓடிட்டு இருந்துட்டேன். இல்லேனா, உங்களைக் கவனிக்காமல் இருப்பேனா? என்னடா...?'' நண்பனைத் துணைக்கு அழைத்தான்.

''ஹூம்! சரி சரி... யார்கிட்டயும் அடி வாங்காம லிருந்தால், சரிதான். வீட்டுக்கு வா, சாப்பிட்டுப் போகலாம்!''

''இன்னைக்கு என்னப்பா ஸ்பெஷல்..., பொறந்த நாளும் அதுவுமா?'' -ஆர்வமாகக் கேட்டான்.

''இன்னைக்கு, எல்லாம் உன் நண்பன் சமையல்தான். இன்னும் எத்தனை நாளுதான், இப்படி எங்க கையாலேயே சமைச்சுச் சாப்பிடப் போறோமோ?'' ஆற்றாமையாகப் புலம்பினார்.

''என்னடா! உங்க அப்பா ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்க அடி போடுறார் போல...!'' என்று மெதுவாகக் கேட்க, தேவாவை முறைத்தான் தமிழ்.

''ஏண்டா! நான் என்ன உனக்கு ''முறை'' பையனா..? எப்போ பார்த்தாலும் முறைச்சுட்டே இருக்க!'' என்றவன் ''இல்லைடா மாப்பிளை... நீதான் சாமியார் ஆச்சே; அதான், உங்க அப்பா இத்தனை வருஷப் பிடிவாதத்தை விட்டுட்டா ரோன்னு நினைச்சேன். அப்படி இல்லன்னா, இல்லன்னு சொல்லிட்டுப் போ. அதை விட்டுட்டு, எதுக்கு இப்படிப் பாசமா என்னைப் பார்த்து வைக்கிற?

''உன்பார்வையில் நான் எங்கே பக்குன்னு பத்திக்குவ னோன்னு பயம்மா இருக்கு. இன்னும் நான் வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டியது எவ்வளவோ இருக்குடா. ஒரு கன்னிப் பையனா, நான் சாக விரும்பலை!'' கைகளைக் கும்பிடுவதுபோல் மடக்கிக் கெஞ்ச, தமிழ் சிரித்துவிட்டான்.

''தேவா! எப்படிடா இப்படியெல்லாம்?'' - ஆச்சரியமாகக் கேட்டான்.

''நீ எதக் கேக்குற?'' பேசியவாறே வீட்டுக்குள் வந்து விட்டார்கள். ''நீங்க போய்க் குளிச்சுட்டு வாங்க. எல்லாத்தையும் நான் எடுத்து வைக்கிறேன்.'' சுப்பிரமணி சொல்ல, தேவாவும், தமிழும் அறைக்குச் சென்றார்கள். அவர்கள் பேச்சு அத்தோடு நின்றது.

தேவா உயிர் நண்பனானாலும், தமிழுக்கு எதிரான குணம் கொண்டவன். பெண்கள் என்றாலே ஜொள்ளு விட்டுக்கொண்டு செல்வான். ஆனால், வரம்பு மீறி நடந்து கொள்ளமாட்டான். நிறைய விளையாட்டுக் குணம் நிறைந்தவன்.

இருவருமே ஒரே கம்பெனியில்தான் வேலை பார்க்கிறார்கள். எனவே, அவர்களின் நட்பும் தொடர்ந்தது. தேவாவின் வீடு இவர்களின் வீட்டின் அருகில்தான். தேவாவின் இரண்டு அண்ணன்களுக்கும் திருமணம் முடிந்துவிட்டது. அவனது விளையாட்டுக் குணம் அவர்கள் வீட்டில் இருப்பவர்களுக்கு, அவ்வளவாகப் பிடிக்காது.

எனவே உறங்க மட்டுமே அவர்கள் வீட்டுக்குச் செல்வான். மற்ற நேரம் முழுவதும் இவர்களது வீட்டில்தான் இருப்பான். இவர்கள் உறவுமுறை என்பதால், அவன் இங்கிருப்பதை, அவர்கள் கண்டு கொள்வது கிடையாது. அவர்கள் குளித்துவிட்டு அலுவலகம் செல்லத் தயாராகி வரவும், மணி பள்ளிக்குச் செல்வதற்குக் கிளம்பி வரவும் சரியாக இருந்தது.

பரிமாறியவாறே, ''என்ன தேவனாதா! அண்ணனுங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. அடுத்து உனக்குத்தானே? நீயாவது, காலாகாலத்தில் கல்யாணம் பண்ணிட்டு, செட்டிலாகும் வழியைப் பாரு!'' -தந்தையாக அறிவுறுத்தினார்.

''நீங்க வேறப்பா... அவனுங்களுக்கு, ஆளுக்கு ஒண்ணு செட்டாச்சு; கல்யாணம் செஞ்சுகிட்டானுங்க. நானும் எவ்வளவோ முயற்சி பண்ணுறேன், முடிய மாட்டேங்குதே!'' -அலுத்துக் கொண்டான்.

''யாராவது ஒரு பொண்ணைப் பார்த்தால் பரவாயில்லை. நீ பார்க்குற பொண்ணுங்க எல்லோரையும் கணக்குப் பண்ணப் பாத்தால்...'' கேலி செய்தான் தமிழ்.

''அட, நீ வேற! ஒரே நேரத்தில், ஒன்பது பேரைப் பார்த்துமே, ஒருத்தியும் செட் ஆகலை. இதில, ஒருத்தி

பின்னாடி மட்டும் சுத்தினால்... நாலுமாசத்தில் முடிய வேண்டிய என் கல்யாணம், நாப்பது வருஷம் ஆனாலும் முடியாது, அடப் போடா, பொறாமை புடிச்சவனே!'' இட்லிகளை விழுங்கியவாறே அவன் சொல்ல, வாய்விட்டுச் சிரித்தான் தமிழ்.

கூடவே சிரித்த சுப்ரமணி, ''இதில் என்ன பொறாமை யைக் கண்ட நீ...?''

''அது, வேற ஒண்ணும் இல்லப்பா... எப்படிடா, இவனால மட்டும் இம்புட்டு பொண்ணுங்களை வளைக்க முடியுதுன்னு... உங்க பையனுக்குப் பொறாமை. அதைத் தான் சொன்னேன்.'' பெருமையாகச் சொன்னான்.

''அப்போ, இப்படியொரு திறமை... அவனுக்கு இல்லாமலே போகட்டும்!'' பட்டெனச் சொன்னார் மணி.

''டேய் தமிழ்! உங்க அப்பாவுக்கு, உன்மேலிருந்த கொஞ்ச நம்பிக்கையும் போச்சுடா...'' தமிழிடம் சொன்னான்.

''அதுக்கும் இதுக்கும், என்னடா சம்பந்தம்?'' புரியாமலே கேட்டான் தமிழ்.

''இல்ல. உனக்கு இந்தத் திறமை இல்லாமலே போகட்டும்னு சொன்னாரே, அதுக்கு என்ன அர்த்தம்?''

''அதையும்... நீயே சொல்லிடு ராசா.''

''உனக்கு இந்தத் திறமை... சுட்டுப் போட்டாலும் வராதுன்னு, அவர் முடிவு பண்ணிட்டார்ன்னு அர்த்தம். அதான் சொன்னேன்.'' அவன் கூலாகச் சொல்ல, இருவரும் சேர்ந்து அவனை முறைத்தார்கள்.

அதை அப்படியே விடுத்தவன், ''ரெண்டு பேருக்கும் பெரிய கண்ணகன்னு நினைப்பா? பேசாமல் சாப்பிடுங்க!''

சொல்லிவிட்டு எழுந்து கை கழுவச் சென்றான்.

''இவன்கூட எப்படிடா ஃபிரண்டா இருக்க? பார்த்துப்பா...! எனக்கென்னவோ... இவன்போற போக்கே பிடிக்கலை!'' வளர்ந்த மகனிடம் இதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லை என்பதுபோல் எழுந்து சென்றுவிட்டார்.

''அவன், பேச்சில்தான் வீரன்ப்பா. செயல்ல எதுவும் கிடையாது. எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க பார்த்துப் போயிட்டு வாங்க.'' கைகழுவி வந்தவர், மனைவியிடம் விடைபெற்றுச் சென்றார்.

அவர் சென்றவுடன், ''ஏண்டா தேவா! அப்பா கிட்டயாவது கொஞ்சம் மரியாதையா நடந்துக்க் கூடாது? என்னமோ, உன்னை வில்லன் ரேஞ்சுக்குப் பேசிட்டுப் போறார். பாவம்! அவருக்குத் தெரியலை, நீ ஒரு பிள்ளைப் பூச்சின்னு!'' சொல்லிவிட்டுச் சிரித்தான்.

''எதையாவது நல்லவிதமாச் சொல்லி வைடா. அவருக்குப் தெரியலடா, புல் டெர்ரர் நீதான்; நான் ஒரு காமெடி பீஸ்ன்னு...! எனக்கு வாழ்க்கையில் இருக்குறது, இத்துனோண்டு ஆசைதாண்டா. ஏதாவது ஒரு பிகரை உசார் பண்ணி, கல்யாணம் பண்ணனும். என்னை அவமானப் படுத்தும் என் வீட்டு ஆட்கள் முன்னாடி, என் வீரத்தைக் காட்டணும்... அவ்வளவுதான். மத்தபடி, நான் ரொம்ப நல்லவன்டா.'' -கெஞ்சும் குரலில் சொன்னான்.

''ஒரு பொண்ணை உசார் பண்ணிக் கல்யாணம் பண்ணுவதில், என்னடா வீரம் வேண்டிக் கிடக்கு? ஓஹோ...! நீ அவ அண்ணன்கிட்ட அடிவாங்குறதைப் பத்திப் பேசுறியோ...?'' தேவாவைக் கேலி செய்ய, அவன் முறைப்பதைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்தான்.

''நீ ரொம்ப நல்லவன்னு எனக்கும் தெரியும்டா. இருந்தாலும், உன் கல்யாணத்துக்கு நீ இவ்வளவு பெரிய கொள்கையில் இருப்பது, எனக்கு இப்போதான் தெரிஞ்சுது. எதுக்கும் என்னைவிட்டு ஒரு பத்தடி தள்ளியே நட! பிகர் எதுவும் செட் ஆகறதுக்கு முன்னாடி, ஜொள்ளுவிட்டே என் சட்டையெல்லாம் நனைச்சுடப் போற!'' நண்பனைக் கேலி செய்தவாறே வீட்டைப் பூட்டிவிட்டு, சாவியை அதனிடத்தில் வைத்துவிட்டுக் கிளம்பினார்கள்.

'ரொம்ப அசிங்கப்படுத்துறானே...!' என மனதுக்குள் நொந்தவாறே, அவன் பின்னால் சென்றான் தேவா.

தங்கையின் அலுவலகத்துக்குச் சென்ற ஜகதீஷை வரவேற்ற சுஷ்மிதா, அவளுக்குப் பி.ஏ.வாக அலுவலகத்தில் இருப்பவள். அதற்கே, முதலில் பாரதி ஒத்துக் கொள்ளவில்லை.

ஆனால், இப்போது பாரதியோடு சேர்த்து, மொத்தம் நான்கு பெண்கள் இருந்தார்கள். ஆனால், சுஷ்மிதா மட்டுமே பாரதிக்கு மிகவும் நெருக்கமானவள். எனவே, ஜகதீஷும் அவளிடம் நன்றாகப் பேசுவான். அதுவும் பாரதியைப் போலவே, அவளும் தனக்குத் தங்கையென்றே சொல்வான்.

''குட்மார்னிங் சார்! மேடம் உள்ளேதான் இருக்காங்க. நீங்க போய்ப் பாருங்க.''

''சுஷ்மி! என்னமோ என்னை எதிர்பார்த்துட்டே இருந்தமாதிரி, வேகமா உள்ளே போகச் சொல்லுற!''

''ஆமா. பாரதி ரொம்பக் கோபமா இருக்கா. அதைவிட, யார் வந்தாலும் என்னைப் பார்க்க முடியாதுன்னு... தயவு தாட்சண்யமே பார்க்காமல் துரத்திவிடுன்னு எக்ஸ்ட்ராவா சொல்லும்போதே, எனக்கு டவுட்டு... யாரோ வரப்

போறாங்கன்னு. அதான், நீங்க வந்ததைப் பார்த்தவுடனே, உள்ளே போகச் சொல்லுறேன்!'' புன்னகை முகமாகச் சொன்னாள்.

''சுஷ்மி! அவ துரத்தி விடச்சொன்னால், நீ உள்ளே போகச் சொல்லுறியே... உனக்கே இது நியாயமா?''

''அட, நீங்க வேற சார். உங்க ரெண்டுபேருக்கு நடுவில், நான் வர்றதாவே இல்லை. ஏற்கனவே இப்படித் தான் ஒருமுறை சொல்லி, நான் உங்களை அலவ் பண்ணாமல் இருக்கப்போய், அவ வந்து என்னை மிரட்டியது, எனக்குத்தான் தெரியும். தெரிஞ்சே, நான் ரிஸ்க் எடுக்கத் தயாரா இல்லை. எதுவாக இருந்தாலும், நீங்களே பேசித் தீர்த்துக்கோங்க!'' அனுபவப்பட்டவள் என்பதால், வேகமாகச் சொன்னாள்.

''சரி, சரி. நான் போய் அவளைப் பார்க்குறேன்.''

கோப்பிலிருந்து பார்வையை விலக்கி அறை வாயிலைப் பார்த்தவள், முகத்தில் கடுமையைக் காட்டி, ''இப்போ எதுக்கு நீ இங்கே வந்த? அதைவிட, எப்படி நீ உள்ளே வந்த?'' -கேள்விகளை அடுக்கினாள்.

''என் அருமைத் தங்கச்சி சாப்பிடாமல் வந்துட்டாளே... அதான், மனசு கேக்கலை!'' கையிலிருந்த டிபன்பாக்ஸ்சை அவள் முன்பு வைத்தான்.

அவன் பேசியதைக் கண்டுகொள்ளாமல், ''இந்தச் சுஷ்மி எங்கே? நான்தான், யாரையும் உள்ளே அனுப்ப வேண்டாம்னு சொல்லியிருந்தேனே!'' -கத்தினாள்.

அவளது சத்தத்திற்கு, சுஷ்மி வேகமாக வந்து அவள் முன்னால் நின்றாள். ''உன்கிட்ட சொல்லுற வேலையை நீ சரியாவே செய்ய மாட்டியா?'' அவள்மேல் பாய்ந்தாள்.

சுஷ்மியோ ஜகதீஷை சங்கடமானப் பார்வை பார்த்தவள், பாரதியை முறைத்தாள். பாரதியும், சுஷ்மியும் நெருங்கிய தோழிகள்தான். ஆனாலும் சுஷ்மி சில விஷயங்களில் பாரதியிடம் முதலாளி என்ற முறையிலேயே நடந்து கொள்வாள்.

அதிலும் அவளது வீட்டு ஆட்கள் முன்பும், வெளி ஆட்கள் முன்பும் அதை தவறாமல் கடை பிடிப்பாள். எனவேதான் இப்போது ஜகதீஷ்முன்னால் திட்டுவதையும் பொறுமையாகவே வாங்கிக் கொண்டாள். ஆனாலும் பாரதி தன்னை தேவையில்லாமல் வறுத்தெடுப்பதால், மனதுக்குள்ளே பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தாள்.

பாரதியோ அவள் கொந்தளிப்பதை கண்டு கொள்ளாமல், ''சுஷ்மி, நான் கேள்வி கேட்டுட்டே இருக்கேன். கொஞ்சம் கூட பயமே இல்லாமல் இப்படி நின்னுட்டே இருந்தால் என்ன அர்த்தம்?'' அவள் மீண்டும் எகிறவே, சுஷ்மி பொறுமையை கைவிட்டாள்.

ஜகதீஷ் இருப்பதையும் பொருட்படுத்தாமல், ''பாரதி வேண்டாம்... என் பொறுமைக்கும் ஒரு அளவிருக்கு. அன்னைக்கு இப்படித்தான் உன் அருமை அண்ணாவை உள்ளே அனுப்பாமல் திரும்ப அனுப்பினதுக்குத் திட்டுன, இன்னைக்கு ஏன் உள்ளே அனுப்பினேன்னு கேட்குற.

''எப்போ நீ சூலத்தோட இருப்ப, எப்போ சூலம் இல்லாமல் இருப்பன்னு எல்லாம் என்னால் பார்த்துட்டு இருக்க முடியாது ஆமா. இப்போ என்ன உன் அண்ணாவை வெளியே அனுப்பனும் அவ்வளவு தானே, இரு.

''சார் எங்க மேம் ரொம்ப கோபத்தில் இருக்காங்க.

நீங்க போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சு வாங்க'' மூச்சு வாங்க பேசினாள்.

''ஏய் என்னடி... இங்கே நான் பாஸா, இல்லை நீயா? இப்படி கொந்தளிக்கிற. இந்தா தண்ணியைக் குடி'' பாரதி தண்ணீரை அவள் பக்கம் நகர்த்தினாள்.

''ஒண்ணும் வேண்டாம்... அதை நீயே குடி..'' வேகமாகச் சொன்னாள்.

''பாரதி... சுஷ்மியை ரொம்ப படுத்தி இருப்ப போல? பாவம் அவ இப்படி மிரளுறா?'' கேட்டுவிட்டுச் சிரித்தான்.

''அண்ணா, பாரதி உங்க விஷயத்தில் மட்டும் எப்போ எப்படி இருப்பான்னே சொல்ல முடியாது. அதைவிட உங்க வீட்டிலிருக்கும் எல்லார் விசயத்திலும்தான். நானும் காலையில் வந்ததுல இருந்து பார்க்குறேன், என்னை கரிச்சு கொட்டிட்டே இருக்கா'' படபடவெனப் பொரிந்தவள், இருக்கும் சூழல் அப்போதுதான் புரிய அமைதியானாள்.

''சாரி பாரதி. நான் என்னோட வரம்பை மீறி நடக்குறேன்னு நினைக்கிறேன்'' சங்கடமாகச் சொன்னாள்.

''நான்தான் உன்கிட்ட சாரி கேக்கணும் சுஷ்மி. காலையிலேயே கொஞ்சம் மூட்ஆப். சாப்பிடவும் இல்லை, எல்லாம் சேர்த்து உன்மேல் ஆத்திரப் பட்டுட்டேன்'' உண்மையான வருத்தம் அவள் குரலில்.

''இல்ல பாரதி, நீங்க கோபப்பட்டாலும் அதை நான் பொறுத்துதான் போயிருக்கணும். ஆனால்,...'' இழுத்து நிறுத்தினாள்.

''சுஷ்மி, என்னைக்காவது நான் உன்னை என்னோட ஸ்டாப்பா பாத்து இருக்கேனா? என்னைக்கு நீ இங்கே வந்தாயோ, அன்னையிலிருந்து நாம ப்ரண்ட்ஸா தானே

பழகுறோம், பிறகு ஏன் இப்படியெல்லாம் பேசுற?'' அவளை கடித்துக்கொண்டாள்.

தோழியின் கண்டிப்பில் சமாதானமானாள் சுஷ்மிதா.

4

என் கோபங்களும்
என் சந்தோசங்களும்
என் துன்பங்களும் புதிதாய்
எல்லாம் உன்னாலே...!

அலுவலக அறைக்குள் தன் அனுமதியின்றி நுழைந்த ஜகதீஷைத் திட்டுவதற்குப் பதிலாக, தன் தோழி சுஷ்மியைத் திட்ட அதைச் சிறிதுநேரம் பொறுத்தவள், நட்பின் காரணமாக பதிலுக்குத் திட்டிவிட்டாள்.

அதன்பிறகு இயல்பாக இருக்க முடியாமல், தோழியிடம் மன்னிப்பை வேண்டினாள். சுஷ்மி மன்னிப்பை வேண்டவே, பாரதி தவித்துப்போனாள்.

''சுஷ்மி! என்னைக்காவது... நான் உன்னை என்னோட ஸ்டாப்பா பாத்திருக்கேனா? என்னைக்கு நீ இங்கே வந்தாயோ, அன்னையிலிருந்து... நாம ப்ரண்ட்ஸாதானே பழகுறோம்? பிறகு ஏன் இப்படியெல்லாம் பேசுற?'' அவளைக் கடிந்து கொண்டாள்.

''அது... அப்படி இல்லை பாரதி. தொழில் தர்மம் ஒண்ணு இருக்கு தெரியுமா? அதுதான் இது!'' சுஷ்மி

அதிலிருந்து வெளியே வருவதாக இல்லை. என்னதான் நட்பாக இருந்தாலும், ஜகதீஷின் முன்னால், தான் பேசியது அதிகமென்றே அவளுக்குத் தோன்றியது.

அதைப் புரிந்து கொண்ட ஜகதீஷும், ''சுஷ்மி! இப்போ மணி ஒன்பதுதான் ஆகுது. பத்து மணிக்குத்தான் ஆபீஸ் டைம். அதனால், நீங்க இப்போ பாரதியிடம் பேசியது நட்பின் அடிப்படையில் என்பது சரிதான்.

இதை எதுக்கு இவ்வளவு சீரியஸா எடுக்குற? இன்னைக்குக் காலையிலிருந்து... நடப்பது எதுவுமே சரியாவே இல்லை. அம்மா ஒரு பக்கம்ன்னா, பாரதி இன்னொரு பக்கம். நாங்க... யாருக்குச் சப்போர்ட் பண்ணுவதுன்னு தெரியாமல் முழிக்கிறோம்!'' அவளை சமாதானம் செய்ய முயன்றான்.

''ஓகே சார்...'' சுஷ்மியும் ஒத்துக் கொண்டாள்.

''என்ன சொன்னாலும், சில விஷயங்களில் உன்னைத் திருத்தவே முடியாது. சரி நேரமாகுது; நான் கிளம்புறேன்'' அவள் தன்னை சார் என்று சொல்வதைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு எழுந்தான்.

''ஜக்கு! அம்மா என்ன சொன்னாங்க? ஏன் இப்படிப் பண்ணுறாங்களாம்?'' தாய் செய்வதைத் தாங்கிக்கொள்ள முடியாத துக்கம் அவள் குரலில்.

''அது வேற ஒண்ணும் இல்லை பாரதி. நீயும், சுஷ்மி மாதிரி இருக்கணும்னு அவங்க நினைக்கிறாங்க அவ்வளவுதான். அந்தக் கவலையெல்லாம் இனிமேல் உனக்கு வேண்டாம்? நாங்களே பேசி, அவங்களைச் சமாளிச்சுட்டோம். நீ கவலைப்படாமல் இரு!'' சொல்லி விட்டு வெளியேற முயன்றான்.

''சுஷ்மி மாதிரியா...?'' புரியாமல் கேட்டாள்.

''பாரதி! இப்போதானே சொன்னேன், நீ நீயாவே இருன்னு. மறுபடியும் என்ன? உன் குட்டி மூளையை ரொம்பக் கசக்காதே. வரேன்ம்மா சுஷ்மி. அவளைப் பார்த்துக்கோ!'' -விடைபெற்றுவிட்டு வெளியேறினான்.

''ஏய் சுஷ்மி! ஜகதீஷ் என்ன சொல்லிட்டுப் போறான்னு உனக்கு ஏதாவது புரிஞ்சுதா? நான் உன்னை மாதிரி இருக்கணும்னா...?'' எனச் சொல்லிவிட்டு யோசித்தவள், இருக்கையிலிருந்து எழுந்து வந்து, தோழியை ஆராய்ந்தாள்.

தலைமுடியைப் பின்னி, அதில் சிறு ரோஜாப் பூவைச் சூடியிருந்தாள். பாரதியோ, குதிரைவால் போட்டிருந்தாள். சுஷ்மியின் நெற்றியில் சிறிய ஸ்டிக்கர் பொட்டு. பாரதியின் நெற்றி வெறுமையாக இருந்தது. சுஷ்மி காதில் ஜிமிக்கி போட்டிருக்க, பாரதியோ ஒரு சிறிய ஸ்டட் மட்டுமே போட்டிருந்தாள்.

சுஷ்மி சுடிதாருக்குள் நுழைந்திருக்க, பாரதியோ ஜீன்ஸ், குர்த்தாவில் இருந்தாள். சுஷ்மி மெல்லிய செயின் அணிந்திருக்க, பாரதியின் கழுத்து வெறுமையாக இருந்தது. இடக்கையில் ஒரு வாட்ச் மட்டுமே அவளது கையில் இருந்தது.

பாரதி முகத்துக்கு பௌடர் போட்டு, உதட்டுச் சாயம் லேசாக போட்டு, கண்மையும் அழகாகப் போட்டிருந்தாள். சுஷ்மிக்குக் கண்மை மட்டுமே போடப் பிடிக்கும். எனவே அது மட்டும் போட்டிருந்தாள். ஆக இருவருமே தங்கள் பெயருக்கு எதிர்ப் பதமாக இருந்தார்கள்.

பாரதி நவநாகரீகமாக இருக்க, சுஷ்மியோ கொஞ்சம்

,அடக்கமாக இருந்தாள். ஆனால், பாரதியும் அழகில் ளைத்தவள் இல்லை. அவளது வசீகரிக்கும் கண்கள் ஒன்றே போதும், ஆண்களைக் கட்டிப் போட. ஆனால், அதை அவள் உணர்ந்திருக்கவில்லை.

பாரதியோ, இப்போது சுஷ்மியை கண்ணாடி முன்னால் தள்ளிக் கொண்டுப் போய், இருவரின் அழகையும் ஆராய்ந்தாள். ஆனால், சுஷ்மியை விட அழகில் குறைந்திருப்பதாகத் தெரியவில்லை.

தன்னை தலைமுதல் கால்வரை ஆராய்வதைப் பார்த்த சுஷ்மியோ, ''என்னை எதுக்கு இப்போ இப்படி நிப்பாட்டி வச்சு, ஆராய்ச்சி பண்ணுற? அப்படி என்னதான் ஆராய்ச்சி பண்ணுற? அதையாவது சொல்லேன்...!'' -கடுப்பானாள்.

''இல்ல... எங்க அம்மா, நான் உன்னை மாதிரி இருக்கணும்னு ஆசைப்படுறாங்களாம். அதான், நீ எப்படியிருக்கன்னு பார்த்துட்டு இருக்கேன். ஆனாலும், ஒண்ணு மட்டும் புரியலை. நீ இவ்வளவு அலங்காரம் செய்ய எவ்வளவு நேரம் ஆகும்?'' என்னவோ, அதுதான் முக்கியம் என்பதுபோல் கேட்டாள்.

''பாரதி! உனக்கென்ன லொள்ளா? உங்க அம்மா எதை நினைச்சுச் சொன்னாங்களோ? நீ என்னன்னா, என்னோட அலங்காரத்தை ஆராய்ந்துட்டு இருக்க? விடு முதல்ல...!'' அவளிடமிருந்து விலகப் பார்த்தாள்.

''அவங்க அலங்காரத்தை சொல்லலன்னா, வேற எதைத்தான் சொல்லுறாங்க? உனக்குப் புரிஞ்சுடுச்சா ஜகதீஷ் சொன்னது?'' ஆர்வமாகக் கேட்டாள்.

ஜகதீஷ் சொல்லிச் சென்றது, சுஷ்மிக்குப் புரிந்தது தான். பாரதியின் நிமிர்வை விட, சுஷ்மியின் தயக்கமும்,

நாணமும் அவளுக்கு வேண்டுமென, பாரதியின் தாய் நினைக்கிறார். தன்னைப் பற்றியும், தன் அழகைப் பற்றியும் அக்கறையில்லாமல் இருப்பதைவிட, அவள் தன்னை அழகுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று, அவளது தாய்க்கு விருப்பம்.

காலாகாலத்தில் திருமணம் செய்துகொண்டு, செட்டில் ஆகவேண்டுமென்று அவர் நினைக்கிறார். ஆனால், சுஷ்மியாலே தன் தோழி அப்படி மாறுவதை, கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியவில்லை.

பாரதிக்கு அழகே, அவளது அந்த நிமிர்வுதான் என்று அவள் எண்ணினாள். சுப்ரமணிய பாரதி சொன்னதுபோல், நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத தன்மை, என அப்படியே இருந்தாள்.

அதற்காக, கர்வமோ, ஆணவமோ, செருக்கோ கொண்டவளாக அவள் இருக்கவில்லை. பெண்களில் ஒரு தனித்துவமானவளாக இருந்தாள். அதுதான், அவளது அனைத்து வெற்றிகளுக்கும் காரணமும் கூட.

பாரதியைப் பற்றிய நினைப்பிலேயே இருந்ததால், பாரதி கேட்ட கேள்வியை சுஷ்மி சுத்தமாக மறந்து விட்டிருந்தாள். ''சுஷ்மி! நான் பாட்டுக்குக் கேள்வி கேட்டுட்டு இருக்கேன்; நீ என்னமோ, கனவிலேயே இருக்க! என்னன்னு சொல்லுடி!'' அவளை உலுக்கினாள்.

''பாரதி! நீ இப்படியே இருந்தால்தான் நல்லா இருக்கும். நீ என்னை மாதிரி, மாறவேண்டாம்!'' என அதே நினைப்பிலேயே சொன்னாள்.

''இப்போ யாருடி, நான் உன்னை மாதிரி மாறப் போறேன்னு சொன்னது? தலைமுடியை இப்படி இறுக்கமாப்

பின்னுறது, மூஞ்சிக்கு வெள்ளை அடிக்கிறது, நெத்தியில் பொட்டு வைக்கிறது, எங்கே எந்த நேரம் அது தொலையுமோன்னு கவலைப்படுறது, சுடிதார், துப்பட்டா, வளையல், செயின்... ஓ மை காட்! சொல்லுறதுக்கே எனக்கு மூச்சு வாங்குது. இதில் இப்படியா? நான் இல்லை... இந்த விளையாட்டுக்கு. முதல்ல, நீ போய் அந்த டெண்டர் பைல் எல்லாம் எடுத்துட்டு வா.

''நான் முதல்ல ஜகதீஷ் கொண்டு வந்த இட்லி எல்லாம் முழுங்கிட்டுவரேன் . பிறகு வேலையைப் பார்ப்போம். இந்த அம்மாவோட பேராசைக்கெல்லாம் நான் ஆளில்லை.(இஸ் மம்மிக்கா திமாக் ஐசா க்யோன் சல் ரஹா ஹே)'' (இந்த அம்மாவுக்கு ஏன் புத்தி இப்படி போகுது)'' அந்த சிந்தனையை அத்தோடு உதறிவிட்டு சாப்பிடச் சென்றாள்.

சுஷ்மிதாவும் சிரித்துவிட்டு அவளது இடத்துக்குச் சென்றாள். இங்கே வீட்டிலோ சுதா இன்னுமே தெளிவான மனநிலைக்கு வந்திருக்கவில்லை.

மனைவியின் கவலை முகம், சிவத்தை கலங்கடித்தது. ''என்ன சுதா, இன்னும் இப்படியே உக்காந்துட்டு இருக்க? நான் சொன்னதில் உனக்கு இன்னும் முழு நம்பிக்கை வரலையா?'' -கவலையாகக் கேட்டார்.

''என்னங்க... எனக்கு என்னமோ சென்னைக்குப் போகணும்னு ஆசையா இருக்குங்க. ஒரே ஒரு முறை என்னை அழைச்சுட்டு போறீங்களா?'' -ஏக்கமாகக் கேட்டார்.

''நீ அழைச்சுட்டு போங்கன்னு சொன்னால்... அழைச்சுட்டுணீ போகப் போறேன். அதுக்கு ஏன், இப்படிடு கண் கலங்குற?'' அவரை தோள் சாய்த்துக் கொண்டார்.

''நிஜமாத்தான் சொல்லுறீங்களா? அங்கே இருக்க கோயில் எல்லாம் போகணும். எத்தனை வருஷம் ஆகுது, அந்தத் தெய்வங்களை எல்லாம் கண்ணால் பார்த்து! என்னோட வேண்டுதலை எல்லாம் அவங்க காலடியில் சேர்த்தாத்தான் எனக்கு நிம்மதி. ஒரு வாரம்ங்க, போயிட்டு உடனே வந்துடலாம்'' தன் மனக் குமுறல்களுக்கு, தெய்வம்தான் துணையென்று முடிவு செய்துவிட்டார்.

''கண்டிப்பா போகலாம். கொஞ்ச நாள் பொறுத்துக்கோ!'' அவரை சமாதானம் செய்ய முயன்றார்.

''இப்படியே சொல்லிட்டு இருங்க. அஞ்சு வருஷம்னு சொல்லி, இருபத்தஞ்சு வருஷம் போய்டுச்சு. இப்போ... கொஞ்ச நாள்னு சொல்லி, எத்தனை வருஷமோ?'' கவலையாக அவரிடமிருந்து விலகிச் சென்றார்.

மனைவியின் விலகலை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இத்தனை வருடங்களில், ஒரு நாள் கூட, சுதா இவ்வளவு சோர்ந்து அவர் பார்த்ததில்லை. சுதாவின் கண்ணீர் கூட புதிதாகத் தெரிந்தது சிவத்துக்கு.

மகளின் வாழ்க்கை இப்படியே இருந்துவிடுமோ என்று சுதா கலங்குவது, அவருக்குப் புரியாமல் இல்லை. ஆனால், இது தேவையில்லாத பயமென்று அவர் எண்ணினார். அதே நேரம், மாப்பிள்ளையும் தமிழ்நாட்டில்தான் பார்க்க வேண்டும் என்றதை, அவரால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லை.

தனது ராஜ்ஜியம் முழுவதும் இங்கே இருக்க, சென்னையில் போய் என்ன செய்வதென்பது, அவரது எண்ணம். அங்கேயும் தொழில் துவங்கலாம் என்றாலும், பிரிந்துவிட்ட சொந்தங்கள் முன்னால் சென்று நிற்க,

அவருக்குத் தயக்கமாக இருந்தது. இவ்வளவு மனக் குழப்பத்திலும், மனைவியின் கவலையை போக்க, தன்னால் முயன்றதை செய்தே தீரவேண்டுமென்று, அவரது காதல் கொண்ட மனது முடிவெடுத்தது.

இப்படியே விட்டால், அவர் பாரதியையும் ஏதாவது சொல்லி கஷ்டப்படுத்தி விடுவாரோ என்று தோன்றவே, பேசாமல் ஒரு வாரம், இரண்டு வாரம் சென்னைக்கே பயணப்பட்டு விடலாமென்று முடிவெடுத்தார். தாமதிக் காமல், அன்றிரவே பிள்ளைகளிடம் பேசிவிட வேண்டு மென்று முடிவெடுத்தார். மாலையில் வீட்டுக்கு வந்த ஜகதீஷையும், பாரதியையும் அழைத்துப் பேசினார்.

''என்னப்பா திடீர்ன்னு...?'' ஜகதீஷ்தான் கேட்டான்.

''போயிட்டு வாங்கப்பா!'' பாரதியின் பதில் இதுவாகத்தான் இருந்தது.

''என்ன பாரதி, நீயும் சேந்துகிட்டு... புரியாமல் பேசுற! இவங்களுக்கு இப்போ வயசு திரும்புதா என்ன? இப்போ இவங்க தனியா போனால், நாம எப்படி நிம்மதியா இருக்க முடியும்'' ஜகதீஷ் புலம்பினான்.

''ஜக்கு! அம்மா இருக்கும் மனநிலைக்கு, அவங்க கொஞ்சம் வெளியூரெல்லாம் போயிட்டு வந்தால்தான் சரியா இருக்கும்!'' பாரதி தாயின் நிலையுணர்ந்து சொன்னாள்.

''சென்னை எங்களுக்குப் புது ஊர் இல்லை ஜக்கு. முப்பது வருஷம் நாங்க இருந்த ஊர்.'' அவனுக்கு அறிவுறுத்தினார்.

''இப்போ, அங்கே உங்களுக்கு யாரைத் தெரியும்? நான் ஒண்ணு பண்ணுறேன், சென்னையிலிருக்கும் ட்ராவல் ஏஜென்சியிடம் பேசி, உங்களை அனுப்பி வைக்கிறேன்.

அப்போதான் நீங்க எப்போ எந்த நேரம் எங்கே இருக்கீங்கன்னு என்னால் தெரிஞ்சுக்க முடியும்.

''அதோட உங்களுக்கும் ஒரு பாதுகாப்பும் கூட. அங்கே போய், உங்க சொந்தக்காரங்களை பார்க்குறேன், அப்படி இப்படின்னு எங்கேயும் போய் அவமானப்படுவதை நான் சுத்தமா விரும்பலை!'' -தாடை இறுகச் சொன்னான்.

''இல்ல ஜக்கு. நாங்க இப்போ, சொந்தங்களைத் தேடிப் போகலை. உங்க அம்மாவுக்குக் கோவில் குளமெல்லாம் சுத்தணும்னு ஆசை. எல்லோருக்கும்... பேரன், பேத்தி எடுத்தபிறகு இப்படி ஒரு ஆசை வரும்னா... உங்க அம்மாவுக்கு, இப்போவே வருது. என்ன செய்ய?

''அது மட்டுமில்லை. அவளோட மனசு ஒரு நிலையில் இல்லை. எப்படியாவது சமாதானப்படுத்தியே ஆகணும். ஒரு வாரம் தானே? ப்ளைட்டில் போறோம். அங்கே ஹோட்டல்ல ரெஸ்ட் எடுத்துட்டு, கால் டாக்ஸிலதான் வெளியே போகப் போறோம். ஒண்ணும் பயமில்லை.'' அவனுக்குத் தைரியம் சொன்னார்.

''எதுக்கும், நான் சொல்லுற மாதிரியே கேளுங்க.'' அத்தோடு பேச்சை நிறுத்திக் கொண்டான்.

அதன்பிறகு நடந்தவை அனைத்தும் மின்னல் வேகத்தில் நடந்தேறின. கிளம்பும் அன்று காலைவரை பாரதி தைரியமாகத்தான் இருந்தாள். ஆனால், அவர்கள் ஏர்போர்ட் கிளம்பியதும், அவள் கண்களில் கண்ணீர்.

இதுவரை தாயையோ, தந்தையையோ அவர்கள் பிரிந்து இருந்ததே இல்லை. தாயின் முந்தானையைப் பிடித்துக்கொண்டே சுற்றவில்லை என்றாலும், தாய்தான் அவளுக்கு அனைத்தும் செய்வார்.

வீட்டில் எத்தனை வேலைக்காரர்கள் இருந்தாலும், உணவு பரிமாறுவது, உடல்நிலை சரியில்லையென்றால், உடனிருந்து கவனித்துக் கொள்வது, எதுவும் இல்லையென்றால் சண்டை போடுவதற்காகவாவது, பாரதிக்குத் தாய் வேண்டும்.

சுதாவும் அதே நிலையில்தான் இருந்தார். ''நீயும் வர்றியா...?'' என அவர் தாங்கமுடியாமல் கேட்டுவிட, ''இப்போ கேளுங்க வர்றியான்னு; இவ்வளவு நாள் எங்கே போயிருந்தீங்? ஒண்ணும் வேண்டாம்! நீங்க கிளம்புங்க!'' பிடிவாதம் பிடிக்கும் குழந்தைபோல் சொல்ல, மகளை அணைத்துக் கொண்டார்.

''அம்மா! என்னவோ இவளை கல்யாணம் செஞ்சு அனுப்பணும்னும் சொல்லுறீங்க. இந்த ஒரு வாரத்துக்கே, இப்படி மூக்கையும் சிந்துறீங்க? என்னதான் உங்க முடிவு?''

''உனக்கு, எங்க மனசு புரியாது, போடா!'' அழகு காட்டினாள் பாரதி.

''அண்ணாவை போடா வாடான்னு சொல்லாதேன்னு சொன்னால், கேக்க மாட்டியா நீ?'' அந்த நேரத்திலும் மகளை அதட்டினார்.

''அம்மா! நீங்க கிளம்புங்க... உங்களையெல்லாம் திருத்தவே முடியாது!'' சட்டெனத் தாயின் அணைப்பிலிருந்து விலகினாள்.

''இப்படியே பேசிட்டு இருந்தால், பிளைட் மிஸ் ஆயிடும். சீக்கிரம் கிளம்புங்க!'' ஜகதீஷ் நினைவூட்டினான்.

அனைவரும் சேர்ந்து விமான நிலையம் சென்று, தாயையும், தந்தையையும் அனுப்பி வைத்தார்கள். இவர்களது இந்தப் பயணம் நல்லவிதமாக முடியுமா?

5

போகும் இடங்களும்,
பார்க்கும் பொருட்களும்
இன்று புதிதாய்!
எல்லாம் உன்னாலே...!

ஒரே பைக்கில் வந்து இறங்கிய தமிழும், தேவாவும் அந்த எட்டுமாடிக் கட்டிடத்தின் கீழ்த்தளத்திலிருந்து, தங்களது அலுவலகம் இருக்கும் ஆறாம் மாடிக்குச் செல்ல, லிப்ட்டிற்காக் காத்திருந்தார்கள்.

தேவா பார்வையைச் சுழலவிட்டான். அருகில் ஒரு அழகான பெண் நிற்பதைப் பார்த்தவன், ''ஹாய் ரேகா! எப்படி இருக்கீங்க?'' -தெரிந்தவன்போல் அவளிடம் நலம் விசாரித்தான்.

''ஐ'ம் நாட் ரேகா!'' அவள் வேகமாகச் சொல்ல,

''ஓ...! நீங்க ரேகா இல்லையா! அப்போ உங்க பேர் என்ன?'' ஆர்வமாகக் கேட்டான்.

''இடியட்...!'' சொல்லிவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''இடியட்னு ஒரு பேரா? உங்களை இடியட்... இடியட்னு... கூப்பிட்டா, உங்களுக்குக் கோபமா வராது?'' அவள் தன்னை திட்டியதை ஜஸ்ட்லைக் தட் தட்டிவிட்டு, அவன் வேலையைத் தொடர்ந்தான்.

''ஹலோ...! என்ன லொள்ளா...?'' அவளுக்குச்

சட்டெனக் கோபம் வந்துவிட்டது.

''என்னங்க இது...? பேர், வித்தியாசமா இருக்கேன்னு கேட்டேன்; இது ஒரு குத்தமா?'' அவள் என்னமோ அவனுடன் பாசமாக உரையாடுவதாக நினைத்துக் கொண்டு, பேச்சை வளர்த்தான்.

அவள் பதில் சொல்லும் முன்பு லிப்ட் வந்துவிடவே, அவனை முறைத்தவாறே, அதற்குள் ஏறிக் கொண்டாள். ஆனால், தேவாவோ அதன் பிறகு அவளைக் கண்டுகொள்ளாமல், உடன் வேலை செய்யும் நிஷாவைப் பார்த்துவிட்டு அவளிடம் பேச்சைத் தொடர்ந்தான்.

''ஏண்டா! உனகுக் கொஞ்சம் கூட, சூடு சொரணையே இல்லையா?'' நண்பனைப் பிடித்து இழுத்துக் கேட்க, அவனைப் புதிதாகப் பார்த்தான்.

''எதுக்குடா இப்படிப் பார்க்குற?'' தமிழ் அவன் பார்வையின் பொருள் புரியாமல் கேட்டான்.

''இல்ல... இப்போ, சூடு, சொரணைன்னு சொன்னியே... அது என்னடா?'' என தேவா ஆச்சரியமாக்க் கேட்க, தமிழுக்குத்தான் வெறுத்துப் போனது.

''உன்னையெல்லாம்... திருத்தவே முடியாதுடா...!'' அடிக்குரலில் அவனிடம் சொல்லிவிட்டு, திரும்பிக் கொண்டான்.

''தமிழ்! வழக்கமா உன் அப்பாதானே திருத்துவார்? நான், பேப்பரைச் சொன்னேன்!''' தமிழ் விளங்காமல் பார்ப்பதைக் கண்டு வேகமாகச் சேர்த்துச் சொன்னான்.

''என்கிட்ட, இன்னைக்கு அடி வாங்காமல் அடங்க மாட்ட நீ?'' சொன்னவாறே திரும்பிப் பார்க்க, தேவாவால் ரேகா என்று அழைக்கப்பட்டவளோ, தமிழைப் பார்த்து

வாய்க்குள்ளாகவே முனகினாள்.

தமிழுக்கு இப்படியான அனுபவங்கள் நிறைய நிகழும். அதுவும் தேவாவுடன் செல்லும் போது, அவன் வம்பு வளர்க்கும் பெண்கள், தமிழையும் அப்படியே நினைத்துச் சாடுவார்கள். இப்போதும் லிப்ட்டுக்குள் நின்றவளும், அப்படி நினைத்துத்தான் தமிழை முறைத்தாள்.

சட்டெனத் தன் பார்வையை திருப்பிக் கொண்டவன், 'அடிச்சிருவாளோ...?' என ஒரு நிமிடம் குழம்பிவிட்டு, 'ச்சே! ச்சே...! அப்படியெல்லாம் செய்ய மாட்டா!' என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான்.

'இந்தப் பயலால், எல்லாரும் என்னையும் முறைக்கிறாங்களே!' மனதுக்குள் புலம்பியவன், எப்போது தங்களது ப்ளோர் வருமெனக் காத்திருந்தான்.

இவை எதற்கும் கவலைப்படாமல், நிஷாவிடம் எப்படியாவது தன் கருத்தை நிலைநிறுத்திவிட வேண்டுமென்ற முனைப்புடன் பேசிக் கொண்டிருந்தான் தேவா. ஐந்தாம் தளத்தில் அந்தப் பெண் இறங்கிய பிறகுதான், நிம்மதியாக மூச்சு விட்டான் தமிழ்.

''ஹப்பா! போய்ட்டாளாடா..., ஒரு பேரைக் கேட்டதுக்கு, இப்படியா?'' வாயைக் குவித்து உப்... எனக் காற்றில் ஊதினான் தேவா.

''அடப்பாவி! அப்போ, அவ முறைக்கிறதைத் தெரிஞ்சுட்டேதான், இவங்ககிட்ட கதை விட்டியாடா?'' கொலைவெறியானான் தமிழ்.

''உன்னை யாருடா அவளைப் பாக்கச் சொன்னது?'' தேவா கேஷுவலாக கேட்க, 'அவனை அப்படியே வயிற்றில் ஓங்கி ஒரு குத்து விட்டால் என்ன?' என்று யோசிக்கத்

துவங்கினான் தமிழ்.

அது அவன் முகத்திலேயே தெரிவதற்குள் அவர்களது தளத்திற்கு வந்து விடவே, முதல் ஆளாக வெளியே ஓடிப் போனான் தேவா. அவனைத் துரத்தியவாறே சென்ற தமிழ், அது அலுவலகம் என்பதால், தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அதை அடக்கியவாறே, ''தேவா! கான்டீன் போகலாம்... வர்றியா?'' சிரித்த முகமாகக் கேட்டான்.

''இல்ல. நான் வரமாட்டேன். நீ அடிப்ப...'' முகத்தை அழுவதுபோல் வைத்துக்கொண்டு சொல்ல, தமிழோ, ''சிக்காமலாடா போவ?'' பல்லைக் கடித்தவாறே அங்கிருந்து நகர்ந்தான்.

''ஹப்பா! போயிட்டானா? இவனைக் கிட்டவச்சுகிட்டு ஒரு பொண்ணை சைட் அடிக்க முடியுதா? சாமியார்! சாமியார்!'' புலம்பியவன், அன்று முழுவதும் தமிழின் கையில் சிக்கிவிடக் கூடாதென்று முடிவெடுத்தான்.

''ஏன் தேவா உனக்கு இந்த வேண்டாத வேலை...?'' -நிஷா

''உன்கூட பேசுறதைத் தானே சொல்லுற?'' எனப் பட்டெனக் கேட்க, ரௌத்திரமானாள் நிஷா.

''போடா லூசு!'' இன்னும் அவள் சொன்ன பேச்சுக்களை எல்லாம் காதுகொடுத்துக் கேட்கமுடியாமல், அங்கிருந்து வேகமாக நகர்ந்தான்.

''இன்னைக்கு என்ன.. எல்லாரும் சூடா இருக்காங்க? இருந்தாலும், எப்படித்தான் பேசுன அஞ்சாவது நிமிஷம் கண்டு பிடிக்குறாளுங்களோ லூசுன்னு?'' அவன் மற்றவரை வெறுப்பேற்றுவதை அறியாமல், தனக்குள் குழம்பினான்

தேவா. பின்னர் அதை விடுத்து, வேலையில் கவனமானான்.

அறைக்குச் சென்ற தமிழோ, அதன்பிறகு தேவாவைச் சுத்தமாக மறந்துவிட்டான். தனது மேலதிகாரி அழைப்பதாகச் சொல்லவே, 'எதற்காக இருக்கும்?' என்ற யோசனையுடனே சென்றான்.

அவர்கள் உரையாடல் மொத்தமும் ஆங்கிலத்திலேயே இருந்தது. ''நான் உள்ளே வரவா?'' தமிழ் அனுமதி வேண்ட, ''எஸ்!'' என்ற அனுமதி கிடைத்தவுடன், கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

''குட் மோர்னிங் சார்!''

''குட் மோர்னிங் தமிழ்! உக்காருங்க.'' அவன் அமர்ந்ததும், சிறிது தாமதித்தவர், பேச்சைத் துவங்கினார்.

''தமிழ்! அந்தக் கவர்மெண்ட் ப்ராஜெக்ட், என்னைக்கு முடியுது? அதுக்குப் பிறகு, அந்த வீட்டுவசதி வாரியத்தோட குடியிருப்பு, காவல்துறை குடியிருப்போட பிளான் எல்லாம் போட்டு முடிச்சுட்டீங்களா?

''இந்தக் கவர்மெண்ட் ப்ராஜெக்ட்ல, நிறைய ரிஸ்க் இருக்கு சார். இந்த அரசாங்க ஆட்களோட தலையீடு, ரொம்பவே அதிகமா இருக்கு.

''அந்த மேம்பால ப்ராஜெக்ட் என்ன ஆச்சு? எல்லாத்தையும் சீக்கிரம் முடிக்கணும். இந்த வருஷத்துக்குள்ளே அதை முடிச்சே ஆகணும்னு வேற சொல்லிட்டாங்க. வேலையெல்லாம் எப்படி நடந்துட்டு இருக்கு?'' தமிழைப் பேசக்கூட விடாமல், கேட்டுக் கொண்டே இருந்தார் ஷர்மா.

''நீங்க கேட்ட கவர்மெண்ட் ப்ராஜெக்ட் இன்னும் ஒரு மாசத்தில் முடிஞ்சுடும். அந்தக் காவலர் குடியிருப்பு பிளான்,

நம்ம தேவா பொறுப்பில் இருக்கு. அதே மாதிரி, மேம்பால பிளான் மட்டும்தான் என்னோடது; வேலையெல்லாம், மிஸ்டர். சங்மா தான் பாத்துக்கறார்.

''அரசாங்க வேலைகளை எடுத்து நடத்தினால், சில குறுக்கீடுகள் இருக்கத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது. அதையெல்லாம் சமாளிச்சுடலாம். இந்த மேம்பாலம், ஒரு ஏரியா மட்டுமாவது முடிஞ்சு, அவங்க திறப்புவிழா வச்சுட்டா... கொஞ்சம் நெருக்கடி இல்லாமல் வேலை பார்க்க முடியும்.

''அவங்களோட ஆட்சியில் இந்தத் திட்டத்தை துவங்கணும்னு, நமக்கு ரொம்ப பிரஷர் கொடுக்குறாங்க. மூணு ஷிப்ட் போட்டு வேலை நடக்குது சார்.'' அவன் அந்தத் திட்டத்தில் இல்லை என்றாலும், தனக்குத் தெரிந்தவற்றைச் சொன்னான்.

''தமிழ்! உங்ககிட்ட எனக்குப் பிடித்ததே இதுதான். உங்க வேலை மட்டும் இல்லாமல், கம்பெனியின் வளர்ச்சிக்கே ரொம்ப உறுதுணையா இருக்கீங்க. உங்களோட பிளான் எல்லாம் கச்சிதமா இருக்கு.

''உங்களுக்கு நம்ம கம்பெனியின் ஹெட்ஆபீஸ் போகிற வாய்ப்பும், கூடிய சீக்கிரமே அமையலாம். உங்களுக்கு நம்ம கம்பெனியிலேயே ஒரு பெரிய எதிர்காலம் இருக்கு!'' மனமாரச் சொல்லி வாழ்த்தினார் சர்மா.

அவரது பாராட்டை மெல்லிய சிரிப்புடன் ஆமோதித்தவன், ''சார்! நீங்க என்னைக் கூப்பிட்ட காரணம் இதுதானா?'' -சந்தேகமாகக் கேட்க, அவனது புத்திசாலித்தனத்தை மனதுக்குள் மெச்சிக் கொண்டார்.

''நம்ம சைட்ல ஒரு சின்னப் பிரச்சனை தமிழ். நேத்து நைட் வேலை நடந்துட்டு இருக்கும்போது, ஒரு சின்னப் பையனுக்கு விபத்து நடந்திருக்கு. அது போலீஸ் கேஸ் ஆயிடுச்சு. அதை எப்படியாவது இல்லாமல் செய்யணும். ஏற்கனவே இதே மாதிரி விபத்து நடந்தப்போ, நீங்கதான் ஹெல்ப் செஞ்சதா சைட் இஞ்சினியர் சொன்னார்.'' தயக்கமாக இழுத்து, அவன் முகம் பார்த்தார்.

ஆனால், தமிழின் முகமோ கோபத்தைப் பிரதிபலித்தது. ''சார்! அன்னைக்கு விபத்து நடந்தது, என்னோட சைட்ல. அதுவும் அங்கே விபத்து நடந்தது, ஒரு சின்னப் பையனுக்கு இல்லை, ஒரு ஆளுக்கு. அதையுமே, நேர்மையான விதத்தில்தான் சரி செய்தேனே தவிர, எந்தக் குறுக்கு வழியிலும் இல்லை!'' -அழுத்தமாகச் சொன்னான்.

''எனக்கும் அது தெரியும் தமிழ்! குடும்பக் கஷ்டம், வறுமை, படிக்க வசதி இல்லை, இப்படி ஏகப்பட்ட காரணம் சொல்லி, வேலைக்கு வந்துடுறாங்க. ஆனால்...''

''ஏன் சார்... அது மட்டும்தான் காரணமா? அந்தச் சின்ன பையனுக்கு மொழி தெரியாது, எட்டுமணி நேரம்தான் வேலை பார்ப்பேன்னு பிடிவாதம் பிடிக்க மாட்டான். முழு ஆள் வேலைக்கு, பாதி சம்பளம்தான் வாங்குவான், இப்படி மறைமுகமான காரணம் வேறையும் உண்டே'' ஆத்திரம் குறையாமலே கேட்டான்.

''இதெல்லாம் நம்ம தொழிலில் சகஜம் என்று தெரியாதா? உங்களால், உதவ முடியுமா? முடியாதா?'' அவர் தனது பதவியின் அதிகாரத்தைக் காட்டினார்.

''எது சார் தொழிலில் சகஜம்? இதுபோல, சட்டத்துக்குப் புறம்பா பண்ணிட்டு இருக்கீங்க. வழக்கமா,

இது எங்கள் பொறுப்பு இல்லைன்னு தட்டிக் கழிப்பீங்களே! இப்போ மட்டும் என்ன...?'' கோபமும், சந்தேகமும் போட்டி போட்டது அவன் குரலில்.

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்...!'' ஷர்மா கத்தினார்.

''எனக்குத் தேவையில்லாத விஷயம் என்றால், நீங்க என்கிட்ட இதை கொண்டு வந்திருக்கவே கூடாது. அன்னைக்கு என் சைட்-ல நடந்த விபத்துக்கு... நானே பொறுப்பேற்று, அவனுக்கு நஷ்டஈட்டைக் கொடுத்தேன், மற்றபடி, நீங்க நினைக்கிற மாதிரி குறுக்கு வழியில் எதையும் செய்யலை!'' ஆத்திரமாகச் சொன்னவன்,

''அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் சைட்லதான் விபத்து நடந்துதா? அந்தத் திலீபன் தானே இதுக்கெல்லாம் காரணம்? அவனை நான் சும்மா விடமாட்டேன். நானும் எவ்வளவோ நாள் சொல்லிட்டேன், சின்னப் பசங்களை வேலைக்கு வைக்காதேன்னு... கேட்டால் தானே?'' எனக் கறுவியவன், அலைபேசியை எடுத்து திலீபனை தொடர்பு கொண்டான்.

''என்ன திலீபன்! என்ன நடக்குது அங்கே?'' இவன் கர்ஜிக்க, திலீபனுக்குக் கொஞ்சம் உதறல் எடுத்தது.

''மிஸ்டர் தமிழ்! நீங்க இந்த விஷயத்தில் தலையிட வேண்டாம். எல்லாவற்றையும் நாங்க பார்த்துக்கறோம். நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க!'' ஷ்ர்மா இடைபுகுந்து சொன்னார்.

''என்ன பார்த்துப்பீங்க? இங்கே அந்த விபத்து நடந்தப்போ, வேலையே நடக்கலை; அந்தப் பையனா வந்து விழுந்துட்டான்னு சொல்லி, கேசை முடிப்பீங்க.

அப்படித்தானே? ஒருமுறை நடந்தால் பரவாயில்லை.., இது அடிக்கடி நடக்குதே!

''விபத்து நடந்தால், அதற்குண்டான நஷ்டஈடு கொடுப்பதில் உங்களுக்கு என்ன பிரச்சனை...? எல்லாத் தொழிலார்களுக்கும் இன்ஷூரன்ஸ் பண்ணணு;, அதையும் செய்வதில்லை, நஷ்டஈடும் கொடுக்காமல் தட்டிக் கழித்தால், அந்தக் குடும்பம் என்ன பாடுபடும்?

''இதை நான் இப்படியே விடப் போவதில்லை. இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும்!'' கோபமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினான். அவன் உடலும், மனமும் கோபத்தில் கொந்தளித்தது.

''தமிழ்! நீங்க இதில் தலையிட்டால், பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்!'' ஷர்மாவின் மிரட்டல் தொடர, அவன் அதை கண்டுகொள்ளவே இல்லை. அலைபேசியைப் பார்க்க, திலீபனோடான லைன் கட் ஆகியிருந்தது.

''நீங்க, உங்களால் முடிந்ததைப் பாருங்க. நான், என்னால் முடிந்ததைப் பார்க்குறேன்!'' கோபமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

அவன் வெளியேற, ஷர்மா தன் தலையிலேயே அடித்துக் கொண்டார். 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டின்ற மாதிரி... அவனைக் கூப்பிட்டு, ஏத்திவிட்ட மாதிரி ஆயிடுச்சே!' என்று எண்ணியவர், வேகமாகத் தன் அலைபேசியை எடுத்து, சில எண்களை அழுத்திப் பேசிவிட்டு வைத்தார்.

தமிழோ, தனது அலைபேசியை எடுத்து தேவாவை அழைக்க, தமிழின் பெயரைப் பார்த்த தேவா திகைத்தான்.

''அடப்பாவி! இன்னுமாடா நீ அதையே நினைச்சுட்டு இருக்க! இப்போ உன் போனை அட்டென்ட் பண்ணி, என் காதைப் புண்ணாக்கிக்க நான் தயாரா இல்லை!'' சொல்லிவிட்டு, கைபேசியை அணைத்தான்.

தேவா அழைப்பைத் தவிர்க்கவே, ஏற்கனவே இருக்கும் கோபம் இன்னும் கொதிப்பாக, அவனது அறையை நோக்கிச் சென்றான் தமிழ்.

சென்ற வேகத்தில் அவனது கேபினுக்குள் நுழைந்து, ''ஏண்டா புண்ணாக்கு! போன் பண்ணா எடுக்கத் தெரியாது உனக்கு? போன் பேச முடியாத உனக்கெல்லாம், எதுக்குடா போன்? இருக்குற கடுப்புல, எதையாவது சொல்லிடப் போறேன்!'' -பொரிந்தான்.

''தமிழ்! நான் வேணா, இனிமேல் நீ இல்லாத நேரமா பாத்து சைட் அடிக்கிறேண்டா. அதுக்கு ஏண்டா இப்படி விடாது கருப்புன்ற மாதிரி, தொரத்தித் தொரத்தி அடிக்கிற? உலகத்தில் ஆயிரம் ஃபிரண்டு வச்சுருக்கவன் எல்லா சந்தோசமா இருக்கான். ஆனா, ஒரே ஒரு...''

''அடச்சீ! நிப்பாட்டு...! மனுஷன் இருக்குற டென்ஷன் தெரியாமல். இன்னைக்கும், சைட்ல ஒரு விபத்தாம். உனக்குத் தெரியுமா?'' வேகமாகக் கேட்டான்.

''ஆமா. தெரியும்; நிஷா சொன்னா. இப்போ அதுக்கும், நீ வந்ததுக்கும் என்னடா சம்பந்தம்?'' நண்பனை கூர்மையாகப் பார்த்தவாறே கேட்டான்.

''என்ன சம்பந்தமா...? இந்த ஷர்மா என்னன்னா என்னைக் கூப்பிட்டு, இப்படி ஒரு விபத்து, அன்னைக்கு நீ செஞ்ச மாதிரியே ஏதாவது செய்ன்னு சொல்லுறான்... இவனுங்களை எல்லாம்...'' அதற்குமேல் சொல்ல

முடியாமல் பல்லைக் கடித்தான்.

''அந்த ஆளு எதுக்கு, வேலியில் போற ஓணானை எடுத்து வேட்டிக்குள் விட்டுட்டுகிட்டான்?'' தீவிரமாகச் சிந்தித்தவனை,

''என்னடா சொன்ன...?'' என்ற தமிழின் குரல் நடப்புக்குத் திருப்பியது.

''அ... இல்ல... அது... நீ வாடா மச்சான், கொஞ்சம் இப்படி உக்காரு. இந்தா! இந்தத் தண்ணியைக் குடி. விபத்து நடந்தது உன் கட்டுப்பாட்டில் இருக்கும் சைட் கிடையாது. பிறகு எதுக்குடா தேவையில்லாத வேலை?'' நண்பனுக்குத் தண்ணீரைக் கொடுத்தவாறே, நைசாக்க் கேட்டான்.

அந்தத் தண்ணீர் பாட்டிலை தூக்கி அவன் மீதே விட்டெறிந்தவன், ''உனக்கெல்லாம் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லையாடா? இப்படி எல்லோருமே ஒதுங்கிட்டா, இதுக்கெல்லாம் எப்போதாண்டா விடிவு வரும்?'' ஆத்திரமாகக் கேட்டான்.

அவன் விட்டெறிந்த தண்ணீர் பாட்டிலை கேட்ச் பிடித்தவன், ''தமிழ்... இப்போ அந்த ஆள் உன்கிட்ட கேட்டால், உன்னால் முடியும்னா செய், இல்லையா முடியாதுன்னு சொல்லிட்டுப்போ, அதை விட்டுட்டு, தேவையில்லாமல் எதுக்குடா பெரிய ஆளுங்களோட மோதுற?'' அவனை எச்சரித்தான்.

''போடா... தொட நடுங்கி. அங்கே ரெண்டு பொண்ணுங்க இருக்காங்கன்னு சொன்னால் இப்போ வந்திருப்ப இல்ல. நான் இப்போ ஹாஸ்பிடல் போறேன். இது போல நடக்கற விஷயத்துக்கு, இத்தோட ஒரு முடிவு கட்டணும்'' சொல்லிவிட்டு அவனது அறையிலிருந்து

வெளியேறினான்.

வெளியேறிய நண்பனின் பின்னால் வேகமாகச் சென்றான் தேவா. தமிழின் கோபம் நியாயமானது என்றாலும், அரசியல் பின்புலமும், பணபலமும் இருக்கும் பண முதலைகளின் முன்பு அவனது கோபம் செல்லுபடியாகுமா?

6

அலைகடலின் ஆர்ப்பரிப்பும்,
ஆடிக்காற்றின் வேகமும்
ஆகாயத்தின் நீலமும்
எல்லாம் புதிதாய்...
எல்லாம் உன்னாலே...!

நண்பனைத் தொடர்ந்த தேவா, 'எவனாவது... எதிர்க்கட்சிகாரன்கிட்டயே, ஆதாரத்தை எல்லாம் கொண்டு போய்க் கொடுப்பானா? இந்த ஷர்மா ஏன் இப்படி செய்யிறார்!'' -நொந்து கொண்டே தமிழைத் தொடர்ந்தான்.

இருவரும் அந்தக் கட்டடத்திலிருந்து வெளியேறி, கீழ்த்தளத்தை அடைந்து, தங்கள் பல்சரில் ஏறி வெளியேறும் வேளையில், செக்யூரிட்டியால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

''ஏன் தடுக்குற?'' தமிழ் கோபத்தை கட்டுப் படுத்தியவாறே கேட்டான்.

''எனக்கு எதுவும் தெரியாது சார். நீங்க வெளியே போகும்போது, எங்கே போறீங்கன்னு கேட்டு... அவுட்பாசில்

குறிக்கச் சொன்னாங்க. எனக்குக் கொடுத்த வேலையை நான் செய்யணும். அவ்வளவு தான்!'' - சொன்னான்.

''எங்க சார் போறீங்க...?'' லெட்ஜரோடு அருகில் வந்தான்.

''அதுக்குள்ளே, அவனுங்க புத்தியைக் காட்டுறானுங்க பார்த்தியாடா'' -தமிழிடம் புலம்பினான் தேவா.

''உனக்குப் பயம்னா, நீ இறங்கிக்கோடா...'' -கடுப்பானான் தமிழ்.

''ஏண்டா! ஒரு விஷயத்தைக் கூட சொல்லக் கூடாதாடா? உனக்கு எதுக்குடா இப்போ இவ்வளவு கோபம் வருது. இதுக்கே இப்படின்னா, இன்னும் நீ செய்யப்போற காரியத்துக்கு இன்னும் பெரிய ஆப்பாதான் வரும். அதுக்கு என்னங்குற? சும்மா மொறச்சுகிட்டு!'' புலம்பினான் தேவா.

அவன் சொல்ல வருவதைப் புரிந்து கொண்டவன், செக்யூரிட்டியிடம், தாங்கள் சைட்டுக்குச் செல்வதாகச் சொல்ல, அதை மறுத்துப் பேசாமல் எழுதிகொண்ட செக்யூரிட்டி அவர்களை அனுப்பினான். வழி முழுவதும் அமைதியே ஆட்சி செய்தது அங்கே.

அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளவில்லையே தவிர, சிந்தித்துக் கொண்டுதான் இருந்தார்கள். 'என்ன மனுஷங்க இவங்க... பூனைக்கு யார் மணியைக் கட்டுவது ன்னு. இவ்வளவு நாள் விட்டாச்சு. இனிமேலும் விட முடியாது. எப்படியாவது ஹாஸ்பிடல் போய், அந்தப் பையனைப் பார்த்தே ஆகணும்!' என்ற தீவிரமான யோசனையில் இருந்தான் தமிழ்.

தனது கம்பெனியின் இல்லீகல் நடவடிக்கைகள்

பிடிக்காமல், அதற்கெதிராக இதற்கு முன்பும், விபத்து நடந்த பொழுதே நடவடிக்கை எடுக்க முயன்றான். ஆனால், பாதிக்கப்பட்ட யாருமே அவர்கள்மேல் புகார் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

இப்போது அவன் இவ்வளவு நம்பிக்கையாகச் செல்வதற்கான காரணம், பாதிக்கப்பட்டவன் ஒரு சிறுவன் என்பதாலேயே. ஆனால், அவன் ஒன்றை மறந்துவிட்டான்; பெரியவர்களே அவர்களுக்கெதிராகப் புகார் கொடுக்க முன்வராத போது, சிறுவன் எப்படி முன்வருவான் என்பதைச் சிந்திக்க மறந்தான்.

தமிழின் எண்ணமெல்லாம் ஒன்றுதான்; எப்படியாவது பாதிக்கப்பட்டவனுக்கு நியாயம் கிடைக்கவேண்டும். அதேநேரத்தில், இது ஒரு தொடர்கதையாகவும் ஆகக் கூடாதென்றும் முடிவெடுத்தான்.

தேவாவோ, தமிழைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். தமிழ் ஒரே ஒரு விஷயத்தில்தான் தயங்குவான், அதுவும் பெண்கள் என்றால் மட்டுமே. மற்றபடி, மிகுந்த தைரியமானவன். தனக்கு நியாயம் என்று பட்டதை, யாருக்காகவும் எதற்காகவும் மாற்றிக் கொள்ளமாட்டான்.

அவனது இந்தக் குணமே தேவாவின் பயத்திற்கான காரணம். இப்போது தாங்கள் செய்யப்போகும் செயல் எங்கே போய் முடியுமென்பதும், அவனுக்குத் தெரியவில்லை.

'இப்படி டெரரா இருக்கானே...!' கிலியாக இருந்தது தேவாவிற்கு. இருவரும் அந்தப் பொதுநல மருத்துவமனைக்குச் சென்று, அந்தச் சிறுவனின் வயதைச் சொல்லி விசாரித்து அங்கே செல்ல, உடல் முழுவதும்

ஆங்காங்கே கட்டுக்களுடன் படுத்திருந்தான் சிறுவன்.

அருகிலிருந்த அவனது தாய், இவர்களைப் பார்த்தவுடன், ''ஐயா! இவன் என்வீட்டு மொட்டை மாடியிலிருந்துதான் விழுந்துட்டான், மத்தபடி, நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை!'' என அழுகையும், தயக்கமும், பயமும் போட்டிபோட, புடவைத் தலைப்பை வாயில் வைத்தவாறே, கண்களில் கண்ணீர் ஒழுகச் சொன்னார்.

''நாங்க என்ன நினைக்கிறோம்?'' பட்டெனக் கேட்டான் தமிழ்.

அவனது இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத அந்தத் தாய், திகைத்துப்போனார். அதிலிருந்து வெளிவர முடியாமல் அவர் தவிக்க, ''சொல்லுங்கம்மா! நாங்க என்னதான் நினைக்கிறோம்?'' அதே கேள்வியைத் திரும்பக் கேட்டான்.

பதில் சொல்லவே மறந்தவர்போல், அழுகை மட்டுமே அவரது பதிலாக இருந்தது. ''இப்படி அழுதுட்டே இருந்தால், எதற்குமே தீர்வு கிடைக்காதும்மா. இப்போ உங்க பையனுக்கு அடி பட்டதோட, போய்டுச்சு. இதுவே, வேற ஏதாவது நடந்திருந்தால்...? இதை மாதிரி வேற யாருக்கும் நடக்கக் கூடாதுன்னுதான் சொல்லுறேன்ம்மா. ஒரே ஒரு கையெழுத்து மட்டும் போடுங்க. மற்றதெல்லாம் நாங்க பாத்துக்கறோம்'' என்று அவரிடம் கேட்டான்.

''என்ன தம்பி பார்த்துப்பீங்க? எங்க உயிர் போவதையா? ஏதோ, எங்க வயித்துப் பிழைப்புக்காக நாங்க வேலை செய்யிறோம். எங்களால் பெரிய இடத்தில் எல்லாம் மோதமுடியாது தம்பி. ஏதோ, இந்த மட்டிலும்

வயித்தியத்துக்காவது உதவி செஞ்சாங்களே... அதுவே போதும்! இதுக்குமேல, எங்களுக்கு எதுவும் வேண்டாம். நீங்க போய்டுங்க தம்பி!'' அவனிடம் கையெடுத்துக் கும்பிட்டு மன்றாடினார்.

''இல்லம்மா...'' மறுத்துப் பேசத் துவங்கியவனை, இழுத்துக்கொண்டு வெளியேறினான் தேவா.

''என்னடா இப்படி...?'' -வேதனையாகக் கேட்டான்.

''இதுதான் யதார்த்தம் தமிழ். புரிஞ்சுக்கோ! நாம கம்பெனியிலிருந்து இங்கே வர முன்னாடியே, அந்த அம்மாவுக்கு விஷயம் தெரிஞ்சிருக்குன்னா எப்படி? அது மட்டுமில்லை, இப்போ வைத்தியத்துக்குவேற பணம் கொடுத்திருக்கானுங்க. இனிமேல் இவங்களை வெட்டிக் கொன்னால் கூட, அவங்களுக்கு எதிரா ஒரு வார்த்தை பேச மாட்டாங்க இவங்க.''

''சில விஷயங்களை நம்மளால் மாற்றவே முடியாது. அதில் இந்த ஏழைகளையும், அவங்க பயத்தையும் பிரிக்கவே முடியாது. அதாவது... பணக்காரங்களையும், பகட்டையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அதே மாதிரிதான் இதுவும்.

''இப்போ நாம மட்டும் குரல் கொடுப்பதால், எதுவுமே மாறாது. வீணா நமக்குத்தான் கெட்டபேர். சரி வா. வந்ததற்காகவாவது, சைட்டைப் பார்த்துட்டுப் போகலாம். இல்லன்னா, வேலைக்கு ஏதாவது ஆப்பு வைக்கப் போறானுங்க!'' -அவன் கவலை அவனுக்கு.

தமிழோ, ஒருவிதக் கையாலாகாத் தனத்தில் குமுறிக் கொண்டிருந்தான். இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு, நீதி, நியாயம் என எல்லாமே செத்துப் போச்சா? மனசாட்சிப்படி

வேலை செய்யவேண்டும் என்று நினைப்பது தப்பா?

'இல்லை. என்னால் இதை இப்படியே விடமுடியாது. என்னால் முடிந்ததை, நான் செய்தே ஆகவேண்டும்!' மனம் தீவிரமாகச் சிந்தித்தது.

ஒரு முடிவுடன் நிமிர்ந்தவன், ''வாடா, நீ சொன்ன மாதிரியே செய்வோம்.'' குரல் சாதாரணமாகவும், கண்களில் கோபத்துடனும் தமிழ் சொல்லவும், அவன் மனதுக்குள் என்ன நினைக்கிறான் என்பது புரியாத தேவாவோ, 'ஹையோ...! வேற எதுவோ பெருசா பிளான் பண்ணுறான் போல இருக்கே!' எனப் புலம்பியவாறே அவன் பின்னால் சென்றான்.

நேராக திலீபனின் சைட்டுக்குச் சென்றார்கள் இருவரும். ''இங்கே எதுக்குடா வந்திருக்கோம்?'' -புரியாமல் கேட்டான்.

''டேய்! முதல்ல நீ போய், அந்தத் திலீபனைப் பாரு. நான் ரெண்டே நிமிஷத்தில் வர்றேன்!'' அவனை அனுப்பியவனின் பார்வை, அந்தக் கட்டிடத்தைச் சுற்றிச் சுழன்றது.

''துப்பறியும் சாம்பு தோத்தான்; என்னதான் ஆராய்ச்சி பண்ணுவானோ?'' -புலம்பியவாறே நண்பன் சொன்னதைச் செய்தான்.

அவன் சென்றவுடன், கொஞ்சம் தள்ளியிருந்த இன்ஜினியரின் கட்டிடத்துக்குச் சென்றான். அங்கே திலீபன் வரும் முன்னர், வேகமாக அவன் தேடியது இருக்கிறதா என்று தேடினான். அவன் தேடியது கிடைக்கவே, அதை கையோடு எடுத்தவன் அங்கிருந்து வெளியேறினான்.

உடனடியாக தேவாவுக்குப் போன் செய்து அவனை

வரச் சொன்னவன், அங்கிருந்து கிளம்பிவிட்டான். தங்கள் அலுவலகம் செல்லும் முன்னர், ஹோட்டலுக்குச் சென்று மதிய சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு சென்றனர்.

அதேநேரம், ஷர்மா அவனை வரச்சொல்ல, மனதுக்குள் கோபம் கனன்றாலும், அதை முகத்தில் காட்டாமல் அவர் அறைக்குச் சென்றான்.

''என்ன தமிழ் ... ஹாஸ்பிட்டல் போயிருந்தீங்க போல?'' நக்கல் வழியும் குரலில் கேட்டார்.

அதற்குள் விஷயம் தெரிந்துவிட்டதா..? திகைத்தாலும், அதை வெளிக்காட்டாமல், ''ஆமா சார் போயிருந்தேன், அது நீங்க நினைக்கிற மாதிரி பெருசா எதுவும் இல்லை. அவனுக்கு ஏதாவது உதவி வேணுமான்னு தெரிஞ்சுக்கத்தான் போனேன்'' சாதாரணமாகவே சொன்னான்.

''தமிழ் ஏற்கனவே உங்களுக்கு சொல்லியிருக்கேன். கம்பெனி விஷயத்தில் தலையிடக் கூடாதுன்னு... நீங்க கேக்குறதாவே தெரியலை. இன்னொருமுறை நீங்க இப்படி செய்தால் உங்கமேல நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்'' கண்டிப்பாகச் சொன்னார்.

''இனிமேல் உங்களுக்கு இப்படி ஒரு கஷ்டமே இருக்காது சார்...'' சொல்லிவிட்டு, அவர் பதிலை எதிர்பார்க்காமலே வெளியேறினான்.

அவனது இந்தப் பதிலை எதிர்பார்க்காத ஷர்மா திகைத்தாலும், தமிழ் இனிமேல் எதுவும் செய்யாமலிருந்தால் போதும் என விட்டுவிட்டார்.

தமிழுக்கும் கம்பெனிக்கும் ஏற்கனவே எவ்வளவோ உரசல்கள் வந்த போதும், அவனை கம்பெனியை விட்டு

அனுப்பும் முடிவை மட்டும் அவர்கள் நிறுவனம் எடுத்ததே இல்லை. அதற்குக் காரணம் ஒன்றுதான். அது அவனது திறமை மட்டுமே. எவ்வளவோ ஆர்டர்களும், கான்ட்ராக்டுகளும் அவர்கள் நிறுவனத்துக்குக் கிடைக்கக் காரணமே, அவனது பக்கா பிளான் தான். கச்சிதமாகவும், நேர்த்தியாகவும் ஒவ்வொரு கட்டிடத்தையும் வடிவமைப்பதில் கை தேர்ந்தவன் அவன்.

அந்த ஒரு காரணம் தான், அவனை அங்கே இருந்து வெளியே அனுப்பாமல் தேக்கியது. அதைவிட, அவன் அவர்களது போட்டி கம்பெனிக்குப் போய்விட்டால், நஷ்டம் என்னவோ அவர்களுக்குத்தான். எந்த சூழலிலும் அப்படி ஒரு முட்டாள்த்தனத்தைச் செய்ய அவர்கள் தயாராக இல்லை.

ஷர்மா கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தாலும், தமிழின் அமைதியின்மேல் அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அவரது கணிப்பு சரிதான் என்பது, அடுத்த இரண்டு நாட்களில் அவருக்குப் புரிந்தது.

சைல்ட் லேபர் கமிஷன் அலுவலகத்திலிருந்து, அவர்களது அலுவலகத்துக்கும், இவர்கள் சிறுவர்களை வேலைக்கு வைத்திருப்பதாக தங்களுக்குப் புகார் வந்திருப்பதாகவும், அதற்கு அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும் என்றும், அதுவரை அந்தக் காம்ப்ளெக்ஸ்ஸில் வேலையை நிறுத்தி வைக்குமாறும் கடிதம் வந்தது.

அந்தக் காம்ப்ளெக்ஸ்சோ ஒரு அரசியல்வாதிக்குச் சொந்தமானது. குறித்த நேரத்தில் அதை அவரிடம் ஒப்படைக்கவில்லை என்றால், அதுவே ஒரு பெரிய பிரச்சனையை கொண்டுவரும். வேறு வழியே இல்லாமல்,

அந்த அரசியல்வாதிக்கே தொடர்புகொண்டு சொல்லி விட்டார்கள்.

முதலில் அந்தப் புகாரை யார் கொடுத்திருக்கிறார்கள் என்று ஆராய, அது அன்பு என்பவரின் பெயரிலிருந்தது. அதைவிட, அதற்கு ஆதாரம், தன்னிடம் இருக்கிறது என்ற அந்த வாசகம் தான், அவர்களது வயிற்றில் புளியைக் கரைத்தது.

கம்பெனியின் சார்பில் அப்படி எதுவும் இல்லை என்று விளக்கம் கொடுத்து, அவர்களது மற்ற சைட்களிலும் செக்கிங் நடத்தப்பட்டு, அரசியல்வாதி தலையிட்டும் கூட, வேலையைத் துவங்க முடியவில்லை. இறுதியாக ஷர்மாவிடம் கேட்க, அவரோ தனக்குத் தமிழ் மீதுதான் சந்தேகமாக இருக்கிறது என்று சொல்லவே, அவரது கவனம் முழுவதும் தமிழ் மீது திரும்பியது.

இந்தக் கம்ப்ளைண்ட் விஷயம் தெரிந்த தேவா நடுக்கத்தில்தான் இருந்தான். ஆனால், தமிழோ எதையும் கண்டுகொள்ளாமல் சாதாரணமாகத்தான் இருந்தான். அவனது இந்தத் திடமே அரசியல்வாதியை தடுமாற வைத்தாலும், தமிழ் மேலிருந்த கண்ணை அகற்றவில்லை.

எப்படியோ திரைமறைவு வேலைகள், லட்சக் கணக்கில் கைமாறிய பணம் என அனைத்தும் சேர்ந்து, மறுபடியும் வேலைகள் துவங்கலாம் என தீர்ப்பு வரவே இரண்டு மாதங்கள் ஓடியிருந்தது. அந்த அரசியல்வாதி கொதிப்பில் இருந்தார்.

வேலைகள் துவங்கலாம் என தீர்ப்பு வந்த அடுத்த நாளே, சைல்ட் லேபர் கமிஷன் அலுவலகத்துக்கு, ஒரு 'சி.டி.' வந்திருக்க, அதோடு ஒரு கடிதமும் வந்திருந்தது.

அதை போட்டுப் பார்த்த அனைவரின் கண்களிலும் வியப்பு.

எந்த கட்டிடத்தின்மேல் கேஸ் நடந்ததோ, அந்தக் கட்டிடத்தில் சிறுவர்கள் வேலை செய்யும் காட்சி ஓடிக் கொண்டிருந்தது. இந்தப் பிரச்சனையை, இதற்குமேல் எப்படி அணுகுவது என்று, அந்த அரசியல்வாதிக்கு சுத்தமாகப் புரியவில்லை.

இந்த வேளையில் அவர்களுக்கு சாதகமான இன்னொரு விஷயமும் அவர்கள் பார்வையில் விழுந்தது. இந்தச் 'சிடி' வெளியே எப்படிச் சென்றது என்பதை அறிய, அங்கிருந்த அனைத்து வீடியோக்களையும் சோதனை செய்ய,

அதில் தமிழ், இன்ஜினியரின் அறைக்குள் நுழையும் காட்சியும் பதிவாகி இருக்க, அந்த அரசியல்வாதியின் கோபம் முழுவதும் தமிழ்மேல் பாய்ந்தது.

7

வரும் துன்பங்கள் அனைத்தும் வசந்தமாவதும்
வேதனைகள் அனைத்தும் வெற்றியாவதும்,
எல்லாம் உன்னாலே...!

தமிழின்மேல் பார்வை விழுந்த உடனே, கொலைவெறிக்கு ஆளானான் அவன். அதிலும், அரசியல்வாதிகளைப் பகைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. அதிலும் அவர்கள் ஆட்சியில் இருந்துவிட்டால்,

அந்த ஐந்து ஆண்டுகளில் அவர்கள் வைப்பதுதான் சட்டம்.

இங்கும் அதே நிலைதான் வந்தது. 'பணம் பத்தும் செய்யும், பணம் பாதாளம் வரை பாயும், பணமென்றால் பிணம் கூட வாயைத் திறக்கும்' எனச் சொல்வதிலேயே, அந்தப் பணத்தின் மதிப்பு நமக்குப் புரியும்.

அப்படியிருக்கும்போது, உயிரோடு இருக்கும் மனிதர்கள் எம்மாத்திரம்? ''அந்த ஒரிஜினல் ஆதாரம் கிடைத்துவிட்டால், இந்தக் கேசைத் தள்ளுபடி செய்வதாக, நீதிபதியே பேரம் பேசிவிட, அதற்கான வேலைகளில் இறங்கினார்கள் அவர்கள்.

தமிழிடமிருந்து அதைக் கேட்டு வாங்கும் பொறுமையெல்லாம் யாருக்கும் இல்லை. எனவே அவனை முடித்துவிட்டால், தாங்கள் இதிலிருந்து வெளியேறி விடலாம் என கணக்குப் போட்டார்கள்.

அதுவும் சரிதான் என்பதுபோல், தமிழும் அவனது நடவடிக்கைகளை யாருக்கும் சொல்லவில்லை. தேவாவிடமிருந்து கூட அதை மறைத்தான். அப்படி அவனுக்குத் தெரிந்தால், எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதுபோல், அவனது நடவடிக்கைகளே தன்னை காட்டிக் கொடுத்துவிடும் என்று எண்ணினான்.

இவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டவன், தான் செல்வதையும் கண்காணிக்க கேமரா இருக்கும், அந்தக் கேசட்டையும் எடுக்கவேண்டும் என்று எண்ண மறந்தான். சிலவேளை புதிதாக திருடுவதால் அந்த நினைவு அவனுக்கு வராமல் போயிருக்கலாம்.

அன்று காலையில் எழுந்தது முதலே, தமிழ் செய்தித்தாளைப் புரட்டுவதும், நம்பிக்கை இல்லாதவன்

போல், மீண்டும் அதையே பார்ப்பதுமாக இருக்கவே, சுப்ரமணியின் புருவம் யோசனையில் சுருங்கியது.

''என்ன தமிழ்! செய்தித்தாளில் ஏதாவது முக்கியமான செய்தியை எதிர்பார்க்கிறாயா?'' சந்தேகமாகக் கேட்டார். அவர் தமிழாசிரியர் என்பதால், அவர் பேசும்போது, முடிந்த அளவு ஆங்கிலத்தை தவிர்த்துவிடுவார்.

''அப்படில்லாம் எதுவும் இல்லப்பா...'' அவனது தடுமாற்றமே அவனைக் காட்டிக் கொடுக்க,

''நீ திறமைசாலியா இருக்கலாம், ஆனால், பொய் சொல்லும் அளவு இன்னும் திறமைசாலியா ஆகலை..'' அவனை கூர்ந்து பார்த்தவாறே சொன்னார்.

அவரது பார்வையில் தடுமாறினான் தமிழ். ''இது கம்பெனி விஷயம்ப்பா, பெருசா எதுவும் இல்லை.'' -சமாளிக்க முயன்றான்.

''கம்பெனி விஷயத்தை, செய்தித்தாளில் தேடுற, அப்புறம் அது பெரிய விஷயம் இல்லன்னு சொல்லுற? நம்புற மாதிரி இல்லையே.., என்னன்னு சொல்லு தமிழ்...!'' அவனை வற்புறுத்தினார்.

தந்தையிடம் இதுவரை பொய் சொல்லிப் பழக்கம் இல்லை என்பதால், கொஞ்சம் தயங்கினாலும், நடந்தவற்றை மறைக்காமல் அவரிடம் சொன்னான். பொறுமையாகவும், கவனமாகவும் கேட்டுக் கொண்டார்.

சொல்லி முடித்தும், 'உனக்கு எதுக்கு இந்தத் தேவையில்லாத வேலை, என்று கடிந்துகொள்ளவோ, ஏன் இப்படி செய்யிறாங்க, என்ற ஆதங்கமோ, பாத்துப்பா, என்ற கரிசனமோ, அவங்களை சும்மா விடக் கூடாது, என்ற கோபமோ ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அவரது முகம்

பார்க்க', அவரது முகமோ ஏதோ தீவிர யோசனையைப் பிரதிபலித்தது.

''என்னப்பா யோசிக்கிறீங்க...?'' அவர் யோசனையைக் கலைத்தான்.

''இந்தத் தேவா பயலுக்கு விஷயம் தெரியாதே? ஏன் கேட்குறேன்னா..,அப்படித் தெரிஞ்சால், சும்மா இருக்க மாட்டான். சரியான தொடை நடுங்கி. எனக்கு என்ன தோணுதுன்னா... இப்போ அவங்க அந்தக் கேசட்டை தேடிட்டு இருப்பாங்கன்னு நினைக்கிறேன்.

''அது மட்டும் இல்லை. அது எப்படி வெளியே போயிருக்கும்னு யோசிக்கத் துவங்கி இருப்பாங்க. நீ போன இடத்தில், உன்னை யாராவது பார்த்து இருப்பாங்களா?'' சந்தேகமாகக் கேட்டார்.

''இல்லப்பா. என்னை யாருமே பார்த்திருக்க சான்ஸ் இல்லை. ஆனால், இந்தப் புகாரை நான்தான் கொடுத்திருப் பேன் என்ற சந்தேகம் அவங்களுக்கு இருக்கலாம். அதையுமே அவங்க காட்டிக்கலை.'' அவனும் தீவிரமாகவே பதில் சொன்னான்.

''அது இன்னும் ஆபத்துப்பா. மலையோட மோதுறதும், அரசியல்வாதிகளோட மோதுறதும் ஒண்ணு. அப்படி நாம மோத முடிவெடுத்துட்டா காயம் நமக்குத்தான் ஆகும். நீ ஒரு நல்ல விஷயத்துக்காக இறங்கி இருக்க, பார்த்து நடந்துக்கோ!'' அவனை எச்சரிக்கையாக இருக்குமாறு சொன்னார்.

''உங்ககிட்ட சொல்லலன்னு, உங்களுக்கு என்மேல் கோபம் இல்லையே, உங்களுக்குப் பயம்மா இருக்காப்பா...?'' தயங்கியவாறு கேட்டான்.

''எனக்கு எதுக்குப்பா கோபம்? அதெல்லாம் எதுவும் இல்லை. நீ கொஞ்சம் கவனமா இரு!'' அவனிடம் சொன்னவர், ''பார்வதி! நம்ம பையனை நீதான் பார்த்துக்கணும்'' என மனைவியிடமும் சொல்ல மறக்கவில்லை.

தன் தந்தையின் பெருந்தன்மையை நினைத்து அவனுக்கு வியப்பாக இருந்தது. அவர் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால், கண்டிப்பாக எதற்கு இந்தத் தேவையில்லாத வேலை என்று கண்டித்திருப்பார்கள். ஆனால், அவர் அவ்வாறு செய்யாதது அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

அவனிடம் பெருந்தன்மையாக பேசிய அவரோ, தன் மனைவியிடம் புலம்பிக் கொண்டிருந்தார். ''கேட்டியா பார்வதி...? உன் பையன் பெரிய மனுஷங்களோட மோதத் துவங்கிட்டான். எனக்கும் அவனைத் தடுக்கணும்னு ஆசையாத்தான் இருக்கு. ஆனால், தப்பை... யாராவது ஒரு ஆள் தட்டிக் கேக்கணுமே?

''எனக்கென்னமோ மனசே சரியில்லை பாரு... இப்போவே கோவிலுக்குப் போய், ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வந்துடுறேன். அப்போதான் நிம்மதியா இருக்கும்.'' சொன்னவர் கோவிலுக்குக் கிளம்பினார்.

''என்னப்பா திடீர்ன்னு...கோவிலுக்கு?'' கேட்ட தமிழிடம், வெறுமனே புன்னகைத்துவிட்டு விலகினார். தமிழும் மேலே எதுவும் கேட்காமல் அலுவலகத்துக்குக் கிளம்பப் போனான்.

வடபழனி முருகன் கோவிலுக்குள் நுழையும் பொழுதே, மனம் அமைதியடைந்ததைப் போல் உணர்ந்தார்.

பூஜை தட்டு, பழம், தேங்காய் என அனைத்தையும் வாங்கியவர் சன்னிதியை நோக்கிச் சென்றார்.

சன்னிதியில் நின்று மனமுருக முருகனை வேண்டிக் கொண்டார். தீபாராதனையை தொட்டு, கண்களில் ஒற்றிக் கொண்டவர், பிரகாரத்தை சுற்றிய பிறகு, ஒரு ஓரத்தில் அமர்ந்தார். மனமோ, ''என் பையன் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கொடு இறைவா!'' என இறைஞ்சியது.

அதேநேரம், பக்கத்துத் தூணின் மறைவில் இருவர் பேசுவது, அவரது அனுமதி இன்றியே அவர் காதில் விழுந்தது.

''என்ன சுதா, சென்னைக்கு வரணும்னு சொன்ன, வந்தாச்சு. இப்போ சொந்தங்களை எல்லாம் பார்க்க முடியலன்னு கண் கலங்குற. வரும்போதே, அங்கேயெல்லாம் போக வேண்டாம்னு சொல்லிட்டு தானே உன்னை அழைச்சுட்டு வந்தேன்.

''இப்போ இப்படி அழுதால் நான் என்ன செய்ய? நீ இப்படியே அழுதுட்டு இருந்தால், இன்னைக்கே நான் பாம்பே கூட்டி போய்டுவேன்'' கெஞ்சலும், கரிசனையும், சின்ன மிரட்டலுமாக ஒலித்தது அந்தக் குரல்.

''நான் என்னவோ நினைச்சு வந்தேன், இங்கே எல்லாம் தலைகீழா இருக்கு!'' விசும்பினார் சுதா.

''என்ன நினைச்சுட்டு வந்த...? உங்க அண்ணன் பையனுக்கு, நம்ம பொண்ணைக் கட்டலாம்னா...?'' கோபமாகக் கேட்டார்.

''ஏன்? அதில் என்ன தப்பு...?'' பதிலுக்கு சுதாவின் குரலும் உயர்ந்தது.

''கோவில் சன்னிதானத்தில் வச்சு, இந்த விவாதம்

வேண்டாம், வா நாம ஹோட்டலுக்குப் போய்டலாம்...'' சொன்னவாறு எழுந்துகொண்டார்.

''ஆமா. என் கஷ்டம் எனக்குத்தானே தெரியும்! உங்களுக்கென்ன...?'' மூக்கைச் சிந்தினார்.

''தேவையில்லாமல் வருத்தப்படுவதற்கெல்லாம், நான் பொறுப்பாக முடியாது சுதா. எதையுமே யதார்த்தமா அணுகணும். ஏற்கனவே உங்க வீட்டு ஆட்கள் நம்மளை ஏத்துக்காததால்தான், நாம இங்கே இருந்து பாம்பேக்குப் போனோம்.

''திடீர்ன்னு வந்து நின்னு, உங்க அண்ணாகிட்ட என் பொண்ணை உன் பையனுக்குக் கட்டிக் கொடுன்னு சொன்னால், அவர் என்ன நினைப்பார்? அங்கே நம்ம பொண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்காமல், இங்கே வந்துருக்கோம்னுதான் சொல்லுவார்.

''அதை உன்னால் தாங்கிக்க முடியுமா? நம்ம பொண்ணைப் பற்றி, நமக்குத் தெரியும். நீ சொந்தம் விட்டுப் போகக் கூடாது. மகளுக்குக் கல்யாணம் ஆகணும்னு மட்டுமே யோசிக்கிற... அதனால்தான், உன்னால் மத்த எதையுமே இப்போ சிந்திக்க முடியலை.

''நம்ம பொண்ணுக்கு மாப்பிள்ளையா வர வேண்டியவன், இனிமேல்தான் பொறக்கப் போறானா? இல்லல்ல... எங்கேயாவது பொறந்திருப்பான். அவனுக்கு அவதான்னு விதிச்சிருந்தால், அவன் எங்கே இருந்தாலும், நம்ம பொண்ணைத் தேடி வருவான்.

''உன்னோட மனக் கஷ்டத்தை எல்லாம், அந்த முருகனோட பாதத்தில் இறக்கி வச்சுட்டு, அவளுக்குன்னு இருக்குறவனை, சீக்கிரம் எங்க கண்ணில் காட்டுன்னு

வேண்டிக்கோ! புரியுதா?'' மனைவியின் தேவையில்லாத பயத்தை விலக்கி, பொறுமையாகப் புரிய வைத்தார்.

சுதாவிற்கும் கணவன் சொல்வதிலிருக்கும் உண்மை புரியவே, அவர் சொல்வதுபோல், முருகனிடம் தன் வேண்டுதலை வைத்துவிட்டு எழுந்துகொண்டார்.

''நீங்க சொல்வதும் சரிதான். இன்னைக்கே டிக்கெட் எடுங்க, நாம வீட்டுக்குப் போய்டலாம். நாமளும் வந்து பத்து நாள் ஆயிடுச்சு. இதுக்கு மேலையும் யாரையும் கண்டுபிடிப்போம் என்ற நம்பிக்கை, எனக்கு இல்லை.

''வந்ததுக்கு, யாராவது ஒருத்தரையாவது பார்த்திருந்தால் நிம்மதியா இருந்திருக்கும். இருபத்தஞ்சு வருஷம் கழிச்சு வந்து இங்கே யாரைப் பார்க்க? சென்னையே மொத்தமா மாறியிருக்கு. ஹம்...!'' எழுந்த பெருமூச்சை மறைக்காமல் வெளியிட்டவர், சொந்தங்களைப் பார்க்க முடியாத கவலையோடே எழுந்து கொண்டார்.

அவர்கள் இருவரும் சுப்ரமணியைத் தாண்டிச் செல்லவே, அவரும் அவர்கள் பின்னாலேயே எழுந்து கொண்டார். அவர்கள் அவரை தாண்டிவிட்டபடியால், அவர்கள் முகத்தை மணியால் பார்க்க முடியவில்லை. சுப்பிரமணி வீட்டிற்குப் போகும் பாதையில் நடக்க, அவர்கள் தாங்கள் வந்த காரை நோக்கிச் சென்றார்கள்.

காரில் அவர்கள் சுப்ரமணியைக் கடந்து செல்லும் வேளையில், சிவன் அவரைப் ' பார்த்துவிட, தன் நினைவடுக்கில் வேகமாகத் தேடினார் சிவன். அவரை எங்கேயோ பார்த்திருக்கிறோம்... ஆனால், யாரென்று சட்டென அடையாளம் தெரியவில்லையே!

''எப்பா தம்பி! கொஞ்சம் வண்டியை ஓரங்கட்டு...!''

என்றார் அவசரமாக.

டிரைவரும் வண்டியை ஓரங்கட்ட, கார் கண்ணாடியை இறக்கியவர், ''சுதா! அதோ அவரை எங்கேயோ பார்த்த மாதிரியிருக்கு. உனக்கு, அது யாருன்னு அடையாளம் தெரியுதா?'' -வேகமாகக் கேட்டார்.

சுதா எட்டிப் பார்க்க, அவரது புருவமும் யோசனையில் சுருங்கியது. இருபத்தைந்து வருடம் ஆகிவிட்டபடியால், அவர்களுக்கு அவரை அடையாளம் காண்பது சிரமமாக இருந்தது. ஆனாலும், இருவரும் வண்டியிலிருந்து கீழே இறங்கவும், சுப்பிரமணி அப்போதுதான் அவர்களைப் பார்த்தார். ஆசிரியர் என்பதாலோ என்னவோ, சிவத்தைப் பார்த்தவுடனே, அடையாளம் கண்டுகொண்டார் அவர்.

வேகமாக அவர்களை நெருங்கி, ''நீ... நீ...! நீங்க சிவன் தானே? என்னைத் தெரியலையா...? நான்தான் சுப்பிரமணி... பார்வதியோட புருஷன். இன்னும் என்னை ஞாபகம் வரலையா? நீங்க கல்யாணம் முடிஞ்ச புதுசில், எங்க வீட்டுகிட்டதான் ரெண்டு வருஷம் வாடகைக்கு...'' அவர் மேலே சொல்லும்முன்பே இடையிட்டார் சுதா.

''அண்ணே! நீங்களா...? எப்படி இருக்கீங்க? பார்வதி எப்படி இருக்காங்க. நாங்க பாம்பே போகும்போது, அவ கர்ப்பமா இருந்தா இல்ல... என்ன குழந்தை, பையனா பொண்ணா...? பார்த்து எத்தனை வருஷம் ஆச்சு...!

''அப்போ போனவங்க, இப்பதான் வந்து இருக்கோம். இப்போ இருக்க மாதிரி, செல்போன் எல்லாம் அப்போ கிடையாதே, யாரோட தொடர்புமே இல்லை. உங்களைப் பார்த்தது, எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். நீங்க இப்போ பழைய இடத்தில் இல்லையோ...? ஊரே மாறிப் போச்சு.

எதையுமே அடையாளம் காண முடியலை!''

மூச்சுகூட விடாமல், தனக்குத் தெரிந்த ஒருவரை கண்டுவிட்ட மகிழ்ச்சியில் பேசிக் கொண்டே இருந்தார். ''சுதா! என்ன இது...?'' மனைவியை சிவன்தான் அடக்கினார்.

''விடுங்க... எத்தனை வருஷம் கழிச்சுப் பார்க்குறோம்... எல்லாம் சொல்லுறேன். முதல்ல வீட்டுக்கு வாங்க!'' அவர்களைக் கையோடு அழைத்துக்கொண்டே சென்றுவிட்டார்.

அவர்களும் பெரிதாக மறுக்கவில்லை. சொந்தங்களைக் காணாத ஏக்கத்தில் இருந்தவர்கள் தானே? எனவே, பழகிய நட்பை தவிர்க்க நினைக்காமல் உடன் சென்றார்கள்.

தங்கள் வீட்டின் முன் ஒரு கார் வந்து நிற்கவே, வேகமாக வெளியே வந்தான் தமிழ். தந்தை காரிலிருந்து இறங்கவே, ''என்னப்பா இன்னைக்கு இவ்வளவு நேரம்...? நான் ஆபீஸ் போகவா... வேண்டாமா? டிபன் எங்கே...? என்ன கால் வலியா...? கால் டாக்ஸியில் வந்து இறங்குறீங்க?'' வேலைக்குப் போகும் அவசரத்தில் வேகமாகக் கேட்டுவிட்டு, உள்ளே செல்லத் திரும்பினான்.

''தமிழ்! உங்க அம்மாவோட சினேகிதி, ரொம்ப வருஷம் கழிச்சுப் பார்த்தேன். அதான், கையோட கூட்டிட்டு வந்துட்டேன். வந்தவங்களை வாங்கன்னு சொல்லாமல், என்ன இது...?'' சின்னக் குரலில் மகனைக் கடிந்தார்.

அதன் பிறகுதான், தந்தையின் பின்னால் இறங்கியவர்களையே பார்த்தான். ''ஹல்லோ அங்கிள்! ஹல்லோ ஆன்ட்டி! உள்ளே வாங்க...'' சிரித்த முகமாக வரவேற்றான்.

தெற்றுப்பல் தெரிய சிரித்த அந்தக் கட்டழகு

வாலிபனைப் பார்த்து, விழி விரித்தார்கள் இருவரும். அப்படியே பார்வதியின் செராக்ஸாக இருந்தான் தமிழ். அதிலும், அவனது வசீகரச் சிரிப்பும், தயக்கமே இல்லாமல் தங்களை வரவேற்றதும் அவர்களுக்குப் பிடித்திருந்தது.

அதைவிட, வயதுப் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர் எல்லோருக்குமே, தங்கள் பிள்ளைக்குச் சம்மான வயதுடைய மற்ற பிள்ளைகளைப் பார்க்கும்போது, தங்கள் பிள்ளைகளோடு இணை சேர்த்துப் பார்க்கும் பழக்கம், சட்டென வந்துவிடும். அதிலும், தங்கள் பிள்ளைகளுக்கு வரன் தேடினால், சொல்லவே வேண்டாம். இப்போது அந்த நிலையில்தான் நின்றார்கள் இருவரும்.

''உள்ளே வாங்க!'' என அவர்களை அழைத்தவர், ''பார்வதி! உன் தோழி வந்திருக்காங்க பாரேன்...'' -குரல் கொடுத்தவாறே வீட்டுக்குள் நுழைந்தார் மணி.

தன் தோழியைக் காணும் ஆவலோடு வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த சுதா, ஹாலில் மாட்டியிருந்த பார்வதியின் புகைப்படத்திற்கு, மாலையிட்டு, சந்தனம் வைத்திருந்ததைப் பார்த்தும் திகைத்து நின்றார்.

8

இரவின் நிலவு, மழையின் சாரல்
சூரியனின் வெப்பம், அனைத்தும் புதிதாய்
எல்லாம் உன்னாலே...!

சுதாவும், சிவனும் திகைத்து நின்றது ஒரு நொடிதான். அவர்களுக்கு அதற்குமேல் அவகாசம் கொடுக்காமல், ''வாங்க ஆன்ட்டி! உள்ளே வந்து உக்காருங்க...'' எனச் சொன்னவன், கிச்சனுக்குச் சென்று தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தான்.

சுதாவிற்கு அந்தத் தண்ணீர் தேவையாகத்தான் இருந்தது. காதல் திருமணம் முடித்து, சொந்தங்கள் அனைவரும் தன்னை விலக்கிவிட்டபோது, தான் சோர்ந்துபோன வேளைகளில் எல்லாம், அவருக்கு உற்ற துணையாக இருந்தது பார்வதிதான்.

சுதாவின் மனக் குமுறல்கள், வருத்தம், ஏக்கம் என அனைத்தையும் அறிந்த ஒரே ஜீவன் அவர். அப்படிப்பட்ட பார்வதியைப் பார்க்கும் ஆவலில் ஓடி வந்தால், அவரது நிழலுருவத்தை மட்டும் காட்டினால், என்னதான் செய்வார்?

அவர்களது வருத்தம் புரிந்தவன்போல், அமைதியாகவே நின்றிருந்தான் தமிழ்.

''நீங்க போனபிறகு, ரொம்பநாள் உங்களைப் பற்றியே பேசிட்டு இருந்தா. அதுவும் சுதா... இப்போ எப்படி இருக்காங்களோ? உங்க பையன்...'' அவன் பெயரை நினைவுபடுத்த முயன்று, ''ஹாங்... ஜகதீஷ்! அவனைப் பத்தியும் ஒரே புலம்பல் தான்.

அதுக்குப் பிறகு, நீங்க நல்லாத்தான் இருப்பீங்கன்னு, தன்னைத் தானே தேத்திகிட்டா. அப்படிதானே பார்வதி...?'' மனைவி அருகிலிருந்து பேசுவதைப்போல், அவரிடம் கேட்டுக் கொண்டார்.

''எப்போண்ணே ஆச்சு...?'' தொண்டை அடைக்கக் கேட்டு நிறுத்தினார் சுதா.

''சுதா...?'' சங்கடமாக, மனைவியை அதட்டினார் சிவன்.

''சிவன்! அவங்க கேட்பதில் எந்தத் தப்பும் இல்லை, அதாவது இதோ நிக்கிறானே, இவனுக்கு ரெண்டு வயசு ஆனப்போ, ஏதோ காய்ச்சல்ன்னு சொன்னாங்க. சரியா ஒரு வாரம் படுக்கையில் இருந்தா. அடுத்தநாள், எல்லாம் முடிஞ்சிடுச்சுன்னு சொன்னாங்க.

''என்னையும் இவனையும் விட்டுட்டு, அவ போய்ட்டா. ஒரு காய்ச்சல் எங்களைப் பிரிக்கும்னு, நான் கனவில் கூட நினைத்தது இல்லை. என் பார்வதி எங்கேயும் போகலை; இங்கேதான் இருக்கா. அவளால் என்னை விட்டுப் போக முடியாது!'' கடைசி வரிகளைச் சொல்லும்போது அவர் குரல் தழுதழுத்தது.

சுப்பிரமணி அவ்வளவு சீக்கிரம் உணர்ச்சிவசப்பட மாட்டார். இன்று பார்வதியின் தோழியைப் பார்த்தது, அவருக்குப் பழைய ஞாபகங்களைத் மீட்டிருந்தது.

தமிழ் வேகமாகச் சென்று தந்தையின் தோளை அழுத்தினான். தன்னை மீட்டுக் கொண்டவர், ''நீங்க இப்போ எங்கே இருக்கீங்க? ஜகதீஷ் என்ன செய்யிறான்?'' என அவர்களைக் கேட்டார்.

''சாரி அங்கிள்! எனக்கு ஆபீஸ்க்கு டைம் ஆச்சு. நான் கிளம்புறேன், நீங்க பேசுங்க. நான் சாயங்காலம் வர்றேன்.'' தந்தையிடம் கண்களாலேயே விடைபெற்று, விரைந்தான்.

''ஒரு நிமிஷம், அவனை அனுப்பிட்டு வந்துடுறேன்'' என்று சொன்னவர், மகன் பின்னால் சென்றார்.

''பசிக்கிதுன்னு சொன்னியே தமிழ், நான் சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?'' அக்கறையாகக் கேட்டார்.

''நான் இன்னைக்கு ஒருநாள் கேன்டீன்ல சாப்பிட்டுக்கறேன்ப்பா. நீங்க அவங்களைக் கவனிங்க.''

அவன் சென்றவுடன், ''வாங்க சாப்பிட்டே பேசலாம்...'' அவர்களைச் சாப்பிட அழைத்தார். மணி அவர்களுக்கு தோசை வார்க்க முயல, சுதா அவரைத் தடுத்து, தானே தோசை ஊற்றினார். ஏற்கனவே அவர் சாம்பார் வைத்திருந்ததால், அதை வைத்து அனைவரும் சாப்பிட்டார்கள்.

சாப்பிடும் வேளையில், ''உங்களுக்கு ஒரு பொண்ணும் இருக்காளோ?'' என அவர்களை விசாரித்தார்.

''ஆமா... நாங்க இப்போ மும்பையில் இருக்கிறோம். ஜகதீஷும், பாரதியும் இன்ஜினியரிங் முடிச்சுட்டு, தனித்தனியா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி வச்சு நடத்துறாங்க. பாரதிதான் என்னோட பொண்ணு...'' அவர் முதலில் கேட்டதற்கும் சேர்த்தே பதில் சொன்னார் சிவன்.

''ஏன்... இப்படித் தனியா கஷ்டப்படறீங்க? முன்னாடியே உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கைத் துணையை அமைச்சு இருந்திருக்கலாமே...?'' மிகுந்த தயக்கத்துக்கிடையில், சிவன் மெதுவாகக் கேட்டார்.

''நீங்க கேட்பதில் தப்பில்லை; அப்படிக் கல்யாணம் செய்வதும் தப்புன்னு நான் சொல்ல வரலை. எனக்கு, என்னோட பார்வதி இருந்த இடத்தில்... இன்னொரு பொண்ணை வச்சுப் பார்க்க மனசில்லை. அதான், அப்படியே இருந்துட்டேன்.

அவ போனப்போ கூட, நான் இவ்வளவு கலங்கியது கிடையாது. இப்போதான்...'' எதையோ எண்ணித் துவங்கியவர், அவர்கள் இன்றுதான் வந்திருக்கிறார்கள் என்ற

உண்மை புரிய, பேச்சை பாதியிலேயே நிறுத்தினார்.

''இப்போ மட்டும் என்னண்ணே... தம்பி ஏதாவது?'' எனக் கேட்டார் சுதா.

''ஹையோ! நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. கல்யாணம் செஞ்சுக்கன்னு சொன்னால், காதிலேயே போட்டுக்காமல் ஓடுறான். அதைவிட, அவங்க அம்மா இருந்து கவனிக்காததாலோ என்னவோ, பொண்ணுங்க என்றாலே பெரிய ஒதுக்கம்.

''நானும், ரெண்டு வருஷமா போராடுறேன், பிடிகொடுக்கவே மாட்டேன்னு சொல்லுறான். எனக்கும் வயசாகிட்ட போகுது. இன்னும் ரெண்டு வருஷத்தில் ரிடையர் ஆகப் போறேன். அவனுக்குன்னு ஒருத்தி வந்துட்டா நிம்மதியா இருக்கும். நானும் காசி, ராமேஸ்வரம்னு போகலாம்னு இருக்கேன்.

''எங்கே... அதுக்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேணும்! அதை நினைச்சுத்தான் கொஞ்சம் வருத்தம். மத்தபடி, என் மகன் ரொம்ப நல்லவன். அவனோட தொழிலில் அவன் ரொம்ப கெட்டி. அவனோட கம்பெனியில், அவனோட திறமைக்காகவே அவனை வெளியே விடாமல், புடிச்சு வச்சிருக்காங்க.

''சென்னையில் நிறைய கட்டிடம் எல்லாம் அவன் கைவண்ணத்தில் உருவானதுதான். இப்போ நடந்துட்டு இருக்க அந்த மேம்பாலம் கூட, இவனோட பிளான் தான். கச்சிதமா செய்வான்...!'' மகனது பெருமைகளை அடுக்கினார்.

அவர் இடத்தில் தாய் இருந்திருந்தால், பாசக்காரப் பிள்ளை, அதிர்ந்து கூட பேச மாட்டான், ரொம்பச் சாது...

எனச் சொல்லியிருப்பார். ஆனால், பேசியது அவனது தந்தை ஆயிற்றே, அவனது திறமையைப் பற்றியே சொன்னார்.

அவரது பேச்சிலிருந்தே, தமிழின் குணத்தை புரிந்து கொண்டார் சுதா. அதைவிட, வந்தவுடன் அவன் தங்களை தயங்காமல் வரவேற்று, தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து உபசரித்ததிலேயே அவனது பொறுப்புணர்வையும், அக்கறையையும் அவர் உணர்ந்திருந்தார்.

முதல் பார்வையிலேயே வசீகரிக்கும் தன்மையில் இருந்த அவனை அவருக்குப் பிடிக்காமல் போனால்தான் ஆச்சரியம். மணி சொல்வதையெல்லாம் பொறுமையாகக் கேட்டவர், தன் கணவனை ஒரு அர்த்தமுள்ள பார்வை பார்த்தார்.

அதைப் புரிந்து கொண்டவர் போல், ''உங்க பையன் எங்கே வேலை பார்க்குறார்? அவர் பேர் என்ன...?'' மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார் சிவன்.

''பார்த்தீங்களா. உங்களைப் பார்த்த சந்தோசத்தில் அவனை உங்களுக்கு அறிமுகப்படுத்தவே மறந்துட்டேன். அவன் பேர் தமிழன்பன். எம்.இ. முடிச்சுட்டு, பிரபல கம்பெனியில் சிவில் இஞ்சினியரா இருக்கான். மாசம் லட்ச ரூபாய் சம்பளம். அது மட்டும் இல்லை, வீட்டிலும் சின்னதா, அவனுக்குன்னு வாடிக்கையாளர் கூட்டம் உண்டு'' என அவனைப் பற்றி சொல்லிக் கொண்டே இருந்தார்.

அவனைப் பற்றிக் கேட்டவர்களுக்கு, திருப்தியாக இருந்தது. ''மணி! எங்களுக்கு இப்போ ஒரு எண்ணம்... உங்களை நாங்க கட்டாயப்படுத்தவே இல்லை... அது என்னன்னா...'' பீடிகையாகத் துவங்கி நிறுத்தினார் அவர்.

''எதுவா இருந்தாலும் சொல்லுங்க. எதுக்கு இவ்வளவு

தயக்கம்...?'' மணி அவர்களை ஊக்கினார்.

''நாங்க, எங்க பொண்ணு பாரதிக்கு வரன் தேடிட்டு இருக்கோம்...'' இதற்குமேல் எப்படிச் சொல்லவென்ற தயக்கம், அவர் நாவை கட்டிப் போட்டது. பொதுவாக மாப்பிள்ளை வீட்டார்தான், பெண்வீட்டுக்கு வந்து முதலில் பேசுவார்கள். இங்கே தாங்கள் பேச்சுவார்த்தை துவங்குவது, அவருக்குச் சங்கடத்தை அளித்தது.

''அப்போ, உங்க பொண்ணை என் பையனுக்குத் தர உங்களுக்குச் சம்மதமா? நான்தான் சொன்னேனே... என் பையன் கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ளவன்... அதையும் சொல்லிடுறேன். உங்களுக்கு சம்மதம்னா, எனக்குப் பரிபூரண சம்மதம்!'' என்னவோ அப்பொழுதே நிச்சயம் முடித்து, திருமணத்துக்கு நாள் குறித்துவிட்ட பூரிப்பு இருந்தது அவர் குரலில்.

''பார்வதி இருந்திருந்தால், அவளும் ரொம்பச் சந்தோசப்பட்டிருப்பா, இல்லையா பாரு...?'' மனைவியிடமும் அவர் கேட்க, சிவன், சுதா இருவரின் தயக்கமும் தூளானது.

''அண்ணே! நீங்க தமிழைப் பற்றி இவ்வளவு சொல்வதால், நானும் சொல்லுறேன். என் பொண்ணு கொஞ்சம் தைரியமானவ. ஒரு கம்பெனிக்கு எம்.டி.-யா இருக்கா. அவளோட தொழில் அப்படியோ என்பதாலோ என்னவோ... எல்லாரோடும் சகஜமா பழகுவா.

''அதுக்குன்னு, நீங்க தப்பா நினைக்கிற அளவுக்கெல்லாம் இல்லை; அவளோட லிமிட் அவளுக்குத் தெரியும். நெருப்பு மாதிரிதான்...!'' வேகமாக இவற்றையும் சேர்த்தே சொன்னார் சுதா. என்னதான் இருந்தாலும், மகளை

விட்டுக் கொடுக்க முடியாதே! அவர் சொல்ல வருவது புரிந்தவற்போல் வாஞ்சையாக சிரித்தார்.

''சுதா! சொன்னா... நம்ப மாட்ட! நானே இவனுக்குக் கொஞ்சம் தைரியமான பொண்ணாதான் தேடிட்டு இருக்கேன். ஏன்னா, ஏற்கனவே இவன் ரொம்பக் கூச்ச சுபாவம் உள்ளவன். இதில் வர்ற பொண்ணும் இவனை மாதிரியே இருந்துட்டா... பிறகு ரெண்டுபேரும், அவங்கவங்க கூட்டுக்குள்ளே ஒளிஞ்சுப்பாங்க. எனக்கு அப்படிப்பட்ட பொண்ணு வேண்டாம். பாரதி கண்ட புதுமைப் பெண்தான் வேணும்!'' என ஆர்ப்பாட்டமாகச் சொல்லிச் சிரித்தார்.

அவரது இந்தப் புரிந்து கொள்ளலே, சுதா, சிவனுக்குப் பெருத்த நிம்மதியைக் கொடுத்தது. ''என் மருமகளோட போட்டோ ஏதாவது வச்சுருக்கீங்களா? சும்மா பார்க்கத்தான்...'' -ஆர்வமாக்க் கேட்டார்.

''போட்டோ எதுவும் கொண்டு வரலண்ணா... ஆனால், என் மொபைல்ல அவளோட போட்டோ இருக்கு. இருங்க காட்டுறேன்...'' சொன்னவர், அவரது செல் போனிலிருந்த பாரதியின் புகைப்படத்தைக் காட்டினார்.

பாரதியின் நிழலுருவத்தைப் பார்த்த சுப்ரமணியின் கண்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. எந்தவித அலங்காரமும் இல்லாமல் எளிமையான தோற்றத்திலிருந்த பாரதியைப் பார்த்தவர், தமிழின் அருகில் அவளை நிறுத்தி வைத்து, மனக்கண்ணில் அழகு பார்த்தார்.

''தமிழுக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கா...!'' அவர் அதை வார்த்தையிலும் வெளிப்படுத்தினார்.

''அண்ணா! நீங்க தமிழ்கிட்டயும் ஒரு வார்த்தை

கேட்டுச் சொல்லிட்டீங்கன்னா, நாங்களும் பாரதிகிட்ட பேசிடுவோம்.''

''நல்லா சொன்ன போ... அவன்கிட்ட சொன்னால், உடனே கேட்டுட்டுதான் மறு வேலை பாப்பான்...'' அலுப்பாகச் சொன்னார்.

''இப்படிச் சொன்னால் எப்படிண்ணா?'' சோகமாகக் கேட்டார் சுதா.

''அப்போ பொண்ணையும், மாப்பிள்ளையையும் ஏதாவது ஒரு இடத்தில் சாதாரணமாகச் சந்திக்க வைக்கலாமா?'' யோசனை சொன்னார் சிவன்.

''சிவன்! நீங்க என்ன சென்னையிலா இருக்கீங்க... அவங்க ரெண்டுபேரையும் யதேச்சையா சந்திக்க வைக்க? உங்க பொண்ணு மும்பையில் இருக்கா; இவன் சென்னையில் இருக்கான்...'' அவர்களுக்கு நினைவுபடுத்தினார் சுப்பிரமணி.

அனைவரும் ஒரு நிமிடம் மௌனமானார்கள். என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். சுப்பிரமணி எதையோ யோசித்தவர், ''வேணா ஒண்ணு செய்யலாம்... உங்க மகளோட கம்பெனியில், அவனுக்கு வேலைக்கு ஏற்பாடு பண்ணுங்க. அதைச் சாக்கா வச்சு, அவனை அங்கே பார்ஸல் பண்ணுறேன்.

''முதல்ல, அவங்க ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்து பேசட்டும். கொஞ்ச நாள் போனதும், நாம பேசியபடி, அவங்களுக்குக் கல்யாணம் செஞ்சுடலாம். என்ன சொல்லுறீங்க?'' -யோசனையாகக் கேட்டார்.

அதென்னவோ சரிவரும்போல் இருந்தது. ஆனாலும், ''அண்ணா! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதானே, அவங்க

கம்பெனியிலிருந்து அவரை அனுப்ப மாட்டாங்கன்னு சொன்னீங்க?'' சந்தேகமாகக் கேட்டார் சுதா.

''விடும்மா. என் பையன், நான் சொன்னால் கண்டிப்பா கேப்பான்... அப்படி இல்லையா... அவனைக் கையைக் காலை முறிச்சாவது, அங்கே அனுப்பி வைக்கிறேன். போதுமா?'' அவர் அப்படிச் சொல்லும்போது அறியவில்லை, அது அப்படியே பலிக்கப் போகிறது என்பதை.

பின்னர் பேச்சுவார்த்தை முடித்து, அவர்கள் ஹோட்டல் அறைக்குச் செல்வதாகச் சொன்னார்கள். ஹோட்டல் அறையை காலி செய்துவிட்டு, வீட்டுக்கே வந்துவிடுமாறு கட்டாயப்படுத்தவே, அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள்.

அதே நேரம், தமிழ் அவனது கன்ஸ்ட்ரக்ஷன் பில்டிங்கில், வேலை நடப்பதை பார்வையிட்டுக் கொண்டிருக்க, அவன் நகர்ந்த வேளையில் அவன் நின்ற இடத்தில் சில சாரங்கள் நகர்ந்து விழ, ஒரு விபத்து நடந்தது.

அங்கே அவனைத் தவிர வேறு யாரும் இல்லையாகையால், உயிர்ச் சேதம் எதுவும் இல்லை.எனவே, அதைச் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டான். அதேபோல் கீழே சென்று நின்ற வேளையில், அவன் தலையில் இரு செங்கல்கள் வந்து விழுந்தது.

அவன் தலைக்கவசம் அணிந்திருந்ததால், எதுவும் ஆகவில்லை. மேலே கட்டிட வேலை செய்தவர்கள், செங்கலைத் தவற விட்டவனைத் திட்டவே, தமிழ்தான் மற்றவரிடமிருந்து அவனைக் காப்பாற்றுமாறு ஆகிவிட்டது.

இந்தச் சம்பவம் அவனுக்கு மனதுக்குள் சிறு

நெருடலை ஏற்படுத்த, அங்கிருந்து கிளம்பிவிட்டான். அவன் கிளம்பிய சற்று நேரத்திற்கெல்லாம், அவனது பைக்கின் பின்னால், ஒரு தண்ணீர் லாரி வருவதைப் பார்த்தான்.

அந்த லாரியும் காது செவிடாகும் அளவுக்கு ஹார்ன் அடித்தவாறே வரவே, மனதுக்குள் இருந்த நெருடல் உறுதியானது. அவன் எவ்வளவு வேகமாகச் சென்றாலும், அதே அளவு வேகத்துடன் லாரியும் அவனைத் தொடர்ந்தது.

அவன் ஒரு சிறு கிளைச் சாலையில் நுழைந்தால், அங்கேயும் அவனை விடாமல் தொடர்ந்தது. வேகமாகத் தனது அலைபேசியை எடுத்தவன், தேவாவிற்குப் போன் செய்தான்.

''சொல்லுடா தமிழ்...''

''தேவா! நான் மவுண்ட்ரோட்கிட்ட போயிட்டு இருக்கேன். என்னை ஒரு லாரி ஃபாலோ பண்ணுது. எதுக்கும், நீ கொஞ்சம் சீக்கிரம் வா!'' சொல்லிவிட்டு அலைபேசியை வைத்துவிட்டான். அதன்பிறகு தேவா எவ்வளவோ முயன்றும், அவனால் தமிழைத் தொடர்புகொள்ள முடியவில்லை.

தமிழ் அந்த நிலையிலும் பயப்படவில்லை. ஆனாலும், இதயம் வேகமாகத் துடிப்பதை அவனால் நிறுத்த முடியவில்லை. முடிந்த அளவுக்கு அந்த லாரியின் கண்களிலிருந்து மறையப் பார்த்தான். ஒரு கட்டத்தில் தப்பிவிட்டோம் என்று அவன் அசந்த நிலையில், ஒரு திருப்பத்தில் முளைத்த அந்த லாரி, அவனை நேருக்கு நேராக இடித்துத் தள்ளியது.

பல்சர் பைக், அதிக வேகத்தில் சென்றதாலோ

என்னவோ, இடித்த வேகத்தில் அவன் தூக்கி வீசப்பட்டான். அவன் விழும் வேளையில் கையையும், காலையும் ஊன்றியதால், தலை அடிபடுவதிலிருந்து தப்பினான்.

ஆனாலும் உடல் கொஞ்சம் பலமாக மோதுவதிலிருந்தோ, உராய்வதிலிருந்தோ, அவனால் தப்ப முடியவில்லை. இடக்கையின் எலும்பும், வலது காலின் எலும்பும் முறிந்து போனது. அது ஏற்படுத்திய வலியில், ரோட்டிலேயே மயங்கி வீழ்ந்தான் அவன்.

9

நான் நேசிக்கும் தனிமை
வெறுமையாய் என்னைத் துரத்த,
தவிர்க்க நினைக்கிறேன்...
தவித்துப் போனவனாய்!

லாரியோ நிற்காமல் சென்றுவிட, குருதியுடன் மயங்கிச் சரிந்த தமிழைச் சுற்றி, சிறிய கூட்டம் கூடியது. ஆனால், யாரும் உதவிசெய்யத் தயாராக இருக்கவில்லை.

கூட்டத்திலிருந்த ஒருவன் பெரிய மனது வைத்து 108 எண்ணுக்குப் போன் செய்து தகவல் கொடுக்க, அடுத்த அரைமணி நேரத்தில் அங்கே ஆம்புலன்ஸ் வரவும், தேவா அந்த இடத்தை நெருங்கவும் சரியாக இருந்தது.

ஏற்கனவே தமிழின் பைக்கை ஓரம்கட்டி நிறுத்தியிருக்க, அதிலிருந்து சாவியை எடுத்தவன்,

வேகமாக ஆம்புலன்சில் ஏறினான். அவனை யாரென்று கேட்டவர்களுக்கு, அவனது நண்பன் என்று சொன்னான்.

மருத்துவமனையில் விபத்து பற்றி போலீசுக்குத் தகவல் செல்ல, அவர்களும் அங்கே விரைந்தார்கள். ஆனால், தமிழ் பேசும் நிலையில் இருக்கவில்லை யாகையால், காத்திருந்தார்கள். தேவாதான் மிகுந்த பதட்டத்தில் இருந்தான்.

சுப்ரமணிக்குத் தகவல் கொடுக்கவா வேண்டாமா என்று குழம்பிப் போனான். எதற்கும் தமிழ் கண் விழிக்கட்டும் என்று அமைதியானான். வெளியே அமைதியாக இருந்தாலும், உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந்தான்.

'அவனுக்கு அப்படி யார் விரோதி...? அந்த அரசியல்வாதிக்கும், இதற்கும் சம்பந்தம் இருக்குமா? அப்படியிருந்தால், தமிழ் என்னிடம் சொல்லியிருப்பானே... என்ன ஆனாலும், இதை இப்படியே விடமுடியாது. பணம் இருந்தால், என்ன வேணா செய்வாங்களா?' கோபத்தில் கொந்தளித்தது அவன் மனம்.

அந்த நேரம் வந்த கான்ஸ்டபிள், ''அந்தப் பேஷண்டுக்கு நீங்க என்ன உறவா? அவர் பேர் என்ன? அந்தநேரம், சரியா நீங்க எப்படி விபத்து நடந்த இடத்துக்குப் போனீங்க...?'' என அவனிடம் விசாரணையைத் துவங்கினார். கிளர்ந்த கோபத்தைக் கட்டுப்படுத்தியவாறே, அவர் கேட்ட விவரங்களைக் கொடுத்தான்.

''உங்களுக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்கா...?'' என அவர் கேட்க, தயக்கமே இல்லாமல் தன் சந்தேகத்தைச் சொன்னான்.

அவன் சொன்ன விவரங்களை எழுதிக் கொண்டிருந்த கான்ஸ்டபிளின் கைகள், எழுதுவதை நிறுத்தின. தேவாவை ...மாக ஒரு பார்வை பார்த்தார். ''என்ன சார்... நீங்கதானே யார் மேலையாவது சந்தேகமான்னு கேட்டீங்க. என் சந்தேகத்தைச் சொன்னால், இப்படிப் பேயறஞ்ச மாதிரி முழிக்கிறீங்களே?'' என நக்கலாகக் கேட்டான்.

ஏனென்றால், அரசியல்வாதியின்மேல் கொடுக்கும் புகாருக்கு எந்த மதிப்பும் இருக்கப் போவதில்லை என்று தேவாவுக்குத் தெரியும். அவன் நினைத்தது சரிதான் என்பதுபோல, அடுத்து நடந்த வேலைகள் அனைத்தும் நடந்தேறின.

பின்பு வந்த இன்ஸ்பெக்டர், தேவாவையே குற்றவாளி ரேஞ்சுக்குப் பேசினார். அரசியல்வாதியின் அடியாட்கள் வந்து, ''ஒழுங்கு மரியாதையா அவன்கிட்ட இருக்கிற கேசட்டை எங்ககிட்ட வாங்கித் தந்துடு! அவனோட உயிராவது மிஞ்சும்... இல்லைனா... அதையும் எடுக்க வேண்டியிருக்கும்!'' என அவனை மிரட்டினார்கள்.

காலை பதினோரு மணிக்கு நடந்த விபத்துக்குப் பின், மாலை ஐந்து மணிக்குத்தான் மயக்கம் தெளிந்து கண்விழித்தான் தமிழ். அதற்குமுன்பே, அனைத்து விவரங்களும், அடியாட்கள் மூலமே தேவாவிற்குத் தெரிய வந்திருந்தது.

அவன் கொஞ்சம் பயந்தவன்தான், ஆனால், தன் நண்பனின் உயிரையே எடுக்க அவர்கள் துணிந்த பிறகு, அவர்களை ஒரு கை பார்க்காமல் விடுவதில்லை என்று முடிவு செய்தான். அத்தோடு, தமிழ் தன்னிடம் சொல்லாமலிருந்ததை எண்ணி, கோபமும் கொண்டான்.

தமிழ் கண்விழித்துவிட்டதாக நர்ஸ் வந்து சொல்லவே, தேவா அவனைத் தேடிச் செல்ல, நண்பனைப் பார்த்து சோபையாகச் சிரித்தான். தலை, கை, கால் என கட்டுப் போடப்பட்டிருக்க, முகத்திலும், கைகளிலும் சிராய்ப்புக் காயங்களும் இருந்தன.

''சிரிக்காதடா பாவி! ஏண்டா இப்படிச் செஞ்ச? என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லணும்னு தோணலை இல்ல... உன் உயிர் போயிருந்தால், உன் அப்பாவுக்கு யார்டா பதில் சொல்லுறது?'' கண்கலங்க கடிந்துகொண்டான்.

''ஓ! அதுக்குள்ளே விஷயம் தெரிஞ்சுடுச்சா? அப்பாவுக்கு நீ எதுவும் தகவல் சொல்லலை தானே?'' எனச் சாதாரணமாகத் துவங்கியவன், கலவரமாக முடித்தான்.

''கொஞ்சமாவது மனசாட்சி இருக்காடா உனக்கு? மனுஷர், நீ கம்பெனிக்குப் போயிருக்கன்னு நினைச்சுட்டு இருப்பார். இன்னும் ரெண்டு மணி நேரம் பொறுப்பார்... எட்டுமணிக்குள் நீ வீட்டுக்குப் போகலன்னா... அடுத்த நிமிஷம் உன் போன் அலறும். இங்கே என்னன்னா... ஒரு பத்து அடியாளுங்க சேர்ந்து, என்னை மிரட்டிட்டு இருக்கானுங்க. ஏதோ கேசட் வேணுமாம். அதோட...'' அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே... ஐந்தாறுபேர் திபுதிபுவென உள்ளே வந்து, அவனை வேகமாக விலக்கி நிறுத்தினார்கள்.

''டேய்! யாருடா நீங்கல்லாம்...?'' என்று திமிறியவனை, சுலபமாக அடக்கினார்கள்.

உள்ளே நுழைந்த அரசியல்வாதியோ, நிதானமாக அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தார். ''என்ன தம்பி! எப்படியிருக்க? ரொம்ப அடிபட்டிருக்குப் போல...'' என்றபடி அவன் காயங்களை ஆராய்ந்தார்.

''இங்கே பாருங்க தம்பி... உங்களுக்கும், எனக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது. உங்க கம்பெனி ஆட்கள் சின்னப் பசங்களை வேலைக்கு வச்சால், நீங்க அவங்ககிட்ட சண்டைக்குப் போகணும், அதை விட்டுட்டு, என்னோட காம்ப்ளெக்ஸ் வேலையைக் கெடுக்குறது நியாயமா? இப்போகூட, உங்க கம்ப்ளைண்ட்டை, யாரும் வாங்கியிருக்க மாட்டாங்க. ஆனால்கூட, நான் ஏன் தெரியுமா உன்னைத் தேடி வந்து இருக்கேன்? எனக்கு, இன்னும் ஒரு மாசத்தில், அந்தக் காம்ப்ளெக்ஸ் என் கைக்கு வந்தாகணும்.

அது என்னோட மகளுக்கு நான் சீதனமா கொடுக்கப்போற கட்டிடம். இதுக்கு மேலையும் பிரச்சனையை இழுத்துட்டே போறதில், எனக்கு உடன்பாடு இல்லை. இப்போ என்ன... அந்தச் சின்னப் பையனுக்கு நஷ்டஈடு கொடுக்கணும், அவ்வளவு தானே? அதை, நான் ஏத்துக்கறேன்! முதல்ல, நீங்க கொடுத்த கம்ப்ளைண்டை வாபஸ் வாங்குங்க. எல்லாத்தையும், நாம நிதானமாப் பேசித் தீர்த்துக்கலாம். என்ன சொல்லுறீங்க...?'' பொறுமையாகப் பேசினாலும், அவரது உள்ளடக்கிய கோபம், அங்கிருந்த அனைவருக்கும் புரிந்தது.

''எனக்கு அது மட்டும் போதாது!'' உதடுகள் அசைவதால், கன்னத்தில் இருக்கும் காயம் வலிப்பதைக் கூட பொருட்படுத்தாமல், தைரியமாகச் சொன்னான் அவன்.

''ஏய்! என்ன லந்தா? அடிச்சு... மூஞ்சி, மொகரையெல்லாம் பேத்துடுவேன். தலைவர் இம்மாம் பொறுமையா சொல்லுறார். அத்தக் கேக்காம...'' அடியாட்களில் ஒருவன் எகிறினான்.

அவனை அடக்கியவர், ''சரி. நான் என்ன

செய்யணும்னு சொல்லுங்க. செஞ்சுடுவோம்...'' -பொறுமையை இழுத்துப் பிடித்துக் கேட்டார்.

''அங்கே இருக்கிற எல்லாத் தொழிலாளர்களுக்கும், உங்க செலவில் ஆயுள் காப்பீடு மட்டும் செஞ்சு கொடுத்துடுங்க. அது போதும்.'' திணறியவாறே, மெதுவாக, ஆனால், அழுத்தமாகச் சொல்லி முடித்தான்.

''நீங்க போங்க தல...! நாங்க இவங்கிட்ட இருந்து, அந்தக் கேசட்டை வாங்கியாறோம். இவன்லாம் ஒரு ஆளுன்னு பேசிகிட்டு...'' தமிழின் படுக்கையை ஆத்திரமாக நெருங்கினான் ஒருவன்.

''டேய் துரை! நான்தான் பேசிட்டு இருக்கேன்ல்ல...?'' என ஒரு முறைப்புடன் சொன்னவர், ''தம்பி! இதை உங்களோட கம்பெனிதான் செய்யணும்... நான் இல்லை!'' -பல்லைக் கடித்தவாறே சொன்னார்.

''எனக்கும் தெரியும் சார். இவ்வளவு நாள், பாவத்தை சேத்தீங்க... கொஞ்சம் புண்ணியத்தையும் சேருங்களேன்... நீங்க அதைச் செஞ்சுட்டேன்னு சொல்லுற அடுத்த நிமிஷம், அந்தக் கேசட் உங்க கையில் இருக்கும்!

அதே நேரம், அந்தப் புகாரையும் நான் வாபஸ் வாங்கிடுறேன். ஏற்கனவே பத்திரிக்கைகாரங்க, அதிகாரிங்க எல்லோரையும் அடக்கித்தானே வச்சிருக்கீங்க? நீங்க நினைச்சால், இது ஒரே நாளில் முடிஞ்சுடும்...!'' இதைப் பேசும்போதே அவனுக்குக் கொஞ்சம் திணறியது.

''என்கிட்ட நாள் அதிகம் இல்லை என்பதால், நீ ரொம்ப ஆடுற தம்பி... இது நல்லதுக்கே இல்லை. ஒரு முறை மிஸ் ஆனால், எல்லா முறையும் மிஸ் ஆகாது!'' அவனது விபத்தைப் பற்றி, பூடகமாகப் பேசினார்.

''எனக்கும் அது தெரியும் சார். ஒரே ஒரு போன் கால்... தீபம் பத்திரிகை ஆபீஸுக்குப் போட்டால் போதும். உங்களோட காம்ப்ளெக்ஸ்சை, நீங்க நிரந்தரமா மறக்க வேண்டியிருக்கும். பரவாயில்லையா?'' இப்போது தமிழ் நிதானமாகப் பேச, அவர் முகம் வெளிறியது.

சட்டென அவரது நடவடிக்கையில் ஒரு தடுமாற்றம் எழுந்தது. ''நான் நாளைக்கே வந்து உன்னைப் பார்க்குறேன்!'' என்றவர், வேகமாகத் தன்னுடைய அடியாட்களுடன் அங்கிருந்து வெளியேறினார்.

அவர் சென்றவுடன், ''என்னடா! சிங்கிள் டயலாக்கில் அவரை ஆப் பண்ணிட்ட!'' அடியாட்கள் பிடித்திருந்ததால், வலித்த தன் தோளைத் தடவியவாறு கேட்டான்.

''அது அப்படித்தான். சரி, எனக்கு ரொம்ப டயர்டாயிருக்கு, நான் தூங்குறேன்!'' என்றவன், மருந்தின் உபயத்தில் நொடியில் தூங்கிவிட்டான்.

''ஹையோ! இவன் என்ன, வாத்தியார் பத்தி எந்த முடிவும் சொல்லாமத் தூங்கிட்டான்; இப்போ, வாத்திக்குச் சொல்லுறதா... வேண்டாமா?'' அவனது குழப்பத்தைத் தெளிய வைக்கவென்றே, ஒலித்தது அவனது அலைபேசி.

அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்தவன், ''வாத்திக்கு நூறாயிசு! கட் பண்ணிடுவோமா? ம்ஹூம்... அது இன்னும் ஆபத்து. ஏதாவது சொல்லிச் சமாளிப்போம்'' என எண்ணியவன் அதைச் செவிமடுத்தான்.

''ஹாங்...! சொல்லுங்கப்பா...'' தன் கலக்கத்தை மறைத்து, திடமாகக் குரல் கொடுத்தான்.

''என்னடா! உக்காந்து தண்ணியடிச்சுட்டு இருக்கியா? சவுண்டெல்லாம் பலம்மா இருக்கு?'' அவர் கேட்க, 'அடடா!

ஓவரா குரல் கொடுத்துட்டோம் போல இருக்கே... சமாளிடா!' -தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

''அதெல்லாம் இல்லப்பா. கொஞ்சம் அவசர வேலை; அதான், நானும் தமிழும் வெளியே வந்தோம். சொல்லுங்க...'' என வேகமாகச் சொன்னான்.

''தமிழோட போன் ஏண்டா அணைத்து வைக்கப்பட்டிருக்குன்னு சொல்லுது? அவன் எங்கே? அவன்கிட்ட போனைக் கொடு! கொஞ்சம் பேசணும்...''

'போச்சு... இவனுக்கு ஆக்சிடென்ட் ஆன இடத்தில், போன் மிஸ் ஆயிடுச்சு போலவே!' வேகமாய் யோசித்தவன், ''அப்பா! நான் டீ சாப்பிடக் கீழே வந்தேன். அவன் பில்டிங் மேல இருக்கான். இன்னைக்கு நைட், நாங்க வீட்டுக்கு வர்றது சந்தேகம்தான். நீங்க சாப்பிட்டுட்டு, படுத்துக்கோங்க.

நான் தமிழைப் போன் பண்ணச் சொல்லுறேன். என் போன்லையும் சார்ஜ் இல்லை. எதுக்கும் காலையில் நானே கூப்பிடுறேனே...'' -கோர்வையாகச் சொல்லி முடித்தான்.

ஏற்கனவே பலமுறை அவர்கள் வீட்டுக்கு வராமல் வேலையில் பிசியாக இருந்தது அவருக்குத் தெரியுமாகையால், அதை அவரும் ஒத்துக் கொண்டார். ஆனாலும் வீட்டில் அவனை சந்திக்கவென்றே காத்திருக்கும் சுதா, சிவன் முகத்தைப் பார்த்தவர்,

''முடிஞ்சால், அவனை ஒரு எட்டு வீட்டுக்கு வந்துட்டு, நைட் சாப்பாடு முடிச்சுட்டுப் போகச் சொல்லேன். அவனைப் பார்க்க, இங்கே சொந்தக்காரங்க வந்திருக்காங்க. அதான்...'' வேலைக்கு இடைஞ்சல் செய்கிறோமோ என்ற நினைப்பில், தன்மையாகவே கேட்டார்.

'இவரிடம் பொய் சொல்கிறோமே என்று, அவனுக்கும் கலக்கமாகத்தான் இருந்தது. ஆனாலும், இந்த இரவு நேரத்தில் அவரையும், விருந்தினர்களையும் பதட்டப்படுத்த மனமில்லாமல், ''இல்லப்பா... இது சீக்கிரமே முடிக்க வேண்டிய ப்ராஜெக்ட். நாங்க ஸ்பாட்டில் இல்லன்னா, வேலையே நடக்காது. அதான்...'' என்று தயங்கி நிறுத்தினான்.

அவனுக்குத் தெரியும், இப்படிச் சொன்னால்தான் அவர் உடனடியாக ஒத்துக் கொள்வார் என்று. அதேபோல்தான் நடந்தது. ''அப்போ சரி. எப்படியும் நாளைக்கு உங்களுக்கு லீவா தானே இருக்கும்? காலையில், நாங்க நிதானமா பேசிக்கிறோம்!'' சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார்.

மதியத்திலிருந்து சாப்பிடாத்தில் பசி வயிற்றைக் கிள்ள, செவிலியிடம் தமிழைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, சாப்பிடச் சென்றான். மருந்தின் வீரியத்தாலோ என்னவோ, இரவு முழுவதும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் தமிழ்.

காலையில் கண்விழித்தவுடன் தேவாவைத் தேட, பக்கத்திலிருந்த பெஞ்சில் உயரத்தைக் குறுக்கியவாறு படுத்திருக்கும் நண்பனைக் கண்டதில். அவன்பால் நட்பு பெருகியது. இருவரும் வெவ்வேறு துருவ குணம் கொண்டவர்கள். ஆனாலும், அவர்களது நட்பு தொடர்வது, இந்தப் புரிதலால் மட்டுமே.

தமிழிற்குப் பாத்ரூம் செல்ல வேண்டியிருந்தது. கையில் ட்ரிப்ஸ் இறங்கியதாலும், வலது காலில் அடிபட்டிருந்ததாலும், அவனால் எழுந்து செல்ல

முடியவில்லை.

''தேவா! டேய் தேவா...!'' முதலில் மெதுவாக அழைத்தவன், அவன் அசையாமல் தூங்கவே, இன்னும் சத்தமாக அழைத்தான். அதனால், தாடையில் இருந்த காயம் ஏற்படுத்திய வலியை, புருவம் சுருக்கி, தாங்கிக் கொண்டான்.

தமிழின் குரல் கேட்டு, ''டேய் சாமியார்! மூடிட்டுத் தூங்குடா. இப்போதான் காஜல் அகர்வால் கனவில் வந்து கட்டிப் புடிச்சா. அதுக்குள்ளே தூக்கத்தைக் கெடுத்துகிட்டு...'' வேகமாகச் சொன்னவன், அதன் பிறகுதான் நிலைமை மூளைக்கு எட்ட, வேகமாக எழுந்து அமர்ந்தான்.

''என்ன தமிழ்! வலிக்குதாடா? சாரிடா... நல்லா தூங்கிட்டன்!'' நண்பனிடம் மன்னிப்பு வேண்டினான்.

''வலியெல்லாம் தாங்கிக்கலாம். எனக்கு அவசரமா ஒன் பாத்ரூம் போகணும். நீ அட்டெண்டரைக் கூப்பிட்டு, இந்தச் சலைனை நிறுத்தச் சொல்லு'' அவஸ்த்தையாக முகத்தைச் சுளித்துச் சொன்னான்.

''ஒரு நிமிஷம் இருடா; வாறேன்...!'' என்றவன், டாய்லெட்டுக்குள் சென்று பெட்பேனை எடுத்து வந்தான்.

''இந்தாடா...!'' தூக்கக் கலக்கமாக தன்னிடம் அதை நீட்டிய நண்பனை வியப்பாய் பார்த்தான்.

தமிழ் தன்னிடமிருந்து அதை வாங்காமல் இருக்கவே, நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தான். ''என்னடா தமிழ்! பெட்லையே போயிட்டியா? சரி விடு! அதையும் மாத்திடலாம்'' எனச் சாதாரணமாகச் சொன்னான்.

''தேவா! நீ அட்டெண்டரைக் கூப்பிடுடா... நான் டாய்லேட்டிலேயே போறேன்.'' நண்பனின் செய்கையில் நெகிழ்வாகச் சொன்னான்.

''இப்போ உனக்கு என்னதாண்டா பிரச்சனை. அர்ஜெண்டா வருதுன்ன.., இப்போ நர்ஸை கூட்டி வான்னு சொல்லுற. ஏன் நர்ஸ் வந்தால்தான் போவியா...? நான் கொடுத்தால் போக மாட்டியா? இதில் உனக்கு வேண்டி நான் ஆம்பளை நர்ஸை எங்கே போய் தேட?

''டேய் தமிழ்! தயவு செய்து படுத்தாமல் யூஸ் பண்ணிட்டு தாடா'' அசையாமல் நின்றான்.

''இல்லடா... உனக்குச் சங்கடமா...''

''ஆமா ரொம்பச் சங்கடமாயிருக்கு... அது நீ இப்படி பேசுறதுதான்... புரியுதா. சரி உனக்குக் கையை கட்டி தொங்கவேற விட்டிருக்கானுங்களே... உனக்கு இன்னும் ஏதாவது ஹெல்ப் வேணுமா...?'' கண்களில் குறும்புடன் கேட்க, ''நீ கொஞ்சம் கண்ணை மூடிக்கடா...'' நண்பனின் கேலியில் தானும் இணைந்து கொண்டான். நட்புக்கு நிகர் நட்புதான்.

10

வாழ்வின் நிதர்சனம்...

துரத்தும் வேளையில்...

துணை அனைத்தும்

தூரமாய்...

தமிழுக்கு சலைன் நிறுத்திவிட்டதால், இருவரும் சாப்பிட்டு முடித்த பிறகு, ''தமிழ்! இப்போ மணி ஒன்பது. எப்பவும் நைட் டியூட்டி முடிஞ்சா காலையில் ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்குப் போய்டுவோம். இப்போ மணி ஒன்பது, பேசாமல் அப்பாகிட்ட பேசிடுடா'' சொன்னவாறு தன் அலைபேசியை உயிர்ப்பித்து அவனிடம் கொடுத்தான்.

''என் செல்போன் எங்கடா?''

''தெரியலடா... அனேகமா விபத்து நடந்த இடத்திலேயே மிஸ் ஆயிட்டிருக்கும்னு நினைக்கிறேன்.''

''தேவா! பேசாமல் வீட்டுக்குப் போய்ட்டா என்ன?''

''அப்படியே உன் காலையும் கையையும் இன்னொருக்கா முறிச்சால் என்ன...? விளையாடுறியா நீ...? இன்னும் பத்து நாள் இங்கே இருந்து அசைய முடியாதுன்னு சொல்லிட்டாங்க. நானும் வேற ஹாஸ்பிடல் போறோம்னு சொன்னதுக்குக்கூட விடல. உன் கால் சரியாகி, நீ ஒழுங்கா நடக்க இன்னும் ஒரு மாசமாகும். இதில் ஐயாவுக்கு இப்போவே வீட்டுக்குப் போகணுமாம்... உனக்கே இது ஓவரா இல்ல.''

''முதல்ல அப்பாவுக்குப் பேசி, அவரை சமாதானப்படுத்தி வரச் சொல்லு. இல்லன்னா வேண்டாம் நானே அவரை வரச் சொல்லுறேன். ஏதாவது கேள்வி கேட்டே குடைவார்'' சொன்னவன், அவன் கையிலிருந்து அலைபேசியை கைப்பற்றினான்.

அவன் அழைக்கும் முன்பாகவே அது அலறியது. ''அப்பாதான்டா...'' சொன்னவன், ''காலை வணக்கம்ப்பா... நல்லா தூங்குனீங்களா?''

''நான் தூங்குறது இருக்கட்டும்... தமிழுக்கு என்ன...?

முதல்ல அதைச் சொல்லு...?'' பதட்டமாகக் கேட்டார்.

இதற்குமேல் மறைக்க எதுவுமில்லை என்று தோன்ற, ''அவனுக்குச் சின்ன அடிதாம்ப்பா...''

''நீங்க எங்கே இருக்கீங்கன்னு சொல்லு... நான் வந்து பாத்துட்டு, அது சின்ன அடியா...? பெரிய அடியான்னு முடிவு பண்ணுறேன். ஏண்டா நீங்கல்லாம் பெரிய மனுஷங்க ஆயிட்டீங்களோ! வீட்டில் ஒருத்தன் இருக்கானே, அவனுக்குத் தகவல் கொடுக்கணும்னு கூட தோணலையா? அதிலும் நீ... நேத்து நைட் நான் போன் பண்ணும்போது, அவன் மாடியில் இருக்கான்னு கதை வேற...'' அவனிடம் பொரிந்தார்.

போனை மியூட் செய்தவன், ''உங்க அப்பாவுக்கு இம்புட்டு கோபம் ஆகாதுடா...'' தமிழிடம் அலுத்துக் கொண்டான்.

''நீ போனை என்கிட்ட கொடுடா. வேளை கெட்ட வேளையில் விளையாட்டு...'' அவன் கையிலிருந்து போனைப் பிடுங்கியவன், ''அப்பா! நான்தான்... எனக்கு ஒண்ணுமில்ல. நீங்க பதட்டப்படாமல் ஜிஹெச்-க்கு வாங்க. இங்கே வந்துட்டு போன் பண்ணுங்க, தேவா வந்து உங்களை ரூமுக்கு அழைச்சுட்டு வருவான்'' சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

சுப்பிரமணியம் மேலே கேள்விகள் கேட்டு அவனை தொல்லை செய்யாமல், சுதா, சிவத்திடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார். ஆனால், அவர்களும் உடன் வருவதாகச் சொல்லவே, வேறு வழியில்லாமல் அவர்களையும் அழைத்துக் கொண்டார்.

சிவன் புக் செய்திருந்த கால்டாக்ஸி அங்கேயே

இருக்க, அடுத்த அரை மணியில் தமிழின் அறைக்குள் இருந்தார்கள் அனைவரும். மகனை தலைமுதல், கால்வரை ஆராய்ந்தார் சுப்பிரமணி. அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

நடுங்கும் கரங்களால், அவன் கட்டுக்களை வருடினார். ''என்னப்பா இது... வண்டியில் பார்த்து வரக் கூடாது...? நைட்டே உங்க அம்மா சொன்னா... ஏதோ சரியில்லன்னு. அதே மாதிரி ஆயிடுச்சு பாத்தியா?

''நான் அப்போவே இந்தத் தறுதலைக்குப் போன் செய்தேன், அது சுவிட்ச்ஆப்-ன்னு சொல்லுச்சு. உடனே எனக்குச் சந்தேகம்தான். அதான் விடிஞ்சும் விடிய முன்னாடியே போன் செய்தேன்'' மகனின் வலக்கரத்தை கைகளில் தாங்கிக் கொண்டார்.

''இவ்வளவு பொறுப்பா உன்னைப் பார்த்துகிட்டன்... நான் தறுதலையாம். உங்க அப்பாக்கு என்னைக் கரிச்சுக் கொட்டலன்னா தூக்கமே வராதாடா?'' தமிழிடம் சின்னக் குரலில் எகிறினான்.

''அவனே உடம்பு சரியில்லாதவன். அவன்கிட்ட என்னடா குசுகுசு? எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லுடா...'' தேவாவிடம் சாடினார்.

''இல்ல உங்ககூட வந்திருக்கவங்களை நீங்க எப்போ அறிமுகப்படுத்துவீங்கன்னு கேட்டேன். வேற ஒண்ணுமில்லப்பா'' நிலைமையை அழகாகச் சமாளித்தான்.

''உனக்குத்தான் தெரியாது. இவங்களைத் தமிழுக்கு ஏற்கனவே தெரியும். என் பையனை கெடுக்குறதே நீதாண்டா'' கோபமாக பதில் சொன்னார்.

'கெடுத்துட்டாலும்...' முனகியவன், ''ஆமா உங்க

பையனுக்கு ஒண்ணும் தெரியாது... நாங்க கெடுக்குறோம்...'' அவருக்குக் கேட்காத வகையிலேயே இதையும் சொன்னான்.

''என்னடா... முனகுற? உன்கூடச் சேர்ந்துதான் இப்படிக் கண்ணுமண்ணு தெரியாம வண்டி ஓட்டி, ஹாஸ்பிட்டல்ல வந்து படுத்திருக்கான்...'' தமிழுக்கு அடிபட்டதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

தேவா மறுத்து எதையோ சொல்லப் போக, தமிழின் கண்டனப் பார்வை, அவனைப் பேச விடாமல் தடுத்தது.

''அப்பா! வந்தவங்களை நிக்க வச்சுட்டு, நீங்க பாட்டுக்குப் பேசிட்டே இருக்கீங்க. முடிஞ்ச அளவு நான் இன்னைக்கே வீட்டுக்கு வந்துடுவேன். நீங்க எதையும் மனசில் போட்டுக் குழப்பிக்காதீங்க. நீங்க இப்போவே வீட்டுக்குப் போங்க...'' தந்தையின் கவனத்தைத் திருப்ப முயன்றான்.

தமிழ் தங்களைப் பற்றி பேசவே, ''எப்படிப்பா ஆச்சு? யார் இடிச்சாங்கன்னு தெரியுமா...? போலீசில் கம்ப்ளைண்ட் கொடுத்துட்டீங்களா? ரோட்டுல இப்போல்லாம் நாம பாத்துப் போனாலும், நம்மளை சுத்தி இருக்குறவங்களும் கவனமா வரணும்னு வேண்ட வேண்டியிருக்கு'' சிவன் அக்கறையாகச் சொன்னார்.

''இல்ல ஒரு திருப்பத்தில் எதிர்பாராத விதமா, முன்னாடி வந்த லாரியைக் கவனிக்காமல் நான்தான் மோதிட்டேன். கம்ப்ளைண்ட் கொடுத்தாச்சு, கூடிய சீக்கிரம் கண்டு புடிச்சுடுவாங்க. சாரி அங்கிள்! என்னால் உங்களுக்குத் தேவையில்லாத அலைச்சல்...'' சங்கடமாகச் சொன்னான்.

''என்ன தம்பி இப்படிச் சொல்லிட்டீங்க? மனுஷனா பொறந்தா, ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்தாசையா இருக்குறதுதான். எங்களுக்கு எந்தச் சிரமமுமில்ல. முதல்ல உங்க உடம்பு தேறட்டும். மற்றதெல்லாம் பிறகு பார்த்துக்கலாம். டாக்டர் என்ன சொன்னாருப்பா?'' சுதா தன் தாய்மையைக் காட்டினார்.

அவர்கள் பேசும் வேளையில் அங்கே வந்த டாக்டர், அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டுத் தமிழை பரிசோதித்து, சில மருந்து மாத்திரைகள் எழுதி கொடுத்துவிட்டு வெளியேறினார்.

''டாக்டர்! தமிழை எப்போ வீட்டுக்குக் கூட்டிப் போகலாம்...?'' கேள்வியாக அவர் முகத்தைப் பார்த்தார் சுப்பிரமணி.

''இன்னும் ஒரு ஐந்து நாளாவது இங்கே இருக்கணும். கை எலும்பு கொஞ்சம் கிராக் தான். ஆனால், கால் எலும்புதான் ரெண்டு இடத்தில் முறிஞ்சுடுச்சு. விழும்போது அவர் நிக்கப் பார்த்திருக்கார் அதான். அதுக்கு இப்போ கம்பி மாட்டிட்டோம்... இளம் ரத்தம் சீக்கிரமே எலும்பு இணைஞ்சுடும். ஆனாலும், அவர் பழைய மாதிரியாக குறைந்தது, ரெண்டு மாசமாவது ஆகலாம். காலுக்குக் கொஞ்சம் அழுத்தம் கொடுக்காமல் பார்த்துக்கணும் அவ்வளவுதான்'' சுலபமாகச் சொல்லிவிட்டார்.

இரண்டு மாதம் என்று சொன்னவுடனே, சுப்பிரமணி தளர்ந்துவிட்டார். ''அவன் ஒரு இடத்தில் உக்கார்ந்து நான் பார்த்ததே இல்லை. இப்போ என்னன்னா...'' அழுகையில் குலுங்கியது அவர் தேகம்.

''மனசைத் தளர விடாதீங்க... இத்தோட போச்சேன்னு

சந்தோஷப்படுங்க. எங்களுக்கு என்னன்னா... நாங்க வந்த நேரத்தில் இப்படி ஆயிடுச்சேன்னுதான் வருத்தமா இருக்கு...'' சுதா தன் வருத்தத்தைச் சொன்னார்.

அதைவிட அவர் மனமோ, முதல்முறையாக கல்யாண விஷயம் பற்றிப் பேசும்போது இப்படியாகி விட்டதே... அதைச் சென்டிமெண்டாகப் பார்த்து, கல்யாண பேச்சுவார்த்தையை இத்தோடு முடித்துவிடுவாரோ என்ற கவலைதான் அதிகமாக இருந்தது.

''என்ன தங்கச்சி இப்படிச் சொல்லிட்ட? இந்த நேரத்தில் எனக்குத் துணையாயிருக்க, என் பார்வதிதான் உன்னை அனுப்பி வச்சுருக்கான்னு நான் சந்தோசத்தில் இருக்கேன். இப்படிச் சொல்லிட்டியே...'' சம்பவத்தின் நல்ல நிலையை மட்டும் நினைத்துப் பேசினார்.

அவர் அவ்வாறு சொல்லவே, சுதாவின் மனம் குளிர்ந்து. சாதாரண ஆட்களைப் போல், தன் மகளின் ராசிதான், அவர் மகனை இப்படி படுக்க வைத்தது என்று யோசிக்காமல், நல்ல விதமாகப் பேசினாரே என்று நிம்மதியாக உணர்ந்தார்.

அதேநேரம் சுதாவின் அலைபேசி' அதன் இசையை வெளிப்படுத்தியது. அதை எடுத்தவர், ''பாரதிதான் கூப்பிடுறா'' சொன்னவாறே அதை அட்டெண்ட் செய்தார்.

இவர் ஹலோ சொல்லும் முன்பே, ''என்னம்மா... ஒரு வாரம்னு சொல்லிட்டு போனீங்க. இப்போ முழுசா ரெண்டு வாரம் முடிஞ்சுடுச்சு. இப்போகூட அங்கே இருந்து வர்ற நினைப்பு உங்களுக்கு இருக்க மாதிரி இல்லை. உங்க மனசில் என்ன நினைச்சுட்டு இருக்கீங்க...

''ஒரு வயசுப் பொண்ணை தனியா விட்டுட்டு

போயிருக்கோம்னு, மனசில் கொஞ்சமாவது அக்கறை வேண்டாம். நீங்க இங்கே வாங்க... உங்ககிட்ட பேசப்போறதே இல்லை. ஆமா இந்த அப்பா எங்கே? பொண்டாட்டி கூட ஊர் சுத்த தொடங்குன உடனே, செகண்ட் ஹனிமூன் கொண்டாடுறாரா? அவர்ட்ட குடுங்க... நானே அவர்ட்ட பேசிக்கறேன்...'' தாயை ஒரு வார்த்தைக் கூடப் பேச விடாமல் பொரிந்து தள்ளினாள்.

''உங்க பொண்ணு உங்ககிட்டதான் பேசணுமாம்...'' முறைத்தவாறே அலைபேசியை சிவன் கையில் கொடுத்தார்.

''சொல்லுடாம்மா...''

''என்ன சொல்லச் சொல்லுறீங்க? நீங்கதான் சொல்லணும். அம்மா முந்தானை கிடைச்ச உடனே, அதைப் புடிச்சுட்டே ஊர் சுத்தணுமா? நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணுறேன்ப்பா. எப்போப்பா வர்றீங்க?'' இதுவரை கோபமாக பேசியவள், கடைசி வார்த்தை பேசும் போது அவள் குரல் வருத்தத்தில் தத்தளித்தது.

அவள் வருத்தத்தை புரிந்து கொண்டவர், ''இல்லம்மா நாங்க நேத்திக்கே கிளம்புறதாதான் இருந்தோம், அந்தநேரம், ரொம்ப வேண்டியவங்களை சந்திச்சோம்... அதான் அவங்களோட ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு வரலாம்னு நினைச்சோம். இப்போ என்னன்னா அவங்க பையனுக்குச் சின்ன விபத்து, தனியா கஷ்டப்படுறாங்க. இந்தநேரம் அவங்களை தனியா விட்டுட்டு வர முடியுமா? நீயே சொல்லு...'' மகளிடமே கேட்டார்.

''என்னது ஆக்சிடென்ட்டா? அடி ரொம்பப் பலம்மா? இப்போ எப்படிப்பா இருக்கு அவங்க பையனுக்கு? ஹம்!

ஏதோ ஒரு சரியான காரணம் சொல்லுவதால் உங்களை விடுறேன். அதுக்குன்னு இன்னும் பத்து நாள் ஆக்கிடாதீங்க. சீக்கிரம் கிளம்பி வந்துடுங்கப்பா. அந்தப் பையனை, நான் கேட்டதா சொல்லுங்க. அப்படியே, 'கெட்வெல் சூன்!' சொன்னேன்னு சொல்லிடுங்க. வச்சுடட்டுமா... லவ் யு டாடி!'' சொல்லிவிட்டு வைத்துவிட்டாள்.

இவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கும் வேளை சுப்பிரமணி, தேவாவிடம் விசாரணை நடத்திக் கொண்டிருந்தார். 'உனக்கு எப்படி விபத்து நடந்தது தெரியும்? நீ எப்படிச் சரியான நேரத்துக்கு அங்கே போன? விபத்துக்குக் காரணம் யார்?' இப்படியாக துருவி அவனிடமிருந்து விஷயத்தைக் கறந்துவிட்டார்.

அவருக்குத் தன் மகனை நினைத்து கவலை பிறந்தது. அதிலும் அரசியல்வாதியோடு அவன் மோதுவது ஏற்கனவே அவருக்கு வருத்தத்தை அளித்த விஷயம்தான். ஆனால், இப்போது அதுவே அவன் உயிரையும் எடுக்கத் துணிந்த பிறகு, அவரால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?

''ஏண்டா! நீயெல்லாம் கூடயிருந்தும், அவனை இப்படி விட்டுட்டியேடா...''

வருத்தத்துடன் சொன்னார். அதேநேரம், அந்த அரசியல்வாதி இன்று வருவார் என்று சொல்லிச் சென்றதாகச் சொல்லவே, சுதா, சிவன் முன்பு, தமிழிடம் அவர்கள் ஏதாவது வம்பு செய்து, அதைப் பார்த்து, எங்கே பெண் கொடுக்காமல் போய்விடுவார்களோ என்ற வருத்தமும் பிறந்தது.

''டேய்! நீ இங்கேயே இருந்து, தமிழை பார்த்துக்கோ நான் அவங்களை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன். நீ அந்த அரசியல்வாதி வந்துட்டுப் போனதும், எனக்குத்

தகவல் சொல்லு, நாங்க வர்றோம் சரியா'' அதட்டலாகச் சொன்னார்.

'வாத்திக்கு லொள்ள பார்த்தியாடா தேவா! கேட்குறது உதவி, அதுக்கு இம்புட்டு தெனாவெட்டு. எல்லாம் என் நேரம்' மனதுக்குள்ளேயே நொந்து கொண்டவன், ''அப்படியே செய்யிறேன்ப்பா'' வெளியே பவ்யமாகப் பதில் கொடுத்தான்.

பின்னர் மகனிடம் வந்தவர், ''தமிழ்! எனக்குக் கொஞ்சம் அவசர வேலையிருக்கு, நான் போய்ட்டு, கொஞ்ச நேரத்தில் வந்துடுறேன். அப்படியே இவங்களையும் வீட்டில் விட்டுவிட்டு வந்துடுறேன்'' அவனிடம் சொல்லிவிட்டுக் கிளம்ப முயன்றார்.

''என்னண்ணா, மாப்... தம்பியைத் தனியா விட்டுட்டுக் கிளம்பிட்டீங்க. நீங்க வேணா உங்க வேலையை முடிச்சுட்டு வாங்க. அதுவரை நாங்க தம்பிக்குத் துணையாயிருக்கோம். பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாமல்...'' சுதா தமிழைத் தனியே விட்டுச் செல்லத் தயங்கினார்.

'கிழிஞ்சுது...' தேவா சலித்துப் போனான். 'மாமாவே எப்படியாவது அவங்களை கிளப்பிடலாம்னு பாத்தால் இவங்க விட மாட்டிக்காங்களே.'

''ஆன்ட்டி! இங்கேயிருந்தால் உங்களுக்குத்தான் போர் அடிக்கும். நானும் தூங்கிடுவேன். நீங்க கிளம்புங்க. சாயங்காலம் வாங்க'' நிலைமையின் தீவிரம் உணர்ந்தும், தந்தையின் கூற்றுக்கு ஏதாவது காரணம் இருக்கும் என்பதாலும், தமிழ் அவர்களிடம் சொல்லிக் கிளப்பினான்.

அவர்கள் சென்ற பிறகு, ''தேவா! அப்பாகிட்ட ஏதாவது சொன்னியா என்ன?'' கூர்ந்து பார்த்துக் கேட்டான்.

''ஆமா. நான் சொல்லலன்னா, என்னை அப்படியே விட்டுருவாரு பாரு. ஏண்டா! என்னமோ கிளாஸ்ல, தப்பு செஞ்ச பையனை விசாரிக்கிற மாதிரி மிரட்டி விசாரிச்சார்'' கடுப்பாகச் சொன்னான்.

அதைக் கேட்டவன் அமைதியாக இருந்தான். பின்னர் ஒரு முடிவுடன், ''தேவா! நீயும் வேணா கிளம்பு, சாயங்காலம் வா...'' அவனையும் அனுப்ப முயன்றான்.

''என்னடா... நீயென்ன பெரிய தியாகியா? நீ செய்யிற வேலைக்கு யாராவது மெரீனா பீச்சுல சிலை வைக்கிறேன்னு சொன்னாங்களா? அப்படியே என்மேல் அக்கறையைப் பொழியிற, பார்த்துடா... நீ செய்யிற காரியத்துக்கு, எம்ஜிஆர் சமாதிப் பக்கத்துல குழி தோண்டி வேணா புதைப்பானுங்க.

அதெல்லாம் எனக்கு ஒரு வேலையும் இல்ல. நானும் இங்கேயே இருக்கேன். இன்னைக்கு வருவேன்னு சொல்லிட்டுப் போனானுங்கல்ல, என்ன செய்யறானுங்கன்னு நானும் பார்க்குறேன்'' சொல்லிவிட்டு தமிழின் அருகில் அமர்ந்து கொண்டான்.

தமிழும், நண்பனுக்குத் தன்னால் எந்தவிதத் தீங்கும் நேர்ந்துவிடக் கூடாது என்றுதான் தயங்கினான். ஆனால், தேவா உடன்னிருப்பது, அவனுக்கு ஒரு மாரல் சப்போர்ட்டாகவே இருந்தது.

அதன் பிறகு வந்த மணித்துளிகள் அவன் வாழ்க்கையில், அவன் எதிர்பாராத அதிர்ச்சிகளையும், மாற்றங்களையும் கொண்டு வந்தது.

11

புரியாத மொழி
புரியாத மனிதர்கள்
புதிதான இடம்
எல்லாம் புதிதாய்
எல்லாம் உன்னாலே

கண்ணாடியின் முன்னால் நின்று தன்னை திருத்திக் கொண்டிருந்தான் தமிழ். நெற்றியில் சின்னப் பிளாஸ்டர். இடக்கையில் சின்னக் கட்டு. வலது காலில் மட்டும் இப்பொழுதும் கட்டு கொஞ்சம் பெரிதாக இருந்தது. ஆனால்,, நடப்பதினால் பாதிப்படையாத வகையில் (விஞ்ஞான வளர்ச்சியால்) கட்டு போடப்பட்டு இருந்தது .

''என்னடா பதினாறு வயதினிலே படத்தில் வரும் சப்பாணி மாதிரி, ஒரு கையும் காலும் கோணலா வச்சுட்டு, இப்போ நீ வேலைக்குப் போகலன்னு யாருடா அழுதா? அதுவும் ஒரு பாஷை தெரியாத ஊருக்கு, இந்தப் பச்சைப் புள்ளையை இழுத்துட்டு வந்து இருக்கியே உனக்கே இது நல்லா இருக்கா..?'' கேட்டுவிட்டு, வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் தேவா.

''ஏண்டா நீ பச்சைப் புள்ளையா? வெளியே சொல்லிடாதே சரியான ரோமியோ அதுசரி உன்னை நானா இழுத்துட்டு வந்தேன். ஒட்டுப்புல்லு மாதிரி என்னோட ஒட்டிட்டு வந்துட்டு, பேச்சைப் பார்.

''நானாவாடா வந்தேன்? எல்லாம் இந்த வாத்தி செஞ்ச வேலை. உன்னை அந்த அரசியல்வாதி மேலும் ஏதாவது செய்துடுவானோன்னு பயந்து உன்னை மும்பைக்கு பாக் செய்து அனுப்பி, என்னையும் உனக்குத் துணையா இருக்க அனுப்பி இருக்கார். ஆனா, அவர் செஞ்சதுல என்ன தப்பிருக்குச் சொல்லு?''

''அந்த அரசியல்வாதி, தன்னோட மகளுக்குச் சீதனமாகத்தான் அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டினார். எப்படியாவது அதில் எந்தத் தடையும் வந்துடக் கூடாதுன்னுதான் நீ கேட்டதையெல்லாம் செய்தான். ஆனாலும், அவன் சும்மா இருப்பானா? எப்படியாவது உன்னை அழிக்கணும்னு முடிவு கட்டினான். அதே நாள்ல ஹனிமூன் போன அவனோட மக, மருமகனோட கார் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிகிச்சு. இந்த அரசியல்வாதிங்களுக்கு ஒரு வீக்னஸ் இருக்கே அதான் ஜோசியம்.

அவரோட ஜோசியர்கிட்ட போய் ஜாதகம் பாக்க, இப்போ அவர் செய்த ஏதோ ஒரு புண்ணியத்தில் தான், அவரோட மகள் சுமங்கலியா இருக்கக் காரணம்னு சொல்லவே, அப்போ அவன் செய்த ஒரே புண்ணியம் அந்தத் தொழிலாளர்களுக்கு இன்சூரன்ஸ் செய்ததுதான்.

அதுக்குக் காரணமான உன்னை, கண்டுக்காமல் விட்டுட்டாங்க. நம்ம ஆபீஸ்லயும் உன்னைப் பெருசா கண்டுக்காததால, அப்பா உன்னை அந்த வேலையை விடச்சொல்லி, உன்னைப் பத்திரமா இருக்க வைக்கணும்னு, நம்மள மும்பைக்கு வேலைக்கு அனுப்பி இருக்கார்.''

''சரி, அந்தக் கதை எல்லாம் இருக்கட்டும். நீ என்னோட ஆபீஸ் வாறியா இல்லையா? வரலன்னா

சொல்லிடு நான் டாக்ஸி பிடிச்சு போய்க்கிறேன்'' சொல்லிக் கொண்டே வாசலில் இறங்கினான்.

''அடேய் நில்லுடா! நானும் வாரேன்'' சொன்னவாறே, அவன் பின்னால் ஓடினான்.

தேவா கிக்கரை உதைத்து பைக்கை கிளப்ப, தமிழ் அவன் பின்னால் அமர்ந்துகொண்டான்.

''என்னடா பாஷை இது? காதில் விழுற வார்த்தையெல்லாம் திட்டுறானா, பேசுறானான்னே தெரிய மாட்டேங்குது. இங்கே பாரு அடிமேல் அடி வச்சு நகர வேண்டியிருக்கு. முடியலடா பேசாமல் நாம சென்னைக்கே போய்டலாமா?'' உண்மையான ஏக்கம் அவன் குரலில்.

தேவாவின் ஏக்கம் தமிழுக்குப் புரியாமல் இல்லை. ஆனால், தந்தையின் வாக்குக்குக் கட்டுப்பட்டு வந்தாயிற்று, வந்ததற்காகவாவது ஒரு ஆறு மாதமாவது இங்கே வேலை பார்த்தே ஆக வேண்டும். இல்லையென்றால் அவர் மனம் வருத்தப்படும்.

அதைவிட, அந்த அரசியல்வாதிக்கு அவர் மிகவும் பயப்படுவது தெரிந்தது. ஹம் அவருக்கு இருக்கும் ஒரே ஆதரவு நான்தான். எனக்கு ஏதாவது என்றால் அவரால் தாங்க முடியுமா? எனவேதான் பழகிய மனிதர்கள், தெரிந்த மொழி, பிடித்த வேலை என, அனைத்தையும் விட்டுவிட்டு, முகம் மட்டுமே தெரிந்த ஒருவரை நம்பி வந்தாயிற்று.

மும்பை இந்தியாவின் மக்கள் தொகையில் கணிசமான அளவை கொண்டிருக்கும் ஒரு சிட்டி. நெருக்கமான கட்டிடங்கள், நெருக்கடியான சூழல், கசகசவென்ற கூட்டம், ஹப்பா பழக நிச்சயம் நாள் ஆகும் பெருமூச்சு எழுந்தது.

''டேய் தமிழ்! என்ன கனவா கண்டுட்டு இருக்க. எப்படிப் போகணும், இந்த வழியான்னு கேட்டுட்டே இருக்கேன். மூச்சுகூட விடாமல் இருந்தால் என்னடா அர்த்தம்?'' தேவா காட்டுக் கத்தலாகக் கத்தியப் பிறகுதான், நடப்புக்கு வந்தான்.

''நேத்து சாயங்காலம் தானே வழி காட்டினேன். அதுக்குள்ளே மறந்துடுச்சா?'' - சாடியவன், செல்லவேண்டிய பாதையைக் காட்டினான்.

''எல்லா பக்கமும் ஒரே மாதிரி தெரியுது. அதான் லெப்ட்டா, ரைட்டான்னு கொஞ்சம் குழம்பிட்டேன் சரி கம்பெனி பேர் என்னடா'' அசுவாரசியமாகக் கேட்டான்.

''சிவன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மிஸ்டர்.பாரதிதான் எம்டி. நேரடியா அவரையே போய்ப் பார்த்தால் போதும்னு அப்பா சொன்னார். மனுஷனுக்குத் தமிழும் தெரியாதாம் ஹிந்தியும், இங்கிலிஷும் தான் தெரியுமாம். முடிஞ்ச அளவு ஹிந்தியில் பேசச் சொன்னார். இதில் பழமொழி வேற அம்மணமா சுத்துறவனுங்க மத்தியில், கோமணம் கட்டியவன் பைத்தியக்காரனாம் இதெல்லாம் ஏன்னுதான் புரியலை. இருந்தாலும் அவர் சொன்னால் ஏதாவது விஷயம் இருக்கும்னுதான் பேசாமல் இருந்துட்டேன். உனக்குத் தெரியுமா? கொஞ்சம் ஹிந்தி கூட கத்துகிட்டன்'' பெருமையாகச் சொன்னான்.

''என்னது தமிழ் வாயில் ஹிந்தியா? நெஞ்சு பொறுக்குதில்லையே'' தேவா அதிர்ந்தான்.

''ரொம்ப ஓட்டாதடா சும்மா (நீ, நான், வா, போ) இப்படி கொஞ்சம் வார்த்தைகள் பழகிகிட்டன அவ்வளவுதான்''

''அப்படியா? நானும், எங்கே நீ சினிமா போஸ்டர், படப்பேர், ஹிந்தி நடிகனுங்க பேர், எல்லாம் வரிசையா சொல்லுவியோன்னு நினைச்சு பயந்துட்டேன். நல்ல வேளை, அப்படி எதுவும் நடக்கலை'' அவனைக் கேலிச் செய்தான்.

''படவா ஒழுங்கா ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டுடா. ஏதாவது பொண்ணு பின்னாடி போய்டாதே'' அவனை ஓட்டினான்.

''எங்கடா தமிழ் தெரிஞ்ச பொண்ணுங்களே என்னைக் கண்டுக்காது. இதில் ஹிந்தி வேற அடப்போடா! நான் கட்ட பிரம்மச்சாரியாவே இருந்துடப் போறேன்'' அலுத்துக் கொண்டான்.

''நீ பிரம்மச்சாரியா எனக்கு புரிஞ்சுபோச்சுடா தெளிவா புரிஞ்சுபோச்சு. கல்யாணம் செஞ்சுகிட்டா, ஒரு பொண்ணைத்தானே பண்ணிக்க முடியும். சாமியாராப் போய்ட்டா ஒண்ணுக்குப் பத்து பொண்ணுங்களை வச்சுக்கலாம்னு பார்க்குறியோ வேண்டாண்டா'' உண்மையாகவே அலறினான்.

வண்டியை சிக்னலில் நிறுத்தியவன், ''என்னைப் பார்த்தால் ரொம்ப மொக்கையா இருக்குல்ல உனக்கு'' பின்னால் திரும்பி கடுப்பாகக் கேட்க, ''அப்படிச் சொல்ல முடியாது'' சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னவன், ''கொஞ்சம்'' என்று சேர்த்து சொல்ல, உண்மையாகவே கடுப்பானான் தேவா.

''நீயே உன் பைக்கை ஓட்டிட்டு போடா'' கோபமாக சொல்லிவிட்டுக், கிளம்பிச் செல்லப் பார்க்கவே, ''தேவா முதல்ல வண்டியில் ஏறு. சிக்னல் போட்டுட்டாங்க ட்ராபிக்

.ஆகுதுடா'' அவன் தவிப்பாக சொல்லி முடிக்கவே, .அதற்குள்ளாகவே, பின்னால் நின்ற வாகனங்களின் ஹார்ன் சத்தம் காதைப் பிளந்தது.

''அந்தப் பயம் இருக்கணும்'' கெத்தாக சொன்னவன், ஹிந்தியில் காதில் விழுந்த வசைமாரிகளைக் கண்டு கொள்ளாமல், அனைவரிடமும் திரும்பி, ''தேங்க்யூ, தேங்க்யூ'' சிரித்தவாறே சொல்லிவிட்டு வண்டியை எடுத்தான்.

''அவன் அவன் கரிச்சுக் கொட்டுறான், நீ எதுக்குடா இப்படி பொண்ணுங்ககிட்ட திட்டு வாங்குற மாதிரி ஈன்னு இளிச்சு வச்சு, நன்றி வேற சொல்லுற'' மற்றவர்களிடம் திட்டு வாங்குவதை சகிக்க முடியாமல் அவனிடம் எகிறினான்.

''நீ கவனிக்கலையா மச்சான் நம்ம பின்னாடி நின்ன காரில் ஒரு பொண்ணுதான் இருந்துதுடா'' கண்ணை சிமிட்டிச் சொல்ல, தமிழுக்குத்தான் ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

தமிழிடம் பதிலில்லாமல் போகவே, ''என்ன மச்சான் ஆஃப் ஆயிட்ட?''

''உன்னை ஏன் இன்னும் கொல்லாமல் இருக்கேன்னு உனக்கு ஆச்சரியமா இருக்கோ'' எரிச்சலாகக் கேட்டான்.

தமிழ், மிகுந்த கோபத்திலிருப்பது அவன் குரலிலேயே தெரியவர, இதற்குமேல் பேசினால் தன் முதுகுத்தோல் பிய்ந்துவிடும் என்பது புரிய, அமைதியாக வண்டியைச் செலுத்தினான்.

பாரதியின் வீட்டிலோ காலையில் எழுந்தது முதலே

சுதா மகளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார். அதைவிட அதிகமாக உத்தரவு போட்டுக் கொண்டிருந்தார் என்பதுதான் சரியாக இருக்கும்.

''ஹையோ அம்மா! போதும். என் காதிலிருக்கும் செவிப்பறை கொஞ்சம் ரெஸ்ட் கேட்டுக் கெஞ் சுது. நீங்க சென்னை போனாலும் போனீங்க இங்கே வந்த இந்த ஒரு மாசமா தமிழ், தமிழ், தமிழ்! இந்தப் பேரைக் கேட்டாலே அப்படியே பத்திகிட்டு வர்ற அளவுக்குப் பண்ணிட்டீங்க. எனக்கு இப்போ மாப்பிள்ளை பார்க்கச் சொல்லி நான் உங்ககிட்ட கேட்டேனா? அதுவும் தமிழ் நாட்டிலிருந்து... அட ஆண்டவா! என் அம்மாவுக்குத் தமிழ் பைத்தியம் இப்படியா முத்திப் போகணும்.

''முன்னாடியெல்லாம் வீட்டில்தான் தமிழ் பேசணும்னு கண்டிஷன் போட்டீங்க. சரி இப்போ என்ன தமிழ் மாப்பிள்ளை, தமிழ்தான் பேர் முடியலம்மா'' இரண்டு காதிலும் ஆள்காட்டி விரலை திணித்தவாறே, சத்தமாகப் புலம்பியவாறு, அறையின் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தாள்.

''பாரதி! நான் சொல்லுவதை கேக்கவே கூடாதுன்னு முடிவோட இருக்குறியா? இன்னைக்குத் தமிழ் தம்பி உன் ஆபீஸ்க்குத்தான் வர்றார். அவர்கிட்ட கொஞ்சம் பார்த்து நடந்துக்கோன்னுதானே சொல்லுறேன் அதுக்கு ஏன் இப்படி புலம்புற?'' ஆற்றாமையாகக் கேட்டார்.

''என்னது கொஞ்சம் பார்த்து நடந்துக்க சொன்னீங்களா? நான் சொல்லவா நீங்க என்னென்ன சொன்னீங்கன்னு அவர்கிட்ட அடக்கமா பேசு, அமைதியா பேசு, வேலை கொடுக்குறோம்னு தெனாவெட்டா

நடக்காதே, தப்பு செஞ்சாலும் பொறுமையா சொல்லு, திட்டிடாதே இதெல்லாம் விட பெரிய விஷயம், பொண்ணு மாதிரி அவர்கிட்ட நடந்துக்கோன்னு சொன்னீங்களே... அப்போ என்னைப் பார்த்தால் இப்போ பொண்ணு மாதிரி தெரியலையா.

அதென்ன, புதுசா பொண்ணு மாதிரி நடக்குறது அதுவும் எப்படின்னு சொல்லிடுங்க அப்படியே நடந்துக்கறேன். அடக்கமா நடக்கணுமாம் அடக்கமா... அவனுக்கு பொண்ணு வேணும்னா சுடுகாட்டுக்குக் கூட்டி போங்க. அங்கேதான் அடக்கமான பொண்ணெல்லாம் இருக்கும்'' தாய்க்கு குறையாத கோபத்தோடு கத்திக் கொண்டிருந்தாள்.

அவள் சத்தம் போடுவதைக் கேட்டு, அறைக்கே வந்துவிட்டார் சிவம். ''என்னமா இங்கே சத்தம்?'' கேட்டவாறே அவள் அறைக்குள் நுழைந்தார்.

''வந்துட்டீங்களாப்பா இந்த அம்மா தொல்லை தாங்க முடியலப்பா. ஒரு மாசமா என்னைப் பாடாப்படுத்தினது போதாதுன்னு, இன்னைக்குக் காலங்காத்தாலே, ஒரு கப் காஃபியைக் கொடுத்துட்டு, புல் மீல்ஸ் அளவுக்கு அட்வைஸ். இவங்க செய்யிறதை எல்லாம் பார்த்துட்டு, எனக்கு இப்போவே அந்தத் தமிழைப் பிடிக்கலப்பா இதில் நீங்க வேற...'' அவள் முகத்தில் அப்பட்டமான எரிச்சல்.

அவர், சுதாவை கண் ஜாடையில் அங்கிருந்து வெளியே போகச் சொல்லவே, சிவத்தை முறைத்தவாறே எழுந்து வெளியே சென்றார். செல்லும் முன்னர், ''உங்க பொண்ணுக்கு நல்லபுத்தி சொல்லுங்க'' நொடித்துக் கொண்டுதான் சென்றார்.

''பார்த்தீங்களாப்பா எப்படி பேசுறாங்கன்னு?'' தந்தையிடம் புகார் சொன்னாள்.

''அவ கிடக்கா நீ அப்பாகிட்ட வந்து உக்காரும்மா.''

''என்ன இப்போ நீங்க ஸ்டார்ட் பண்ண போறீங்களா? போங்கப்பா'' சொன்னவாறு அலுவலகத்துக்குக் கிளம்பச் சென்றாள்.

''அதெல்லாம் இல்லை... இப்படி உக்காரும்மா'' அவர் உறுதி கொடுக்கவே, அரை மனதாக அவர் அருகில் அமர்ந்தாள்.

''சொல்லுங்கப்பா'' அவர் முகத்தைப் பார்த்து கேட்டாள்.

''நான் சொல்ல வேண்டியது ஒண்ணே ஒண்ணுதாம்மா. தமிழ், நீ நினைக்கிற மாதிரி இல்லை. அதை நீயே இன்னைக்கு புரிஞ்சுப்ப. அதுக்கு முன்னாடி இந்த அப்பாவுக்காக உன்னோட இந்தக் கோபம், எரிச்சல் எல்லாத்தையும் மூட்டை கட்டி வச்சுட்டு, அவரை உன்னோட கம்பெனியில் வேலை செய்ய வரும் ஒரு கேண்டிடேட்டா மட்டும் பாரு. அவரோட பழகிப் பாரு, உனக்கு ஓகேன்னா மட்டும்தான், அப்பா மேலே எதையுமே யோசிப்பேன் சரியா?'' அவள் மனநிலை புரிந்து, ஆதரவாகப் பேசினார்.

அவர் சொல்ல வருவதைப் புரிந்ததற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள். ''நீங்க சொன்ன மாதிரியே செய்யிறேன்ப்பா ஆனாலும்...''

''என்னமா என்னமோ சொல்ல வந்துட்டு தயங்குற?''

''நீங்க இப்படி சொல்லுறீங்க, அம்மா என்னவோ அவர்தான் வீட்டு மருமகன் என்ற அளவுக்குப் பேசிட்டு

போறாங்க அதைவிட...'' தந்தையின் முகத்தைப் பார்க்காமல் அறை வாயிலையே பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

எதுவாக இருந்தாலும், அவள் வாயிலிருந்தே வரட்டும் என்பதுபோல் அமைதியாகவே இருந்தார். ஆனால், மனதுக்குள், 'எனக்கும் அவர்தான் மருமகனா வரணும்னு ஆசையா இருக்கும்மா' என்று சொல்லிக் கொண்டார்.

''அவர் ரொம்ப ஷை-டைப்ன்னு சொல்லுறீங்க. எந்தப் பொண்ணுக்குமே அவளுக்கு வரப்போற கணவன், தைரியமானவனா, தன்னை எந்த ஆபத்திலிருந்தும் காப்பவனா, தனக்குப் பக்கபலமா இருப்பவனா இருக்கணும்னுதான் எதிர்ப்பார்ப்பா. எனக்கும் அந்த எதிர்பார்ப்பெல்லாம் இருக்குப்பா'' தயங்கினாலும், இதுவரை தன் மனதுக்குள் இருந்த உறுத்தலை, வாய்விட்டே கேட்டுவிட்டாள்.

இதைக் கேட்டு, வாய்விட்டுச் சிரித்தார் சிவன். ''என்னப்பா சிரிக்கிறீங்க'' சிணுங்கினாள்.

''ஆக என் பொண்ணோட மனசுக்குள் உண்மையா என்ன ஓடிட்டு இருக்குன்னு இப்போதான் வெளியே வருது சரியா?'' கேட்டுவிட்டு ஆர்ப்பாட்டமாகச் சிரித்தார்.

தன்னைக் கண்டுகொண்டாரே என்று எண்ணியவாறு, தலை குனிந்தாள். ''அதுக்குத்தான்ம்மா நான் உன்கிட்ட முன்னாடியே உண்மையை சொல்லிட்டேன். நீ பழகிப் பாரு, உனக்குப் பிடிச்சிருந்தால் மட்டும்தான், மத்ததெல்லாம். சரியா...'' உறுதி கொடுத்தார்.

அதன் பிறகுதான் பாரதி கொஞ்சம் நிம்மதியாக

உணர்ந்தாள். ஆனாலும், மனதுக்குள் இருக்கும் சின்ன எதிர்பார்ப்பும், ஏக்கமும், தாயின் கண்டிப்பும், தந்தையின் அனுசரணையும், எல்லாமாக சேர்த்து ஒரு கலவையான உணர்வுடனே அலுவலகம் சென்றாள்.

தன் வருங்கால கணவனைக் காணப் போகிறோம் என்ற பரபரப்போ, ஆர்வமோ, குறுகுறுப்போ எதுவும் அவளிடம் இல்லை. அவன் எப்படி இருப்பான்? என்ற கேள்வி மட்டுமே மண்டையைக் குடைந்தது.

பாரதி அலுவலகத்துக்குள் நுழைந்த உடனே, சுஷ்மியை அழைத்தாள். தன் மனதிலிருப்பதை யாரோடாவது பகிர்ந்தே ஆகவேண்டும் என்ற உந்துதல் எழவே, சுஷ்மியை அருகில் அமர்த்திக் கொண்டு, எப்படித் துவங்குவது என தயக்கத்துடன் அமர்ந்திருந்தாள்.

''என்ன பாரதி ஏதோ சொல்ல வர்ற மாதிரியிருக்கு. ஆனால், தயங்குற என்ன?'' தோழியின் கரங்களை தன் கரங்களுக்குள் ஏந்திக் கொண்டாள்.

அவள் கேட்கவே மனதிலிருப்பதை மடைதிறந்த வெள்ளமாக, அனைத்தையும் அவளிடம் கொட்டினாள். அவனிடம் ஹிந்தியில் மட்டுமே பேசவேண்டும் என்று தந்தை சொன்ன வார்த்தை வரை அவளிடம் சொல்லி முடித்த பிறகே நிம்மதியாக உணர்ந்தாள்.

அனைத்தையும் கேட்ட சுஷ்மி அமைதியாக இருந்தாள்.

''ஏய், நான் சொல்லிட்டே இருக்கேன் நீயென்ன அப்படியே அசையாமல் இருக்க?'' அவளை உலுக்கினாள்.

''எல்லாம் சரி, அதென்ன ஹிந்தியிலேயே

பேசணும்னு'' தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

''இல்ல அவர் நமக்கும் தமிழ் தெரியும்னு தெரிஞ்சால் இயல்பா இருக்க மாட்டாரோன்னு எல்லாரும் ஃபீல் பண்ணுறாங்க அதான்'' வேகமாகச் சொன்னாள்.

அதேநேரம், அவள் மேசையிலிருந்த போன் அலறவே, அதை எடுத்தாள். ரிசப்சனிஸ்ட் சொன்னதைக் கேட்டவள், சிரிப்பை வாய்க்குள்ளே அடக்கியவள், ''நீ அவங்ககிட்ட எதுவும் சொல்ல வேண்டாம், நேரா என் ரூமுக்கு அனுப்பு'' சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தாள்.

''எதுக்கு இப்போ இப்படி சிரிக்கிற?'' கேட்ட சுஷ்மியின் இதழ்களிலும் புன்னகை.

''இல்ல.., தமிழ் வந்திருக்கிறார். வந்தவர், உங்க எம்டி மிஸ்டர். பாரதியைப் பாக்கணும்னு சொல்லி இருக்கார். நான் ஏற்கனவே ரிசப்சனிஸ்ட்கிட்ட, தமிழ் வந்தால் உடனே என் ரூமுக்கு அனுப்புன்னு சொல்லி இருந்தேன். அவர் செஞ்ச கூத்தில், அலறியடிச்சு எனக்குப் போன் பண்ணுறா. அதாவது நீங்க எப்போ மிஸ்ஸிலிருந்து மிஸ்டர் ஆனீங்கன்னு'' சொல்லிவிட்டுச் சிரிக்க, சுஷ்மியும் அவளுடன் இணைந்து கொண்டாள்.

இவர்களது சிரிப்பை மேலும் அதிகரித்தது, வெளியே இருந்து கேட்கப்பட்ட அனுமதி வாசகம்.

* * * * *

12

முதல் சந்திப்பு
முதல் காத்திருப்பு
முதல் பார்வை
முதல் தனிமை
அனைத்தும் புதுமையாய்
எல்லாம் உன்னாலே

தமிழுக்கு, அவனது எம்டி பாரதி என்பது மட்டுமே சொல்லப் பட்டிருந்தது. அதிலும் சுப்பிரமணி, பாரதி பெண் என்பதை மறந்தும் கூட அவனிடம் வெளிப்படுத்திவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனமுடன் இருந்தார்.

தப்பித் தவறி தான் சொல்லிவிட்டால், மும்பைக்குப் போகவே மாட்டேன் என்று ஒற்றைக் காலில் நின்றுவிடுவான் என்பது அவருக்கு நன்றாகவேத் தெரியும். எனவே சுதா, சிவம் இருவரிடமும் கூட, பாரதி என்று மட்டும் சொல்லுங்கள் என்று சொல்லி வைத்திருந்தார்.

அது மட்டும் இல்லாமல், அவனது குணம் தெரிந்ததாலேயே, பாரதிக்கு நன்றாகத் தமிழ் பேசத் தெரியும் என்பதைக் கூட, இப்போதைக்குச் சொல்லவேண்டாம் என்று மறுத்துவிட்டார்.

அவளுக்குத் தமிழ் தெரியாது என்பதால், முடிந்த அளவு, தன் செய்தியை அவளுக்கு கன்வே செய்ய வேண்டும் என்ற நிர்பந்தத்துக்காகவேனும், அவள் முகம்

பார்த்து பேசுவான் என்று எண்ணினார்.

தேவாவுக்கும் ஹிந்தி தெரியாதாகையால், அவனையும் மீடியேட்டராக வைக்க முடியாது என்பதால், விருப்பமில்லை என்றாலும், அவன் தமிழுடன் செல்வதை ஆட்சேபிக்கவில்லை அவர்.

அவருக்கும் ஆசைதான் எப்படியாவது தன் மகனுக்குத் திருமணம் முடிந்துவிட்டால் போதும், அதற்காக எதையும் செய்ய அவர் தயாராக இருந்தார். இப்படியாக, தன் முதுகுக்குப் பின்னால் நடந்த எந்த விஷயமும் அறியாமல், கிளம்பி வந்திருந்தான் தமிழ்.

ரிசப்ஷனில் வழி கேட்டு, பாரதியின் அறைக்கு முன்னர் வந்து நின்றவன், ''கயா ஆப் அந்தர் ஆ சக்தா ஹூம் நீங்க உள்ளே வரவா'' என்று ஹிந்தியில் கேட்டு வைத்தான். நான் உள்ளே வரவா என்று கேட்காமல், நீங்க உள்ளே வரவா என்று கேட்கவே, உள்ளே இருந்த இருவருமே, மேலும் வெடித்துச் சிரித்தார்கள்.

''என்ன பாரதி, உன் ஆளுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை? பேசாமல் இங்க்லீஷ்லேயே கேட்டுட்டு போலாமே'' சுஷ்மி சிரிப்பினிடையே சொன்னபிறகுதான், வந்திருப்பவன், தனக்காக, வீட்டினரால் பார்க்கப் பட்டிருக்கும் மாப்பிள்ளை என்ற உணர்வே அவளுக்கு வந்தது.

உடனே பாரதியின் சிரிப்பு, சட்டென கட்டுக்குள் வந்தது. தந்தை சொன்னது நினைவிலாட, ''சுஷ்மி இனிமேல் அவர் இங்கே இருக்கும்போது சிரிச்ச கொன்னுடுவேன். கொஞ்சம் பேசாமல் இரு'' அவளை அறியாமலேயே குரலில் சூடு ஏறியிருந்தது.

அதை திகைப்பாய் உணர்ந்த சுஷ்மி, 6 'ன்ன இருந்தாலும், தான் இப்படி பேசியிருக்கக் கூடாது என்ப ாதை உணர்ந்தவள், ''என்ன, அதுக்குள்ளே புருஷ ›னா வரப்போறவர் மேல பாசமா... நான் இனிமேல் வா யே திறக்கலை தாயே'' கையெடுத்துக் கும்பிட்டாள்.

சுஷ்மி சொன்னபிறகுதான், தமிழுக்காகத் தன் உயி ர்த் தோழியிடமே கண்டிப்புடன் பேசியது உறைத்தது. 'இதுதா ன் உரிமை உணர்வா' ஒரு நொடி வியந்தவள், தமி ழ் வெளியிலேயே நிற்பது உறைக்க, ''ஆப் அந்தர் ஆயியே நீங்க உள்ளே வாங்க'' அனுமதியளித்தாள்.

பாரதியும், சொன்ன பிறகுதான், தானும் அதையே சொன்னது புரிய, கொஞ்சம் தயங்கினான் தமிழ். ஆனால், தேவாவுக்கு அந்தத் தயக்கம் எதுவும் இல்லையாகையால், நண்பனையும் இழுத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டான்.

உள்ளே சென்ற நண்பர்கள் இருவருமே திகைத்தார்கள். ''ஹையோ பொண்ணுங்கடா'' தமிழ் சின்னக் குரலில் தேவாவிடம் அலற, ''ஹைய்யோ பொண்ணுங்கடா'' ஜொள்ளினான் தேவா.

''அடச்சீ அடங்குடா ரோமியோ. உன் வேலையை இங்கேயும் காட்டுன'' அவனிடம் அடிக்குரலில் மிரட்டினான். தேவா அந்தக் குரலிலேயே தன் வாலை சட்டென சுருட்டிக் கொண்டான்.

''தமிழ் உனக்குப் பாரதின்னா பொண்ணுன்னு ஏற்கனவே தெரியுமாடா'' அவன் அலறியதைக் கண்டு கொள்ளாமலே கேட்டான்.

அவனைப் பார்த்து பல்லைக் கடித்தவன், ''என்னைக்

கொலைகாரனா மாத்திடாத'' சிரித்த முகமாகவே நண்பனை மிரட்டினான்.

''தமிழ் உங்க அப்பாவை மாதிரி எனக்கு ஒரு அப்பா இல்லாமல் போயிட்டாரேடா'' வராத கண்ணீரை அவன் துடைக்க, அங்கேயே அவனை நாலு அறை விட்டால் என்ன என்று சிந்தித்தான் தமிழ். அவனுக்குமே இது பெரிய அதிர்ச்சிதான்.

அதிலும் தன்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்த தன் தந்தை இப்படி ஒரு செயலைச் செய்திருக்கிறார் என்றால், அதில் ஏதோ விஷயம் இருக்கும் என்று அவன் புரிந்து கொண்டான். உடனே தன்னை நிதானத்துக்குக் கொண்டு வந்தவன், ''எக்ஸ்க்யூஸ்மீ'' என்று சொல்லி அங்கிருந்த அமைதியைக் கலைத்தான்.

இவர்கள் இங்கே வழக்கடிக்க, அதேநேரம் பாரதியும், சுஷ்மியும் கூட ஹிந்தியில் அதைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். ''என்ன பாரதி, தமிழ் சார் இவ்வளவு ஷாக் ஆகுறார்? நிஜம்மாவே ஆளு ரொம்ப ஷை டைப் தான் போல'' அவள் சொல்லி முடித்த அடுத்த நொடியே,

தேவாவின் பேச்சைக் கேட்டு இரு பெண்களின் பிபியும் எகிறியது. ஆனாலும், அப்பொழுது செய்யக்கூடியது எதுவும் இல்லை என்பதால் அமைதியாகவே அவர்களைக் கவனித்தார்கள்.

தேவாவின் பேச்சுக்கு, தமிழின் பதிலைக் கேட்ட இரு பெண்களின் கண்களிலும் மெச்சுதல் வந்தது. பாரதிக்கு, தமிழின் அந்தச் செய்கை, மிகவும் பிடித்தது.

கூச்ச சுபாவம் கொண்டவனாக இருந்தாலும், பெண்களைக் கேலி செய்வதை விலகி நின்று வேடிக்கைப்

பார்க்காமல், நண்பனாக இருந்த பொழுதும் அவனைத் தட்டிக்கேட்ட விதம், பாரதியின் மனதில் தமிழைப் பற்றிய, நல்ல விதையை விதைத்தது.

தமிழும் கிட்டத்தட்ட அதே நிலையில் தான் இருந்தான். தான் பேசிய ஹிந்தி தப்பு என்றபொழுதும் கூட, அதைப் பற்றி கேலி செய்யாமல், மற்றவருக்குத் தெரியாமல், அதை சரிப்படுத்திய விதம் அவனுக்கும் பிடித்தது.

முதல் சந்திப்பிலேயே இருவருக்கும் ஒருவர் மற்றவரைப் பற்றிய நல்லெண்ணம் எழுந்தது. அதன் பிறகு தமிழ், ஆங்கிலத்துக்குத் தாவிவிட, அவர்களது உரையாடல் ஆங்கிலத்திலேயே தொடர்ந்தது.

''நான் தமிழன்பன், இவன் தேவநாதன், நாங்க சென்னையிலிருந்து வர்றோம். இங்கே பாரதி'' இரு பெண்களையும் மாற்றி மாற்றிப் பார்த்தான்.

இறுதியில் அவன் பார்வை பாரதியிடம் நிலை கொண்டது. அவனது கணிப்பை மனதுக்குள் மெச்சியவள், ''ஹலோ தமிழ்! உக்காருங்க'' அவளது அந்தப் பதிலிலேயே, தான்தான் பாரதி என்பதை அவனுக்கு உணர்த்தினாள்.

'நான்தான் பாரதி' என்று தன்னைப் பற்றி உயர்த்தாமல், நாசூக்காகத் தன்னை அறிமுகப்படுத்தியது, தமிழை வியப்பில் ஆழ்த்தியது. இப்படி ஒரு பதவியிலிருக்கும் பாரதியின் தன்னடக்கம் அவனுக்குப் பிடித்தது.

அதை அவனது விழியும் அவளுக்கு வெளிப்படுத்த, அவன் பார்வை சொன்ன பாஷையில் பேச்சிழந்து

மௌனமானாள் பாரதி. பின்னர் தன்னை சுதாரித்தவள், ''நீங்களும் உக்காருங்க தேவா'' அவள் சொன்னதைக் கவனிக்காமல், சுஷ்மியையே பார்த்துக் கொண்டிருந்தான் தேவா.

''டேய் ரோமியோ உன்னைத்தான்டா கூப்பிடுறாங்க. அந்தப் பொண்ணை இப்படி பார்த்துத் தொலையிற, முந்தி மாதிரி உனக்குப் பதிலா நான் அடிவாங்குவேன்னு மட்டும் நினைக்காதே. போற போக்கைப் பார்த்தால் நீ அவங்ககிட்ட அடி வாங்காமல் வர மாட்டேன்னு நினைக்கிறேன்'' அவன் தொடையில் கிள்ளியவாறே எச்சரித்தான்.

''ஏன்டா சாமியாரே நீயும் பார்க்கமாட்ட, என்னையும் பார்க்க விடமாட்டன்னா என்னடா கணக்கு'' அவன் எச்சரிக்கையை கண்டுக் கொள்ளாமல் பேசினான்.

இப்படி எம்டியின் எதிரில் வழிந்துத் தொலைகிறானே என்று சங்கடமாக இருந்தது தமிழுக்கு. அதை உணர்ந்தவள் போல், தமிழ் கொடுத்த பைலில் தன் தலையை நுழைத்துக் கொண்டாள் பாரதி.

சுஷ்மியின் பார்வையோ தேவாவை முறைத்துக் கொண்டிருந்தது.

''தேவா, நீ பேசுறது வேண்ணா அவங்களுக்குப் புரியாமல் இருக்கலாம். இப்படி வெச்சக் கண்ணு வாங்காமல் பார்க்குறியே உனக்கே இது ஓவரா இல்ல'' சின்னக் குரலில் சொன்னான்.

''தமிழ் நீ சொன்னால் நம்ப மாட்ட நான் காதலில் தொபுக்கடீர்ன்னு விழுந்துட்டேன் மச்சான். அதுவும் எதிரிலிருக்கும் இவங்க மேல'' தேவா திடீரென இப்படிச் சொல்லவே, அங்கிருந்த அனைவரின் முகங்களிலும்

அப்படி ஒரு அதிர்ச்சி.

அதிலும் சுஷ்மியின் கண்கள் தெறித்து வெளியே விழுந்துவிடும் அளவு விரிந்தது. அதிர்ச்சியாக, பாரதியைப் பார்க்க, பாரதியும் அதே நிலையில்தான் இருந்தாள். ''மிஸ்டர் தேவா உங்க பைல் தாங்க..'' கண்டிக்கும் குரலில் கேட்டாள்.

அவனது பைல்லைக் கூட, சுஷ்மியின் முகத்தைப் பார்த்தவாறே, பாரதியிடம் கொடுத்தான். ''டேய் மச்சான்! அவ கண்ணை முழிச்சு என்னைப் பார்க்குற அழகே தனிடா'' தேவா வழிந்தவாறே தமிழிடம் சொல்ல, அங்கேயே தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது தமிழுக்கு.

''தேவா நீ பேசுறது ஏதோ ஒரு விதத்தில் அவங்களுக்கு புரியுது போலடா அதிர்ச்சியா உன்னைப் பார்க்குறாங்க'' நண்பனைக் கலைக்க முயன்றான்.

''உனக்குப் பொறாமைடா'' மீசையின் நுனியைத் திருகியவாறே அவன் சொல்ல, இப்பொழுது வெளிப்படையாகவே தலையில் அடித்துக் கொண்டான் தமிழ்.

பாரதியோ தன் முக மாறுதல்களை, வாகாகப் பைலுக்குள் தலையைத் திணித்தவாறே மறைத்துக் கொள்ள, சுஷ்மிதான் அங்கே இருக்க முடியாமல் தவித்துப் போனாள்.

''பாரதி நான் கிளம்புறேன். என்னால் இதுக்குமேல இங்கே இருக்க முடியாது'' முள்ளின்மேல் அமர்ந்திருக்கும் அவஸ்தையில் அவள் சொல்ல, ''சரி கிளம்பு'' அவளுக்கு அனுமதி கொடுத்தாள்.

இருவரின் பேச்சும் அப்பொழுது ஹிந்தியில் இருக்கவே, எதிரில் இருந்தவர்களுக்குப் புரியவில்லை.

ஆனால், சுஷ்மி எழுந்த பிறகுதான், அவள் செல்வதற்கு அனுமதி வேண்டியிருக்கிறாள் என்பது புரிந்தது.

சுஷ்மி வெளியேறப் போகவே, கழுத்தைத் திருப்பி, அவள் செல்வதையே பார்த்தவன், ''மேடம் அவங்களை அறிமுகப்படுத்தவே இல்லையே'' அவசரமாகக் கேட்டான்.

சுள்ளென கோபம் வந்தாலும், அதை அடக்கிய பாரதி, ''அவங்க சுஷ்மிதா என்னோட செக்கரட்டரி ப்ரண்ட் எல்லாம்'' அழுத்திச் சொன்னாள்.

அவள் தன்னை அறிமுகப்படுத்தவே, மரியாதை நிமித்தமாகக் கூட சிரிக்கவில்லை சுஷ்மி. மாறாக முறைத்தவாறே வெளியேறினாள்.

தேவாவின் செய்கைகள் அனைத்தும் வரம்பு மீறுவதாக இருக்கவே, ''மிஸ்டர் தேவா, பிகேவ் யுவர் ஸெல்ப் இந்தக் கம்பெனிக்குள் நீங்க வந்து முழுசா ஒரு மணி நேரம் ஆகலை. அதுக்கு முன்னாடி என்ன இது? இந்தக் கம்பெனியில் லேடிஸும் வொர்க் பண்ணுறாங்க. உங்களோட கேரக்டர் சரியில்லன்னா அடுத்த நிமிஷமே உங்களை இங்கேயிருந்து வெளியேற்ற வேண்டியிருக்கும். அதைவிட இப்போவே உங்களை வேலைக்கு வைக்கவா வேண்டாமான்னு என்னை நீங்க யோசிக்க வைக்கிறீங்க'' கண்களில் உறுதியுடன், அவன் முகத்துக்கு முகம் பார்த்து, அழுத்தமாக அவள் பேச, அசந்துவிட்டான் தமிழ்.

அவள் பேச்சிலிருந்த உண்மை அவனுக்கும் புரிய, தேவாவை கண்டிக்கும் பார்வை பார்த்தான்.

''என்ன மேடம் லவ் பண்ணுறது அவ்வளவு பெரிய தப்பா?'' அசராமல் அடித்தான் தேவா.

''இதென்ன பைத்தியக்காரத்தனம்'' பாரதியின் பேச்சில் உச்ச கோபம்.

''டேய் தேவா! உளர்றத்துக்கு ஒரு அளவில்ல. நீ இப்போவே சென்னைக்கு கிளம்புற'' தமிழும் அழுத்திச் சொன்னான்.

இங்கிலிஷ்லையே பேசுடா அவங்களுக்கும் புரியட்டும், அதன் பிறகு அவர்கள் உரையாடல் முழுவதும் ஆங்கிலத்தில் இருந்தது.

''முடிவா என்னதான் சொல்லுறீங்க... வந்த முதல் நாளே என்ன இது..?'' பாரதிக்கு இதை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை.

அவள் தமிழைப் பார்க்க, ''தேவா என்னடா விளையாட்டு இது? இதுவரை உன்னோட எல்லா செயலுக்கும், உன்னோட விளையாட்டு குணம்தான் காரணம்னு, விட்டுட்டு இருந்தேன். இன்னைக்கு இப்படி'' அவன் குரலில் அப்படி ஒரு வெறுப்பு.

''ஏன்டா தமிழ் எனக்கு காதல் வரக்கூடாதா?'' வேதனையாகக் கேட்டான்.

தேவாவின் குரலிலிருக்கும் வலி புரிந்தாலும், அவனது முந்தையப் பழக்கங்கள் தெரியுமாதலால் அவனால் அதை ஏற்க முடியவில்லை. ''எத்தனாவது காதலடா ராசா'' ஏளனமாகக் கேட்டான்.

''தமிழ், நீயே நல்லா யோசிச்சு சொல்லு, இதுவரைக்கும் எந்த பொண்ணையாவது விரும்புறேன்னு நான் உன்கிட்ட சொல்லி இருக்கேனா?'' அவன் முகத்துக்கு நேராக அசராமல் கேட்டான்.

தமிழ்தான் திணறிவிட்டான் எல்லா பெண்களையும்

சைட் அடிப்பதாகச் சொல்லியிருக்கிறானே தவிர, எந்தப் பெண்ணையும் அவன் விரும்புவதாகச் சொன்னதில்லை. தமிழின் அமைதியே பாரதிக்குப் பதிலை உணர்த்த, அவளும் சிந்தித்தாள்.

இங்கே வந்தது முதல், அவனது பார்வை சுஷ்மியைத் தவிர, யாரையும் எதையும் சந்திக்கவில்லை. தன்னைப் பார்க்கும் பார்வையில் கூட கண்ணியம் இருந்ததைக் கண்டாள்.

''இருந்தாலும் ஒரே நாளில்...'' பாரதிக்கே தான் கேட்பது அபத்தமோ என்று தோன்ற, நிறுத்திவிட்டாள்.

''என்ன மேடம் ஒரே நாள் நான்தான் இங்கே வந்த அடுத்த செகண்டே, அவ மேல காதல் கொண்டுவிட்டேனே பிறகு என்ன நாள் வேண்டிக் கிடக்கு'' சிரிப்பாகச் சொன்னான்.

அவன் பதிலில் பாரதி சிரித்துவிட்டாள். ''ஏண்டா ரோமியோ உன்னை நம்பலாமா?'' தமிழுக்குத்தான் நம்பிக்கை வரவில்லை, அவநம்பிக்கையாகவே அவனைப் பார்த்தான்.

''தமிழ்! ரோமியோன்னு சொல்லாதடா ரொம்ப பழசா இருக்கு. ஸ்டைல்லா ரெமோன்னு சொல்லுடா'' சட்டைக் காலரை தூக்கி விட்டுக்கொண்டு சொன்னான்.

''அதானே எங்கே திருந்திட்டியோன்னு பாத்தேன்'' தமிழ் சொல்ல, அங்கே மெல்லிய சிரிப்பலை.

''தேவா, இருந்தாலும் என்னால் இதை ஒத்துக்க முடியாது. தொழில் வேற, உங்க பெர்சனல் வேற, என் தோழியை நீங்க தொல்லை செய்வது தொடர்ந்தால், நான் உங்க மேல ஆக்ஷன் எடுக்க வேண்டியிருக்கும்'' பாரதி

அவள் கடமையை சரியாகச் செய்தாள்.

''மேடம் ஒரே ஒரு ரிக்வெஸ்ட். நீங்க தாராளமா என்மேல் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால்,, சுஷ்மி என்மேல், அவளே கம்ப்ளைண்ட் கொடுக்கும் பட்சத்தில் மட்டுமே'' அவன் குரலில், அப்படி நடக்கவே செய்யாது என்ற உறுதியான நம்பிக்கை.

தமிழும், பாரதியும் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள். பாரதி ஒரு முடிவுடன், ஃபோனை எடுத்து, சுஷ்மியை வருமாறு அழைக்க, சுஷ்மி, கடுகடுத்த முகத்துடனே உள்ளே வந்தாள்.

அவளது கோபம் புரிந்தாலும், புரியாதவள் போலவே, ''சுஷ்மி தேவாவுக்கு அந்தப் புது ப்ராஜெக்ட் பிளானைக் காட்டுங்க. அப்படியே அதிலிருக்கும் சின்ன சேஞ்சை அவரை பார்க்கச் சொல்லுங்க'' சொல்லி, அவர்களை போகலாம் என்பதுபோல் பார்க்க,

''தேங்க்யூ சோ மச்'' தேவா உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு சுஷ்மியின் பின்னால் சென்றான்.

அவர்கள் சென்றவுடன், ''இவன் சொதப்பாமல் இருக்கணுமே ஆண்டவா'' சத்தமாக கடவுளிடம் வேண்டிக் கொண்டான்.

''பார்டன்'' பாரதி கேட்கவே, ''நத்திங்'' வேகமாக பதில் சொன்னான்.

இவ்வளவு நேரம் தேவா அருகிலிருந்த வரைக்கும், பாரதியிடம் பேச அவனுக்குத் தயக்கம் இருக்கவில்லை. ஆனால், இப்பொழுது எங்கிருந்தோ தயக்கம் வந்து அவனை தொற்றிக் கொண்டது. அவளை நேருக்கு நேர் பார்க்கக் கூடத் தயங்கினான் தமிழ்.

13

பார்க்கும் பார்வையும்
பார்க்கும் பொருளும்
பார்வையின் தெளிவும்
அனைத்தும் புதுமையாய்
எல்லாம் உன்னாலே

தேவா சுஷ்மியின் பின்னால் சென்றுவிட, தமிழ் தனிமையில் பாரதியிடம் சிக்கிக் கொண்டதாக உணர்ந்தான். அவன் முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் எட்டிப் பார்த்தது. எச்சில் கூட்டி விழுங்கிக் கொண்டான்.

நொடியில் அவனது மாறுதல்களை உணர்ந்தாள் பாரதி. அவன்மேல் இரக்கம் சுரந்தது. இதற்குமுன், ஆண்கள் இப்படி வியர்த்து அவள் பார்த்ததே இல்லை எனலாம்.

''தமிழ் ஆர் யு ஓகே. ஏசியோட சில் அதிகமா வைக்கவா'' சாதாரணமாக அவனிடம் உரையாட முயன்றாள்.

''நோ நோ தேங்க்ஸ்'' கர்ச்சிப்பை எடுத்து முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான்.

பாரதியால் அவனது மனநிலையை புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நொடிக்கு அதிகமாக அவனால் அவள் முகத்தை ஏறிட்டு பார்க்க முடியவில்லை. கர்ச்சிப்பால் முகத்தைத் துடைப்பதும், பார்வையை அறைக்குள்ளாக சுழற்றுவதும், சங்கடமாக புன்னகைக்க முயல்வதுமாக அவனது நடவடிக்கை வித்தியாசமாக இருந்தது.

'இப்படி ஒரு ஆண்மகனா?' அவளால் அவள் கண்களையே நம்ப முடியவில்லை.

டம்ளரிலிருந்த தண்ணீரை அவன் பக்கம் நகர்த்தியவள், ''எடுத்துக்கோங்க'' - ஆதரவாக புன்னகைத்தாள்.

டம்ளரை எடுக்க கை நீட்ட, பதட்டத்தில் அது அவன் மேலேயே சரிந்தது. ''ஓ ஐ'ம் சாரி'' சொன்னவன், உருண்டு விழவிருந்த, கண்ணாடி டம்ளரைப் பிடிக்க கை வைத்தான்.

அவனது கை நடுக்கத்தில் அதுவும் கைக்கு சிக்காமல், கீழே விழ, அதை விழும் முன்பாக, பிடித்து நேராக வைத்தாள்.

இவ்வளவு செய்கையிலும், தமிழின் வாய் மட்டும், ''சாரி, சாரி'' என்றே ஜெபித்துக் கொண்டிருந்தது.

அவனது தடுமாற்றமும், மன்னிப்பு வேண்டலும், பாரதியையும், நிலைமையை எப்படி சமாளிக்கவென்று ஒரு நிமிடம் தடுமாற வைத்தாலும், ''தமிழ் ரிலாக்ஸ் கொஞ்சம் அமைதியா இருங்க..'' அவள் அழுத்திச் சொல்ல, சட்டென அமைதியானவன், அவள் முன்பு இப்படி நேர்ந்துவிட்டதே என்று தலை கவிழ்ந்தான்.

என்னவோ மனதைப் பிசையும் உணர்வு. தன் தந்தை அவன் ஷை டைப் என்று சொன்ன பொழுது கூட, இவ்வளவு தடுமாற்றத்தை அவனிடமிருந்து எதிர் பார்க்கவில்லை.

அவனது நிலையைப் பார்த்து பரிதாபமோ, சிரிப்போ வரவில்லை, மாறாக இதயத்தை எதுவோ அழுத்தும் உணர்வு அதையெல்லாம் தூக்கி ஓரமாகப் போட்டுவிட்டு, இப்பொழுது தமிழை நார்மலாக்குவது மட்டுமே முதன்மை என்பது தோன்ற, ''ஏன் தமிழ் என்னைப் பார்த்தால், ராட்சசி

மாதிரி இருக்கா..? இல்லை உங்க ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் ரத்தக் காட்டேரி மாதிரி இருக்கா? எதுக்கு இவ்வளவு பதட்டம்'' கண்களில் சிரிப்புடன் அவள் கேட்க, வேகமாக அவளை நிமிர்ந்துப் பார்த்தான்.

இதற்கு முன்பு கல்லூரியில் படிக்கும்பொழுது, தேவா ஒரு பெண்ணை அறிமுகப்படுத்தும் பொழுது, இதேபோல் தான் நெர்வஸ் ஆக, அதைப் பார்த்த அந்தப் பெண், தன்னை ஒரு நம்பர் குறிப்பிட்டுச் சொல்ல, அங்கிருந்து வேகமாக வெளியேறியிருந்தான்.

அவளும் பெண்தான், இவளும் பெண்தான் ஆனால், பாரதியின் அனுசரணையான கேலிப் பேச்சு, அவளை ஆராய வைத்தது. இதுவரை பெண்களையே நேருக்கு நேராக பார்க்கவே தயங்கியவன், இப்போது பாரதியை, கண்ணெடுக்காமல் பார்த்தான்.

குதிரைவால் போட்டு, காதுக்கு சின்ன ஸ்டட் மட்டுமே, நெற்றி வெறுமையாக இருக்க, கண்களுக்குக் கொஞ்சம் மை, ஒப்பனையே இல்லாமல், ஒரு டிஷர்ட்டில் சாதாரணமாக இருக்கும் அவளை, அங்குலம் அங்குலமாக அலசினான்.

அவனது பார்வை தன்னை ஆராய்வதைப் பார்த்தவள், ''உங்க பயம் போயிடுச்சா?'' கண்களில் குறும்புடன் கேட்க, ''எ என்ன?'' பதட்டமாகக் கேட்டான்.

''இல்ல எனக்குப் பல்லெல்லாம் ரத்தக் காட்டேரிக்கு இருக்குற மாதிரி இருக்கான்னு 'ஆராய்ஞ்சுட்டு இருந்தீங்களே... அதான் உங்க பயம் போய்டுச்சான்னு கேட்டேன்..'' அவள் இயல்பாகச் சொல்ல, சட்டென இறுக்கம் தளர்ந்து அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை.

''அப்படில்லாம் எதுவும் இல்லை'' மேலே எதுவும் சொல்லாமல் அமைதியாகிவிட்டான்.

அவளிடம் அவனது பதில்கள் அனைத்துமே அளந்தே இருந்தன. அவளது பேச்சினால் அவனது வியர்வை உற்பத்தி மட்டுமே நின்றிருந்தது. மற்றபடி, அவனது உடல் மொழியில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

அதன் பிறகு அவனைப் பற்றியும், அவனது முந்தைய கம்பெனிகள் பற்றியும் பேச்சுத் திரும்ப, கொஞ்சம் சாதாரணமாக உரையாடினான். அவனது குடும்பம், வேலை பற்றியும் ஏற்கனவே அவளுக்குத் தெரிந்தது தான், ஆனாலும் அவனிடம் பேசுவது அவளுக்குப் பிடித்திருந்தது.

சிறிதுநேரத்தில் சுஷ்மியை அழைத்தவள், தமிழுக்கு வேலையில் சேர்வதற்கான நியமன ஆணையை அடித்து எடுத்துவரச் சொன்னாள். அப்பொழுதும் அவனை வெளியே ரிசப்சனில் காத்திருக்கச் சொல்லாமல், தன் அறையிலேயே இருக்க வைத்தாள்.

சுஷ்மி பாரதியைப் பார்த்து, தலையாட்டிச் சிரித்தவாறே செல்ல, தமிழின் முதுகுக்குப் பின்னால் நின்ற அவளை, தமிழுக்குத் தெரியாமல் முறைத்தாள் பாரதி.

அடுத்த அரைமணி நேரத்தில், தேவா, தமிழ் இருவருக்குமே ஆர்டர்கள் ரெடியாகி இருக்க, அதை கவனமாக படித்து கையெழுத்திட்டு, தமிழிடம் கையொப்பம் வாங்கக் கொடுத்தாள்.

அவனும் அதை வாசித்துப் பார்த்து, கையொப்பமிட்டான். ''என்னோட ரூம்...?'' தமிழ் கேட்க, சுஷ்மியின் பார்வையும் பாரதியிடம் அதே கேள்வியைக் கேட்டது.

''சுஷ்மி நீ போ'' அவளை அனுப்பியவள், ''நீங்க வாங்க'' அவனை, தன் அறைக்குள்ளேயே இருந்த, மற்றொரு கதவைத் திறந்து அழைத்துச் சென்றாள்.

அந்த அறையில் பிளான் வரைவதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும், தயார் நிலையில் இருப்பதைப் பார்த்தான். இதற்கு முன், யாரோ பயன்படுத்தும் அறை போலிருந்தது.

''இது என்னோட பெர்சனல் ரூம். இங்கே என்னையும், சுஷ்மியையும் தவிர யாருமே இதுவரை வந்ததில்லை. இனிமேல் நீங்க இந்த ரூமையே யூஸ் பண்ணிக்கோங்க.

''முந்தி, எல்லா கட்டிடத்துக்கும் நான்தான் பிளான் போடுவேன். இப்போதான் நீங்க வந்துட்டீங்களே'' அவன் முகத்தையே பார்த்தவாறு சொல்லி நிறுத்தினாள்.

அவள் பார்வையில் இப்பொழுது மாற்றம் வந்திருந்தது. ஒரு ஆண்மகனை, தனது தனிப்பட்ட அறைக்குள் எப்படி அனுமதித்தோம், எந்த நம்பிக்கையில் அவனை அனுமதிக்கிறோம் என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

ஆனால், அவளது கேள்விக்கு அவளாலேயே விடை அறிய முடியவில்லை. தமிழும் அதையேதான் சிந்தித்துக் கொண்டிருந்தான். இது இவளது தனிப்பட்ட அறை என்றால், என்னை எதற்கு இங்கே இருக்கச் சொல்கிறாள்?

இந்த அறைக்குள் வர வேண்டுமென்றால், எம்டியின் அறைக்குள் வந்துதான் வர முடியுமா? இது சரி வருமா..? ஒவ்வொரு முறையும், அவள் கேபினைக் கடந்து இங்கே வருவது சங்கடமாக இருக்குமே என்று தடுமாறினான்.

அவனது தடுமாற்றத்தை அவள் கண்டுக்

கொண்டதாகவே காட்டவில்லை. ''பெஸ்ட் ஆப் லக் தமிழ்! நீங்க உங்க வேலையைத் துவங்கலாம்'' சொன்னவள், அவன் பக்கம் தன் கையை நீட்டினாள்.

தன்பக்கம் நீண்டிருக்கும் அவள் கரங்களை ஒரு நிமிடம் தயக்கமாகப் பார்த்தவன், அதை மறைத்தவாறே, தன் கரங்களை அவள் கரங்களோடு இணைத்தான். ஏதோ மலர்க்கொத்தை இறுகப் பற்றும் உணர்வு சட்டெனத் தன் கரங்களை விடுவித்துக் கொண்டான்.

''தேங்க்யு மேம்'' அவன் சொல்ல, ''கால் மீ பாரதி நோ பார்மாலிட்டீஸ் ஓகே'' சிரித்த முகமாகச் சொல்லிவிட்டு வெளியேறினாள்.

என்னவோ அந்த அறைக்குள் மூச்சடைக்கும் உணர்வு. வேகமாக, அறையில் அழகுக்காக போட்டிருந்த கர்ட்டன்களை விலக்கியவன், ஜன்னல் வழியாக பரபரப்பான மும்பை நகரத் தெருவை வெறித்தான். இங்கே எத்தனை நாள் தங்குவது என்ற பெருமூச்சு எழுந்தது.

தந்தைக்கு அப்பொழுதே அழைக்கவேண்டும் என்ற உந்துதல் எழ, வேகமாக அலைபேசியை எடுத்தான். ஆனால், தந்தை இப்பொழுது பள்ளியில் இருப்பார் என்ற எண்ணம் தோன்றவே, அதை அப்படியே அணைத்து, பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அறையைச் சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். பார்வையில் விழும் எதுவும் அவன் கருத்தில் பதியவில்லை. 'ச்சே நான் ஆம்பளை தானா? என்னமோ பொண்ணு மாதிரி ஃபீல் பண்ணுறேன்' இந்த நினைப்பே கசந்தது.

கண்கள் கூட வேர்க்கும் போலிருந்தது. அந்த நினைவை உதறிவிட்டு, அங்கே பாதியில் நின்றிருந்த

பிளானை முடிக்கும் முனைப்பில் ஈடுபட்டான். நேரம் மதியம் ஒரு மணியைத் தாண்ட, பசி வயிற்றைக் கிள்ளியும், அவள் முகத்தைக் காணவேண்டுமே என்ற தயக்கத்தில் அதை உதறிவிட்டு, ஜன்னல் வழியாக வேடிக்கைப் பார்த்தான்.

அவன் அருகில் நிழலாடுவதை உணர்ந்து திடுக்கிட்டுப் பார்த்தான். ''ஓ சாரி நான் டோரை நாக் செஞ்சேன் பதிலில்லாமல் போகவேதான் உள்ளே வந்தேன்'' அவன் கேள்விப் பார்வையை உணர்ந்து வேகமாகச் சொன்னாள்.

தலையை மெதுவாக அசைத்தான். ''லன்ச்சுக்குப் போகலையா? டைம் ஆச்சே'' தன் மணிக்கட்டில் இருக்கும் வாட்ச்சைப் பார்த்தவாறே கேட்டாள்.

''போகணும்'' அவன் சொன்ன வேளையில், ''டேய் மச்சான்! பொண்ணுங்களையே பிடிக்காதும்ப இப்போ என்னன்னா உன் விதி இப்படி ஆயிடுச்சேடா'' தேவா ஆர்ப்பாட்டமாக வந்து கேலி செய்தான்.

''தேவா நீ எப்படிடா உள்ளே வந்த? இவ்வளவு நேரம் மூச்சடைக்கிற மாதிரி இருந்துது'' தமிழ் தன் மனதை மறையாமல் சொன்னான்.

அவன் அப்படிச் சொல்லவே, பாரதியின் முகம் வாடிவிட்டது. ஆனால், நண்பர்கள் இருவரும், பாரதி என்ற ஒருத்தி அங்கே இருப்பதையே கண்டுகொள்ளாமல், தமிழில் உரையாடினார்கள்.

''என்னடா சொல்லுற?''

''உனக்கு என்னைப் பற்றி தெரியும் இல்லடா பக்கத்து ரூமில் ஒரு பொண்ணு இருக்கான்ற நினைப்பே,

வெடவெடக்க வைக்குதுடா. அதைவிட, அவங்களைத் தாண்டி இந்த ரூமுக்குள்ளே வரணும், போகணும்னு நினைச்சாலே நடுக்கமா இருக்குடா''

''என்னடா லூசு மாதிரி உளர்ற, நான் இப்போ எப்படி உள்ளே வந்தேன்? அதோ அந்தக் கதவு வழியாத்தான். நீ என்ன புதுசா பேசுற.? சென்னையில் தான் உனக்கு பொண்ணுங்கன்னா பயம். நம்ம ஆபீஸ், வீட்டுகிட்ட, நண்பர்கள் எல்லோருக்கும் உன்னைப் பற்றியும் தெரியும். முடிஞ்ச அளவு இங்கேயாவது அதையெல்லாம் மறந்துட்டு, கொஞ்சம் ஃப்ரீயா இருந்துத் தொலையேண்டா. நான் முடிவு பண்ணிட்டேன்டா இனிமேல் நான் உன் கூடவே சுத்த மாட்டேன். நான் இருக்கனாலே தானே நீ இப்படி இருக்க. இனிமேல் நீயே தனியா எல்லாத்தையும் ஃபேஸ் பண்ண பழகிக்கோ. நான் இப்போ கேண்டீன் போறேன். நீ தனியாவே போய்க்கோ'' கோபமாக சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

தமிழ் இருக்கும் மனநிலையில் தேவாவும் இப்படிச் சொல்லிவிட்டுச் செல்லவே, மனதளவில் மிகுந்த தனிமையை உணர்ந்தான்.

''தமிழ்! என்னோட கேன்டீன் வர்றீங்களா?'' இயல்பாகக் கேட்டாள்.

அவன் இருக்கும் மனநிலையில் அவனைத் தனிமையில் விட தயக்கமாக இருந்தது அவளுக்கு. தமிழுக்கும், இப்பொழுது தனிமையில் இருப்பதை விட, ஏதாவது ஒரு பற்றுக்கோல் தேவையாக இருந்தது.

''ம்'' என்றான்.

அவர்கள் கேன்டீனுக்குள் நுழையும் வேளையில்,

அங்கே தேவா மூன்று பெண்கள் சூழ, அவர்களோடு கடலை போட்டவாறு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தமிழும், பாரதியும் ஒரு சேர, சுஷ்மி எங்கே என்று தேடினார்கள்.

தேவா இருந்த டேபிளுக்கு நேர் எதிரில் அவனை முறைத்துப் பார்த்தவாறு, அமர்ந்து சாப்பாட்டை அளைந்து கொண்டிருந்தாள். தமிழை அழைத்துக் கொண்டு நேராக சுஷ்மியின் அருகில் சென்றாள்.

''ரொம்ப அனலடிக்குது'' கேலியாகக் கேட்டவாறு அவளுக்கு எதிரில் அமர்ந்தாள் பாரதி. தமிழ் தயங்கி நிற்க, ''உக்காருங்க தமிழ்'' அவள் அருகிலிருந்த இருக்கையைக் காட்டினான்.

''என் வாயிலருந்து நல்லா வருது உனக்குக் கொழுப்பா'' ஹிந்தியில் பொரிந்தாள்.

''ஏய் நான் என்னடி செஞ்சேன்''

''நீ எதுவுமே செய்யலை அதுதான் பிரச்சனையே. எந்த நம்பிக்கையில் அவரை என்னோட அனுப்புன?'' கோபம் குறையாமலே கேட்டாள்.

''எவரை?'' கண்களில் சிரிப்புடன் கேட்டவளை, சக்தி இருந்திருந்தால் கண்களாலேயே எரித்திருப்பாள்.

''ஹேய் விடு, எதுக்கு இப்போ இவ்வளவு கோபம், உனக்கு விருப்பம் இல்லன்னா அவரை வேற இடத்துக்கு மாத்திடுறேன்''

''அதென்ன எனக்கு விருப்பம், இல்லன்னா நீ என்னதான் சொல்ல வர்ற?''

''அதாவது'' ''எக்ஸ்க்யூஸ் மீ நீங்க என்னதான் பேசுறீங்க'' இருவரின் வழக்காடலைக் கேட்டவன்

பொறுமையிழந்து கேட்டுவிட்டான்.

அதன் பிறகுதான் இருவரும் அவனை வைத்துக் கொண்டே ஹிந்தியில் பேசிக் கொண்டிருந்தது உறைத்தது.

''ஒண்ணும் இல்லை தமிழ்'' அவனிடம் சொன்னவள், ''நான் கிளம்புறேன் பாரதி'' சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அவள் சாப்பிடாமலே செல்வதைப் பார்த்தவன், ''என்ன அவங்க சாப்பிடாமலே கிளம்பிட்டாங்க'' பாரதியிடம் கேட்டான்.

''எல்லாம் உங்க நண்பன் செய்த சதிதான். அவளை நான் பார்த்துக்கறேன். நீங்க என்ன சாப்பிடுறீங்க. இங்கே பிரியாணி நல்லா இருக்கும், நான் வாங்கிட்டு வரவா'' கேட்டவாறு, இருக்கையிலிருந்து எழுந்தாள்.

''இல்ல நீங்க இருங்க, நான் வாங்கிட்டு வாரேன்'' அவள் பதிலை எதிர்பாராமல் எழுந்துச் சென்றான்.

செல்லும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், மர்மமாகப் புன்னகைத்துக் கொண்டாள்.

14

உன்னருகில் நான்
உணரமுடியவில்லை என்னால்
உன்னை மட்டுமே எண்ணுவதால்
உலகம் கூட அழகாய்
எல்லாம் உன்னாலே

பாரதியின் மனம், அந்த நள்ளிரவைக் கடந்த வேளையிலும் தமிழைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அதிலும் கேன்டீனில் தான் அவனிடம் நடந்துகொண்ட முறை, 'ச்சே.., என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பார்' மனம் இதையே எண்ணிக் கொண்டிருந்தது.

மதியம் நடந்த நிகழ்வை மறுபடியும் மனதுக்குள் ஓட்டிப் பார்த்துக் கொண்டாள். மதியம் அவளுக்கும் சேர்த்து அவன் பிரியாணி வாங்கி வர, அதை அமைதியாக அவள் எதிரில் அமர்ந்தவாறு உண்ணத் துவங்கினான் தமிழ்.

சுஷ்மி இருந்த வேளையில் தன் அருகில் அமர்ந்தவன், அவள் இல்லை என்றவுடன், தன் எதிரில் அமர்ந்து, தங்களுக்குள் இருந்த இடைவெளியை அதிகரித்ததை அவளும் உணர்ந்தாள். அதைக் கண்டுக் கொள்ளாமல், அவளும் சாப்பாட்டில் கவனமானாள்.

அவனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த தாலோ என்னவோ, சட்டென அவனுக்குப் புரையேறியது. பிரியாணி கொஞ்சம் காரமாகவும் இருக்கவே, வேகமாக இருமியவனின் கண்கள் கலங்கி, கண்ணீர் வழிந்தது.

ஒரு நிமிடம் திணறிவிட்டான். பாரதி வேகமாக அவன் தலையில் தட்டியவள், ''பார்த்து இந்தாங்க இந்தத் தண்ணியைக் குடிங்க'' அருகிலிருந்த தண்ணீர் டம்ளரை எடுத்து, அவனுக்குப் பருகக் கொடுத்தாள்.

அவள் அருகில் அனைத்தும் தலைகீழாக நடப்பதுபோலிருந்தது அவனுக்கு. ''ஐ'ம் ரியலி சாரி மேம் நான் தெரியாமல்'' திக்கித் திணறி, இருமியவாறே, கர்ச்சீப்பை எடுத்து கண்களில் வழியும் கண்ணீரைத்

துடைத்தவன் தடுமாற்றமாகச் சொன்னான்.

பாரதியின் தொடுகை அவனை சங்கடத்துக் குள்ளாக்கியது. இன்று அவள் கைகளைப் பிடித்து குலுக்கும் பொழுதே, அதன் மென்மையில் மயங்கியவன், இப்பொழுது அவளது இந்தத் தொடுகையும், மனதின் ஓரம் குறுகுறுப்பை ஏற்படுத்தியது. அவன் பாரதியைப் பார்க்க, அவள் சாதாரணமாக இருந்தாள்.

''தமிழ்..., பாரதின்னு சொல்லுங்கன்னு காலையிலேயே சொன்னேனே என்ன இது மேம்ன்னுட்டு இப்போ உங்களை நான் ஏதாவது கேட்டேனா? முதல்ல தண்ணியைக் குடிங்க, மத்ததெல்லாம் பிறகுப் பேசிக்கலாம்..'' இன்னும் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தாள்.

இப்பொழுதுதான் கவனித்தான், தான் அவள் கைகளிலிருந்து டம்ளரை வாங்கவே இல்லை என்பதை. அது கொஞ்சம் சின்ன டம்ளர், அதை அவளது கையைத் தொடாமல் வாங்க முடியாது என்று தோன்றியது.

''எனக்குப் போதும் பாரதி தேங்க்ஸ் அண்ட் சாரி'' தலை குனிந்தவாறே சொன்னான்.

முதல்முறையாக ஒரு பெண்ணின் பெயரை உச்சரிப்பது அவனுக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. மனதுக்குள்ளேயே பல முறை, அவள் பெயரைச் சொல்லி ஒத்திகை பார்த்துக் கொண்டான்.

''தமிழ்'' மிகவும் மெதுவாக அழைத்தாள். அவள் அழைப்பைக் கேட்டு சட்டென நிமிர்ந்து பார்த்தான்.

''இப்போ எதுக்கு இவ்வளவு சாரி சொல்லுறீங்க? என்னை உங்களோட ஃப்ரண்டா நினைச்சுக்கோங்க. நான் பெண் என்பதை மறந்துடுங்க, அதனால் தானே உங்களுக்கு

இவ்வளவு தடுமாற்றமும், பதட்டமும் வருது'' அவன் கண்களைப் பார்த்தவாறே சொன்னாள்.

அவள் பேச்சில் இன்னும் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான். 'அப்படியென்றால், தான் தடுமாறுவதை அவள் கவனிக்கிறாள் அப்படித்தானே' அவள் முன்பு அவமானமாக உணர்ந்தான்.

அங்கிருந்து எழுந்து ஓடிவிடு மனம் கட்டளையிட்டுக் கொண்டே இருக்க, அங்கிருந்து ஒரு இன்ச் கூட நகர முடியாமல், கால்கள் ஒத்துழைக்க மறுத்தது.

முதல்முறையாக, தனக்குத் தாய் இருந்திருந்தால், தான் இப்படியெல்லாம் இருந்திருக்க மாட்டோமோ என்று எண்ணினான். அவனது மௌனம் தாங்க முடியாமல், ''இன்னும் உங்களுக்கு என்ன தயக்கம்?'' கனிவாகக் கேட்டாள்.

''எனக்குப் பொண்ணுங்ககிட்ட பேசத் தெரியாது பாரதி'' சாப்பாட்டை அளைந்தவாறே, தயக்கமாகச் சொன்னான்.

''அது மட்டும் இல்லை, ஒரு பொண்ணை எப்படிப் பார்க்கணும்னு தெரியாது, பழகணும்னு தெரியாது..? எப்படிப் பேசினால் அவங்களுக்குப் பிடிக்கும்னு தெரியாது'' இப்படியாக சொல்லிக் கொண்டே இருந்தான்.

அவன் சொல்லச் சொல்ல, 'உங்களுக்கு எல்லாத்தையும் நான் கற்றுத் தரேன்' என்று சொல்லவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

சொல்லும் அவனுக்குத் தெரியவில்லை, தான் ஏன் இதையெல்லாம் அவளிடம் சொல்கிறோம் என்று. கேட்கும் அவளுக்கும் புரியவில்லை, இவ்வளவு தயங்கும் அவன்

தன்னிடம் மட்டும் எப்படிப் பேசுகிறான் என்றும்.

''எங்க அம்மா இருந்திருந்தால் நான் இப்படி இருந்திருக்க மாட்டேனோ'' அவன் மனதை அழுத்திய கேள்வியை, அவளிடம் கேட்டுவிட்டான்.

அந்தக் கேள்வியில் தவித்துப் போனாள். அவன் கலங்குவது பொறுக்காமல், தன் இடக்கரத்தை எடுத்து, சாப்பாட்டை அளைந்து கொண்டிருந்த அவன் வலக்கரத்தைப் பற்றினாள்.

''இப்போ நீங்க இப்படியெல்லாம் நினைக்க என்ன காரணம்? நான் உங்களோட பேசுறது உங்களுக்குப் பிடிக்கலையா? என்னால்தான் நீங்க நார்மலா இருக்க முடியலன்னு ஃபீல் பண்ணுறீங்களா? என்னைப் பிடிக்கலையா?'' கடைசிக் கேள்வியைக் கேட்டவள் அதிர்ந்தாள்.

''பார்த்தீங்களா? நான் சொன்னப்போ நீங்க நம்பவே இல்லை. எனக்கு பொண்ணுங்ககிட்ட பேசத் தெரியாது பாரதி'' அழும் குரலில் சொன்னான்.

எப்பொழுதும் துடுக்குத் தனமாகவும், மற்றவரைக் கேலியும் கிண்டலும் செய்யும் பாரதி, தமிழிடம் மட்டும் அப்படி நடந்து கொள்ளவே இல்லை. அது ஏனென்று அவளுக்குப் புரியவில்லை.

''நான் ஏற்கனவே சொன்ன மாதிரி என்னை உங்களோட ஃப்ரண்டா மட்டும் நினைச்சுக்கோங்க, நான் பெண் என்பதையே மறந்துடுங்க. இப்போ நீங்க பேசுனதில் எந்தத் தப்பும் இல்லை. முதல்ல என் கண்ணைப் பார்த்துப் பேசுங்க'' அவன் கையை விடாமல், அழுத்தி, அவள் முகத்தைப் பார்க்க வைத்தாள்.

அவன், அவள் கண்களை சந்திக்க முடியாமல் தடுமாறினான்.

மெல்லிதாக சிரித்தவள், ''சரி சாப்பிடுங்க'' என்றாள்.

அவன் அப்பொழுதும் தயங்கவே, 'என்ன' என்பதுபோல் அவனைப் பார்க்க, ''க் கை'' அவன் சொன்னபிறகுதான், அவன் கையையே அழுந்த பற்றிக் கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

''ஓ இப்போ சாப்பிடுங்க'' அவனிடம் இயல்பாகச் சொன்னாலும், தன் செய்கையை நினைத்து தவித்துப் போனாள். என்ன எண்ணத்தில், எந்த நம்பிக்கையில் அவர் கையைப் பிடித்தேன்..? எப்பொழுதும் ஆண்களிடம் இடைவெளி விட்டுப் பழகும் நானா இப்படி நடந்து கொண்டேன்? மனம் கேள்விகளால், அவளைக் குடைந்தது.

தமிழோ, அவள் கைகள் கொடுத்த ஆதரவை, விரும்பினான், ரசித்தான். அவள் கைகளின் மென்மையும், வெம்மையும் அவனுக்குள் இறங்கியதாகத் தோன்றியது. அதை அப்படியே உதறிவிட்டு, அவளைத் தன் தோழனாக எண்ண முயன்றான்.

மனதிலிருந்த இறுக்கம் குறைவது போலிருந்தது. அதன் பிறகு மௌனமாகவே தங்கள் அறைக்குத் திரும்பினார்கள். அறைக்குள் செல்லும் வேளையில், ''தமிழ் நீங்க ஒரு மாதிரி ஃபீல் பண்ணுனீங்கன்னா, வேண்ணா அரைநாள் லீவ் போட்டுக்கோங்களேன்''

''இல்ல வேண்டாம்'' சொல்லிவிட்டு அவன் அறைக்குள் புகுந்து கொண்டான்.

உள்ளே நுழைந்தவன், ''நான்தானா இது?'' தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். இதுவரை எந்தப்

பெண்ணிடமும் பத்து வினாடிகளுக்கு அதிகமாகப் பேசியது கிடையாது. ஆனால், இன்றோ, கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசியிருக்கிறேன். தன்னையே வியந்து கொண்டான்.

அதேநேரம், 'பாரதி, எவ்வளவு நல்ல பொண்ணு இல்ல' அதையும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பாரதியும் தமிழைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தாள். 'அவரது தயக்கம் அவ்வளவு சீக்கிரம் சரியாகாது' சொல்லிக் கொண்டவள், தான் நடந்து கொண்ட முறையையும் சிந்தித்தாள்.

ஒரு மாதமாக தான் கொண்டிருந்த மன உளைச்சல் என்ன? இன்று காலையில் கூட தந்தையிடம் பேசிய பேச்சென்ன... ஆனால், தமிழை நேரில் கண்ட பிறகு அனைத்தும், தலைகீழாக மாறிவிட்டதே.

'நானும் அவரைத் தொடும் அளவு போவேன் என்று நினைக்கவே இல்லையே' எப்படி இது? என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார். பெண்கள் என்றாலே இப்படித்தான் என்று நினைத்திருப்பாரோ? என்னைக் கீழாக எண்ணியிருப்பாரோ?' அப்பொழுது துவங்கிய யோசனை, நள்ளிரவுத் தாண்டியும் தொடர்ந்தது.

இந்த சிந்தையிலே தன்னை மறந்து உறங்கிவிட்டிருந்தாள் பாரதி.

அன்று இரவில் தேவாவின் கையில் சிக்கி, தமிழ் திணறிக் கொண்டிருந்தான்.

''என்னடா மச்சான் என்னை மட்டும் காலையில் ஒரு நாள்ல காதலில் விழுந்துட்டேன்னு கலாய்ச்ச, இப்போ நீ மட்டும் என்ன செஞ்சுட்டு வந்தியாம்? மதியம், ஒரு மணி நேரம் கடலை போட்ட போல. அவ உன் கையைப்

பிடிக்கிறதும், தலையைத் தட்டுறதும் கண்கொள்ளா காட்சிடா அப்படி என்னடா பேசுனீங்க'' அவனைத் துளைத்தெடுத்தான்.

தமிழுக்கு சுத்தமாக எதுவுமே நினைவில்லை. அவன் நினைவில் நின்றதெல்லாம், அவள் தன் தலையைத் தட்டியதும், தன் கையின் மேலிருந்த அவள் கையின் மென்மையும், வெம்மையும் மட்டுமே. இதை எப்படி அவனிடம் சொல்ல முடியும்?

''என்னை விடுடா காலையில் ஒருத்தியை என்னமோ உயிருக்கு உயிராய் விரும்புறேன்னு சொல்லிட்டுப் போன, மதியம் வேற மூணு பொண்ணுங்களோட உக்காந்து இருக்க. என்னடா நடக்குது சுஷ்மி வேற, பாரதிகிட்ட என்னமோ கோபமா பேசிட்டு போனாங்க. ஏண்டா.., நீ திருந்தவே மாட்டியா? அதெப்படிடா ஒரு பொண்ணை காதலிக்கிறேன்னு சொல்லிட்டு, மத்த பொண்ணுங்க கூட, இப்படி வழிஞ்சு, வழிஞ்சு பேசுற எனக்கென்னமோ, உன்கிட்ட இருந்து சுஷ்மியைக் காப்பாத்தணும்னு தோணுதுடா. நாளைக்குக் காலையில் ஆபீஸ் போய், முதல் வேலையா சுஷ்மிகிட்ட உன்னைப் பத்தி போட்டுக் கொடுக்குறேன்'' நிஜமாகவே மிரட்டினான்.

''ஏண்டா ஒருத்தியை லவ் பண்ணினால், மத்த பொண்ணுங்களை சைட் அடிக்கக் கூடாதுன்னு ஏதாவது விதி இருக்கா என்ன? சுஷ்மி கழுத்தில் தாலி கட்டி முடிச்ச பிறகு வேண்ணா, நீ சொன்ன மாதிரி அடக்க ஒடுக்கமா இருக்கேன். இப்போ எல்லாம் என்னால் முடியாது போடா. நீயே ஒரு தொடை நடுங்கி முடிஞ்சால் அவகிட்ட, நாளைக்கு ஒரு நாலு வார்த்தை பேசிக் காட்டுடா

மத்ததெல்லாம் பிறகு பேசிக்கலாம்'' தோளிலிருக்கும் தூசியைத் தட்டுவதுபோல் தட்டிச் சென்றான்.

''இதுக்குன்னே அவகிட்ட பேசுறேன்டா'' தமிழின் குரல் அவனைத் தொடர, அதைக் கண்டுகொள்ளவே இல்லை தேவா.

தேவா சென்ற சிறிது நேரத்தில் தந்தைக்கு அழைத்தான். நலம் விசாரிப்புகளுக்குப் பிறகு, ''அப்பா உங்களுக்குப் பாரதி பொண்ணுன்னு தெரியுமாப்பா?'' தன் சந்தேகத்தைக் கேட்டான்.

''என்னது பாரதி பொண்ணா? வெளியே யார்கிட்டயும் சொல்லிடாதே அடிச்சுடப் போறாங்க. அவருக்கு முண்டாசுக் கவின்னு இன்னொரு பேர் கூட இருக்கு..'' மகன் சொல்ல வருவது புரிந்தும், அவன் கேள்விக்குச் சிக்காமல் நழுவினார்.

தந்தை ஒரு பொழுதும் தன்னிடம் இப்படிப் பேசி விளையாடுபவர் கிடையாது. ஒரு வேளை தந்தைக்கே தெரியாதோ என்ற சந்தேகம் கொண்டவன், அதன் பிறகு பேச்சை மாற்றிவிட்டு, அன்றைய நாள் பற்றி சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

அவன் வைத்த சிறிது நேரத்தில் தேவாவின் அலைபேசி அவனை அழைத்தது. யார் எனப் பார்த்தவன், சுப்ரமணியின் எண்கள் அதில் ஒளிரவே, அதை ஆன் செய்து செவிமடுத்தான்.

''சொல்லுங்கப்பா தமிழ் இங்கேதான் இருக்கான், கொடுக்கவா..?'' சிலவேளை, அவனுக்கு அழைத்து கிடைக்காமல் தனக்கு அழைத்தாரோ என்ற சந்தேகத்தில் கேட்டான்.

''அதெல்லாம் வேண்டாம் அவன்கிட்ட இருக்கானா இல்லை தூரமா இருக்கானா?''

'என்னடா இது?' என நினைத்தாலும், பார்வையைச் சுழற்றியவன், ''இல்லப்பா அனேகமா மொட்டை மாடிக்குப் போயிருப்பான், சொல்லுங்க'' அவர் தன்னிடம் தான் பேச நினைக்கிறார் என்பதால் பவ்யமாகவே பேசினான்.

''பாம்பே எல்லாம் எப்படிடா இருக்கு? இன்னைக்கு முதல் நாள் ஆபீஸ் எப்படிப் போச்சு?'' ஆர்ப்பாட்டமாகக் கேட்டார்.

'இவரென்ன போன் பண்ணி பாம்பே பத்தி எல்லாம் விசாரிக்கிறார்' சந்தேகம் கொண்டவன், ''பாம்பே கொஞ்சம் கும்பலா இருக்கு மொழி புரியலை வரட்டி மாதிரி சப்பாத்தி திங்க வேண்டியிருக்கு மத்தபடி ஒண்ணும் பிரச்சனை இல்லை'' அவன் சொன்னது மொத்தமுமே பிரச்சனைதான்.

''உதவாக்கரை உதவாக்கரை இன்னைக்கு ஆபீஸ்ல என்ன நடந்துது?'' கோபமாகக் கேட்டார்.

''அதுக்குள்ளே போன் பண்ணி போட்டுக் குடுத்துட்டானா..?' ''அவன் சொன்ன மாதிரியெல்லாம் எதுவும் இல்லப்பா நான் சும்மாதான் அந்தப் பொண்ணைக் காதலிக்கிறதாச் சொன்னேன். மத்தபடி நீங்க அந்தப் பொண்ணைப் பார்த்து, உங்களுக்குப் பிடிச்சாதான் மத்ததெல்லாம்'' வேகமாகச் சொன்னான்.

''என்ன பொண்ணைக் காதலிக்கிறியா? அதை அவகிட்டயே சொன்னியா? ஏண்டா அங்கே போய் முழுசா ஒரு நாள் ஆகலை அதுக்கு முன்னாடி என்னடா இதெல்லாம். உன்னைப் போய் அவன் கூட அனுப்பினேனே. தறுதலை, தறுதலை தமிழ், பாரதிகிட்ட பேசினானான்னு கேக்க

வந்தால்.., நீ உன் வேலையைக் காட்டுறியா? முதல்ல அதைச் சொல்லுடா. அங்கே ஏதாவது வம்பு வளத்த உன்னை என்ன செய்வேன்னு தெரியாது. அவங்க எல்லாம் பெரிய ஆளுங்கடா. அங்கே போய் இந்த மாதிரி சில்லறை வேலை எல்லாம் பாத்து, அடி வாங்கிக் கட்டாதே. அதைவிட, அது நாம சம்பந்தம் வைக்கப்போற இடங்குறதை நல்லா மனசில் பதிய வச்சுக்கோ'' அவனை கடித்துக் குதறினார்.

'இந்த வாத்திக்கு இருக்க ஓரவஞ்சனையைப் பாரேன் அவர் பையனுக்கு ஆள் செட் பண்ண பாக்குறார். என் காதலுக்குக் குழிப் பறிக்கிறார் இருக்கட்டும்' மனதுக்குள் பல்லைக் கடித்தவன், ''ஓ நடந்துதே அவன் பாரதி கூட, ஒரு ஒருமணி நேரம் கடலை போட்டான்'' 'இதுதானே உங்களுக்கு வேணும்' பல்லைக் கடித்தவாறே சொன்னான்.

ஆனாலும் அவர் சம்பந்தம் செய்யப்போகும் இடம் என்று சொன்னதில் துணுக்குற்றான். ''அப்பா யாருக்கு சம்பந்தம் என்ன சம்பந்தம்?'' தன் குழப்பத்தை அவரிடம் கேட்டான்.

''அதாண்டா பாரதியைத்தான் அவனுக்குப் பேசி வச்சுருக்கேன். உனக்குத்தான் அவனைப் பற்றி தெரியுமே, அதான் கொஞ்சம் பழகட்டும்னு, அவனை அங்கே அனுப்பி வச்சுருக்கேன். முதல் நாளாச்சே, ஏதாவது விசேஷம் உண்டான்னு தெரிஞ்சுக்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன். இந்த விஷயம் எல்லாம் உனக்குத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதே. எப்படியாவது அவனுக்குச் சொல்லிப் புரியவை'' ஒரு தந்தையின் தவிப்பு அவர் குரலில்.

''ஏம்பா இதை என்கிட்ட முதல்லையே சொல்லியிருந்தால், நான் கொஞ்சம் பார்த்து

நடந்திருப்பேனே. ஏதோ எப்பவும் விளையாடுற மாதிரி விளையாண்டுட்டேன். சரி விடுங்க, இனிமேல் நான் பாத்துக்கறேன். அவன் வர்றான், நான் உங்களுக்கு இங்கே என்ன நிலவரம்னு அப்பப்போ போன் பண்ணுறேன்'' தமிழ் அங்கே வரவே அலைபேசியை அணைத்தான்.

தமிழ் பேசாமல் படுக்கையில் படுத்து உறக்கத்தைத் தொடர்ந்தான். அவனைப் பார்த்துக் கொண்டிருந்த தேவாவுக்குத்தான், தன் நண்பனுக்குப் பாரதி சரியான மேட்ச் என்றாலும், அவனது இயல்பு, அவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே என்ற கவலை எழுந்தது.

15

காதலை நான் சொல்லும்
நொடிகள் அனைத்தும்
நிமிடங்களாய்க் கரைய
எஞ்சியிருப்பது நான் மட்டுமே

அன்றும் சுஷ்மியின் பின்னாலேயே அலைந்து கொண்டிருந்தான் தேவா. ஒரு கட்டத்தில் அவனது தொல்லைப் பொறுக்க முடியாமல், ''இப்போ உங்களுக்கு என்னதான் வேணும்'' இடுப்பில் கை வைத்து, அவனை உறுத்து விழித்தவாறு கேட்டாள்.

''நீதான் வேணும்'' கொஞ்சம் கூடத் தயங்காமல் சொன்னான் தேவா.

''என்னது?'' அதிர்ந்து கேட்டாள்.

''ஏய் ச்சீ எல்லாத்தையும் ஏன் இப்படித் தப்பாவே பார்க்குற. நீ மீன்ஸ் உன் மனசு, காதல், அன்பு, எல்லாம்தான்'' அவள் இங்கேயும், அங்கேயும் நடக்க, இன்று எப்படியும் அவளிடமிருந்து 'ஐ லவ் யு' என்ற வார்த்தையைப் பிடுங்கியே விடுவது என்ற முடிவுடன், அவள் பின்னால் அலைந்தான்.

''தேவா இது ரொம்ப ஓவர்'' நேரம் செல்லச் செல்ல அவள் கோபம், அதன் பலத்தை இழப்பது போலிருந்தது அவளுக்கு.

''எது ஓவர் நீ செய்யிறதுதான் ஓவர். நானும் பதினஞ்சு நாளா உன் பின்னாடி சுத்துறேன், நீ என்னை கண்டுக்கவே மாட்டேன்குறே. இப்போ நீ உன் காதலை சொல்லலன்னா நஷ்டம் உனக்குத்தான்'' அலட்டிக் கொல்லாமல் சொன்னான்.

''நீங்க இங்கே வந்தே பதினஞ்சு நாள் தான் ஆகுது. அதுக்குள்ளே என்ன இது?''

''நான் வந்த அன்னைக்கே உன்கிட்ட காதலை சொல்லிட்டேன். இந்தப் பதினஞ்சுநாள் டைம்கூட உனக்கு யோசிக்கக் கொடுத்ததுதான். இதுக்குமேல எனக்கு டைம் இல்லை'' வேகமாகச் சொன்னான்.

அவர்கள் பேசியவாறே, பைல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஒதுக்குப்புறமான ஒரு சிறிய அறைக்கு வந்து விட்டிருந்தார்கள்.

''பதினஞ்சு நாள் டைம், எனக்கு யோசிக்கக் கொடுத்தீங்களா? இது எப்போ? என்கிட்ட காதலைச் சொன்ன அன்னைக்கு மதியம்தான், கேன்டீன்ல, மத்த மூணு

பேரோட உக்காந்து கடலை போட்டுட்டு இருந்தீங்க. அப்போ அவங்களுக்கு, நாளையிலிருந்து டைம் ஒதுக்கி இருக்கீங்களா? இவ்வளவு அவசரமா முடிவு தெரிஞ்சே ஆகணும்னு நிக்கிறீங்க'' கோபமாகச் சொன்னாள்.

''ம்ம் பார்த்தியா நீயே சொல்லிட்ட, நான் கடலை போட்டுட்டு இருந்தேன்னு. காதலையா சொல்லிட்டு இருந்தேன்''

''யாருக்குத் தெரியும்?'' அவள் நொடித்துக் கொண்டாள்.

''இப்படி அபாண்டமா பேசக்கூடாது. நான் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மாதிரி'' அவள் முறைத்துப் பார்க்கவே, ''சரி கிருஷ்ணன் மாதிரி எத்தனைப் பொண்ணுங்களோட பழகினாலும், ஸ்டெடியா இருப்பேன்'' அவன் சொல்லவே, அவனை நெருங்கி, அவன் தலையிலேயே வேகமாகக் குட்டினாள்.

''பெரிய கிருஷ்ண பரமாத்மா எனக்கு ராமன் தான் வேணும். கிருஷ்ணன் வேண்டாம்'' அழுத்தமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேற முயன்றாள்.

வெளியேற முயன்ற அவளை இடையில் கைகொடுத்துத் தடுத்து, தன் பக்கமாக இறுக்கினான்.

''தேவா என்ன இது? விடுங்க முதல்ல. இல்லனா இப்போ சத்தம் போட்டு எல்லாரையும் கூப்பிடுவேன்'' அவனை மிரட்டினாள்.

''உன் வாயை நான் அடைக்கவே இல்லையே தாராளமா கத்து'' அவளை சுவர்பக்கம் சாய்த்து, தானும் அவளை நெருங்கி நின்றான். சூடான அவன் மூச்சுக் காற்று, அவள் கன்னத்தைச் சுட்டுக் கொண்டிருந்தது.

''ப்ளீஸ் தேவா! கொஞ்சம் தள்ளி நில்லுங்க. இதென்ன புதுசா இவ்வளவு நாள் ஒழுங்கா இருந்தீங்க இப்போ என்ன? யாராவது வந்துட்டா வம்பு'' தவிப்பாகச் சொன்னாள்.

''ஏன், நம்மளைப் பத்தி இங்கே யாருக்கும் எதுவுமே தெரியாதா என்ன? அது மட்டும் இல்லை, இவ்வளவு நாள் ஒழுங்கா இருந்தது போதும்னு முடிவு பண்ணிட்டேன்'' ஒற்றைப் புருவம் உயர்த்தி அவன் கேட்க, கீழுதட்டை கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

அவள் மௌனமாக இருக்கவே, ''சொல்லு சுஷ்மி'' அவளைச் சீண்டினான்.

''எல்லாம் நீங்க செய்து வச்ச வேலை தானே'' சொன்னவளின் குரல் உள்ளே போய்விட, சிந்தை முழுவதும் கடந்த பதினைந்து நாட்களில், தேவாவின் அதிரடியில் கழிந்ததைச் சுற்றி வந்தது.

முதல் நாள், சுஷ்மியின் பின்னால் சென்றவன், அவள் காட்டிய அறைக்குள் நுழைந்தான். ஏற்கனவே பாரதி, வேலை இதுதான் என்று சொல்லியிருந்தாலும், சுஷ்மியும் ஒரு முறை அவனுக்கு விளக்கினாள்.

ஆனால், தேவாவின் பார்வையும், கவனமும் அவள் சொல்லும் வேலையில் இல்லாமல், அவளிடமே நிலைத்திருந்தது. அதுவும் இமைக்க கூடச் செய்யாமல், ஒரு ஆழ்ந்த பார்வையுடன், கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு, தலை சாய்த்து அவன் நின்ற விதமே, சுஷ்மியைத் தடுமாறச் செய்தது.

ஓரவிழிப் பார்வையாக ஒருவன் நம்மைப் பார்த்தாலே தவித்துப் போகும் நாம், ஆழ்ந்த பார்வையுடன் தன்னையே பார்க்கும் அவன் பார்வையில், அவள் மேனியில் மெல்லிய

பதட்டம் எட்டிப் பார்த்தது.

அங்கே இருந்தால் இன்னும் நிலைமை மோசமாகும் என்பதை உணர்ந்தவள், ''நீங்க உங்க வேலையைப் பாருங்க. ஹேவ் எ நைஸ் டே'' சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

''சுஷ்மி'' அவனது ஆழ்ந்த குரல் அவளைத் தேக்கியது. 'என்ன' என்பதுபோல் திரும்பிப் பார்க்க, ''ஐ லவ் யு'' அவன் சொன்ன விதமா, அவன் பார்வையா, இல்லை அவன் குரலிலிருந்த உறுதியா? ஏதோ ஒன்று அவளை, எதுவும் மறுத்து சொல்ல முடியாமல் தடுத்தது.

அங்கிருந்து வேகமாக வந்தவள், தன் இருக்கையில் அமர்ந்த பிறகு கூட, அவனால் ஏற்பட்ட படபடப்பு அடங்க நேரமானது. தண்ணீரை எடுத்துக் குடித்து, தன்னை நிதானத்துக்குக் கொண்டுவர முயன்றாள்.

'அவன் காதலைச் சொன்ன அந்த நிமிடம், தான் ஏன் அவனிடம் மறுத்துச் சொல்லாமல் வந்தோம்?' இந்தக் கேள்வியே அவளைத் துளைக்க, எப்படியும் அவனை நாக்கைப் பிடுங்கும் அளவு, நன்றாக கேள்வி கேட்கவேண்டும் என்று தோன்றியது.

ஆனால், இப்பொழுதே அவனைச் சந்திக்கும் மனதிடம் அவளிடம் இல்லை. மதியம் எப்படியும் தன்னிடம் பேச வருவான் என்று அவள் எதிர்பார்க்க, அதற்கு மாறாக, தனக்கு முன்பே கேன்டீன் சென்று, அங்கிருந்த பெண்களுடன் பேசிச் சிரிப்பதைப் பார்த்தாள்.

அந்தக் காட்சியைப் பார்த்தவளின் உடலிலிருந்த மொத்த ரத்தமும் கண்களுக்குப் பாய, அவனை உறுத்து விழித்தாள். அவனோ நிதானமாக அவளைப் பார்த்தவன்,

யாரும் அறியாதவண்ணம், கண்ணடித்தான்.

அவனது இந்தச் செய்கையும் அவளுக்குக் கோபத்தையே அளித்தது. இருக்கும் மனநிலையில், பசி கூட பறந்து விட்டதாகத் தோன்றியது. வீம்புக்காகவே ஏதோ ஒரு உணவைக் கைகாட்டி வாங்கிக் கொண்டு அவனுக்கு எதிர் டேபிளில் அமர்ந்தவள், சாப்பாட்டை அளைந்தவாறே அவனைப் பார்த்தாள்.

அவனும் அவனது அதே ஆழ்ந்த பார்வையுடன், அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். 'அதான் எதிர்ல கோபியர் கூட்டம் உக்காந்து இருக்காங்களே. அவங்களை விட்டுட்டு, எதுக்கு இங்கேயே வெறிச்சு, வெறிச்சுப் பார்க்குறான். லூசுப்பய' மனதுக்குள் அவனை வசைமாரிப் பொழிந்தாள்.

அந்தநேரம்தான் அங்கே வந்தார்கள் தமிழும், பாரதியும். அவன்மேல் இருந்த கோபம் அனைத்தும், பாரதியின்மேல் பாய, அவளைத் திட்டிவிட்டு, வாங்கிய சாப்பாட்டை ஒரு வாய் கூட சாப்பிடாமல் எழுந்துச் சென்றுவிட்டாள்.

அவள் சென்ற அடுத்த இரண்டே நிமிடங்களில் அவள் முன்பு நின்றவன், ஒரு சிறிய பார்சலை அவளிடம் கொடுத்துவிட்டு, ''என்மேலிருக்கும் கோபத்தை, சாப்பாட்டு மேல ஏன் காட்டுற..? முதல்ல சாப்பிடு'' சொல்லிவிட்டு அவள் டேபிளில் வைத்துவிட்டு, அவன் அறைக்குச் சென்றான்.

'இவன் என்ன பிள்ளையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுறானா..?' ஆத்திரம் தலைக்கேற, அவன் அறைக்குச் சென்றவள், அவன் வங்கிக் கொடுத்த

சாப்பாட்டை, அவனது டேபிளிலேயே கொண்டு வைத்தாள்.

''உங்க திருவிளையாடல் எல்லாம் வேற யார்ட்டயாவது வச்சுக்கோங்க என்கிட்ட வச்சுகிட்டீங்க நான் மனுஷியாவே இருக்க மாட்டேன். உங்க மனசில் நீங்க என்னதான் நினைச்சுட்டு இருக்கீங்க'' இதைக் கேட்கும் முன்பே, மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது.

''உன்னைத்தான் நினைச்சுட்டு இருக்கேன்'' அவன் நிதானமாகச் சொல்ல, ''என்ன?'' திகைத்தாள் அவள்.

''உங்க மனசில என்ன நினைச்சுட்டு இருக்கீங்கன்னு கேட்டல்ல, அதான் உன்னைத்தான் நினைச்சுட்டு இருக்கேன்னு சொன்னேன்'' அழுத்தமாகச் சொன்னான்.

''அதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பார்த்தேனே உங்க நினைப்பெல்லாம் எங்கே இருந்துதுன்னு'' ஏளனமாகச் சொன்னாள்.

''என் நினைப்பும், கண்ணும் உன் மேலதான் இருந்துது. அப்படி இல்லாமல் இருந்திருந்தால், நீ சாப்பிடாமல் எழுந்து வந்தது எனக்கு எப்படித் தெரியும்? அதெல்லாம் சரி'' கொஞ்சம் இடைவெளி விட்டவன், ''என்ன பொறாமையா?'' ஒரு மாதிரி குரலில் அவன் கேட்க, திகைத்துவிட்டாள் சுஷ்மி.

'அதானே அவன் யாரோட பேசினால் எனக்கென்ன? நான் என் வேலையைப் பார்த்துட்டு பேசாமல் இருக்காமல், எதுக்கு அங்கே இருந்து எழுந்து வந்தேன். அப்படின்னா' இந்தக் கேள்வி அவளுக்கு உணர்த்திய செய்தி ஒன்றுதான்.

தன்தெளிந்த மனதைக் கல்லெறிந்து கலைத்து விட்டான் இப்படியொரு எண்ணம் தோன்றியவுடனே, மளுக்கென ஒரு சொட்டுக் கண்ணீர் அவள்

கண்களிலிருந்து வழிந்தது. அதைப் பார்த்தவன், வேகமாக அவள் அருகில் நெருங்கினான்.

இதுவரை எவ்வளவோ பெண்களிடம் சர்வ சாதாரணமாக விளையாடி இருக்கிறான். அவர்களிடம் இப்படிச் சொன்னால், அவனை திரும்பித் திட்டவோ, இல்லையென்றால், அதைவிடக் கேலியாகப் பேசுவதையோதான் அவன் கேட்டிருக்கிறான்.

முதல்முறையாகக் காணும், ஒரு பெண்ணின் கண்ணீர், அவனது விளையாட்டுத்தனம் அனைத்தையும், தூக்கிப் போட வைத்தது.

அவன் முன்பு நிற்க முடியாமல் அவள் திரும்பிச் செல்ல முயல, அவள் முன்பு வந்து நின்று, அவளைச் செல்ல விடாமல் தடுத்தான்.

அவனைச் சுற்றிக் கொண்டு செல்ல முயன்றவளை, அங்கும் சென்று தடுத்தான். ''இப்போ உங்களுக்கு என்னதான் வேணும் என் மனசைக் கலைக்குறதுதான் உங்க எண்ணம்ன்னா அது வெற்றிகரமா முடிஞ்சுடுச்சு போதுமா?'' கிட்டத்தட்ட கத்தினாள்.

அவளால் தன்னையே சமாதானம் செய்ய முடியவில்லை. காலையில் பார்த்த ஒருவனிடம், தன்னைச் சீண்டும் ஒருவனிடம், தன் மனம் செல்வதை தாங்கவே முடியவில்லை. அவனை அடித்து துவம்சம் செய்து, 'இங்கே இருந்து போய்டுடா' என கத்தவேண்டும் போல் எழுந்த ஆத்திரத்தை அடக்கினாள்.

அவள் எண்ணம் புரிந்தவன் போல், ''என்னை அடிக்கணும்னு உனக்குத் தோணினால், தாராளமா அடி. ஆனால், இப்படி அழ மட்டும் செய்யாதே, என்னால்

தாங்கவே முடியலை. நீ நம்புறியோ இல்லையோ நான் உன்னை மனமார நேசிக்கிறேன்'' காலையில் சொன்ன அதேகுரலில் சொல்ல, சுஷ்மிதான் தோல்வியடைந்து திரும்பினாள்.

அத்தோடு முடிந்துவிடவில்லை அவனது படையெடுப்பு. மாலை நான்கு மணிக்குச் சரியாக டீயும், சமோசாவும் வாங்கி வந்து அவளிடம் கொடுத்தவன், ''நான் இங்கேயே நிற்கிறேன், உனக்கு டீயை என் மூஞ்சியில் ஊத்தணும்னு தோணினால் தாராளமா ஊத்தலாம்'' அசையாமல் நின்று, கண்களில் சிரிப்புடன், அவன் சொல்ல, திருதிருத்தாள் சுஷ்மி.

அவள் விழிப்பதைப் பார்த்தவன், ''ஹப்பா, தப்பிச்சேன் எங்கே எடுத்து ஊத்திடுவியோன்னு பயந்துட்டேதான் எடுத்துட்டு வந்தேன்'' அவன் குறும்பாகச் சொல்ல, அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை.

அந்தநேரம், அவர்களைத் தாண்டி உடன் பணிபுரியும், ஷீலா, நேத்ரா, சுஜி செல்ல, ''ஹாய் எல்லோரும் கேன்டீன்க்கு டீ சாப்பிட போறீங்களா? நானும் உங்களோட ஜாயின் பண்ணிக்கவா?'' சுஷ்மியிடம் பார்வையைப் பதித்தவாறே அவன் கேட்டான்.

அவன் விளையாட்டுப் புரிய, கண்களை உருட்டி அவனை மிரட்டினாள். அவள் அப்படிச் செய்யவே, ''சாரி நீங்க ஓகே சொன்னாலும் என்னால் வர முடியாது. என்னோட லவ்வர் கோச்சுப்பா'' சுஷ்மியைப் பார்த்தவாறே அவன் சொல்ல, ''ஓஹோ கதை அப்படிப் போகுதா? நடத்துங்க நடத்துங்க'' அவர்கள் நமுட்டுச் சிரிப்புடன் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

''தேவா என்ன விளையாட்டு இது?'' வந்த முதல் நாளே, இப்படி நடந்து கொள்கிறானே என்று கலங்கினாள்.

''நான் உன்னைக் காதலிக்கிறது உனக்கு விளையாட்டா இருக்கா? உன்கிட்ட ஒரு உண்மையைச் சொல்லவா? நான் முதல்முறையா ஒரு விஷயத்தில் சீரியஸா இருக்கேன்னா.., அது உன் விஷயத்தில் மட்டும் தான்'' குரலில் கொஞ்சம் கூட விளையாட்டுத் தனமில்லை.

எப்பொழுதும் சீண்டும் விதமாகவே நடந்து கொள்ளும் தேவா, தன்னிடம் காதலைச் சொல்லும் கணங்களில் மட்டும் சீரியசாக மாறுவதை அவளும் உணரவே செய்தாள். அவனது இந்தச் செய்கையே அவளை அமைதியாக இருக்க வைத்தது.

அடுத்த ஒரு மணி நேரத்தில், அலுவலகத்திலிருந்த அனைவருக்குமே, தண்டோரா இல்லாத குறையாக, அவர்கள் காதலைப் பறை சாற்றியது.

ஏற்கனவே சுஷ்மியிடம் நெருங்க முயன்ற ஒன்றிரண்டுபேர் கூட தேவாவின்மேல் பொறாமையில் வெந்தார்கள். தாங்கள் கடந்த இரண்டு வருடமாக முயன்று வெல்ல முடியாத சுஷ்மியை, வந்த இரண்டே மணி நேரங்களில், காதலில் விழ வைத்தால், அவர்களும்தான் என்ன செய்வார்கள்.

முதல் நாளே துவங்கிய அதிரடி, தொடர்ந்த நாட்களில், அதிகரித்தது என்றே சொல்லவேண்டும். தேவாவும் விக்கிரமாதித்தனாக, சுஷ்மியின் மனதைத் திறக்கவைக்க, எவ்வளவோ முயன்றும், அவளிடமிருந்து 'ஐ லவ் யு' என்ற வார்த்தையை மட்டும் அவனால் வாங்க முடியவில்லை.

அதேநேரம் அவன்மேல் சாயத் துவங்கிய அவள் மனமும் அதற்கு இசைந்தது. அவனது அதிரடிகளில் மயங்கினாலும், காதலைச் சொல்ல மட்டும் தயங்கினாள் சுஷ்மி.

அதற்கும் அவனது குறும்புத்தனம் தான் காரணம். ஏற்கனவே இன்று முடிவு சொல்லியே ஆகவேண்டும் என்று சொன்னவன், இதோ இன்று அவளைப் பிடித்துவிட்டான்.

யோசனையில் இருந்தவளை, "என்ன அதுக்குள்ளே கனவுலகத்துக்குப் போய்ட்ட ஒரு ஐ லவ் யு சொல்ல இவ்வளவு யோசிக்கிற" அவள் தோளைப் பிடித்து உலுக்கினான்.

"உங்களுக்கு அந்த வார்த்தை சின்னதாத் தெரியுதா? எனக்கு இன்னும் யோசிக்க டைம் வேணும்" அவன் முகம் பார்க்காமல் சொன்னாள்.

"என்னது இன்னும் யோசிக்கப் போறியா? அதெல்லாம் முடியாது ஏற்கனவே அப்பா 'தமிழ் விஷயம் என்ன ஆச்சு'ன்னு என்னை துளைச்சு எடுக்குறார். இதுக்குமேல என்கிட்ட டைம் இல்லை" பிடிவாதமாக அவளை நெருக்கினான்.

சுஷ்மிக்கும் அவனைப் பிடிக்கும், அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், "உங்களை நம்பறதுக்குப் பயம்மா இருக்கு தேவா இப்போ என்கிட்ட காதலைச் சொல்லிட்டு, அடுத்த நிமிஷமே, ஷீலர்கிட்ட போய் பேசிட்டு இருப்பீங்க. அதைப் பார்க்கும் எனக்கு, நீங்க உண்மையாவே என்னைத்தான் நேசிக்கிறீங்களா இல்லை அவகிட்ட பழகுற மாதிரிதான் என்கிட்டயும் பொழுதுபோக்கா பழகுறீங்களான்னு மனசு கிடந்தது

அடிச்சுக்கும்'' அவள் மனதில் நினைப்பதை அப்படியே கொட்டினாள்.

''வாழ்க்கையில் கொஞ்சமாவது, மனுஷங்க மேல நம்பிக்கை வைக்கணும். இப்படி நம்பிக்கை இல்லாமல் பேசினால் நானும் என்னதான் செய்யட்டும். உனக்கு நம்பிக்கை வர வைக்க என்ன செய்யட்டும்..? அதுக்கு ஒரே வழிதான் இருக்கு'' சொன்னவன், தன் பேன்ட் பாக்கெட்டிலிருந்து, நிதானமாக ஒரு திருமாங்கல்யத்தை வெளியே எடுத்தான்.

அதைத் திகைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் சுஷ்மி.

''இந்தத் தாலியை நான் உன் கழுத்தில் கட்டுறேன். அப்போவாவது உனக்கு என்மேல் நம்பிக்கை வருமில்ல'' சொன்னவனின் கரங்கள், தாலியோடு அவள் கழுத்தை நெருங்கியது.

16

என் காதலியாய்
என் அன்னையாய்
என்தோழியாய்
என் சகோதரியாய்
இன்னும் எத்தனை
பரிமாணம் உன்னுள்

கையில் தாலியுடன், நிதான நடையுடன் தன்னை நெருங்கும் தேவாவை, உச்ச அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சுஷ்மி. இதயம் துடிக்கும் துடிப்பில், எங்கே அது நெஞ்சுக்கூட்டையும் கிழித்துக் கொண்டு வெளியே வந்து விழுந்து விடுமோ என்று அஞ்சினாள்.

''தே..வா விளையாடாதீங்க'' தன் தவிப்பை மறைத்தவாறு, அவனை தடுக்க முயன்றாள்.

''ம்ஹூம் நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன் நான் விளையாடாத ஒரே விஷயம் நீ மட்டும் தான்'' நிதானமாக அவளை நெருங்கினான்.

''தேவா நாம பேசலாம்...''

''பேசறத்துக்கு எதுவுமே இல்லை. நான் முடிவே பண்ணிட்டேன்'' அவன் இறங்கி வருவதாக இல்லை.

''சரி சரி இப்போ நான் என்ன செய்யணும்?'' அவனிடமே கேட்டாள்.

''எனக்குத் தெரியாது.''

சுஷ்மியின் மூளை வேகமாக சிந்தித்தது. தேவாவின் இந்தச் செய்கையை எப்படியாவது தடுத்தே ஆகவேண்டும். அந்த இக்கட்டான சூழலில் அவனிடம் காதலைச் சொல்வதைத் தவிர வேறு வழி அவளுக்கும் இருக்க வில்லை.

''தேவா! ஐ லவ் யு1 ஐ லவ் யு தேவா! தயவுசெய்து இப்படி மட்டும் செஞ்சுடாதீங்க'' அந்த இக்கட்டில் அவள் மூளை வேலை நிறுத்தம் செய்திருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

அவள் காதலைச் சொல்லவே, கையிலிருந்த

தாலியைச் சுருட்டி, மறுபடியும் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டான்.

''ம் இது நல்ல பிள்ளைக்கு அழகு. இப்போ நீ காதலை சொல்லிட்டாலும் எனக்கு அதை உறுதி படுத்திக்கணும் இல்ல'' கண்களில் ஒருவித ஒளியுடன் அவன் சொல்ல,

''அதுக்கு?'' கண்களில் அதிர்வுடன் அவள் கேட்க, அவன் வேகமாக தன்னை நெருங்குவதிலிருந்தே, ஏதோ விபரீதமாக நடக்கப் போகிறது என்பதை அவள் உணர்ந்து, அங்கிருந்துச் செல்ல முயல்கையில், நொடியில் அவளைப் பிடித்து அணைத்தவன், அவள் திமிறி விடுபடும் முன், தன் முரட்டு இதழ்களை, அவள் பூவிதழில் பதித்தான்.

கண்கள் தெரித்துவிடும் போல் விழித்தவள், அவனைத் தன்னிடமிருந்து தள்ளிவிடப் போராடினாள். ஆனால், அவளது எதிர்ப்புகள் அனைத்தையும் சுலபமாக சமாளித்தவன், அவள் இதழ்களில் தன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தான்.

ஒரு கட்டத்துக்குமேல் அவளால் தன் எதிர்ப்பைக் காட்ட முடியவில்லை. கண்கள் தானாக மூடிக் கொள்ள, அவனது ஆக்கிரமிப்பில், அவள் செல்களில் ஆயிரம்வாட் மின்சாரம் பாய்வதுபோல் உணர்ந்தாள்.

இறுதியாக இருவரின் நுரையீரல்களும் மூச்சுக் காற்றுக்கு ஏங்க, மனமே இல்லாமல், அவளிடமிருந்து தன் இதழ்களைப் பிரித்தான். தடுமாறிய அவளை தன் நெஞ்சோடு சேர்த்து, அணைத்துக் கொண்டான். முத்தத்தின் சுகத்தில் லயித்திருந்தவன், சட்டையில் ஈரம் படிவத்தை உணர்ந்து, வேகமாக அவளை விலக்கிப் பார்த்தான்.

சுஷ்மியின் விழிகள் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருந்தன. அவனது குறும்புத்தனம் தலை தூக்க, ''ஏன் சுஷ்மி நான் தந்த முத்தம் அவ்வளவு மோசமாவா இருந்துது இப்படி அழுவுற? வேண்ணா ப்ரெஷ்ஷா முயற்சி பண்ணவா?'' அவளைச் சீண்டினான்.

அவன் பேச்சைக் கேட்டவள், அவனை வேகமாகத் தள்ளிவிட்டாள். அத்தோடு நில்லாமல், கை விரல்கள் அனைத்தையும் மடக்கிக் கொண்டு, அவன் நெஞ்சிலும், தோளிலும் சரமாரியாக குத்தினாள்.

''ஏண்டா இப்படிப் பண்ணுன? உனக்கு எல்லாமே விளையாட்டுத்தானா? என்னோட மனசை புரிஞ்சுக்கவே மாட்டியா?'' இன்னும் அவனை அடித்தாள்.

''உன் மனசை புரிஞ்சுகிட்டதால் தான், இப்படி நடந்துகிட்டன். உனக்கும் என்னைப் பிடிக்கும்னு எனக்குத் தெரியும். ஆனால், நீதான் எதையோ மனசுல போட்டு குழப்பிகிட்டு, என் காதலை ஏத்துக்கவே இல்லை. அதே மாதிரி உன் மனசையும் சொல்லலை. அதான் இப்படி ஒரு அதிரடி வைத்தியம்'' அவள் கைகள் இரண்டையும் சேர்த்துப் பிடித்தவன், அவளை அடிக்க விடாமல் தடுத்தவாறு சொன்னான்.

''நீங்கதான் சரியான ப்ளே பாய் ஆச்சே உங்களை எல்லாம் எப்படி நம்புறது? இனிமேல் எவகிட்டயாவது வழியிறதைப் பாத்தேன் சொல்லமாட்டேன் செய்வேன்'' அவன் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தவாறு சொன்னாள்.

''இது ரொம்ப கஷ்டமாச்சே'' அலறினான் அவன்.

''எது?'' கோபமாகக் கேட்டாள்.

''சைட் அடிக்காமல் இருக்குறது ?'' அவன் சீரியசாகச் சொல்ல, அவனை ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டு அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் பின்னால் வேகமாக வந்தவன், ''சாயங்காலம் உன்னைப் பார்க்குல சந்திக்கிறேன்'' எதுவும் நடவாதது போல், கண்ணடித்துச் சொல்லிவிட்டுச் சென்றான்.

செல்லும் அவனையே புரியாமல் பார்த்தவள், 'மவனே உன்னை சாயங்காலம் கவனிக்கிறேன்டா' மனதுக்குள் கறுவியவள், அன்றைய வேலையைப் பார்க்கத் துவங்கினாள்.

இங்கே வீடே அல்லோகலப் பட்டுக்கொண்டு இருந்தது. சுதா கோபமாக ஒரு ஸோபாவில் அமர்ந்திருக்க, அவர் அருகில் சிவம் அமர்ந்திருந்தார். அவர்களுக்கு எதிரிலிருந்த சோபாவில், பாரதியும், ஜகதீஷும் அமர்ந்திருந்தார்கள்.

''இப்போ முடிவா உங்க பொண்ணு என்னதான் சொல்லுறான்னு கேட்டுச் சொல்லுங்க'' நூறாவது முறையாக கேட்டதையே திரும்பக் கேட்டார் சுதா.

அதை நமுட்டுச் சிரிப்புடன் பாரதி பார்த்துக் கொண்டிருக்க, சிவமும், ஜகதீஷும், தாயை எப்படிச் சமாதானம் செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

''சுதா நான் என்ன...''

''நீங்க எதுவுமே சொல்ல வேண்டாம். உங்க பொண்ணு என்ன முடிவு செஞ்சுருக்கான்னு மட்டும் கேட்டுச் சொல்லுங்க'' அவரை பேசக் கூட விடாமல், கடுப்படித்தார்.

மனைவியிடம் எதுவும் செல்லுபடியாகாமல், ''ஏம்மா பாரதி, நீயாவது நான் சொல்வதைக் கொஞ்சம் கேளேம்மா..'' கெஞ்சினார்.

''அவகிட்ட முடிவைக் கேளுங்கன்னா என்ன கொஞ்சிக்கிட்டு இருக்கீங்க'' அதற்கும் சாடினார்.

முடியலை என்பதுபோல் மகனைப் பார்க்க, ஜகதீஷ் அப்பாவைப் பாவமாகப் பார்த்தான்.

''பாரதி! நீ தமிழைப் பத்தி என்னதான் நினைக்கிறன்னு கொஞ்சம் சொல்லிடேன்'' ஜகதீஷ் பேச்சைத் துவங்கினான்.

''அவரைப் பத்தி நான் என்னடா நினைக்கிறது?'' நிலைமை தெரியாமல் விளையாடினாள் பாரதி.

''என்னைக் கொலைகாரியா மாத்தவேண்டாம்னு அவகிட்ட சொல்லி வைங்க'' மகள்மேல் இருக்கும் கோபத்தைக் கணவனிடம் காட்டினார்.

''அம்மா! நீங்க கொஞ்சம் பேசாமல் இருங்களேன். இப்படிக் கத்தி, கத்தியே பிபியை ஏத்தப் போறீங்க'' தாயைக் கடிந்தவன், பாரதியிடம் திரும்பினான்.

''விளையாடாமல் பதில் சொல்லு பாரதி. நேத்தோட பதினஞ்சு நாள் ஓடிடுச்சு. இன்னும் நீ தமிழைப் பற்றி என்ன நினைக்கிறன்னு சொல்லாமல் இருந்தால், நாங்க என்னதான் நினைக்கிறது'' தங்கையிடம் பொறுமையாகக் கேட்டான்.

''ரெண்டு வாரத்தில் ஒரு ஆளைப் பற்றி எப்படிண்ணா நான் புரிஞ்சுக்க முடியும்?'' அவளும் நழுவுவதிலேயே குறியாக இருந்தாள்.

''பார்த்தீங்களா பார்த்தீங்களா என்ன சொல்லுறா

பார்த்தீங்களா? அம்மையாருக்கு ரெண்டு வாரம் பத்தாதாமா..? அவனவன், பொண்ணு பார்க்குற ஒரு மணி நேரத்தில் முடிவைச் சொல்லுறாங்க. உங்க பொண்ணுக்கு என்னன்னா'' அவருக்கு வந்த கோபத்தில் மேற்கொண்டு பேசக் கூட முடியவில்லை.

''அப்பா நீங்க அம்மாவை உள்ள கூட்டிட்டு போங்க. நான் பாரதிகிட்ட பேசிட்டு வரேன்'' அவர்கள் இருவருக்கும் இடையில் பேச முடியாமல் அவனுக்குத் தலை வலியே வந்துவிட்டது.

இருக்கும் நிலைமையில், அதைச் செய்வதுதான் சிறந்தது என்று தோன்ற, சுதாவை கிட்டத்தட்ட இழுக்காத குறையாகக் கூட்டிச் சென்றார் சிவம்.

தாய் உள்ளே சென்ற பிறகு, தங்கையிடம் திரும்பினான். ''உன் விளையாட்டுக்கு ஒரு அளவே இல்லையா பாரதி'' கண்டிக்கும் குரலில் கேட்டான்.

அண்ணன் தன்னைக் கண்டுகொண்டானே என்று ஒரு நிமிடம் திகைத்தவள், நொடியில் அதை மறைத்துக் கொண்டு, ''என்னடா சொல்லுற?'' ஒன்றுமே தெரியாதவள் போன்று முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்.

''நீ இப்படியே செஞ்சுட்டு இருந்தன்னு வை, நேர அப்பாட்ட போய், தமிழை இன்னைக்கே சென்னைக்கு அனுப்பிடுங்க, அப்படியே இந்தச் சம்பந்தத்தையும் மறந்துடுங்கன்னு சொல்லப் போறேன்'' சொன்னவன், அதை செயல்படுத்த முனைபவன் போல், இருக்கையிலிருந்து எழுந்தான்.

''ஹையோ அண்ணா அண்ணா அப்படில்லாம் அவசரப்பட்டு எதையும் செஞ்சுடாதே'' அவனைப் பிடித்து

இழுத்து இருக்கையில் அமர வைத்தாள்.

''சரி இப்போ உண்மையைச் சொல்லு, உனக்குத் தமிழைப் பிடிச்சிருக்கா? மேற்கொண்டுப் பேசலாமா?'' தீவிரமாகக் கேட்டான்.

''உண்மையைச் சொல்லணும்னா என் இத்தனை வருஷத்தில், இப்படி ஒரு கேரக்டரை நான் மீட் பண்ணியதே கிடையாது. ணிட்ஞ் ஒரு பொண்ணுகிட்ட பேச இவ்வளவு தயக்கமா? அதுவும் ஸ்வெட் ஆகுற அளவுக்கு

''நேர்ல பாக்காமல், நீ மட்டும் சொல்லியிருந்தன்னு வை, நான் நம்பியிருக்கவே மாட்டேன். பொண்ணை பாக்க பயம், பேச பயம், கிட்ட உக்கார பயம், இந்தத் தெனாலிராமன் படத்தில் வாற, கமலஹாசன் மாதிரி 'பெண்' இந்த வார்த்தையைக் கேட்டாலே அவருக்குப் பயம்.

''இந்த லட்சணத்தில், அவருக்கு என்னைப் பிடிச்சு, விரும்பி, கல்யாணம் செஞ்சு பிள்ளைக்குட்டி பெத்து டேய் ஐக்கு நான் ரொம்ப கஷ்டப்பட் வேண்டியிருக்கும் போலடா நீ எதுக்கும், இன்னும் பதினைஞ்சு நாளில் கல்யாணம் வைக்க முடியுமான்னு பாரு.

''நானும் அதுக்குள்ள, அவரை என் முகத்தைப் பார்த்து பேசவாவது-வைக்க முடியுதான்னு பாக்குறேன்'' என்னவோ அலுத்துக் கொள்வதைப் போல், தன் விருப்பத்தையும் சேர்த்தே வெளியிட்டாள்.

தங்கை சொல்வதிலிருந்து தமிழ் மிகுந்த பயந்த சுபாவம் உள்ளவன் என்பது புரிந்தது. அப்படியிருக்கையில் எப்படி பாரதிக்கு ஒத்து வருவான் என்று நினைக்கை யிலேயே அவளது அடுத்த வார்த்தைகளைக் கேட்டவன் சிலையென அமர்ந்துவிட்டான்.

அவன் ஸ்தம்பித்து அமர்ந்திருப்பதைப் பார்த்தவள், ''ஜக்கு! என்னடா ஆச்சு? ஏன் இப்படி உக்காந்து இருக்க?'' அவனைப் பிடித்து உலுக்கினாள்.

''நீ நல்லாதானே இருக்க? என்னடி மனுஷனை இப்படிக் குழப்புற?'' தன் குழப்பத்தை அப்படியே கேட்டான்.

''உன்னை எங்கேடா குழப்பினேன்? தெளிவாத்தானே சொன்னேன்'' அசராமல் கேட்டாள்.

''தமிழ் ரொம்ப பயந்தாங்குளின்ன இப்போ என்னன்னா பதினஞ்சே நாளில் கல்யாணம் வைக்கச் சொல்லுற என்னதான் முடிவு செஞ்சு இருக்க? உன்னைப் பார்த்து பேசவே தயங்குறவர் அவரை எப்படி கல்யாணம் செஞ்சுட்டு... எனக்கு என்னமோ ஒத்து வரும்னு தோணலை. அதைவிட, நீ என்ன நினைப்பில் இப்படியெல்லாம் முடிவெடுக்குற..? கல்யாணம் என்ன அவ்வளவு சுலபமா..?'' ஒரு தங்கையிடம் இதற்குமேல் உடைத்து எதுவும் பேச முடியாமல் அமைதியானான்.

''அண்ணா! என் வாழ்க்கையைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும். தமிழை என்னால் மாத்த முடியும். ஆனால், அப்படி அவரை நான் மாத்தணும்னா முதல்ல நான் அவரோட மனைவியா ஆகணும். அதுக்குப் பிறகு பாரு, வேடிக்கையை'' கண்களில் கனவு மிதக்கச் சொல்லும் அவளை வியப்பாய் பார்த்தான்.

''என்னம்மா இப்படி மொட்டைத்தலையன் குட்டையில் விழுந்தான்னு, தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல் பேசுற?'' குழப்பமாகவே கேட்டான்.

''இதுக்குமேலே எதுவும் சொல்ல முடியாது. நான்

சொன்னதை அம்மாகிட்ட சொல்லி, முதல்ல கல்யாண ஏற்பாட்டைக் கவனிக்கச் சொல்லு'' அசால்ட்டாகச் சொன்னாள்.

''ஏன் பாரதி இந்தப் பதிலையே அம்மாகிட்ட சொல்லியிருக்கலாமே, எதுக்குத் தேவையில்லாமல் அவங்களை டென்ஷன் பண்ணுற?'' ஆற்றாமையாகக் கேட்டான்.

''என்னது அவ்வளவு சீக்கிரம் விஷயத்தை அவங்ககிட்ட ஒத்துக்குறதா. உனக்கே கொஞ்சமாவது மனசாட்சி இருக்கா..?'' விட்டால் நெற்றிக் கண்ணைத் திறந்து விடுபவள் போல் முறைக்க,

'என்னடா இது, நான் கேட்கவேண்டிய கேள்வியை இவள் கேட்கிறாள்' என்று விழித்தான் அவன்.

''நான்தான் உன்கிட்ட அந்தக் கேள்வியைக் கேக்கணும்'' அதை அவளிடம் கேட்டும் விட்டான்.

''டேய் ஜக்கு ரெண்டு மாசமா அவங்க என்னைப் பாடாப்படுத்தினது உனக்குத் தெரியாது. நான் பட்ட கஷ்டத்தைக் குறைந்தபட்சம், ஒரு ரெண்டு நாளாவது அவங்க அனுபவிக்கவேண்டாம் அதான்'' கெத்தாகச் சொன்னாள்.

''அடிப்பாவி அதுக்குன்னு நீங்க ரெண்டுபேரும் மோதிகிட்டாலும் பரவாயில்லை. வீட்டிலிருக்கும் ரெண்டு அப்பாவி ஜீவன்களை இப்படி அல்லாட விடுறியே உனக்கே இது நல்லா இருக்கா..?'' அழாத குறையாகக் கேட்டான்.

''ஹலோ ப்ரதர் அதனால்தான் உன்கிட்டயாவது விஷயத்தைச் சொன்னேன். இல்லன்னா உன்னையும் சேத்துல்ல சுத்தல்ல விட்டிருப்பேன். இப்போகூட ஒண்ணும்

கெட்டுப் போகலை. நீ அம்மாகிட்ட சொன்னாலும் நீயா கதை விடுறன்னு சொல்லி, அவங்களை டர்ராக்குறேன் எப்படி வசதி'' அவள் கூலாகக் கேட்க, ஜகதீஷ்தான் கலவரமானான்.

''அம்மா தாயே காளியாத்தா... உன் திரு விளையாடலை இதோட நிறுத்திக்க. நானும் அப்பாவும் இதுக்கும் மேல தாங்கமாட்டோம்'' கிட்டத்தட்டக் கையெடுத்துக் கும்பிடாதக் குறையாக அலறினான்.

''அது அந்த பயம் இருக்கட்டும். எதுக்கும் வேற ஏதாவது ஐடியா கிடைக்குதான்னு பார்க்குறேன்'' அவனைப் பீதியாக்கிவிட்டே எழுந்து சென்றாள். செல்லும் அவளையே வியப்பாகப் பார்த்தவன், ஒரு முடிவுடன் தாய் தந்தையைக் காணச் சென்றான்.

தன் அறைக்கு வந்த பாரதி, தான்தானா இப்படியெல்லாம் பேசியது என்று கண்ணாடியைப் பார்த்து தனக்குத் தானே, கேட்டுக் கொண்டாள்.

அவள் நினைவுகள் அனைத்தும் கடந்த பதினைந்து நாட்களில் நடந்ததை அலசியது

17

என் தயக்கங்கள் மட்டுமல்ல
என் தவிப்புகள் கூட
என்னை விட்டு விலகிச் செல்வது
எல்லாம் உன்னாலே

முதல் நாள், அலுவலகத்தில் எப்படியோ கொஞ்சம் பாரதியிடம் இயல்பாக இருக்க முயன்ற தமிழ், அடுத்த நாள் முதல் தலைகீழாகிப் போனான். அவளைக் காணும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்தான்.

அப்படியே காணவேண்டி இருந்தாலும், தப்பித் தவறி கூட அவள் முகம் பார்க்கவில்லை. பாரதியாக ஏதாவது கேட்டாலும், ஒற்றை வார்த்தை, அல்லது வாக்கியங்களில் பதில் சொல்லி அவளைத் திணறடித்தான்.

முதல்நாள் மாலையில் தேவாவுடன் அவன் அலுவலகத்திலிருந்து வெளியேறும்போது பாரதியும் சரியாக அதேநேரம், அங்கே வந்தாள். அவள் வைத்திருந்தது நேவி ப்ளூ ஸ்விப்ட் கார்.

தேவாவையும், தமிழையும் கண்டவள், ''ஹாய் கைஸ் இன்னைக்கு டே எப்படிப் போச்சு?'' கேட்டவாறே தமிழின் முகத்தை ஆராய, அவனோ, தேவாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''டே எனக்கு ரொம்ப சூப்பரா போச்சு'' அவளிடம் ஆங்கிலத்தில் சொன்னவன், ''தமிழ்! பதில் சொல்லுடா'' பாரதி தமிழையே பார்ப்பதை உணர்ந்து, அவனிடம் தமிழில் கண்டிக்கும் குரலில் சொன்னான்.

''ஓகே'' ஒற்றை வார்த்தையில் முடித்துவிட்டான். பாரதியும் மேலே எதுவும் கேட்காமல் அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

மறுநாள் காலையில் அவனுக்குக் காலை வணக்கம் சொன்னவள், டீ ப்ரேக்கில் அவனைக் காண வர, அவன் அறையோ வெறுமையாக இருந்தது. 'கேன்டீன் போய்ட்டாரோ?' தனக்குத் தானே கேட்டுக் கொண்டவள்,

கேன்டீனுக்குச் சென்றாள்.

அங்கே தேவாதான் அனைவரோடும் இருந்தானே தவிர, தமிழைக் காணவில்லை. அங்கே வந்ததற்காக ஒரு டீயை வாங்கி குடித்தவளின் பார்வை முழுவதும், வாசலையே பார்த்திருந்தது.

டீயை முடித்துவிட்டு, அவள் வாசலைக் கடந்து, தங்கள் அலுவலகம் இருக்கும் பகுதிக்குத் திரும்பும் வேளையில், எதேச்சையாகத் திரும்பிப் பார்க்க, தமிழ் வேகமாக கேன்டீனுக்குள் நுழைவது தெரிந்தது.

இதை இப்படியே விடக் கூடாதே' குறும்பு தலை தூக்க, மறுபடியும் உள்ளே சென்று, அவன் பின்னால் நின்றுகொள்ள, டீயைக் குடித்தவாறேத் திரும்பியவன், அவளை அங்கே எதிர்பார்க்காததால், சட்டென, டீயை சூடாகவே உறிஞ்சிவிட, நாக்கு பொத்துப் போனது.

அதை மறைத்தவாறே, அவன் மாட்டிக் கொண்ட உணர்வில் விழிக்க, ''தமிழ்! நேத்து நான் பாதியில் விட்டிருந்த பிளானை ஃபினிஷ் பண்ணிட்டீங்களா? அப்படி முடிச்சுட்டீங்கன்னா என் ரூமுக்கு எடுத்துட்டு வாங்க..'' சாதாரணமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

அவள் நகர்ந்த பிறகுதான், இதுவரை பிடித்து வைத்திருந்த மூச்சையே வெளியிட்டான். 'அம்மாடியோ என்ன இது? அவங்க சரியாதான் இருக்காங்க நான்தான் சரியில்லை. இதில் எப்படி அவங்க முன்னாடி சமாளிக்கப் போறேன்' அந்த எண்ணமே, வாங்கிய டீயை குடிக்க விடாமல் செய்தது.

அதை அப்படியே டஸ்ட்பின்னில் போட்டவன்,

அங்கிருந்து நிதானமாக வெளியேறினான். இதுவரை அந்த ஓரத்திலிருந்து, அவன் செய்கைகளையே பார்த்துக் கொண்டிருந்தவள், கவலை கொண்டாள்.

அவனிடம் கொஞ்சம் விளையாடிப் பார்க்கத்தான், அங்கே சென்றாள். ஆனால்,, தன்னைப் பார்த்தவுடன், மூச்சுகூட விட மறந்து அவன் சிலையாகிவிடவே, வாய்க்கு வந்த காரணத்தை உளறிவிட்டு அங்கிருந்து விலகினாள்.

அதன் பிறகும் அவன் நார்மல் ஆகாமல், டீயைக் கூட குடிக்காமல் அங்கிருந்து கிளம்பியது அவளுக்கு வருத்தத்தை அளித்தது. தன்னிடம் பேசவே தயங்கும் அவன் பக்கமே தன் மனம் சாய்வது அவளுக்கு விந்தையாக இருந்தது.

பள்ளி, கல்லூரி, வேலைபார்க்கும் இடம் இப்படி அனைத்திலும் அவளுடன் ஆண்கள் சரிசமமாக இருந்தார்கள். அவர்களோடே பழகியதாலோ என்னவோ, தான் ஒரு பெண் என்ற உணர்வையே அவள் உணர்ந்ததில்லை.

உண்மையைச் சொல்வதென்றால் அவளுடன் பழகிய எந்த ஆணுமே, அவளை அப்படி உணர வைத்ததில்லை என்பதுதான் சரியாக இருக்குமோ? அவர்களும் அவளை தங்களுக்குச் சமமாகவே நடத்தினார்கள்.

அவளிடம் வழியும் ஆண்களையோ, காதல் சொல்ல தவித்த ஆண்களையோ அவள் சந்தித்ததே இல்லை. தன் தாய் சொல்வதுபோல் தான் ஆணாகத்தான் நடந்து கொள்கிறோமோ என்ற சந்தேகமே அவளுக்கு வரத் துவங்கி விட்டது.

இவை அனைத்தையும் கடந்து, தமிழ் தன் முன்னால் தடுமாறி, தன் முகம் பார்க்கத் தயங்கும் நிமிடங்களில் தான், அவள் தன்னைப் பெண்ணாகவே உணர்கிறாள். அந்த உணர்வை அவளுக்கு அறிமுகப்படுத்தும் தமிழை, அவளுக்குப் பிடிக்கிறது என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.

தமிழின் இந்தச் செய்கைகள் ஒரு பக்கம் பிடித்தாலும், ஒரு சராசரிப் பெண்ணாகச் சிந்திக்கையில், ஒரு முழுமையான ஆண்மகனாக அவன் இருக்கவேண்டும் என்று மனம் எதிர்பார்ப்பதை அவளால் தவிர்க்கவும் முடியவில்லை.

தன் யோசனையிலேயே மூழ்கியிருந்தவளைக், கலைத்தது தமிழின் வருகை. ''வாங்க தமிழ் உக்காருங்க'' சொன்னவள், அப்பொழுதுதான் கவனித்தாள், அவனுடன் தேவாவும் இருப்பதை.

''எஸ்'' அழுத்தமான பார்வையுடன், தேவாவிடம் அவள் கேட்க, ''ஏண்டா தமிழ் இந்தச் சண்டி ராணிகிட்ட என்னை சிக்க வைக்கத்தான் கூட்டி வந்தியாடா? என்னமோ அது என்னைக் கூப்பிட்டுதுன்னு சொன்ன இப்போ அது என்கிட்ட ஏன் வந்தன்னு கேக்குது என்னடா இதெல்லாம்'' அழாத குறையாகக் கேட்டான்.

தேவா தன்னை சண்டி ராணி, அது, இது என்று சொல்வதை எல்லாம் கேட்டவளுக்கு ஆத்திரமாக வர, அதை வெளிக்காட்டத் தயாரான பொழுது, ''டேய் அடங்குடா உன்னை நான்தான் துணைக்குக் கூட்டி வந்தேன். அதுக்குன்னு உன்னை யாருடா அவங்களை மரியாதை இல்லாமல் பேசச் சொன்னது. ஏதாவது சாக்கு சொல்லுறதை

விட்டுட்டு முதல்ல இங்கே இருந்து போடா'' தமிழும், அவளுக்குக் குறையாத ஆத்திரத்தில், தேவாவைச் சாடுவதைப் பார்த்தவள் அமைதியானாள்.

''அதென்ன இங்கே வந்த உடனே ரெண்டு பேரும், உங்களுக்குள்ளேயே பேசிக்கிறீங்க என்னன்னு சொன்னால், நானும் தெரிஞ்சுப்பேன்'' குரலில் கோபம் வெளிப்படாதவாறு, கவனமாகவே கேட்டாள்.

''நத்திங் மேம். நீங்க ஏற்கனவே கொடுத்த வேலையை முடிச்சுட்டேன். சைட்டுக்குப் போகவான்னு கேக்கத்தான் வந்தேன்'' தேவா வேகமாகச் சொன்னான்.

''ஓ அப்படியா நீங்க போங்க'' அவனை அனுப்பியவள், ''நீங்க சொல்லுங்க தமிழ்'' அவன் பக்கம் திரும்பினாள்.

அவளிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், மையமாகத் தலையசைத்தவன், அங்கிருந்த ஸ்டாண்டில் தான் வரைந்திருந்த படத்தைப் பொருத்தினான். அவன் செய்வதைப் பார்த்தவள், இருக்கையிலிருந்து எழுந்து வந்து, அவன் அருகில் நின்றாள்.

சாதாரண இடைவெளியில் தான் அவள் நின்றாள். ஆனாலும் தமிழின் செய்கைகளில், சின்ன பரபரப்புத் தொற்றிக் கொண்டது. 'அவன் கரங்களைப் பற்றி, 'எதுக்கு இப்போ இவ்வளவு பதட்டம்' என்று கேட்கவேண்டும் போல் எழுந்த உணர்வை அடக்கினாள்.

இந்த உணர்வெல்லாம் புதுமையாக இருந்தது அவளுக்கு. தன் வகுப்பறை மாணவர்கள் இப்படி நடந்து கொண்டால், அவர்களை கேலிச் செய்தே ஒருவழி செய்துவிடும் தான் இன்று தமிழின் செய்கைகளுக்கு

ஆதரவாக, ஆறுதலாக, அனுசரணையாக இருக்க விரும்புவதை, திகைப்பாய் ரசித்தாள்.

தனது இந்த மாற்றம் அவளுக்குப் பிடித்தது. அவன் கிளிப் செய்யத் தடுமாற அவன் கைகளிலிருந்து அவற்றை வாங்கித் தானே கிளிப் செய்தாள். இந்தச் சம்பவத்தில் அவள், அவனை இன்னும் நெருங்கி நிற்க, சட்டென விலகி நின்றான்.

அவனது விலகலைக் கண்டுக் கொள்ளாமல், ''என்ன தமிழ்! வாங்க வந்து எனக்கு எக்ஸ்ப்ளெயின் பண்ணுங்க'' அவளது இந்த இயல்பான நடத்தையே, அவனை கொஞ்சம் தயக்கத்திலிருந்து வெளிவர வைத்தது.

தன் பாக்கெட்டிலிருந்து பென்னை எடுத்தவன், அதை வைத்து, தான் வரைந்த பிளானில் இருக்கும் விவரங்களை அவளுக்கு விளக்கினான். அவளும் கவனமாகக் கேட்டுக் கொண்டாள். வேலை விஷயத்தில் அவன் கெட்டியாக இருந்தான்.

தெளிவாக, ஒவ்வொரு அங்குலத்தையும் திட்டமிட்டு விளக்கினான். அவனது விளக்கங்கள் ஒவ்வொன்றும் அவனது தொழில் நுணுக்கத்தை அவளுக்குத் தெரியப்படுத்தியது. அதில் குறுக்கே கேள்வியே கேட்கத் தேவையிருக்கவில்லை.

அவ்வளவு கன கச்சிதமாகச் செய்தான். ''எக்ஸலன்ட் எல்லாப்பிளானும் இப்படித்தான் கச்சிதமா செயல்படுத்துவீங்களா..?'' பிரமிப்பு விலகாமலே கேட்டாள்.

''பார்டன்'' அவள் கேட்க வருவதில் கவனம் பதியாமல் இருந்தவன், புரியாமலே கேட்டான்.

''இல்ல ஒரு சின்ன தடங்கல் கூட இல்லாமல், பக்காவா எல்லாம் சொன்னீங்களே, அதான் எப்பொழுதுமே இப்படித்தான் செய்வீங்களான்னு கேட்டேன்'' அவனுக்கு விளக்கினாள்.

''மேம் இது என்னோட வேலை'' அத்தோடு பேச்சை நிறுத்தியவன், மேலே எதையும் சொல்லவில்லை.

''தமிழ் எத்தனை முறை சொல்லிட்டேன் என்னைப் பாரதின்னு கூப்பிடுங்கன்னு. இந்த ஆபீஸ்லேயே என்னை மேம்ன்னு சொல்லுற ஒரே ஆள் நீங்கதான்'' அவனை மென்மையாகக் கடிந்துகொண்டாள்.

அவளது மென்மையான அணுகுமுறைகள் தமிழுக்குள்ளும் சில மாற்றங்களை விதைக்க முயன்றாலும், அதை அவன் உணரும் நிலையில் இருக்கவில்லை. இதே நிலையில் நாட்கள் கடக்க, ஒரு பக்கம் தேவா, சுஷ்மி இருவரின் காதலும், ஊடலும் தொடர, இவர்கள் இருவரும் விலகியே இருந்தார்கள்.

பாரதி அவனை மாற்ற முயல, அதற்கு ஒத்துழைக்கத்தான் அவன் தயாராக இருக்கவில்லை. பாரதியின் முயற்சியையும் உணரவில்லை.

அதேநேரம், தமிழ் முடிந்த அளவு ஹிந்தி பேச முயன்றான். கடைக்கு, மார்க்கெட், ஷாப்பிங் என செல்லும் இடங்களில் எல்லாம் ஹிந்தி அதிகமாகத் தேவைப்பட்டதால், முடிந்த அளவு ஹிந்தியும் ஆங்கிலமும் கலந்து உரையாடினான்.

அவனது ஹிந்தி அதிக அளவு குழப்பம் விளைவிப்பதாகவே இருக்கும். ஆனால், அவற்றை பொறுக்காகத் திருத்துவாள் பாரதி. அன்று விடுமுறை நாள்.

பாரதியும், சுஷ்மியும் அவர்கள் வீட்டுக்கு அருகிலிருந்த பார்க்குக்குச் சென்றிருந்தார்கள்.

அதேநேரம் அங்கே தமிழும், தேவாவும் வந்தார்கள். தேவா இருவருக்கும் பொதுவாக விஷ் செய்தவன், ''ப்ளீஸ் சாரி எக்ஸ்க்யூஸ் மீ'' என்றவன், அவர்கள் அனைவருமே அவனை விசித்திரமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, சுஷ்மியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றான்.

''டேய் தடியா அவளை விடுடா'' தமிழ் அவனைத் தடுக்க முயல, ''தமிழ்! நான் என் ஆளைப் பாத்துக்கறேன்... நீ உன் ஆளைப் பாருடா'' சொன்னவன் அவன் வேலையைத் தொடர்ந்தான்.

''தேவா லீவ் மீ'' அடிக்குரலில் உறுமியவள், அவன் கைகளில் இருந்து தன் கையை உருவ முயன்றாள். ஆனால், அவன் பிடி இரும்பாக இருக்கவே, அவளால் அவனிடமிருந்து விடுபட முடியவில்லை.

அந்த இக்கட்டான சூழலிலும் கூட, தேவாவிடம் தமிழில் பேசமுடியாத சூழலில் இருந்தாள் சுஷ்மி. அதற்குக் காரணம் பாரதிதான். அவள் தான், அவர்களுக்குத் தமிழ் தெரியும் என்ற விஷயத்தை, வெளியே சொல்லக் கூடாது என்று அவளை மிரட்டி வைத்திருந்தாள்.

அவர்கள் அலுவலகத்திலும் மற்ற அனைவரும் மும்பைவாசிகள் என்பதால், அவர்கள் வெளியில் எங்கேயும் தமிழ் பேசியதில்லை. தாங்கள் இருவரும் தனித்திருக்கும் வேளையில் மட்டும் தான், தமிழில் பேசிக் கொள்வார்கள். எனவே இவர்களுக்குத் தமிழ் தெரியும் என்பதே மற்றவருக்குத் தெரியாது.

''தடியா தடியா கையில சிக்குன மவனே கொன்னுடுவேண்டா'' தமிழின் கோபக்குரல் அவனைத் தொடர்ந்ததை அவன் கண்டுக் கொள்ளவே இல்லை.

'நல்ல வேளை இவங்களுக்குத் தமிழ் தெரியாது, தெரிந்திருந்தால் ச்சே' மனதுக்குள்ளேயே நொந்தவன், ''(ஆப் அப் ஆயே தே)நீங்க இப்போ வந்தீங்க?'' என்று ஹிந்தியில் கேட்டான்.

அவன் தவறாகக் கேட்டதில் குழம்பியவள், சட்டென அவன் கேட்க வருவது புரிய, ''(ஆப் கப் ஆயே தே) நீங்க எப்போ வந்தீங்க'' எனச் சரியாகக் கேட்க, ''நான் நீ நாம'' ஹிந்தியில் திணறடித்தவன், இறுதியின் ஆங்கிலத்தில் தாவி, ''நாங்க இப்போதான் வந்தோம்'' அவன் சொல்லவே,

அதையே ஹிந்தியில் அவனுக்குச் சொன்னாள் பாரதி. அவளது அனுசரணை அவனை அங்கேயே கட்டிப் போட, அவளை தனியே விட்டுச் செல்ல மனமில்லாமல், அங்கேயே அவளோடு சிறிது நேரம் இருந்தான்.

இருவருக்கும் நடுவில் மௌனமே ஆட்சி செய்தது எனலாம். ''ஏன் தமிழ் உங்களுக்கு ஏன் பொண்ணுங்ககிட்ட பேசத் தயக்கம்?'' திடீரெனக் கேட்டாள்.

அவளிடமிருந்து இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்காதவன் திகைத்து, என்ன பதில் சொல்வது என்று திணறியவன், ''அப்படில்லாம் இல்லை'' சொல்லிவிட்டு எட்டி நடந்தான்.

அவன் வழியை மறித்தவள், ''சரி நீங்க எதுவும் சொல்ல வேண்டாம் நாம கொஞ்ச நேரம் அப்படி உக்காரலாம்'' சொன்னவள், அதன் பிறகு அதைப் பற்றியே கேட்கவில்லை.

அவள் கேட்காமல் இருந்த பொழுதும், மனதுக்குள் தன்னை நினைத்து சிரித்துக் கொண்டிருப்பாளோ, என்று அவன்தான் திணறிப் போனான். என்னவோ முள்ளின்மேல் அமர்ந்திருக்கும் உணர்வு.

''தமிழ்! உங்களுக்கு என்ன ரொம்ப பிடிக்கும்?'' சாதாரணமாகப் பேச்சைத் துவங்கினாள்.

''நத்திங்'' பட்டென சொன்னான். அவன் கவனம் முழுவதும், தேவா வருகிறானா என்பதிலேயே இருந்தது.

அருகில் அமர்ந்திருக்கும் தன்னைப் பார்க்காமல், பேசாமல், அவன் வேடிக்கைப் பார்ப்பதை எரிச்சலாகப் பார்த்தாள். கோபம் கிளற, அவனிடம் சொல்லாமலே எழுந்து செல்லப் பார்த்தாள்.

அவள் விருட்டென்று எழுந்து செல்லவே தமிழ் திகைத்தான். அவளைத் தடுக்க உள்ளம் விழைந்தாலும், எப்படித் தடுக்கவென்று தெரியாமல் அமைதியாக இருந்தவன். முன்பு அவள் செய்ததைப் போலவே, வேகமாகச் சென்று அவள் பாதையை மறித்து நின்றான்.

அவள் விழி விரித்து ஆச்சரியமாகப் பார்க்கவே, ''சாரி எனக்குத் தெரியும் நான் உங்களுக்கு நல்ல கம்பெனியா இருக்க மாட்டேன்னு. ஆனாலும்'' தவிப்பாகச் சொன்னான். சுஷ்மி வரும்வரை என்னோடு இரு என்று சொல்ல அவனுக்கு வாய் வரவில்லை.

அவன் இவ்வளவு சொன்னதே தனக்குப் போதும் என்பதுபோல், மறுத்துச் செல்லாமல், அவர்கள் அமர்ந்திருந்த அந்த பெஞ்ச்சுக்கே திரும்பி வந்து அமர்ந்தாள்.

அவன் தனது செல்போனை நோண்ட, அவனையே

நோட்டமிட்டாள் பாரதி. அலையலையான கேசம் கொஞ்சம் அகன்ற நெற்றி, அதை தன் முடியால் முழுமையாக மறைத்திருந்தான். கூர்மையான நாசி, அகன்ற தோள்கள்

பார்ப்பதற்கு ஒரு ராணுவ வீரனின் தோரணை அவனிடம் இருந்தது. ஆனால், அதற்கு நேர் மாறாக, தொடை நடுங்கியாக இருக்கிறானே என்று எண்ணினாள். இருவரின் சிந்தனைகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருக்க, அங்கே வந்தார்கள் தேவாவும், சுஷ்மியும்.

''அடப்பாவி நீதானாடா இது?'' வந்த வேகத்தில் அலறினான் தேவா.

''நான்தாண்டா உனக்கு என்ன சந்தேகம் எங்கடா போய்த்தொலஞ்ச'' எரிச்சலாகக் கேட்டான்.

''இல்ல எந்தப் பொண்ணு பக்கத்துலேயும் பத்து செகண்ட்க்கு மேல இருக்க மாட்டியே இப்போ மட்டும் என்னடா'' கண்ணடித்துக் கேட்க, கொலைவெறியானான் தமிழ்.

''அடச்சீ நிப்பாட்டு இவ்வளவு நேரம் நீ எங்கடா போன நீ மட்டும் அவங்க வாழ்க்கையிலேயும் விளையாட்டுத்தனமா இருந்த உன்னை என்ன செய்வேன்னு தெரியாது'' அவனை மிரட்டியவன், சுஷ்மியின் பக்கம் திரும்பி, ''சாரி இவன் செய்யிறது உங்களுக்குப் பிடிக்கலன்னா என்கிட்ட தாராளமா நீங்க சொல்லலாம் நான் இவனை அப்படியே பேக் பண்ணி சென்னைக்கு அனுப்பிடுறேன்'' அவளுக்கு ஆதரவாக, ஆங்கிலத்தில் சொன்னான்.

''டேய் தமிழ் நீ பொண்ணுகிட்ட பேசிட்டடா அவங்க காத்துதான் உனக்கும் அடிச்சுதாடா? இந்த வேகத்தில்

போனால் நீ என்னையவே மிஞ்சிடுவடா'' தமிழைக் கேலி செய்வதிலேயே குறியாக இருந்தான்.

தேவா தமிழைக் கேலி செய்வதை பாரதியால் சகிக்க முடியவில்லை. அதேநேரம் தமிழ், சுஷ்மிக்குப் பரிந்து பேசியதையும் அவள் கவனித்தாள். அப்படியென்றால் நான் நினைக்கும் அளவு தமிழ் கோழை கிடையாதோ?

இந்த எண்ணம் மட்டுமே, தொடர்ந்த நாட்களில் அவளைச் சுற்றி வந்தது. அதே நேரம், எப்படியாவது தமிழை மாற்றியே ஆகவேண்டும் என்ற வேகத்தையும் கொடுத்தது.

ஆனால், தான் பாரதியாக மட்டுமே இருக்கும் வரைக்கும் தன்னால் ஒரு அளவுக்குமேல் தமிழை நெருங்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும். இந்த முடிவிற்கு வந்த பிறகுதான், தன் அண்ணனிடம் அவள் பேசினாள்.

18

மூச்சுக்காற்று கூட
முடமாகும் உணர்வு
மூட்டுவது நீயாக இருந்தால்
தீ கூட குளுமையாய்
எல்லாம் உன்னாலே

விமான நிலையத்தில் தன் தந்தையை வரவேற்கக் காத்திருந்த தமிழின் எண்ணம் முழுவதும், 'என்ன திடீர்ன்னு வரார்..? இந்தத் தடியன்கிட்ட கேட்டால் எதுவும் சொல்ல

மாட்டேன்னு அடம் பண்ணுறான்.

'எனக்குத் தெரியாமல் ரெண்டு நாளா யார்ட்டயோ கூட ...ன்னு வேற பேசிட்டு இருந்தான். நான் வந்த உடனே கட் பண்ணினான். என்னவா இருக்கும்? அப்பாவுக்கு உடம்பு சரியில்லையா? குரலைக் கேட்டால் அப்படியும் இல்லையே' மூளைக்குள் கேள்விகளின் ஊர்வலம்.

என்னதான் அவர் வரவு, மூளைக்குள் குடைச்சலாக இருந்தாலும், ஒரு மாதம் அவரைக் காணாமல் இருந்ததால், அவரைக் காண ஏக்கமாக இருந்தது என்னவோ உண்மை. எனவே அவரது வரவை ஆவலாகவும் எதிர்பார்த்தான்.

பிறந்தது முதல், இவ்வளவு நாள் அவரைப் பிரிந்திருந்ததே இல்லை. முதல் பிரிவு மும்பைக்கு வந்த முதல் ஒரு வாரம், அவரைப் பார்க்காமல், பேசாமல், அவர் கையால் சாப்பிடாமல் தாயைப் பிரிந்த ஏக்கத்தை உணர்ந்தான்.

அவன் குழப்பங்களைத் தீர்க்கவென்றே வெளியே வந்தார் சுப்பிரமணி. ஓடிச் சென்று தந்தையை அணைத்துக் கொண்டான். ''வாங்கப்பா எப்படி இருக்கீங்க?'' பிரிவின் தாக்கம் அவன் குரலில் வெளிப்பட்டது.

தேவா வேகமாக வந்து, அவர் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டான். ''வாங்கப்பா ட்ராவல் எல்லாம் வசதியா இருந்துதா..?'' இருவரின் கேள்விக்கும், மையமாகத் தலை அசைத்தார்.

அமைதியாகச் சென்று காரில் ஏறி அமர்ந்து கொண்டார். அவரது அமைதியை இருவருமே கலைக்கவில்லை. மேலும் கால் டாக்ஸியில் இருந்து கொண்டு விவாதிக்க யாரும் தயாராக இருக்கவில்லை.

அமைதியாகவே வீடு வந்து சேர்ந்தார்கள். நீங்க பேசிட்டு இருங்க. நான் போய் சாப்பாடு வாங்கிட்டு வாரேன்'' அவர்களுக்குப் பேச தனிமை கொடுத்து ஒதுங்கினான் தேவா.

சுப்பிரமணி, தமிழின் கரங்களை கைகளில் எடுத்து மெதுவாக வருடினார். அவன் கேசத்தில் கை வைத்துக் கலைத்தார், கன்னங்களையும் மெல்லத் தடவியவரின் கண்களில் மெல்லிய நீர்ப்படலம்.

அதை மறைத்தவாறே, ''எப்படிப்பா இருக்க? கால்வலி எப்படி இருக்கு? இங்கே எல்லாம் பிடிச்சிருக்கா? ரொம்ப இளைச்ச மாதிரி இருக்கியேப்பா'' அவர் குரல் தழுதழுத்தது. இவ்வளவு நாள் பிரிந்த ஏக்கமும் அதில் வெளிப்பட்டது.

''நான் நல்லாதான்ப்பா இருக்கேன் கால் மட்டும் கொஞ்சம் வலி இருக்கு. நீங்க எப்படி இருக்கீங்க..? அம்மா எப்படி இருக்காங்க? சாப்பாடு கொஞ்சம் சரியில்லை. அதனால் தான்ப்பா உங்களுக்கு இளைச்ச மாதிரி தெரியிறேன். மத்தபடி இங்கே எந்த குறையும் இல்லை.

''உங்க வயசுதான் ஏறிட்ட மாதிரியிருக்கு. ஒரே மாசத்தில் என்னப்பா இப்படி மாறிட்டீங்க? பேசாமல் வேலையை விட்டுட்டு என்னோடவே வந்துடுங்களேன். இல்லன்னா நான் வேலையை விட்டுட்டு உங்களோடவே வந்துடட்டுமா..?'' ஏக்கமாகக் கேட்டான்.

''இதுக்கெல்லாம் ஒரு நல்ல தீர்வோடதான் இங்கே வந்திருக்கேன்'' உற்சாகமாகச் சொன்னார்.

''அப்படியா? அப்போ வேலையை விட்டுட்டு வந்தருக்கீங்களா? அதுக்குத்தான் நான் முதல்லையே

சொன்னேன், உங்களால், என்னை விட்டு இருக்க முடியாதுன்னு. நீங்கதான் கேக்காமல் என்னை இங்கே அனுப்பி வச்சீங்க. இப்போ பார்த்தீங்களா?'' சிறுவனின் துள்ளல் அவனிடம்.

''அதெல்லாம் வேலையை எல்லாம் விடலை, இது வேற..'' மர்மமாகச் சொன்னார்.

''வேறயா என்னப்பா குழப்புறீங்க? எது எப்படியோ இனிமேல் நீங்க என்னோட இருக்கப் போறீங்களே அதுவே எனக்குப் போதும். இனிமேல் நான் உங்களை எங்கேயும் விடுறதா இல்லை'' பிடிவாதமாகச் சொன்னான்.

''என்னடா என்னமோ பால்குடிக்கிற பச்சைப் பிள்ளை மாதிரி பேசுற? முதல்ல அப்பாவை, குளிச்சுட்டு வந்து சாப்பிடச் சொல்லு. பிறகு நிதானமா கொஞ்சுங்க'' தேவா இருவரின் பேச்சுக்கிடையில் புகுந்தான்.

''உனக்குப் பொறாமைடா'' தமிழ் அவனைச் சீண்டினான்.

''ஆமா நீ பிகர் கூட கொஞ்சிட்டு இருந்த நான் பொறாமைப்பட, கிழவனைக் கொஞ்சிட்டு, பெருமையைப் பாரு..'' கேலியாகச் சொன்னாலும், அவர்கள் இருவரின் நெருக்கத்தைப் பார்த்து, பொறாமையாகத்தான் இருந்தது அவனுக்கு.

தேவாவின் வீட்டில் அனைவருமே தனித்தீவுகள் தான். யாரும் யார் விஷயத்திலும் தலையிடுவதில்லை. சாப்பிட்டாயா, தூங்கினாயா என்று கூட இதுவரை அவனுக்கு யாரும் போனில் கூட அழைத்துப் பேசவில்லை.

அவன் மும்பை வருவதைச் சொன்னபொழுது கூட, உன் வாழ்க்கை நீயே பார்த்துக்கொள் என்று

விட்டுவிட்டார்கள். அப்படியிருக்கும் வேளையில், இவர்கள் இருவரும், அவன் கண்முன்பே கொஞ்சிக் கொண்டால் அவனும் என்னதான் செய்வான்.

தேவா சொன்னபிறகுதான், தமிழுக்குத் தந்தையை குளிக்கக்கூட விடாமல் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. ''நீங்க குளிச்சுட்டு வாங்கப்பா. நாம நிதானமா பேசலாம்'' சொல்லி அவரை அனுப்பினான்.

அவர் குளித்துவிட்டு வந்தவுடன், அனைவரும் ஒன்றாக அமர்ந்தே சாப்பிட்டு முடித்தார்கள்.

''நீங்க ஆபீஸ் போயிட்டு வாங்கப்பா. எனக்கு என் நண்பரை பார்க்க வேண்டியிருக்கு'' அவர் சொன்ன தொனியே, கட்டளை போல் இருக்கவே, மறுக்காமல் கிளம்பினார்கள்.

''என்னப்பா இப்போதான் வந்தீங்க, உடனேயே வெளியே போகணுமா? கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு போகலாமே'' அவர் உடல்நிலையில் மேலிருந்த அக்கறையால் கேட்டான்.

''நான் என்ன சென்னையிலிருந்து பாதயாத்திரையாவா வந்தேன்? விமானத்தில் தானே வந்தேன். அதெல்லாம் ஒரு சோர்வும் இல்லை, நான் போய்க்கிறேன் நீங்க கிளம்புங்க'' ஒரே வார்த்தையில் முடித்துவிட்டார்.

''சிவம் சாரை பார்க்கப் போறீங்களாப்பா?'' தயக்கமாகக் கேட்டான்.

அவனை ஒரு பார்வை பார்த்தவர், ''ஆமாப்பா ஏன்?'' அவனைப் பார்த்தவாறே கேட்டார்.

''இல்ல, இங்கே உங்களுக்குத் தெரிந்தவர் அவர்

மட்டும் தான். அவரோட வீடு இங்கேயிருந்து ரெண்டு தெரு தள்ளி இருக்கு. எங்களையும் எதிர் பார்க்காமல், நீங்களே போய்க்கிறேன்னு சொல்லவும்தான் கேட்டேன்..''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. வீட்டுக்குள் வந்த டிரைவர், ''ஐயா உங்களை கூட்டிட்டு வரச் சொன்னாங்க'' பவ்யமாகச் சொன்னான்.

தமிழுக்கு, நடப்பவை எதுவும் சரியாகத் தெரியவில்லை. அதையே அவனது கண்களும் வெளிப்படுத்த, அதற்குமேல் அவனை அங்கே தாமதிக்க விடாமல், தேவா அவனை இழுத்துச் சென்றான்.

தந்தையைக் கூர்மையாகப் பார்த்தவன், எதுவும் சொல்லாமல் அவனோடு சென்றான்.

தேவாவிடம் மேலும் எதாவது விவரங்கள் கேட்டு அவனைக் கடுப்பாக்கினால், விட்டுவிட்டுச் சென்றுவிடும் அபாயம் இருந்ததால் மறு பேச்சில்லாமல் ஏறி அமர்ந்து கொண்டான்.

இருவரும் அலுவலகம் வந்தவுடன் அவரவர் பாதையில் பிரிந்தார்கள். சுஷ்மியைப் பார்த்த தேவா, அவள் திரும்பி நின்று ஏதோ ஒரு பைலை தேடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

பூனைபோல் சென்றவன், வெடுக்கென அவள் இடுப்பில் கிள்ளி, ''குட் மார்னிங்'' என்றான்.

திடீரென ஏற்பட்ட இந்தச் செய்கையில் துள்ளி விலகியவள், ''குட் மார்னிங் இப்படித்தான் சொல்லுவாங் களா? காலையிலேயே ஏன் இப்படி கடுப்பேத்துறீங்க'' அவனை முறைத்தவாறே கேட்டாள்.

''டார்லிங்! உனக்கு இந்தக் குட் மார்னிங் பிடிக்கலன்னா, வேற மாதிரி சொல்லட்டுமா?'' கண்ணடித்தவாறு அவளை நெருங்க, ''மவனே, கிட்ட வந்த கொன்னுடுவேன்'' கையில் வைத்திருந்த பைலை, கத்தியாக பாவித்து, அவன் முன்பு ஆட்டியவாறு சொன்னாள்.

''எங்கே கொல்லு'' கண்களில் போதையுடன் அவள் அருகில் செல்ல, அவன் செய்கையிலும், பாவனையிலும் மயங்கினாள் சுஷ்மி. யாராவது வருகிறார்களா என்று வேகமாகப் பார்வையைச் சுழலவிட்டாள்.

''பாதுகாப்பெல்லாம் பலமாத்தான் இருக்கு. ஆனா, ஒரு குட் மார்னிங் சொல்ல, இவ்வளவு அலர்ட்நெஸ் அவசியமான்னுதான் தெரியலை'' கண்களில் குறும்புச் சிரிப்புடன் அவன் சொல்லவே, கையிலிருந்த பைலால் அவனை அடித்தாள்.

''எதையாவது எதிர்பார்த்து ஏமாந்துட்டியா டார்லிங்'' அப்பாவியாகக் கேட்க, இன்னும் இரண்டு அடிகளை அவளிடமிருந்து பரிசாகப் பெற்றுக் கொண்டே, அங்கிருந்து நகர்ந்தான்.

''திருட்டு ராஸ்கல்'' கள்ளச் சிரிப்பில் விரிந்தது அவள் இதழ்கள்.

தமிழ் அவனது அறைக்குச் சென்ற அடுத்த நிமிடம், பாரதி அவன் அறைக்குச் சென்றாள். ''குட் மார்னிங் தமிழ்'' அவள் குரல் முதுகின் பின்னால் ஒலிக்க, அவளை நிமிர்ந்து பார்க்காமலே, அவனும் பதில் வணக்கம் சொன்னான்.

''தமிழ்!'' அவள் அழுத்தி அழைக்கவே, தயக்கமாக அவளைப் பார்த்தான். பார்த்தவனின் விழிகள் உடனே அவளிடமிருந்து அகன்றன.

முழுதாக ஒரு மாதம் கடந்த பிறகும், தமிழுக்கும் அவளுக்கும் இடையிலிருந்த உறவு, ஒரு முதலாளி, தொழிலாளி என்ற அளவிலேயே இருந்தது.

பாரதி அவனை நெருங்க முயலும்பொழுது எல்லாம், நாசூக்காக அவளிடமிருந்து விலகினான். அவனது கூச்ச சுபாவம், அவனை விட்டுக் கொஞ்சம் கூட அகலவில்லை. ஒரு அளவுக்கு மேல், அவளாலும் அவனை நெருங்க, தயக்கம் தடுத்தது.

தன்னால் ஒரு பெண்ணுடன் சகஜமாக இருக்க முடியாது என்பதை மட்டும் உறுதியாக நம்பினான். அவனது அந்த எண்ணமே, பாரதியை தவிர்க்க வைத்தது. பாரதி தன்னை அழைத்துவிட்டு, இன்னும் பேசாமலே இருக்கவே, பார்வையை அவள் பக்கம் திருப்பினான்.

அவன் தன்னைப் பார்த்தவுடன், மென்மையாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவனையும் தொற்றிக் கொண்டது. ''குட்'' அவள் இதைச் சொல்லவே, எதற்கென்று அவனும் கேட்கவில்லை, அவளும் சொல்லவில்லை. இருவருக்குமே தெரியும் அது எதற்காகச் சொல்லப்பட்டதென்று.

எப்படியும் அவன் பேசப் போவதில்லை என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரியும். எனவே அவளே பேச்சைத் துவங்கினாள். ''மாமா வந்திருக்காங்க போல?'' கேள்வியா, பதிலா, தகவலா? இன்னதென்று சொல்லாமல் இருந்தது அவளது வாக்கியம்.

அவள் யாரை மாமா என்று சொல்கிறாள் என்று குழம்பிப்போய் பார்க்க, ''உங்க அப்பாவைத்தான் சொன்னேன்'' அவனுக்கு விளக்கம் கொடுத்தாள்.

'இவங்களுக்கு எப்படித் தெரியும்?' புருவம் சுருக்கி அவன் யோசிக்க, ''அப்பாவுக்குப் போன் பண்ணியிருந்தாங்க'' அவன் கேட்காத கேள்விக்கு விளக்கமளித்தாள்.

'ஏதாவது வாய் திறந்து பேசேன்டா' அவள் உள்ளம் குமுற, அதை விடுத்து, ''தமிழ்! சாயங்காலம் எங்க வீட்டில் உங்க எல்லோருக்கும் டின்னர் மறக்காமல் வந்துடுங்க'' சொல்லிவிட்டு, அவன் பதிலை எதிர்பார்க்காமல் சென்றுவிட்டாள்.

'இப்போ எதுக்கு வந்தாங்க? என்ன சொல்லிட்டுப் போறாங்க? அப்பாவை இவங்க எதுக்கு மாமான்னு சொன்னாங்க? அப்பா வந்ததுக்கும் இதுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா?' கேள்வி மனத்தைக் குடைந்தாலும், அதை ஒதுக்கிவிட்டு வேலையில் கவனமானான்.

எவ்வளவுதான் பாரதியின் நினைப்பை ஒதுக்க முயன்றாலும், எதுவோ தவறாக நடப்பது போன்ற பிரமை எழுவதை அவனால் தவிர்க்க முடியவில்லை. பாரதியோ நேராகச் சென்று, தேவாவைப் பார்த்தாள்.

அவள் செல்லும் பொழுது, சுஷ்மியையும் உடன் அழைத்துச் செல்ல, அவர்களைப் பார்த்தவன், ''குட் மார்னிங் மேம்'' அவளிடம் நார்மலாகச் சொன்னவன், சுஷ்மியிடம் கண்ணடித்தான்.

''இவன திருத்தவே முடியாது'' மெதுவாக முணுமுணுக்க, அதைக் கேட்ட பாரதியின் மனதுக்குள் மெல்லிய ஏக்கமும், சுஷ்மியின் மேல் பொறாமையும் எட்டிப் பார்த்தது.

''சொல்லுங்க மேம்!'' அவன் ஆங்கிலத்தில் துவங்க,

''நான் உங்ககிட்ட முக்கியமான விஷயம் பேச வந்திருக்கேன்'' அவள் தடாலடியாக தமிழில் துவங்க, மூச்சடைத்தது அவனுக்கு.

சிலவேளை தனக்குத்தான் காது சரியாக கேட்கவில்லையோ என்று அவன் காதைக் குடைய, ''அதெல்லாம் சரியாத்தான் கேட்டுச்சு'' இப்பொழுது சுஷ்மியும் தொடர, நிஜமாகவே அவனுக்கே மயக்கம் வரும்போல் இருந்தது.

ஆனால், அதை நொடியில் சமாளித்தவன், ''அடப்பாவிங்களா வய்சுப் பசங்க பேசுறதை ஒட்டுக் கேக்குறதுக்கு இப்படி ஒரு வழியா'' வாயை ஆவெனப் பிளந்து, இடக்கையால் வாயை மூடி, பாவனையாக அவன் கேட்க, ஒரு நிமிடம் அதிர்ந்த இரு பெண்களும், விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''தேவா! நீங்க என்னமோ ரகசியமா பேசுன மாதிரியும், அதை நாங்க ஒட்டு கேட்ட மாதிரியும் இல்ல பேசுறீங்க. இருந்தாலும் நீங்க பேசுனது எல்லாம் கொஞ்சம் ஓவர் தான்'' பாரதி சின்னக் கண்டிப்புடன் சொன்னாள்.

''உனக்கும் தமிழ் தெரியுமா? அப்போ நான் உன்கிட்ட உக்காந்து புலம்புறது எல்லாம் உனக்குத் தெளிவா தெரியும்னு சொல்லு'' சுஷ்மியின் அருகில், அவளுக்குத் தமிழ் தெரியாது என்ற தைரியத்தில் புலம்பியத்தைத்தான் அவன் சொல்கிறான் என்பது புரிய, வேகமாக அவன் வாயை மூடினாள்.

''சுஷ்மி! விஷயம் ரொம்ப சுவாரசியமா இருக்கும் போல'' பாரதி கேட்க, சுஷ்மியின் முகம் செவ்வானமாய் சிவந்து போனது.

''ஹையோ மேம்! அப்படில்லாம் எதுவுமே இல்லை'' அலறினான் தேவா. அவன் பார்வை சுஷ்மியைக் கெஞ்சியது.

''ஓகே, அது உங்க பெர்சனல். நான் அதை விசாரிக்க வரலை ஒரு முக்கியமான விஷயம் உங்ககிட்ட சொல்ல வந்தேன். கொஞ்சம் கேன்டீன் வரை என்னோட வாறீங்களா..?'' கேட்டவள் முன்னே செல்ல, அவளைப் பின்தொடரப் போன சுஷ்மியைக் கைப்பிடித்துத் தடுத்தவன், ''சுஷ்மி நிஜம்மாவே உனக்குத் தமிழ் தெரியுமா?'' அழும் குரலில் கேட்டான்.

''தெரியும்டா கெட்டப் பையா'' சொன்னவள் விழுந்து விழுந்து சிரிக்க, 'ஞே' என விழித்தவாறு நின்றான்.

அவனது அதிர்ச்சியைப் பார்த்தவள், அவனையும் இழுத்தவாறு வெளியே சென்றாள். கேன்டீனில் டீ குடித்து முடிக்கும் வரை, ஆழ்ந்த அமைதி நிலவியது. அதன் பிறகு, பாரதி பேச, அவள் பேசப் பேச, தேவாவுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது.

''அடக்கொடுமையே ஒரு அப்பாவியைச் சிக்க வைக்க எல்லோரும் சேர்ந்து இப்படி பிளான் பண்ணுறீங்களே. இதை அந்த ஜீவன் எப்படித் தாங்கும்?'' போலியாக அலறினான்.

''சுஷ்மி! இப்போ என் சார்பா உன் ஆளை ரெண்டு மொத்து மொத்துற?'' பாரதி கடுப்பாகச் சொல்ல, வேகமாகத் தன் தலையில் கை வைத்துக் கொண்டான்.

''இப்போ என்ன நீங்க சொல்லுற டைம்-க்கு முன்னாடி தமிழை நான் அங்கே விடக்கூடாது அவ்வளவு தானே விடுங்க'' அவர்களிடம் அடி வாங்காமல் இருக்க வேகமாகச் சொன்னான்.

பெண்கள் இருவரும் சிரிக்க, இதற்கு தமிழ் ஒத்துக்கொள்ள வேண்டுமே என்ற கவலையும், எதிர்பார்ப்பும், வேண்டுதலும் தேவாவின் மனதை அழுத்தியது.

சாயங்காலம் தனக்கு என்ன காத்திருக்கிறது என்பது தெரியாமலேயே, வேலையில் மூழ்கியிருந்தான் தமிழ்.

19

உன்னை நெருங்க

உரிமையுள்ளவள்

உனக்காகவே பிறந்தவள்

உண்மையாய் நேசிப்பவள்

உணர்வாயா நீ

அலுவலகம் விட்டு வந்தவன், தந்தையிடம் வழக்கடித்துக் கொண்டிருந்தான். அவனிடம் பேசிப் பேசி அலுத்துவிட்டார் அவரும். 'என்னடா இது' என்பதுபோல் அவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான் தேவா.

''இங்கே என்னடா படமா காட்டுறோம்? நானும் கொஞ்ச நேரமா பார்த்துட்டே இருக்கேன், ரொம்ப சுவாரசியமா வேடிக்கைப் பார்க்குற?'' அவனிடம் எரிந்து விழுந்தான் தமிழ்.

''நல்லாருக்குடா ரொம்ப நல்லாருக்கு டின்னருக்கு வான்னு கூப்புடுறவர் அவர், அவரை விட்டுட்டு என்கிட்ட

எரிஞ்சு விழுற, நீ வந்தா வா, வரலன்னா போ எனக்கென்ன வந்துச்சு. நீங்க வாங்கப்பா நாம போகலாம்'' தான் போட்டிருந்த ட்ரெஸ்சை, அழகு பார்த்தவாறு, இருக்கையிலிருந்து எழுந்தான்.

''டேய் நான் டின்னருக்கே போக வேண்டாம்னு சொல்லிட்டு இருக்கேன், நீயென்ன மாப்பிள்ளை மாதிரி கிளம்பி நிக்கிற'' கோபமாகக் கேட்டான்.

'உதாரணம் கூட, குறிபாத்து அடிக்கிறானே' மனதுக்குள் புலம்பியவன், ''இப்போ என்னடா நான் இந்த ட்ரெஸ் போட்டுருக்கறது உன் கண்ணை உறுத்துது. அதானே சரிடா, நான் வேற ட்ரெஸ் மாத்திடுறேன். இப்போ உனக்குத் திருப்தியா'' டக்கின் செய்திருந்த சட்டையை வேகமாக எடுத்துவிட்டான்.

''டேய்! நான் என்ன சொல்லுறேன்.., நீ என்ன செய்யிற? ஓங்கி மூஞ்சியில் விட்டேன்னா தெரியும் முதல்ல ட்ரெஸ் மாத்திட்டு போய் உன் வேலையைப் பாருடா''

''தமிழ்! அப்போ என் பேச்சுக்கு இவ்வளவுதான் மரியாதையா? நீ வரலன்னா என்ன? நான் போறேன். நான் சொன்னேன்ற ஒரே காரணத்துக்காக உனக்கு மறு பேச்சில்லாமல் வேலை போட்டுக் கொடுத்தவங்க அவங்க நியாயமா பாத்தால், நாமதான் அவங்களுக்கு மரியாதை செய்யணும். இங்கே என்னன்னா அவங்க கூப்பிடுறாங்க, நீ வரமாட்டேன்னு சொன்னால் என்னடா அர்த்தம்? இந்த அப்பா மேல உனக்கு கொஞ்சமாவது மதிப்பு, மரியாதை இருந்தால், என்னோட கிளம்பி வாற, அவ்வளவுதான் பார்த்தியா பார்வதி நீ இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்குமா..? அவன் வளர்ந்துட்டான் பார்வதி

இனிமேல் என் பேச்செல்லாம் கேப்பானா? மாட்டான் கேக்க மாட்டான்'' அவனிடம் போராடித் தளர்ந்தவராக இருக்கையில் அமர்ந்து, தன் மனைவியிடம் புலம்பினார்.

தந்தையின் பேச்சில் மனம் வாட, ''அப்பா! நீங்க சொன்னா நான் கேட்பேன்ப்பா. ஆனால், அவங்க வீட்டுக்கு நீங்க மட்டும் போயிட்டு வாங்கப்பா'' கெஞ்சலில் இறங்கினான்.

தன் கடிகாரத்தை திருப்பி மணி பார்த்தவர், நேரம் ஏழு கடந்திருக்க, 'இரண்டு மணி நேரமாக போராட வைக்கிறானே அவர்கள் வீட்டுக்கு டின்னருக்குப் போகிறோம் என்று சொன்னதற்கே இப்படியென்றால், இனிமேல் அங்கே நடக்கப் போவதற்கு எப்படிச் செயல்படுவான் என்று சொல்ல முடியாது போலவே' மனதுக்குள் கவலை கொண்டார்.

தேவாவும் அப்பொழுது அதையேதான் எண்ணிக் கொண்டிருந்தான்.

''நீ ஏன் வரமாட்டேன்னு சொல்லுற? எனக்கு காரணத்தை மட்டும் சொல்லு. அது சரின்னு எனக்குத் தோணினா, உன்னைக் கட்டாயப்படுத்தாமல், நான் மட்டும் போயிட்டு வரேன்'' முடிவாக ஒலித்தது அவர் குரல்.

''அப்பா! அது வந்து'' தயங்கியவனை விசித்திரமாகப் பார்த்தார்.

இதுவரை தமிழ் எதற்காகவும் அவரிடம் தயங்கியதே கிடையாது. அப்படியிருக்கையில் சிறு யோசனையோடு புருவம் சுருக்கி அவனைப் பார்த்தார்.

''சொல்ல வருவதை தெளிவா சொல்லு. எதுக்கு இவ்வளவுத் தயக்கம்?'' அவனை ஊக்கினார்.

''இல்லப்பா... நான் நினைக்கிறது ஒரு வேளை தப்பாக்கூட இருக்கலாம்'' இன்னும் தயங்கினான்.

''நீ இன்னும் விஷயத்துக்கே வரலை. நமக்கு டைம் இல்லை. ஏழரைக்கு நாம அங்கே இருக்கணும்''

''பாரதி இருக்காங்க இல்ல'' அவன் இப்படித் துவங்கவே, சுப்ரமணியின் கண்கள் வியப்பில் விரிந்தன. தமிழ் இதுவரை எந்தப் பெண்ணைப் பற்றியும் பேசியதே கிடையாது. எனவே, அவன் பேச்சை ஆர்வமாக கவனித்தார்.

''பாரதி வந்து என்கூட கொஞ்சம் இன்ட்ரஸ்ட்டா பழக விரும்புற மாதிரியிருக்கு. அதை எதுக்கு வளர விடணும்னு தான்'' தயக்கமாகச் சொல்லி, தந்தையின் முகம் பார்க்க, அவரோ மலர்ந்த புன்னகையுடன் அவனை எதிர் கொண்டார்.

''என்னப்பா நான் சீரியஸா சொல்லிட்டு இருக்கேன்... நீங்க சிரிக்கிறீங்க'' குறைப்பட்டான்.

''ஏம்ப்பா அது நல்ல விஷயம் தானே. உனக்கும் அவளைப் புடிச்சிருக்குன்னா நாம பேசி முடிச்சுடலாம்'' விஷயம் சுலபமாக முடியப் போகிறதே என்று உற்சாகமானார்.

'பையன் மேல எப்படி ஒரு அபார நம்பிக்கை. அவனே அவங்களை கழட்டி விடத்தான், வர மாட்டேன்னு சொல்லுறான், வாத்தி ஜோடி சேக்க ஆசைப்படுது. ஹையோ' தனக்குள் பயங்கரமாக எரிச்சலானான் தேவா.

''அப்பா! நான் சொல்ல வாறதை புரிஞ்சுக்காமல்'' சலித்தான் தமிழ்.

''நான் புரிஞ்சுதான் பேசுறேன். நீதான் புரியாமல் பேசுற. அப்படி ஒரு நினைப்பு அவ மனசில் இருக்குன்னா

அதை நான் நடத்தி வைக்காமல் இங்கேயிருந்து போக மாட்டேன். முதல்ல நீ போய் கிளம்பு. நான் இப்போவே சிவனுக்குப் போன் பண்ணி பேசுறேன்'' பின்னர் ஒரு முடிவுடன்,''இப்போ சொல்லுறேன் கேட்டுக்கடா நான் இங்கே வந்ததே உனக்கும், பாரதிக்கும் கல்யாணம் பேசி முடிவு செய்யத்தான்.

அதுக்குத்தான் இப்போ நாம அங்கே கிளம்பி போறோம். இன்னைக்கே உங்க கல்யாணத்துக்கு நாள் குறிச்சுட்டு, முடிந்தால் கையோட கல்யாணத்தையும் நடத்தி வச்சுட்டுதான் நான் ஊருக்கே போறேன் என்ன புரியுதா. முதல்ல எந்த இடக்கும் செய்யாமல் கிளம்புற வழியைப் பாரு'' ஒரு முடிவுடன் அனைத்தையும் அவனிடம் சொல்லிவிட்டார்.

அதிர்ச்சியில் உறைந்தான் தமிழ்.. ''என்னப்பா சொல்லுறீங்க... இது பாரதிக்குத் தெரியுமா?'' அதே அதிர்வுடன் அவன் குரல் வெளிவந்தது.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. சிவன் சென்னைக்கு வந்திருக்கும் போதே, நாங்க பேசி முடிவு செய்த விஷயம் இது'' இதற்குமேல் நீ என்ன சொன்னாலும், என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை, என்பதுபோல் இருந்தது அவர் செய்கை.

ஒரு நிமிடம் அவரிடம் பேச எண்ணியவன், எதையோ நினைத்து வேகமாகத் தன் அறைக்குச் சென்று, நொடியில் திரும்பி வந்தான். ''வாங்கப்பா போகலாம்'' அவரை அவசரப்படுத்தினான்.

இப்பொழுது திகைப்பது அவரது முறை ஆயிற்று, தேவாவோ மயக்கம் போட்டு விழும் நிலைக்கே

சென்றுவிட்டான்.

''என்னடா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தைய்யா தக்கான்னு குதிச்ச. இப்போ கல்யாணம்னு சொன்ன உடனே துள்ளிக்கிட்டு கிளம்பிட்ட'' தேவா கேட்க, அவனை முறைத்தான்.

''நீ வரப்போறியா இல்லையா? நான் கிளம்புறேன்'' காத்திருந்த கால் டாக்ஸியில் சென்று அமர்ந்துகொண்டான்.

'எல்லாம் எங்க நேரம்தான்' புலம்பியவாறு அவன் பின்னால் சென்றான்.

இரண்டே நிமிடங்களில் பாரதியின் வீட்டின் முன்னால் இறங்கியவன், அவர்களை வரவேற்க வந்த சிவன், சுதாவிடம், மரியாதை நிமித்தம் கை குவித்தவன், ''எனக்குப் பாரதி அவங்களைப் பாக்கணும்'' அவர்களிடம் கேட்ட முதல் கோரிக்கை இதுதான்.

''என்ன தமிழ் இந்த நேரத்தில்?'' கடிந்துகொண்ட தந்தையை, அவன் கண்டுகொள்ளவே இல்லை.

''விடுங்க சம்பந்தி! ஜக்கு மாப்பிள்ளையை, கூட்டிட்டுப் போ'' அவர்களை அனுப்பியவர், சுப்ரமணியை அழைத்துக் கொண்டு, சிறியதாக ஏற்பாடு செய்திருந்த, விழா இடத்துக்குச் சென்றார்.

கவலையாக மகன் சென்ற திக்கையே அவர் பார்க்க, ''அண்ணா! நீங்க கவலையே படாதீங்க. பாரதி எல்லாம் பார்த்துப்பா'' அவருக்குத் தைரியம் சொன்னார் சுதா.

ஜகதீஷோடு சாதாரணமாக உரையாடியவாறு அவனோடு நடந்தாலும், பாரதியைத் தனியாக எதிர்கொள்ள வேண்டுமே என்ற தயக்கம் அவனுக்குள் இல்லாமல் இல்லை.

''இதுதான் பாரதியோட ரூம் ஆல் தி பெஸ்ட்'' கைகுலுக்கி விடைகொடுத்தவன் அங்கிருந்து அகன்றான்.

ஜகதீஷ் சென்றவுடன், ஒருமுறை ஆழ்ந்து மூச்சு விட்டவன், ஒரு முடிவுடன், அவள் அறைக் கதவைத் தட்டினான்.

''அந்தர் ஆயியே'' அவள் குரல் கேட்கவே, கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றான்.

உள்ளே சென்று பாரதியைப் பார்த்தவன், ஒரு கணம் மூச்சு விடவும் மறந்தவாறு அவளையே வெறித்தான். இது நாள் வரை ஜீன்ஸ், டிஷர்ட், இப்படியான உடைகளிலேயே அவளைப் பார்த்திருந்தவன், ஆகாய வண்ணப் புடவையில், முழுவதும் கற்கள் பதித்து, அதன் ஜொலி ஜொலிப்பு, அவள் முகத்திலும் பிரதிபலிக்க, தேவதையாக நின்றவளை இமைக்க மறந்து பார்த்தான்.

தன்னையே இமைக்க மறந்து பார்ப்பதை, கைவிரல்களைக் கோர்த்துக் கொண்டு, லேசாகத் தலை சரித்து, காதல் பார்வை பார்த்தாள் பாரதி.

அவள் அலங்காரம் செய்து கொள்ளும் பொழுதே, இந்த அலங்காரங்களைத் தமிழ் கவனிப்பானா என்ற கேள்விதான் முதலில் எழுந்தது. என்னதான் படித்து பெரிய பதவியில் இருந்தாலும், மனதுக்குப் பிடித்தவன் தன்னை ரசிக்க வேண்டும் என்ற மனப்பான்மை, பெண்களை விட்டு அவ்வளவு சீக்கிரம் சென்று விடுமா என்ன?

பாரதியின் மனமும் அதற்கு விதி விலக்கல்ல. இப்பொழுது தமிழ், தன்னை இமைக்க மறந்து பார்ப்பது, அவளுக்கு மெல்லிய குறுகுறுப்பையும், சிலிர்ப்பையும், திருப்தியையும் ஒருங்கே அளித்தது.

அவனைக் கலைக்காமல் அமைதியாகவே நின்றிருந்தாள். பாரதியின் பாதம் முதல், அவள் முகம் வரை, தமிழின் பார்வை நிதானமாக ஊர்வலம் போனது. அவள் விழிகளைச் சந்தித்த பொழுதுதான், தான் அவளை இவ்வளவு நேரம் பார்வையிட்டுக் கொண்டிருந்தது தெரிய, வேகமாக பார்வையை விலக்கிக் கொண்டான்.

''வாங்க தமிழ்! உக்காருங்க'' அவள் தமிழில் பேச இன்னும் திகைத்தான்.

''உங்களுக்கு...'' ''தமிழ் நல்லாவே தெரியும்..'' அவன் கேள்வியை இவள் பதிலாக முடித்தாள்.

''அப்போ இவ்வளவு நாள் என்கிட்ட நடிச்சீங்க இல்ல'' கோபமாகக் கேட்டான். அவன் சிந்தையெல்லாம், அவளுக்குத் தமிழ் தெரியும் என்று சொன்னவுடனே, தேவா பேசிய பேச்சுக்கள் அனைத்தும் அவளுக்குப் புரிந்திருக்குமே என்ற எண்ணம்தான் எழுந்தது.

''நான் எதுக்கு உங்ககிட்ட நடிக்கணும் தமிழ்? அதுக்கு என்ன அவசியம் வந்துது? நீங்களாகத்தான் எனக்குத் தமிழ் தெரியாதுன்னு முடிவுக்கு வந்தீங்களே தவிர, நீங்க என்கிட்ட கேட்டு, நான் தெரியாதுன்னு சொன்னேனா?'' அவனிடமே திரும்பக் கேட்டாள்.

அதுவும் சரிதான் என்பதுபோல் அமைதியாக இருந்தவன், இப்பொழுது அது தேவையில்லை என்று முடிவெடுத்து, ''சரி அதை விடுங்க. நான் இப்போ உங்ககிட்ட வேற விஷயமா பேச வந்தேன்'' தயக்கமாகச் சொன்னான்.

''சொல்லுங்க'' அருகிலிருந்த ஸோபாவில் அமர்ந்தவள், அவனையும் அமரச் சொன்னாள்.

''இல்ல நான் நிற்கிறேன்'' அவள் கோரிக்கையை நிராகரித்தவன், நின்றுகொண்டே இருந்தான்.

அங்கே கனமான அமைதி நிலவியது. எப்பொழுதும் அவர்களுக்குள் இருக்கும் அமைதியை, பாரதிதான் கலைப்பாள். இன்று அதை கலைக்க விரும்பாமல், அமைதியாகவே அவனருகில் எழுந்து நின்றிருந்தாள்.

''பாரதி! வெளியே என்ன நடந்துட்டு இருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா..?'' மெதுவாகக் கேட்டான்.

'என் வீட்டில் நடப்பது எனக்குத் தெரியாமல் இருக்குமா?' என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

''உங்களுக்கும், எனக்கும் கல்யாணம் நிச்சயம் செய்யப் போறாங்களாம். உங்களுக்கு இதில் சம்மதமா?'' பார்வையை அறைக்குள் சுழலவிட்டவாறே கேட்டான்.

''ஆமா, என்னோட முழு சம்மதத்தோடதான் இந்த நிச்சயம் நடக்கப் போகுது'' அவனையே பார்த்தவாறு உறுதியாகச் சொன்னாள்.

''என்ன பாரதி உங்களுக்கே என்னைப்பத்தி நல்லா தெரியும்..? என்னால் ஒரு நல்ல புருஷனா நடந்துக்க முடியாது'' எடுத்தவுடனே இப்படிப் பேசும் அவனைக் கவலையாகப் பார்த்தாள் பாரதி.

''அதை எப்படி இப்போவே முடிவு செய்ய முடியும்?'' அவள் விடுவதாக இல்லை.

''ப்ளீஸ் பாரதி! என்னால் உங்கிட்ட சாதாரணமா பேசவே தயக்கமா இருக்கும் போது மத்ததெல்லாம்? சொன்னால் புரிஞ்சுக்கோங்க''

''ஏன் என்னைப் பிடிக்கலையா?''

''இதில் பிடிக்கிது, பிடிக்கலை என்ற பேச்சுக்கே இடமில்லை. இது சரிவராது என்பதுதான் சரியா இருக்கும்''

''அதான் ஏன் சரிவராது? எப்படியும் நீங்க கல்யாணம் செஞ்சுக்கப் போறீங்க. அதை என்னைப் பண்ணிகிட்டா என்ன? ஓ சில வேளை, நான் எம்டி, நீங்க என் கீழே வேலை பார்ப்பதாலையா?'' அப்படி இருக்காது என்று தெரிந்தே கேட்டாள்.

''ஹையோ பாரதி! அதெல்லாம் எதுவும் இல்லை. ஒரு பொண்ணோட எந்த எதிர்பார்ப்பையும் என்னால் பூர்த்தி செய்ய முடியாது'' அப்படியாவது அவள் மனம் மாறவேண்டும் என்று எண்ணிச் சொன்னான்.

''ஏன்?''

''என்ன ஏன்? என்னால் சாதாரணமா உங்ககிட்ட பேசவே தயக்கமா இருக்கும் போது'' அவனால் மேலே சொல்ல முடியவில்லை.

அவன் சொல்ல வருவது இன்னதென்று அவளுக்குப் புரிந்தது. ''நான் கேக்குறதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க, என்னைப் பார்த்தால் பிடிக்காமல் எரிச்சலா, கோபமா, பயம்மா இப்படி ஏதாவது இருக்கா?''

''என்ன பாரதி இது?'' சலித்துப் போனான்.

''கேட்டதுக்குப் பதில்'' ''அப்படியெல்லாம் எதுவும் இல்லை'' மெதுவாகச் சொன்னான்.

''அப்போ பிரச்சனை முடிஞ்சுது..'' குறுக்கே பேசப்போன அவனைக் கையைக் காட்டித் தடுத்தவள், ''உங்க அப்பா எவ்வளவு ஆசையா இருக்காங்க. அவரோட நிம்மதிக்காகவாவது, நீங்க ஏன் இதைச் செய்யக் கூடாது?'' வேறு வழி தெரியாமல் தான், அவள் இப்படிக் கேட்டாள்.

''பாரதி! எங்க அப்பாவோட நிம்மதிக்காகவும், சந்தோசத்துக்காகவும், உங்களோட எதிர்காலத்தையும், கனவையும், ஆசையையும் என்னால் குழி தோண்டி புதைக்க முடியாது'' உறுதியாகச் சொன்னான்.

இவ்வளவு பேசியும் அவன் முடிவில் இம்மியளவு கூட மாற்றம் இருக்கவில்லை. ''இப்போ நிஜமாவே உங்க பிரச்சனை என்ன தமிழ்? எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் உங்களை விரும்புறேன். ஐ லவ் யு தமிழ். உங்களோட இந்தத் தயக்கம், சின்னத் தடுமாற்றம், அதோட உங்களோட திறமை, இப்படி எல்லாத்தோட சேர்த்து, உங்களை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு'' அவன் கண்களுக்குள் ஆழமாகப் பார்த்து, நிதானமாகத் தன் காதலைச் சொன்னாள்.

ஒரு நிமிடம் மூச்சடைத்தது அவனுக்கு. கண்களில் காதலைத் தேக்கி, உயிர் உருக்கும் பார்வையுடன், தன்னிடம் காதலைச் சொல்லும் அவளை, மறுக்க வாய் வராமல், தடுமாறி நின்றிருந்தான்.

ஆனாலும், அவளை மறுத்தே ஆகவேண்டும் என்ற முடிவுடன், ''வாழ்க்கைக்கு, இது மட்டும் போதாது பாரதி! கல்யாணம்ன்னா அதுக்குள்ள கடமைகள் நிறைய இருக்கு. என்னால் எல்லா விஷயத்திலும் சரியா நடந்துகொள்ள முடியும்னு தோணலை. அதிலும்'' அந்த இடத்தில் அதிகமாகத் தயங்கியவன், ஒரு பெண்ணிடம் இப்படிப் பேச வேண்டியுள்ளதே என்று நொந்தவாறே, வேறு வழி இல்லாமல், ''என்னால் என்னால்'' அவனால் சொல்லவே முடியவில்லை.

''ஏன் தமிழ்! உங்களுக்கு ஹார்மோன் எல்லாம் வேலை

செய்யுமா இல்லையான்னு சந்தேகமா?'' குறும்புச் சிரிப்புடன் கேட்டாள்.

அவள் இப்படிக் கேட்டதில் திகைத்தாலும், தான் தயங்கியது இதற்குத்தானே என்பதுபோல், அமைதியாகத் தலை அசைத்தான்.

''அப்போ ஹார்மோன் எல்லாம் வேலை செய்யுமா இல்லையான்னு டெஸ்ட் பண்ணிடுவோமா?'' கேட்டவாறு நிதானமாக அவனை நெருங்கினாள்.

ஆணியடித்து வைத்தவன்போல், இம்மிகூட அசையாமல் அப்படியே நின்றிருந்தான். அவனிடம் கேட்கும் பொழுது சாதாரணமாக இருந்தது பாரதிக்கு. ஆனால், தான் செய்யப்போகும் செயலை எண்ணுகையில் மலையளவுத் தயக்கம் அவளைச் சூழ்ந்தது.

என்னதான் ஆண்களுக்கு மத்தியில் தைரியமானவளாக, சரிக்கு சரியாக செயல்பட்டாலும், சில விஷயங்களை ஆண்களால் சாதாரணமாக கையாளும் அளவு, பெண்களால் கையாள முடிவதில்லை. இப்பொழுது பாரதியின் சிந்தை முழுவதும் ஆக்கிரமித்த விஷயம் ஒன்றுதான். தமிழை தன்னிடம் நெருங்க வைக்க வேண்டும். தன் காதலை அவனுக்கு உணர்த்த வேண்டும், அவன் தயக்கத்தைத் தகர்க்க வேண்டும்.

இதை மனதுக்குள் உருப்போட்ட பிறகு, அவனை நெருங்குவது அவளுக்குக் கொஞ்சம் சுலபமாக இருந்தது. அவனோ, கண்களில் மிரட்சியுடன் அவளைப் பார்த்தான். ''என் என்ன செய்யப் போறீங்க?'' குரல் வெளியே வரவில்லை அவனுக்கு.

''அதான் சொன்னேனே ஹார்மோன் எல்லாம் வேலை

செய்யுதான்னு செக் பண்ணிடுவோம்னு'' மேலும் அவனை நெருங்க, ''அதெல்லாம் எதுவும் வேண்...'' மீதி வார்த்தைகளை அவன் உதிர்க்கும் முன்பு, அவள் இதழ்கள், அவன் இதழ்களில் ஆழமாகப் புதைந்திருந்தன.

கண்கள் இருட்டிக் கொண்டு வர, பிடிப்புக்காக, அவள் இடையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டான் தமிழ். உள்ளங்கால் முதல், உச்சி முடிவரை ஆயிரம்வாட் மின்சாரம் பாய்ந்த உணர்வில், முதல்முறையாக பெண்மையின் ஸ்பரிசைத்தையும் உணர்ந்தவன், எப்பொழுது அவளது முற்றுகையைத், தனதாக ஆக்கினான் என்று அவனே உணரவில்லை.

அதை உணர்ந்த பாரதியோ திகைத்தாள். நொடியில் அவனிடமிருந்து விலகிவிட வேண்டுமென்று அவள் எண்ணியிருக்க, தமிழ் அவளுடைய விலகும் எண்ணத்தைத் தகர்த்தான்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தார்களோ, வெளியே கதவு தட்டும் ஓசையில் வேகமாகப் பிரிந்தார்கள் இருவரும். தமிழின் செய்கையை அவனாலேயே நம்ப முடியவில்லை.

''பாரதி நான்'' தலையை அழுந்த, இடக் கையால் கோதிக் கொண்டான்.

பாரதியோ தன் கீழுதட்டைக் கடித்தவாறு, ''இப்போ கல்யாணம் செஞ்சுக்கலாமா?'' ஆழமானப் பார்வையுடன் அவள் கேட்க, தமிழின் தலை ஆமென்பதுபோல் மெதுவாக அசைந்தது.

''இந்தத் தயக்கச் சிகாமணியை கல்யாணத்துக்கு ஒத்துக்க வைக்கவே, வெட்கத்தை விட்டு, பெண்ணான

நானே இப்படி ஒரு அதிரடி நடவடிக்கையில் இறங்கவேண்டி இருக்கே கல்யாணம் முடிஞ்ச பிறகும், இதே அதிரடி நடவடிக்கைகளை மேலும் தொடர வேண்டியிருக்குமோ' மனதுக்குள் கொஞ்சம் மலைப்பாகவே உணர்ந்தாள் பாரதி .

20

நான்தானா இது?
நானே தானா?
நானாக நானில்லாமல்
போனது
எல்லாம் உன்னாலே

பாரதி நிதானமாகச் சென்று கதவைத் திறந்தாள். வெளியே பெரியவர்கள் அனைவரும் தவிப்பாக நின்றிருப்பது தெரிந்தது. அதிலும் சுப்பிரமணி, முள்ளின் மேல் நிற்பதுபோல் நின்றிருந்தார்.

'தமிழ் வந்து இவ்வளவு நேரமாயிற்று, என்ன சொல்லி, அவள் மனதைக் கலைக்கிறானோ? என்ற கவலையிலேயே நின்றிருந்தார்.

''அப்பா நீங்க முன்னாடி போங்க, நாங்க பின்னாடியே வர்றோம். ஒரு ரெண்டே நிமிஷம்'' புன்னகை முகமாக அவள் சொல்ல, அனைவரின் முகமும் மலர்ந்தது.

அவர்கள் அனைவரும் செல்ல, தேவாவோ ''தமிழ்...''

இழுக்க, ''போடான்னு நான் சொல்ல முன்னாடி போய்ட்டா நல்லா இருக்கும். உங்க ஃப்ரண்ட நான் கடிச்சு முழுங்கிட மாட்டேன்'' சொல்லிவிட்டு, அவன் பதிலை எதிர்பார்க்காமல் கதவை அறைந்து சாத்தினாள்.

'இவங்க கடிச்சு முழுங்குற வரைக்கும் அவன் நின்னுட்டுதான் மறுவேலை பார்ப்பான்' மனதுக்குள் நொடித்தவாறே அங்கிருந்து அகன்றான்.

தமிழ் இன்னுமே அதே இடத்தில் அசையாமல் நின்றிருந்தான். ''தமிழ்'' அவன் தோள் தொட்டு உலுக்கினாள்.

''பாரதி! நான் இப்படில்லாம் நிஜமாவே'' அவனுக்கு எப்படிச் சொல்ல, என்ன சொல்லவென்றே தெரியவில்லை. தானா அவளை முத்தமிட்டது என்பதை இன்னுமே அவனால் நம்ப முடியவில்லை.

அவன் தடுமாற்றத்தைக் கண்டு கொள்ளாமல், ''தமிழ்! முதல்ல கீழே நடக்கும் நம்ம விழாவை முடிச்சுட்டு வந்து நிதானமா பேசலாம். பெரியவங்க எல்லாம் ரொம்ப டென்ஷன்ல இருக்காங்க'' அவன் கைகளில் தன் கையைக் கோர்த்துக் கொண்டாள்.

என்னவோ மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன் போல, அவளோடு சென்றான். மாடியிலிருந்து சிரித்த முகமாக, கைகோர்த்து, ஜோடியாக நடந்துவரும் அவர்களைக் கீழேயிருந்த அனைவரும், மகிழ்வாகப் பார்த்திருந்தார்கள்.

''தமிழ்! கொஞ்சம் சிரிச்ச மாதிரி இருங்களேன். நான் என்னமோ உங்களை மிரட்டி கூட்டி வாற மாதிரி மூஞ்சியை இப்படி வச்சுட்டு வர்றீங்களே'' பாரதி சின்னக் குரலில் சொல்ல, முகத்தை யோசனையிலிருந்து வேகமாகத்

திருப்பினான்.

தமிழின் இந்த மாற்றம் யாரையும் விட, சுப்ரமணிக்குத்தான் பெருத்த நிம்மதியைக் கொடுத்தது. ''ரொம்ப நன்றிம்மா'' ஆத்மார்த்தமாகச் சொன்னார்.

''நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும் மாமா, தமிழ் மாதிரி ஒரு நல்லவரை எனக்குத் தந்ததுக்கு'' தமிழின் கரத்தை அழுந்தப் பற்றி, அவனையும் தங்கள் பேச்சுக்கு இழுத்தாள்.

''நல்லா இருங்கம்மா. பார்வதி இப்போ ரொம்ப சந்தோஷப்படுவா'' நெகிழ்வாகச் சொன்னார்.

''கண்டிப்பா சந்தோஷப்படுவாங்கண்ணா. சரி வாங்க, அங்கே எல்லோரும் நமக்காக காத்திருக்காங்க'' சுதா அனைவரையும் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார்.

அனைத்தும் நொடியில் நடந்தேறின. சிவன் மேடையேறியவர், ''ஹாய் ஃபிரண்ட்ஸ்! இன்னைக்கு எதுக்கு உங்க எல்லோரையும் இங்கே வரச் சொல்லியிருக்கேன்னா இன்னைக்கு என் பொண்ணு பாரதியோட பிறந்தநாள் விழா மட்டும் இல்லை. அவளோட திருமண நிச்சய விழாவும் இன்னைக்குத்தான். என்னோட மருமகன் மிஸ்டர்.தமிழன்பன்'' சொன்னவர், இருவரையும் மேடைக்கு அழைத்தார்.

தமிழுக்கு அப்பொழுதுதான் தெரியும், அன்று பாரதியின் பிறந்தநாளும் கூட என்பது. 'ஓ அதனால் தான் இவ்வளவு தைரியமா இந்த விழா ஏற்பாடா? நானும் எப்படிடா என்மேல் இவ்வளவு நம்பிக்கைன்னு நினைச்சேன்' மனம் எண்ணமிட்டது.

அந்த மேடையில் நிற்கும் போது கூட, பாரதி

கோர்த்திருந்த தமிழின் கரங்களை விடவில்லை. கேக்கை கட் செய்தவள், முதல் துண்டை தந்தையிடம் கொடுக்க, ''முதல்ல மாப்பிள்ளைக்குக் கொடும்மா'' அவர் சொல்லவே, தமிழிடம் கொடுத்தாள்.

இவ்வளவு பேர் முன்னால், அவள் கேக் ஊட்டுவது சங்கடமாக இருந்தாலும், மறுக்காமல் வாங்கிக் கொண்டான். அவன் கடித்த மிச்சத்தை அவள் சாப்பிட, ''ஹையோ எச்சி...'' அவளிடம் மெதுவாகச் சொல்ல, மற்றவர் அறியாமல் கண்ணடித்தாள் பாரதி.

கப்பென வாயை மூடிக் கொண்டான். அதன் பிறகு சுப்பிரமணி இரண்டு மோதிரங்களைக் கொடுக்க, முதலில் அவளது வெண்டைப் பிஞ்சு விரல்களை, ஒரு பூவை ஏந்துவதுபோல் ஏந்தி, அதை அணிவித்தான்.

அவளும் அவன் கையில் மோதிரம் அணிவிக்க, அனைவரின் கரகோஷமும் அலையலையாக எழுந்தது.

பஃபே முறையில் வைக்கப்பட்டிருந்த உணவைச் சாப்பிட அனைவரும் நகர்ந்துவிட, தமிழை விடவே முடியாது என்பதுபோல் நின்றிருந்தாள் பாரதி.

''ம்கும்'' ''என்ன சுஷ்மி தொண்டையில் கிச்கிச்சா...'' கேலியாகக் கேட்டாள் பாரதி.

''இல்ல நானும் இங்கே வந்து ரெண்டு மணி நேரமாகுது. உங்களுக்கு எங்களை எல்லாம் கண்ணுக்கே தெரியலையே. அதான் இப்போவாவது தெரியிறேனான்னு தெரிஞ்சுக்கத்தான் தொண்டையை செருமினேன்'' நக்கலாக விளக்கம் கொடுத்தாள்.

''ஆமா, நீ எங்கே இருக்க சுஷ்மி? உன் குரல் மட்டும் கேக்குது. ஆளையே காணோம்'' அதைவிட நக்கலாக பாரதி

பதிலளிக்க, கடுப்பானாள் சுஷ்மி.

''என்னடா மச்சான் உனக்கு சீனியர் நான் எனக்கு ஒண்ணும் நடக்க மாட்டேங்குது. உனக்கு என்னன்னா இன்னும் ஒரே வாரத்தில் கல்யாணம் என்ற அளவுக்குப் போயாச்சு. உனக்குக் கண்ணுக்குத் தெரியாத இடத்தில, எங்கேயோ மச்சம் இருக்குடா'' பொறாமையாகச் சொன்னான்.

அவன் பாவனையில் அனைவருமே சிரித்துவிட்டார்கள். அவர்கள் சிரிக்கவே, ''டேய்! சிரிக்காதடா இருந்தாலும் இந்த வாத்திக்கு இவ்வளவு ஓரவஞ்சனை ஆகாதுடா. நீ லவ் பண்ணுறேன்னு சொல்லக் கூட இல்லை, உனக்கு கல்யாணம் வரைக்கும் போய்ட்டார். நானும் ஒரு மாசமா அவர்ட்ட ஃபோன்ல புலம்புறேன் என்னைக் கண்டுக்கவே மாட்டேங்குறார்'' உண்மையான வருத்தம் அவன் குரலில்.

அவன் இப்படிச் சொல்வான் என்பதை எதிர்பார்க்காத அனைவருமே கொஞ்சம் திகைத்தார்கள். பாரதி சுஷ்மியைப் பார்க்க, அவள் அவன் கரத்தை பிடித்து ஆதரவாக அழுத்தினாள்.

''ஏய் நீயென்ன இதுதான் சாக்குன்னு தொட்டெல்லாம் பேசுற'' தேவா சுஷ்மியிடம் சொல்ல, ''போடா லூசு'' சொன்னவாறு அவன் கையை உதறினாள்.

''பின்ன நான் மட்டும் உன் கையைப் புடிச்சால் அப்படித்தானே சொல்லுவ, அதான்...'' அந்த நிலையிலும் அவன் விடாமல் வழக்கடிக்க, மீண்டும் அனைவரும் சிரித்தார்கள்.

சாப்பிட்டவாறே மூவரும் கலகலப்பாக உரையாட,

அதில் கலந்து கொள்ள முடியாமல் தமிழ் தடுமாறினான்.

''என்ன சார் சாப்பாட்டை அப்படியே வச்சுட்டு இருக்கீங்க சாப்பிடுங்க'' சுஷ்மி அவனிடம் சொல்ல, ''அவனை விடு அவன் கனவிலேயே மிதக்குறான்'' தேவா அவனை கலாய்த்தான்.

தமிழுக்குத் தனிமை வேண்டும் போலிருந்தது. இந்தக் கலகலப்பில் அவனால் இணைந்து கொள்ள முடியவில்லை. ''எக்ஸ்க்யூஸ்மீ'' சொன்னவாறு அங்கிருந்து நகர்ந்தான்.

பாரதியும் அவன் பின்னாலேயே சென்றாள். ''என்னாச்சு தமிழ்?'' தவிப்பாகக் கேட்டாள். ஏனென்றால் இவ்வளவு நேரமாக அவனது முக மாறுதல்களை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள்.

அவள் குரலிலிருந்த கனிவு அவனைக் கட்டிப் போட்டது. ''எனக்குத் தனியா இருக்கணும் போலயிருக்கு பாரதி'' தன் மனதை மறைக்காமல் அவளிடம் சொன்னான்.

''சரி வாங்க'' சொன்னவள், ஜகதீஷை அழைத்து, தாங்கள் வெளியே போய்விட்டு வருவதாகச் சொல்லி அவனை அழைத்துச் சென்றாள்.

அவளது கார் நேராக பீச்சுக்குச் சென்றது. கொஞ்சம் ஒதுக்குப்புறமான இடமாகப் பார்த்து காரை நிறுத்தினாள். காரிலிருந்து இறங்கியவன், நேராகச் சென்று கடல் அலையில் கால் நனைய நின்றான். அவனை விட்டுத் தள்ளி மணலில் அமர்ந்து கொண்டாள் பாரதி. அன்று முழு நிலவு நாள். அந்த நிலவொளியில், அவள் புடவையிலிருந்த கற்கள் ஜொலிக்க, இரவு தேவதையாக அமர்ந்திருந்தாள்.

தமிழின் மனமோ, கடலலைகளுக்குக் குறையாமல்,

ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. 'நான் செய்தது சரியா? என் வாழ்வில் இப்பொழுது ஒரு பெண் இணைந்துவிட்டாள். அவளோடு என்னால் வாழ முடியுமா? அவள் எதிர் பார்ப்புக்களை பூர்த்திச் செய்ய முடியுமா..?' அவன் எண்ணம் முழுவதும் இதைச் சுற்றியே வந்தது.

அவனுக்குத் தெரியவில்லை. உரிமை என்ற ஒன்று ஏற்படும் வரைதான் இந்தத் தயக்கமும் கலக்கமும் என்று. எவ்வளவு யோசித்தும், யோசனை முழுவதும், தாம்பத்யம் என்ற விஷயத்தில் வந்து பூதாகரமாக அவனை மிரட்டியது.

தலையை அழுந்தப் பற்றியவாறு அப்படியே செயலற்று நின்றான். அவனது குழப்பத்தைப் பார்த்தவாறு, எதுவும் சொல்லாமல் அமர்ந்திருந்தாள். எவ்வளவு நேரம் அப்படியே இருந்தானோ அவனுக்கே தெரியவில்லை.

திடீரென நினைவு வந்தவனாகத் திரும்பிப் பார்க்க, நிலவொளியில் தேவதையாக ஜொலித்துக் கொண்டிருந்த பாரதியிடம் அவன் பார்வை நிலைத்தது. மனதை ஒரு வித அமைதி சூழ, அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

''என்ன குழப்பம் தமிழ்?'' ஆதரவாகக் கேட்டாள்.

'எதுவும் இல்லை' என்பதுபோல் தலையசைத்தான்.

அவன் தலை மறுப்பாக ஆடினாலும், அவன் கண்களிலிருந்த அலைப்புறுதலும், பயமும், தயக்கமும், தவிப்பும் அவளுக்குப் புரிந்தது. ''இன்னுமே 'அந்த' விஷயத்தை மட்டுமே யோசிச்சுட்டு இருக்கீங்களா?'' அவனையே கூர்மையாகப் பார்த்தவாறு கேட்டாள்.

அவனது அமைதியே அவளுக்கான பதிலைச் சொல்ல, ''கல்யாணம்ன்னா தாம்பத்யம் மட்டும்தான்னு உங்களுக்கு யார் சொன்னது? அது ஒரு பந்தம், புது சொந்தம்

நமக்குக் கிடைக்கும். பரஸ்பரம் ஒரு நம்பிக்கை, அன்பு, அனுசரணை, ஆதரவு இப்படி எவ்வளவோ இருக்கு. ஒரு ஆண்மகனுக்கு ரெண்டாவது அம்மாவா, ஒரு பெண் மாறும் தருணம் அது.

ஒரு பெண்ணுக்குள் மனைவி மட்டும் இல்லை தமிழ், ஒரு அம்மா, ஒரு சகோதரி, ஒரு தோழி, ஒரு மகள் இப்படி பல பரிமாணங்கள் அவளுக்குள் இருக்கு. நீங்க இதுவரை எந்தப் பரிமாணத்தையும் உணர்ந்தது இல்லைன்னு எனக்குத் தெரியும். எடுத்த உடனே, நீங்க ஏன் மனைவியை மட்டும் பாக்குறீங்க?

முதல்ல அம்மா, அடுத்து தோழி, சகோதரி இது எல்லாம் தாண்டி பிறகுதான் மனைவி. முதல்ல நம்ம பந்தத்தை மனசளவில் ஏத்துக்கப் பழகுங்க. அதுக்குப் பிறகு மத்ததெல்லாம் தானா நடக்கும் சரியா..?'' அவன் கண்களுக்குள் ஆழமாகப் பார்த்து அவள் சொல்ல. மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன்போல், மென்மையாக தலை அசைத்தான்.

''என்ன சொன்னாலும் தலை மட்டும்தான் அசைப்பீங்களா? அதுவும் கடலைப் பாத்து. பேசுனது நான் என் கண்ணைப் பாத்துச் சொல்லுங்க, ஓகேயான்னு. இதுதான் உங்களுக்கு முதல் பாடம். யாரன்னாலும் கண்ணைப் பாத்து பேசுறது. ஓகே'' அழுத்தமாகக் கேட்டாள்.

''சரி'' இப்பொழுது அவள் கண்களைப் பார்த்து, அழுத்தமாகவே அவனும் சொன்னான்.

''இப்போ உங்க குழப்பம் எல்லாம் தீர்ந்துதா? வீட்டுக்குப் போகலாமா எல்லோரும் நம்மை தேடிட்டு

இருப்பாங்க'' கேட்டவாறு அவள் எழுந்து கொள்ள, அவளுக்கு இணையாக சேர்ந்து நடந்தான்.

அனிச்சையாகவே அவன் கரங்கள், அவள் கரங்களைப் பற்றிக் கொண்டது. ஆச்சரியமாக அவனைத் திரும்பிப் பார்க்க, அவனோ அவள் கரங்களைப் பற்றியதைக் கூட உணராமல் வந்து கொண்டிருந்தான். தனக்குள் சிரித்தவாறு தானும் அவன் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள்.

அதன் பிறகு வந்த நாட்கள் ஒருவித அமைதியுடனே கடந்தது, தமிழுக்கு. ஆனால், பாரதி நிறையவே யோசித்தாள். தமிழின் தயக்கத்தை எப்படி விரட்டவென்று அவளுக்கு எந்த வழியும் தோன்றவில்லை. முதலில் திருமணம் நல்லபடியாக முடியட்டும் என்று இருந்துவிட்டாள். சரியாக ஏழாம் நாள் அவர்கள் திருமணம்.

திருமணம் மும்பையிலேயே நடத்துவது என்று முடிவு செய்தார்கள். சுப்ரமணிக்கும் உடன் பிறந்தவர்கள் யாரும் கிடையாது. பார்வதி இறந்தவுடனே அவர்கள் வீட்டுச் சொந்தமும் விட்டுப் போனது. சுதா, சிவன் இருவரும் சொந்தங்களைத் தொலைத்தவர்கள், எனவே திருமணம், அவர்கள் நண்பர்கள், தொழில் முறை நண்பர்கள் முன்னிலையிலேயே நடை பெற்றது.

தமிழ் ஒருவித மோன நிலையிலேயே இருந்தான். தேவாவின் கலாட்டா, கிண்டல் இவை எதுவும் கூட அவனை அசைக்கவில்லை. சில வேளை, அவன் கேலி எல்லை மீறும்பொழுது, அவனை கோபிக்கவாவது செய்வான், இன்று அதையும் செய்யவில்லை.

''என்னடா முற்றிலும் துறந்த முனிவன் மாதிரி, இப்படி

விறைப்பா, ஹோம குண்டத்துக்கு முன்னாடி உக்காந்திருக்க. இப்போ உன்னைப் பார்த்தால் எனக்கே, நீ சிலையா, இல்லை மனுஷனான்னு சந்தேகம் வருது. கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருடா'' கேலியை விடுத்துச் சொன்னான்.

அதன் பிறகு கொஞ்சம் இயல்பாக இருக்க முயன்றான். ஐயர் மணப்பெண்ணை அழைத்துவரச் சொன்ன பொழுது, அவன் கண்கள் ஆவலாகவே பாரதியின் வருகையை எதிர்பார்ப்பதை திகைப்பாகவே உள் வாங்கினான்.

திருமாங்கல்யத்தை அவள் கழுத்தில் சூட்டும் பொழுது, கர்வமாக உணர்ந்தான். இவள் என்னவள், எனக்கே உரிமையானவள் அவன் உள்மனம் கூச்சலிட, அந்த ஓசையைக் கூட இனிமையாகவே உணர்ந்தான்.

அதன் பிறகு நடந்த திருமண விளையாட்டுக்கள் அனைத்திலும் அவளுக்காக விட்டுக் கொடுத்தான். 'ஏன்?' அவள் கண்கள் ரகசியமாக அவனிடம் வினவியபொழுது, கீழுதடை நீட்டி, 'தெரியவில்லை' என்று பதில் சொன்னான்.

அவனுக்கு பாரதியிடம், முன்பு இருந்த தயக்கங்கள், முழுமையாக இல்லையென்றாலும், பெரும்பான்மை காணாமல் போயிருந்தது. சாயங்காலம் ரிசப்ஷனில் கூட, இருவரின் ஜோடிப் பொருத்தம் கண்டு, அனைவரும் வியந்தார்கள்.

பாரதி, முழுவதும் கல் வேலைப்பாடு அமைந்த காக்ராச்சோளி உடை அணிந்திருந்தாள். தமிழ், அவள் உடைக்கு ஏற்ற வண்ணத்தில், ஷெர்வானி அணிந்திருந்தான். ''பாரதி உனக்கு இந்த ட்ரெஸ் ரொம்ப

அழகா இருக்கு'' என்று சொல்லும் அளவு முன்னேறியிருந்தான்.

ஆனாலும், நேரம் செல்லச் செல்ல இரவை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? என்ற பயம் அவனை ஆட்கொள்ளவே செய்தது.

21

என்னவள் நீ
எனக்கானவள் நீ
என்னுயிர் நீ
நீ நானாவது எப்பொழுது?

தமிழுக்கு, அந்த ஏசி அறையிலும் வேர்த்து வழியும்போலிருந்தது. அந்தநேரம், தேவா சொன்னது, அசந்தர்ப்பமாக நினைவில் வந்தது.

''டேய் மச்சான் உள்ளே போன உடனே, இழுத்துப் போத்திகிட்டு தூங்கிடாமல், பாரதி வரும் வரைக்கும் முழிச்சு இருடா. பிறகு உன்னைப் பார்த்துட்டு, நீ எதுக்குமே வேலைக்காக மாட்டேன்னு அவங்க முடிவு பண்ணிடப் போறாங்க. அதேமாதிரி அவங்க வந்த உடனே படக்குன்னு லைட்டை ஆப் பண்ணிட்டு, அவங்களை இறுகக் கட்டிக்கோ.

மத்ததெல்லாம் தானா நடக்கும். அத்தோட கன்னா பின்னான்னு முத்தம் கொடுத்துடு இப்படி பூனை மாதிரி

அவங்க முன்னாடி நடுங்குனா, உன்ன மத்த பொண்ணுங்க சொன்ன மாதிரி சொல்லிடப் போறாங்கடா. பார்த்து நடந்துக்கோ அவ்வளவுதான் சொல்லுவேன்'' இப்படி வேறு மூளைச் சலவை செய்து அனுப்பியிருந்தான்.

அதென்னவோ மற்ற பெண்களோடு பாரதியை ஒப்பிட்டுப் பார்க்கவே அவனால் முடியவில்லை. பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் பொழுது, டியூசன் சென்ற பொழுது, அவனுக்கு ஏற்பட்டசில கசப்பான அனுபவங்களே, அவனை பெண்கள் என்றாலே காத தூரம் ஓட வைத்தது.

இதேநேரம் பாரதி, அவள் அம்மாவிடமிருந்து அறிவுரை கேட்டுக் கொண்டிருந்தாள். ''பாரதி, இவ்வளவு நாள் நீ விளையாட்டுத்தனமா இருந்தது போதும், இனிமேலாவது ஒரு பொண்ணு மாதிரி நடந்துக்கோ'' அவர் சொல்ல,

''இப்போ மட்டும் என்ன பையன் மாதிரியா நடந்துக்கறேன். சரி எனக்குத்தான் நடக்கத் தெரியலை, கொஞ்சம் நடந்து காமிங்க, கத்துக்கறேன்'' அவள் வெடுக்கெனக் கேட்டாள்.

''பார்த்தியா இதுக்குத்தான் சொல்லுறேன்... இப்போகூட புதுப்பொண்ணு மாதிரியா நடந்துக்கற''

''நான் அதே பழைய பாரதிதாம்மா. அதுசரி புதுப்பொண்ணுக்குன்னு தனி நடை எல்லாம் வேற இருக்கா என்ன?'' போலியாக வியந்துக் கேட்டாள்..

''நான் சொல்ல வர்றதை கேட்கவே மாட்டியா?'' அவருக்குத்தான் ஆக எகிறியது.

''அம்மா நீங்க போங்க நான் பாரதியைப்

பார்த்துக்கறேன்'' சுஷ்மி அவர்களுக்கிடையில் புகுந்து சொன்னாள்.

''என்னவோம்மா இவ நடந்துக்குறது எதுவுமே எனக்குச் சரியா படலை. உன் ப்ரண்டு தானே, கொஞ்சம் புத்திமதி சொல்லி அனுப்பும்மா'' அலுத்தவாறே, அங்கிருந்து அகன்றார்.

''உனக்கு எந்த நேரம் விளையாடுறதுன்னு ஒரு இதே கிடையாதா? அவங்க என்ன சொன்னாலும் சரி சரின்னு கேட்டுட்டு போறதை விட்டுட்டு'' பாரதியைக் கடிந்து கொண்டாள்.

''நீயே பார்த்தல்ல சுஷ்மி பொண்ணு மாதிரி நடந்துக்கணுமாம் இப்படி சொல்லியே என்னை கஷ்டப் படுத்துறாங்க. நானும் எவ்வளவுதான் பொறுப்பேன்'' கவலையாகக் கேட்டாள்.

''அவங்க பெரியவங்க அப்படித்தான் இருப்பாங்க. அதுக்குன்னு நீயும் சரிக்கு சரி சண்டை போடணுமா? முதல்ல உன் ரூமுக்குப் போ. ஏற்கனவே மணி பதினொண்ணுக்கு மேல ஆச்சு'' சொன்னவாறு அவளை, அவள் அறையில் விட்டுவிட்டுக் கிளம்பினாள்.

தேவா அவளை, அவள் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். ''நான் கிளம்புறேன் சுஷ்மி'' தன்னிடம் விளையாடாமல், கேலி செய்யாமல், சோர்ந்து போகும் அவனையே ஒருவித இயலாமையுடன் பார்த்திருந்தாள் சுஷ்மி.

ஏற்கனவே தேவா வந்து, அவளது தந்தையிடம் பேசி பெண் கேட்டான். அவள் வீட்டில் சொன்ன ஒரே நிபந்தனை, பெரியவர்கள் வந்து கேட்கட்டும் என்பதுதான்.

தேவாவும் அவன் பெற்றோருக்குப் ஃபோன் செய்தான். விஷயத்தைக் கேள்விப்பட்டவர்கள், "கல்யாணம் முடிஞ்சுடுச்சா..? இல்ல இனிமேல் தானா?" என்று கேட்டதோடு மட்டுமல்லாமல், அவனது திருமணத்துக்கு வாழ்த்துக்கள் என்று கூறி வைத்து விட்டார்கள்.

அவனது அண்ணன்மாருக்கும், அவனுக்கும் எப்பொழுதுமே ஒத்துப் போவதில்லை. எனவே அவர்களிடம் உதவி கேட்க அவனுக்குத் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. சுப்ரமணியிடம் சொல்ல, அவரோ அவனது காதலைக் கண்டுகொள்ளவே இல்லை.

அத்தோடு "உன்னை நம்பி ஒரு பொண்ணோட வீட்டுப் படியேற நான் தயாரா இல்லடா" கறாராக சொல்லிவிட்டார். சுஷ்மியை அவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தான். அவரும் அவளிடம் நீண்ட நேரம் பேசுவதை அவன் பார்த்தான்.

அதோடு, தமிழின் திருமண வேலையில் அவர் பிஸியாகிவிட, அவரையும் தொல்லை செய்ய முடியாமல் தவித்தான். மண்டபத்தில் தமிழின் திருமணம் முடிந்தவுடன், சுஷ்மியின் கண்களை ஏறிட்டவனின் பார்வையில் வழிந்த ஏக்கம், சுஷ்மியை வாட்டியது.

தேவா எதையுமே சீரியசாக எடுக்காமல், விளையாட்டுத்தனமாக இருப்பவன் தான். ஆனால், அவளிடம் கொண்ட காதலில் துவக்கம் முதலே அவன் உறுதியாகத்தான் இருந்தான். சொல்லப்போனால் அவளைத் தனியாக சந்திக்கும் வேளைகளில், அவளுக்குத் தமிழ் தெரியாது என்ற தைரியத்தில், அவன் பேசிய பேச்சுக்கள்

தான், சுஷ்மியை அவன்பால் காதல் கொள்ள வைத்தது.

முதல்நாள் அவளைக் கட்டாயப்படுத்திக் கோவிலுக்கு அழைத்துச் சென்றவன், ''சாமி உன் பேரெல்லாம் எனக்குத் தெரியலை. இதோ என்கிட்ட நிக்கிறாளே இவளை எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு. இவதான் எனக்கு பொண்டாட்டியா வரணும். நான் தனியா வந்து கேட்டால் நீ ஒத்துப்பியான்னு எனக்குத் தெரியாது, அதான், இவளையும் சேர்த்து கூட்டி வந்திருக்கேன். என்ன சரியா?'' என்று கேட்டவாறு அவன் வேண்டிய அந்த நொடிதான், சுஷ்மி அவன்மேல் காதல் கொண்ட நொடி.

அத்தோடு பார்க் சென்று அமர்ந்திருக்கும் வேளைகளில், எவ்வளவோ கேலியாகப் பேசினாலும் ''சுஷ்மி இப்படியே என்னோட வந்துடுறியா? நான் உன்னை நல்லா பார்த்துப்பேன். இந்தப் பெருசுங்களை எல்லாம் நம்பினால் வேலைக்காகாது ப்ளீஸ்'' அவன் சொன்ன பொழுது, முகம் மாறாமல் காக்க அவள் பட்ட அவஸ்தை அவளுக்குத்தான் தெரியும்.

சில வேளைகளில், சுவாரசியமாக அவன் கேலியில் கலந்து, வாய்விட்டு சிரிக்கும் வேளைகளில், ''இப்படி சிரிச்சுத் தொலையாதடி என்னால் என்னையே அடக்க முடியலை எங்கேயாவது தூக்கிட்டுப் போய்...'' ஒருநாள் சொல்ல, அதிர்ச்சியில் ''க்யா? என்று அதிர்ந்த பொழுது, ''ஐ லவ் யு சுஷ்மி! ஐ வான்ட் யூ பேட்லி'' அவள் கண்களுக்குள் பார்த்து அவன் சொன்ன நொடியில் எப்பொழுதும், எதற்காகவும் அவனை இழப்பதில்லை என்ற முடிவுக்கு அவள் வந்திருந்தாள்.

எனவேதான் அன்று கையில் தாலியை வைத்துக்

கொண்டு அவன் மிரட்டியபொழுது, அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு தன் காதலை அவனிடம் சொல்லிவிட்டாள். இப்பொழுது அதையெல்லாம் எண்ணும் வேளையில், அவளை அறியாமலேயே அவள் கண்கள் கலங்கியது.

தன் அலைபேசியை எடுத்தவள், சில எண்களை அழுத்திவிட்டுக் காத்திருந்தாள். அந்தப்பக்கம் ஹலோ என்ற சத்தம் கேட்கவே, தன் மனதில் உள்ள பாரங்கள் அனைத்தும் கரையும் அளவு, அழுது கரைந்துவிட்டாள்.

அவள் அழுகையை எதிர்பார்க்காத அந்த நபரோ, இன்னும் இரண்டு நாளில் நல்ல முடிவு எடுப்பதாகச் சொன்னபிறகே, நிம்மதியாக வீட்டுக்குள் சென்றாள்.

இங்கே தன் அறைக்குள் சென்ற பாரதி, பால் டம்ளரை, தமிழிடம் கொடுத்தாள். ''தமிழ்! நைட் பால் குடிப்பீங்களா? இந்தாங்க முதல்ல இதைக் குடிங்க. ஏதோ சம்பிரதாயமாம் அம்மா கொடுக்கச் சொன்னாங்க'' சாதாரணமாக அவன் கையில் கொடுத்துவிட்டு, அவள் கப்போர்ட் அருகில் சென்றாள்.

''தமிழ்! அந்தப் பட்டு வேஷ்டியைக் கட்டிக்கிட்டு இருக்க கஷ்டமா இருந்தால், உங்களுக்குத் தோதான வேற ட்ரெஸ் மாத்திக்கோங்க. நானும் நைட்டி மாத்திக்கறேன் இந்தப் புடவையோட என்னால் இருக்க முடியாது'' சொன்னவள் அவன் பதிலை எதிர்பார்க்காமல், பக்கத்திலிருந்த சிறிய அறைக்குள் சென்று மறைந்தாள்.

பத்து நிமிடங்களில், உடை மாற்றி, அனைத்து நகைகளையும் கழட்டி வைத்துவிட்டு, கழுத்தில் அவன் கட்டிய தாலி மட்டுமே இருக்க, அவன் அருகில் வந்தாள்.

அவனும் அதற்குள் முக்கால் பேண்டுக்கு மாறியிருந்தான்.

அவன் வலது காலில், பேண்டெய்ட் சுற்றியிருக்கக் கண்டாள். ''இன்னுமா உங்க கால் வலி சரியாகலை?'' கேட்டாள்.

''சாதாரணமா நடக்கும்போது எதுவும் தெரியாது. திடீர்ன்னு நடந்தாலோ, இல்லன்னா ரொம்பநேரம் நின்னாலோ கொஞ்சம் வலிக்கும். அதான் ஒரு க்ரிப்புக்கு வேண்டி கட்டியிருக்கேன். உள்ளே போட்ட கம்பியும் இன்னும் எடுக்கலை. அதனாலயும் வலி இருக்கலாம்னு சொன்னாங்க..'' இவ்வளவு நேரம் தயக்கமாக அமர்ந்திருந்தவன்,

பாரதியின் சாதாரணமான பேச்சில் தன்னை மீட்டுக் கொண்டான். எனவே அவளிடம் இப்பொழுது அவனால் சாதாரணமாகப் பேச முடிந்தது.

''அப்படின்னா இப்போ ரொம்ப வலி இருக்கா?'' அந்தக் கட்டை வருடியவாறு கேட்டாள்.

''அதெல்லாம் இல்லை கொஞ்சம் வலி இருக்கு'' சொன்னவன் கட்டை அவிழ்த்தான். ''ஸ்'' அவன் வாய் வலியில் தானாகவே ஒலி எழுப்பியது.

''இதுதான் கொஞ்சம் வலியா? இருங்க என்கிட்ட ஒரு எண்ணெய் இருக்கு. அதைப் போட்டால் வலி குறைஞ்சுடும். இல்லன்னா மாத்திரை ஏதாவது போடுறீங்களா?'' எண்ணெயை எடுத்து வந்தவள், அவன் காலில் தானே போட்டு விட்டாள்.

''பாரதி! என்ன இது? நானே போட்டுக்கறேன்'' அவன் அவளைத் தடுத்தான்.

''ஏற்கனவே கால் வலி, இதில் நீங்களே எண்ணையும்

போடணும்னா கஷ்டமா இருக்கும். எனக்குத் தலைவலி, கால் வலி எல்லாம் வந்தால், எங்க அம்மாதான் தைலம் தேச்சு விடுவாங்க. அந்தச் சுகமே தனி தெரியுமா?'' பேச்சுவாக்கில் அவள் வேலையை முடித்தாள்.

''சரி இப்போ படுத்துக்கோங்க எனக்கு ரொம்பத் தூக்கம் வருது'' இடக்கையின் மறைவில் கொட்டாவியை வெளியேற்றியவள், பாத்ரூம் சென்று கை கழுவிவிட்டு, அவன் அருகில் வந்து படுத்தாள்.

படுத்தவள் நொடியில் உறங்கிவிட்டாள். தமிழுக்குத்தான் அவள் செய்கையில் ஏதோ ஏமாற்றம் மனதில் படர்வதுபோல் உணர்ந்தான். அன்றைய அவளது முத்தம், அவனுக்குள் நிறைய புதுவிதமான உணர்வுகளை ஊட்டியிருந்தது என்பதுதான் உண்மை.

'ச்சே முதலிரவும் அதுவுமா, ஒரு முத்தம் கூட இல்லாமல் என்ன வாழ்க்கை இது?' அவன் மனம் அலுத்துக்கொள்ள, திகைத்தான் தமிழ்.

பின்னர் அதை உதறிவிட்டு, அவளைப் பார்த்தவாறே கண்களை மூடி உறங்க முயன்றான். உறக்கமும் அவனை நெருங்கியது.

காலையில் தமிழ் கண் விழிக்கும் போது, தன்மேல் ஏதோ பாரமாக உணர்ந்தான். 'என்ன இது..?' என்ற யோசனையோடு கண் விழிக்க, பாரதியோ, அவன் கை வளைவில் முகம் புதைத்து, ஒரு கையும், காலும் அவன்மேல் போட்டுக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தாள்.

எழுந்து செல்லவா, வேண்டாமா என்று அவன் மனம் பட்டிமன்றம் நடத்த, இறுதியில் அவளை விலக்கிச் செல்ல மனமில்லாமல், அப்படியே படுத்தவாறு அவள் உறங்கும்

அழகை ரசித்தான்.

அவளது அருகாமை அவனுக்குள் கனலை மூட்டிக் கொண்டிருந்தது. அவளை அப்படியே இறுக்கி, அவள் இதழில் தன் இதழைப் புதைக்க எழுந்த ஆவலை, அடக்கப் போராடினான். இறுதியில் பாரதியின் அலைபேசி அலாரம் அடிக்க, அவன் உணர்வுகள் அறுந்தது. ஆனால், அவளோ கண்களைத் திறக்காமலேயே, கைகளால் அலைபேசி எங்கே எனத் துழாவினாள்.

அவள் கண்களைத் திறக்காமல் இருப்பதைப் பார்த்தவன், அவள் அலைபேசியை எடுத்து அவள் கையில் கொடுக்க, அதை நிறுத்திவிட்டுத் தன் தூக்கத்தைத் தொடர்ந்தாள்.

'என்னடா இது? இவ எப்போதான் முழிப்பா?' அப்படியே அசையாமல் இருப்பது அவனுக்குச் சங்கடமாக இருந்தது. அதைவிட சிறிது நேரத்துக்கு முன்னால் எழுந்த அவன் உணர்வுகள், மீண்டும் தலைதூக்கப் பார்த்தது.

தூக்கத்திலேயே பாரதி தன் முகத்தை அவன் தோள் வளைவில் தேய்க்க, அப்பொழுதுதான், தன் தலை தலையணையில் இல்லை என்பதை உணர்ந்து, மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். ஆனால், தமிழோ, அவள் செய்கையில் இன்னும் தன்னிலை இழந்தான்.

இதுவரை ஒரு பெண்ணின் அருகாமையையே உணராதவன், இவ்வளவு நெருக்கத்தில், அவள் தனது முகத்தை, அவன் தோளில் தேய்க்கையில் அந்தக் கன்னத்தின் மென்மையைத், தன் கன்னங்கள் உணர வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

ஆனால், பாரதியோ, தன் பக்கத்தில் யாரோ

படுத்திருப்பது புரிய, வெடுக்கென எழுந்து அமர்ந்தாள். ''ஓ சாரி. நான் வழக்கமா கட்டிப் புடிச்சுட்டுத் தூங்கும் என்னோட தலையணைன்னு நினச்சுட்டேன். நீங்க தூங்குனீங்களா இல்லையா? ஐ'ம் ரியல்லி சாரி'' சங்கடமாகச் சொன்னாள்.

தன் நெருக்கம் அவளுக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லையா? ஏமாற்றம் மனதைச் சூழ, அதை அறிந்தே ஆகவேண்டும் என்ற வேகம் பிறந்தது.

''ஏன் பாரதி நீ நல்லா தூங்கினியா? உனக்கு எதுவுமே தோணலையா?'' ஒரு வேகத்தில் கேட்டுவிட்டான். கேட்ட பிறகுதான், இது என்ன இப்படிக் கேட்டுவிட்டோம் என சங்கடமாக உணர்ந்தான்.

'அப்படி வாடி மாப்பிளை வழிக்கு' மனதுக்குள் எண்ணியவள், ''நான் நல்லாத் தூங்கினேன் தமிழ். சொல்லப்போனால் இப்படி கட்டிப் புடிச்சுட்டு தூங்கினால் தான் எனக்குத் தூக்கமே வரும் அது சரி என்னமோ தோணலையான்னு கேட்டீங்களே உங்களுக்கு ஏதாவது தோணிச்சா?'' பொங்கிய சிரிப்பை தொண்டைக் குழியிலேயே புதைத்தவள், வெளியே சாதாரணமாகவே கேட்டாள்.

''இல்..ல அப்படில்லாம் எதுவும் இல்லை. சும்மா...'' சமாளித்தான்.

''தமிழ்! அது ஒண்ணும் இல்லை உங்ககூட உங்க அண்ணாவோ, தம்பியோ இப்படிக் கூடப்படுத்து பழக்கம் கிடையாது இல்ல. அதான் உங்களுக்கு கஷ்டமா இருந்திருக்கும். நீங்க என்னை, உங்களோட அண்ணாவாவோ, இல்ல தம்பியாவோ நினச்சுக்கோங்க. உங்களுக்கும் எதுவும் தோணாது, பழகிடும்'' அப்பாவியாகக் கண்

கொட்டிச் சொல்லிவிட்டு பாத்ரூமுக்குள் புகுந்தவள், பொங்கிச் சிரித்தாள்.

''இப்போதானே ஆரம்பிச்சு இருக்கேன் அதுக்குள்ள தோணுதா இது அதிகநாள் எடுக்காது'' தனக்குத் தானே பேசிக் கொண்டவள், தன் ஆடையில் இருந்து எழுந்த, தமிழின் பிரத்தியேக வாசத்தில், கொஞ்ச நேரம் லயித்திருந்தாள்.

வெளியே இருந்த தமிழோ 'என்னது அண்ணானாவோ தம்பியாவோ நினைக்கிறதா? விளையாடுறாளா இவ... டேய் தமிழ்! இப்போல்லாம் அவகிட்ட இருந்தாலே என்னன்னவோ தோணுது. இப்போ பார்த்து இப்படி சொல்லுறா' எழுந்த பெருமூச்சை மறைக்காமல் வெளியிட்டான்.

22

உன்னை நெருங்க
உள்மனம் தவிக்க
உணர்வுகள் மட்டும்
உறவாடத் தயங்குவதேன்

''**பா**ரதி கல்யாணம் ஆகி முதல் நாளே, இப்படி கும்பகர்ணி மாதிரி தூங்கி எழுந்து வாற. மாப்பிள்ளை உன்னைப்பத்தி என்ன நினைப்பார்? அவருக்கு காஃபி கொடுக்கணும்னு கூட இல்லாமல், இப்படி லேட்டா எழுந்து வாறியே. கல்யாணத்துக்கு முன்னாடிதான் அப்படி இருந்தன்னா, இப்போ உனக்கு கல்யாணம் ஆனபிறகும்

பொறுப்பில்லாமல் நடந்துக்கற'' அவளை கரித்துக் கொட்டினார் சுதா.

''அம்மா கொஞ்சம் நிறுத்துறீங்களா. முதல்ல கல்யாணம் செஞ்சுக்கலன்னு புலம்புனீங்க இப்போ மாப்பிள்ளையை கவனிக்கலன்னு புலம்புறீங்க நான் என்னதாம்மா செய்யட்டும். நான் என்ன செய்தால் நீங்க இப்படி புலம்புறதை நிறுத்துவீங்க. காலையில் எழுந்து நிம்மதியா காஃபி கூட குடிக்க விடாமல் இப்போ என்ன உங்க மாப்பிள்ளைக்கு நான் காபி கொடுக்கணும் அவ்வளவு தானே. காபியை கையிலே கொடுக்காமல், ஊட்டியே விட்டுட்டு வாரேன். இப்போ நீங்க ஹாப்பி தானே'' சொன்னவள், எதிரில் வந்த தந்தையிடம் கண்ணை சிமிட்டி, கேலிப் பார்வை பார்த்தவாறு சென்றாள்.

தன்னிடம் குறும்பு செய்தவாறுச் செல்லும் மகளை வித்தியாசமாகப் பார்த்தவர், கிச்சனில் உறைந்து போய் நின்றிருந்த மனைவியைப் பார்த்து, வியந்தார்.

''சுதா! என்ன இப்படி திகைச்சு போய் நின்னுட்டு இருக்க?'' அவரை உலுக்கினார்.

''உங்க மக என்ன சொல்லிட்டு போறா கேட்டீங்களா? இன்னைக்கு நான் பேசிய பேச்சுக்கு, ஏதாவது ரொம்ப கத்தப் போறான்னு பாத்தால், சிரிச்சுட்டே போறா. அதான் இப்படி திகைச்சு போய் நிக்கிறேன்'' நம்ப முடியாமல் சொன்னார்.

''என்ன சுதா அவ பொறுப்பா, இருக்கான்னு சந்தோஷப்படாமல், நீ அதிர்ச்சியாகுற அளவுக்கு என்ன இருக்கு?'' அவருக்குப் புரியவே இல்லை.

''உங்களுக்கு சொல்லி விளக்கிட்டாலும்... இருந்தாலும், என்னால் நம்பவே முடியலை. அங்கே போய்

மாப்பிள்ளையை என்ன பாடு படுத்துறானோ'' தன்போக்கில் புலம்பியவர், காலை உணவுக்குத் தேவையானவற்றைக் கவனிக்கச் சென்றார்.

சிவமும் மேலே அதைப் பற்றி விவாதிக்காமல், செய்தித்தாளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார்.

அறைக்கு வந்த பாரதியின் கண்கள் தமிழ் எங்கே என்று தேடியது. அவன் தங்கள் அறையை ஒட்டிய பால்கனியில் இருப்பது தெரிய, அங்கே சென்றாள்.

''இங்கே என்ன பண்ணிட்டு இருக்கீங்க? கீழே வந்து அண்ணா, அப்பாவோட பேசிட்டு இருக்க வேண்டியது தானே. புது இடம்னு தயக்கமா இருக்கா?'' கேட்டவள், அவன் கையில் காஃபியைத் திணித்துவிட்டு, சாதாரணமாக அவன் சிகைக்குள் கை விட்டு அளைந்து, ''தலையை சரியாவே துவட்டிக்கலையா'' என்றவாறு, அவன் முடியைக் கலைத்துவிட்டாள்.

அவனுக்கு இந்த அனுபவங்கள் அனைத்தும் புதிது. சுப்பிரமணி அவனைக் கண்ணுக்குக் கண்ணாக பார்த்துக் கொண்டார். ஆனாலும் சில உணர்வுகளை, நெருக்கத்தை, நுணுக்கமான கவனிப்பை பெண்ணால் மட்டுமே கொடுக்க முடியும் என இப்பொழுது எண்ணினான். அவள் இன்னும் தலையை கலைக்க மாட்டாளா? என்று அவன் உள்ளம் ஏங்கியது. அவள் மடியில் படுத்துக் கொள்ள வேண்டும் என்பதுபோல் ஒரு உணர்வு கிளர்ந்து அவனை ஏங்க வதைத்தது.

அதையே அவன் பார்வையும் வெளிப்படுத்த, ''என்ன தமிழ்! அப்படிப் பார்க்குறீங்க? உங்க தலையை கலைச்சுட்டேன்னு கோபமா?'' அவன் நிலை புரிந்தும்,

புரியாதவள் போல் நடித்துக் கேட்டாள்.

''இல்ல அப்படில்லாம் இல்லை'' எங்கே கையை எடுத்துவிடுவாளோ என்று வேகமாகச் சொன்னான்.

''எங்க அம்மா, நான் குளிச்சுட்டு ஈரத் தலையோட போனால், இப்படித்தான் என் முடியைக் காய வைப்பாங்க. அப்படியே நிறைய அருள்வாக்கும் சொல்லுவாங்க'' சொன்னவாறு கலகலத்துச் சிரித்தாள்.

அவளது சிரிப்பு அவனையும் தொற்றிக் கொள்ள, ''அதென்ன அருள் வாக்கு'' அவன் குணத்தையும் மீறி, அவளிடம் கேட்டுவிட்டான்.

அவனது கேள்வியில் அவள் கண்களில் சின்ன மெச்சுதல் வந்து போக, அதை அவனுக்கு மறைத்தவாறே, ''வேற என்ன ஆளுதான் வளந்திருக்க, இன்னும் தலையைக் கூட காய வைக்கத் தெரியாதா? இப்படி இருந்தால், சளிப் பிடிக்காமல் என்ன செய்யும்? பிறகு சாயங்காலம் தலைவலின்னு என்கிட்ட தைலம் தேக்க வரணும் ப்ளா ப்ளா ப்ளா'' அவள் சொல்லிக் கொண்டே போனாள்.

''ஓ'' அவன் குரலில் மெல்லிய ஏக்கம். ''எனக்குத்தான் அம்மா கிடையாதே அவங்களை நேர்ல பார்த்த ஞாபகம் கூட இல்லை. எல்லாமே அப்பாதான் அவர் எனக்கு எந்தக் குறையும் வைத்தது கிடையாது. ஆனாலும்...'' தன் மனதிலிருந்ததைக் கொஞ்சம் கொட்டியவன், பிறகு ஏனோ அமைதியாகிவிட்டான்.

''அதனால் என்ன தமிழ் அதான் இப்போ உங்களுக்கு நான் இருக்கேனே. என் தமிழை இனிமேல் நான் பாத்துக்கறேன்'' அவனிடம் சொன்னவள், அவன் கன்னங்களில் கை கொடுத்து, அவன் முகத்தை

நிமிர்த்தியவள், ''உங்களுக்கு ஓகே தானே'' அவன் கண்களுக்குள் ஊடுருவியவாறுக் கேட்டாள்.

'ஹையோ இது என்ன பார்வை. என் உயிர் வரை உருக வைக்கிறாளே' அவன் மனம் புலம்ப,

பதில் சொல்ல வாய் வராமல், காஃபிக் கோப்பையை, அங்கிருந்த டீபாயில் வைத்துவிட்டு, அவள் கைகளுக்குமேல் தன் கைகளை வைத்து, அவள் கரங்களை தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டான். அவன் வாய் சொல்லாத வார்த்தைகளை, அவன் செய்கை அவளுக்கு உணர்த்தியது.

அவள் கரங்களில் உணர்ந்த, அவனது மெல்லிய தாடியில் உரசலில், பாரதி மெல்லிய குறுகுறுப்பை உணர்ந்தாள். அதை அவனிடமிருந்து மறைத்தவாறே, ''சரி வாங்க டிபன் சாப்பிடப் போகலாம். அங்கே வந்து எல்லார்ட்டயும் கலகலன்னு பேசுங்க. இப்படி அமைதியா இருந்தால் எனக்குப் பிடிக்காது. நான் நூறு வார்த்தை பேசினால், நீங்க பத்து வார்த்தையாவது பேச வேண்டாமா?'' கேட்டவாறு, அவனையும் கையேடு கிளப்பிக் கொண்டு சென்றாள்.

பாரதியின் அருகில் தான் அவளது கைப்பாவைபோலும், அவள் ஆட்டுவிக்க ஆடும் பொம்மை போலும் உணர்ந்தான். ஆனால், அது அவனுக்குப் பிடித்திருந்தது. அவளது தடையற்ற பேச்சு, தயங்காத நடத்தை, இயல்பான நெருக்கம், என அனைத்தும். தன் கண்களுக்குள் ஊடுருவும் அவள் ஒற்றைப் பார்வையில், கயிறுகொண்டு கட்டப்படாத, மந்திரசக்தி இருப்பதுபோல் உணர்ந்தான். அவள் பின்னால் செல்லும்பொழுது, தன்

கையால் அவன் தலையைக் கோத, அதில் அவள் கையில் உணர்ந்த இதம் இல்லாததை உணர்ந்து திகைத்தான்.

மாடிப்படியில் அவள் கை கோர்த்தவாறு இறங்கி வர, ''பாரதி மாப்பிள்ளையை ஏன் புடிச்சுட்டே இருக்க..? விட்டால் ஓடிப் போய்டுவார்ன்னு பயமா? கொஞ்சம் அவரை ப்ரீயாத்தான் விடேன்'' ஜகதீஷ் கேலியாகச் சொன்னான்.

அவனது கேலியில், அவள் கைகளுக்குள் இருந்த தன் கையை தமிழ் உருவிக் கொள்ளப் பார்க்க, அதை அழுத்தப் பற்றியவள், ''என் புருஷனை நான் பிடிச்சு வச்சுக்கறேன். அதில் உனக்கு என்னடா பொறாமை வேண்டிக் கிடக்கு. உனக்குன்னு ஒருத்தி வருவால்ல, அப்போ பார்த்துக்கறேன்'' சொன்னவாறு அவன் எதிரிலிருந்த சோபாவில் அமர்ந்தாள்.

''தமிழ்! ஒரே நாளில் உங்களை இப்படி ஆஃப் பண்ணி உக்கார வச்சுட்டாளா? இல்ல பேசக் கூடாதுன்னு மிரட்டி கூட்டி வந்தாளா..? இப்படி அமைதியா இருக்கீங்க?'' தமிழின் அமைதியை கேலி செய்து, தங்கள் பேச்சுக்குள் இழுக்கப் பார்த்தான்.

''ஜக்கு வேண்டாண்டா என்னை ரொம்ப வெறுப்பேத்துற பிறகு அடி வாங்குவ சொல்லிட்டேன். உனக்கு வரப்போறவ, என்னைவிட பெரிய அராத்தா இருக்க போறா பாரு'' அவனை மிரட்டினாள்.

''நான் கல்யாணமே செஞ்சுக்காமல் பிரம்மச்சாரியாவே இருந்துடுவேன். நீயே ரெண்டு சொர்ணாக்காவுக்குச் சமம். இதில் உன்னைவிட அதிகமான்னா நாடே தாங்காது'' அவன் சொல்லவும், அவனை அடிக்க அவள் துரத்தவும் சரியாக இருந்தது.

''புருஷன் முன்னாடி கொஞ்சமாவது அடக்கமா

இருப்பன்னு பார்த்தால், இப்படி தொரத்துருயே தமிழ்! என்ன வேடிக்கை பார்க்குறீங்க அவளைப் பிடிங்க'' தமிழ் அமர்ந்திருந்த சோபாவைச் சுற்றி ஓடியவாறு கத்தினான்.

''அவர் எனக்குத்தாண்டா சப்போர்ட் பண்ணுவார். அவரோட பொண்டாட்டியைக் குறை சொன்னால் அவர் சும்மா இருப்பாரா?

தமிழ்! அவனைப் புடிங்க'' பாரதி சொல்ல, மறு பேச்சில்லாமல் ஜகதீஷை எட்டிப் பிடித்தான்.

''மாட்டுனியா நீ'' கேட்டவாறு அவன் முதுகில் ஒன்று வைத்தாள்.

''அம்மா உங்க பொண்ணு என்னை அடிக்கிறா என்னைக் காப்பாத்துங்க'' அவன் கத்தவே, அவன் வாயை அடைத்தது தமிழின் கரங்கள்.

அதை விலக்கியவாறே ''தமிழ்! அவளுக்கு சப்போர்ட் பண்ணாதீங்க. பிறகு ஒரு நாள் நீங்களும் என்னை மாதிரி அடி வாங்கவேண்டியிருக்கும்'' ஜகதீஷ் சொல்ல ''என் பாரதி அப்படில்லாம் செய்ய மாட்டா'' தமிழ் வேகமாகச் சொன்னான்.

''இப்படி கவுத்துட்டீங்களே'' ஜகதீஷ் வராத கண்ணீரைத் துடைக்க, பாரதியின் கண்கள், தமிழை சிறை பிடித்துக் கொண்டிருந்தன.

அதைப் பார்த்த தமிழின் கண்களில் புதிதாய் ஒரு கிறக்கம். இவர்களின் கலாட்டாக்களைக் கேட்டவாறே வந்தார் சிவன். ''என்னம்மா இன்னைக்கும் உங்க கலாட்டாவை விடலையா..? பாவம் மாப்பிள்ளை. பயந்து போய் இருக்கார் நீங்க எதுவும் தப்பா நினைக்காதீங்க

மாப்பிள்ளை. தினமும் ரெண்டுபேரும் வம்பு செய்து, சண்டை போட்டு, பாரதிகிட்ட இருந்து அடி வாங்கலன்னா அவனுக்குத் தூக்கமே வராது'' கொஞ்சம் சங்கடமாகவே அவனுக்கு விளக்கம் அளித்தார்.

அவரது சங்கடத்தைப் பார்த்தவன், ''ஹையோ மாமா எனக்கு இந்த விளையாட்டு, சண்டை எல்லாம் புதுசா இருக்கு புடிச்சிருக்கு. அவங்க அவங்களாகவே இருக்கட்டும் விட்டுடுங்க'' அவருக்கு ஆதரவாகச் சொன்னான்.

''என்ன மாப்பிள்ளை இது? நீங்களாவது அவளை கண்டிப்பீங்கன்னு பாத்தால், அவங்களுக்கே ஒத்து ஊதுறீங்க ஏற்கனவே அவளுக்கு இவங்க ரெண்டுபேரும் செல்லம் கொடுத்து கெடுத்து வச்சுருக்காங்க. இப்போ நீங்களுமா?'' சுதா நிஜமாகவே அலுத்துக் கொண்டார்.

''அம்மா உங்க கட்சி டெபாசிட் காலி. என் கட்சிக்குத்தான் முழு ஆதரவும் இருக்கு. யாஹூ!'' கத்தியவள், தாயைக் கட்டிக் கொண்டாள்.

தமிழ் தவறாக நினைத்துவிடுவானோ என்று சுதா கவலையாக அவன் முகம் பார்க்க, அவனோ புன்னகை முகமாகவே பாரதியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சரி எல்லோரும் சாப்பிட வாங்க. பாரதி! சாப்ட்டுட்டு, பக்கத்திலிருக்கும் சிவன் கோவிலுக்குப் போயிட்டு வந்துடுங்க'' சொன்னவாறு அவர்களை அழைத்துச் சென்றார்.

சாப்பாட்டு அறையில், ''தமிழ்! ஹனிமூன் எங்கே போகணும்னு ஏதாவது பிளான் வச்சுருக்கீங்களா? அப்படின்னா சொல்லுங்க அங்கேயே போக ஏற்பாடு

பண்ணிடுறேன், செலவெல்லாம் என்னோடது. நீங்க எப்போ கிளம்புறீங்கன்னு மட்டும் சொல்லுங்க'' ஜகதீஷ் சாப்பாட்டிலேயே கவனமாக, தமிழிடம் கேட்டான்.

ஜகதீஷ் கேட்டதும் திகைத்தவனது மனதின் ஓரத்தில் 'செல்லலாமா?' என்ற எண்ணமும் எழுந்தது. அவன் பாரதியைப் பார்க்க, ''அண்ணா இன்னும் ரெண்டு மாசத்துக்கு எங்கேயுமே அசையிற மாதிரி இல்லை'' அவள் குரலே இதை இத்தோடு விட்டுவிடு என்பது போலிருந்தது.

''என்னடி இது? மாப்பிள்ளைகிட்ட ஒரு வார்த்தை கேட்காமல் நீயே முடிவெடுக்குறது?'' சுதா அவளை அங்கேயே கண்டித்தார்.

''இந்த முடிவே அவரோடதுதான். இந்தக் கல்யாணமே ஒரே வாரத்தில் நடந்து முடிஞ்சுடுச்சு. ஏற்கனவே முடிச்சு கொடுக்குறோம்னு சொல்லியிருந்த ப்ராஜெக்ட் எல்லாம் இப்போ முடிச்சுக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கோம். இப்போ போய், ஒருவாரம் பத்து நாள் வேஸ்ட் பண்ண முடியாது சொன்னா புரிஞ்சுக்கோங்கம்மா'' சொல்லிவிட்டு கை கழுவச் சென்றாள்.

பாரதி அப்படிச் செல்லவே, தமிழின் முகம் மலர்ந்தது. அதைப் பார்த்த பாரதி, கசங்கியத் தன் முகத்தை, யாரும் அறியும் முன்னர் சட்டெனெ மாற்றிக்கொண்டாள். ''பாரதி சொல்லுவதும் உண்மைதான் அத்தை. திடீர்னு முடிஞ்ச கல்யாணம் அதுக்கே ஒரு வாரம் வேலை எல்லாம் பெண்டிங் இருக்கு.

இப்போ மறுபடியும்ன்னா... நாங்க போகாமல் இருக்கப் போவதில்லை. என்ன கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கோம்

அவ்வளவு தான். இன்னும் ஒரு ரெண்டு மாசம் போகட்டும்'' தமிழும் சொல்லவே கொஞ்சம் சமாதானம் ஆனார்.

அறைக்குச் சென்ற பாரதிக்குத்தான், கண்கள் கலங்கிக் கொண்டு வந்தது. தமிழின் குணம் அவளுக்குத் தெரியும். இப்பொழுதே ஹனிமூன் செல்வதில் அவளுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

ஆனால், இப்பொழுது சென்றாலும் தமிழை வழிக்குக் கொண்டுவர, தான் தான் இறங்கிச் செல்ல வேண்டியிருக்கும். அவளும் எவ்வளவோ இறங்கிச் செல்லத் தயார்தான். ஆனால், தானாக அவனிடம் சென்று, தாம்பத்யத்தை யாசிப்பது, எந்த காலத்திலும் நடக்காது என்பதில் அவள் தெளிவாக இருந்தாள்.

சிறிதுநேரம் கழித்து, தனிமை நாடிச் சென்றவன், பாரதியின் பேச்சை அசை போட்டான். இரவில் தயக்கமே இல்லாமல் தன்னை நெருங்கியவள், காலையில் தன்னிடம் அவ்வளவு இயல்பாக, நெருக்கத்தில் பழகியவள், தேனிலவு பயணத்தை மட்டும் தவிர்த்ததேன்?

அவளைத் தொடும் தகுதி தனக்கு இல்லை என்று எண்ணி விட்டாளா? இல்லை அவளைத் தொடும் தைரியம் தனக்கு இல்லை என்று எண்ணி விட்டாளா?

தான்தான், அவளது எந்த விருப்பத்தையும் தன்னால் பூர்த்தி செய்ய முடியாது என்று சொன்னது வசதியாக அந்த நேரம், அவனுக்கு மறந்து போனது.

* * * * *

23

என் தயக்கங்களை
நான் தவிர்ப்பதும்
என் தாபங்களை
நான் வெளிப்படுத்துவதும்
உன்னிடம் மட்டுமே
எல்லாம் உன்னாலே

திருமணம் முடிந்த மூன்றாம் நாள், பாரதியின் தாய், தந்தை, பாரதி, தமிழ், தேவா, சுப்பிரமணி அனைவரும் சேர்ந்து சுஷ்மியைப் பெண் பார்க்கப் போனார்கள்.

அந்த நிமிடத்தை நம்ப முடியாத திகைப்புடன் அமர்ந்திருந்தான் தேவா. தமிழ், அவன் நிலை புரிந்தவன்போல், நண்பனின் தோளில் கை போட்டு அழுத்தினான்.

''தேங்க்ஸ்ப்பா, தேங்க்ஸ்டா'' நூறாவது முறையாக நன்றி சொல்லும் அவனை, கண்டிக்கும் பார்வை பார்த்தார் சுப்பிரமணி.

''என்னடா உனக்காக வரேன்னு நினைச்சியா? உன்னை எப்படிடா நம்புறது? எல்லாம் என் மக கேட்டுகிட்டதால் தான் வரேன். அவளுக்கு இந்தக் கிறுக்குப்பயதான் வேணுமாம். ஃபோன் பண்ணி ஒரே அழுகை. ஏதாவது தப்புத்தண்டா நடந்துது... உன்னை நிக்க வச்சு தொலியை உரிச்சு, உப்புக் கண்டம் போட்டுடுவேன்

ஆமா'' கேலியாக என்றாலும், அதில் சின்ன கண்டிப்பும் ஒளிந்திருந்ததை தேவா உணர்ந்துதான் இருந்தான்.

''டேய் தமிழ் உங்க அப்பா போலீஸ்ல இருந்துருக்க வேண்டியவருடா. எப்போ பாரு சந்தேகம். வாத்தி மாதிரியா பேசுறார், என்னமோ கசாப்புக் கடைக்காரன் மாதிரி தம் கட்டி முழக்குறாரேடா'' தமிழின் காதைக் கடித்தான்.

''நீ இன்னும் இந்தப் பழக்கத்தை விடலையாடா'' தேவா, தமிழின் காதைக் கடிப்பதைக் கேட்டார்.

''அது கூடவே பொறந்தது அவ்வளவு சீக்கிரம் போகாது'' அவனும் சளைக்காமல் பதில் கொடுத்தான்.

சுஷ்மியின் வீட்டில், தேவாவின் பெற்றவர் இடத்திலிருந்து அனைத்தையும், சுப்ரமணிதான் பேசி முடித்தார். சுஷ்மியின் சொந்தங்கள் அனைத்தும், மும்பையில் இருப்பதால், திருமணத்தை அங்கேயே வைக்க வேண்டும் என்று அவர்கள் விருப்பப்பட்டார்கள். சுப்ரமணியும் யோசித்துச் சொல்வதாகச் சொல்லிச் சென்றார். அன்றே சிறிய அளவில் பாக்கு வெற்றிலை மாற்றிக் கொண்டார்கள். தேவாவுக்கும், சுஷ்மிக்கும் தனிமை கிடைத்த வேளையில், அவளைக் கொஞ்சியே ஒரு வழி செய்தான்.

''தேவா! நாம பேசத்தான் தனிமை கொடுத்து இருக்காங்க நீங்க என்னன்னா இப்படிப் பண்ணுறீங்க'' அவன் செய்கையில் நெகிழ்ந்து, குழைந்து அவள் குரல் வெளிவர, ''உன்னைப் பேச வேண்டாம்னு நான் சொன்னேனா'' கேட்டவனின் கரங்கள் அவள் வெற்றிடையில் பதிய, அவன் கரங்களைத் தடுத்தவாறே, அவனிடம் பேச முயன்றாள். ஆனால், அவனது

சேட்டைகளில் அவளால் பேசத்தான் முடியாமல் போனது.

சுப்பிரமணி, தேவாவின் பெற்றோருக்குப் பேச, அவர்களோ தாங்கள் திருமணத்துக்கு அங்கே வந்து விடுவதாகவும், சென்னையில் சிறிய அளவில் ரிசப்ஷன் வைத்தால் போதும் என்றும் சொல்லிவிட, அடுத்து வந்த முகூர்த்தத்திலேயே அவர்களது திருமணமும் விமரிசையாக நடந்தேறியது.

திருமணம் முடிந்த கையோடு, சென்னையில் ரிசப்ஷனுக்கும், அப்படியே தேனிலவுப் பயணத்தையும் முடித்துக் கொண்டு மும்பை வருவதாகச் சொல்லிவிட்டு, பறந்துவிட்டது அந்த ஜோடி.

அடுத்து வந்த நாட்களில் தமிழ், பாரதியின் அருகாமையை இயல்பாக ஏற்கத் துவங்கியிருந்தான். ஆனாலும், இதுவரை ஒரு பெண்ணோடு பழகியே இல்லாத பொழுது, நாள் முழுவதும் ஒரு பெண்ணோடு இருப்பதை அசௌகர்யமாக உணர்ந்தான்.

ஆனால், பாரதி மிகவும் இயல்பாக அவனோடு நடந்து கொண்டாள். அன்றும் அவன் குளித்து முடித்து வந்தவுடன், அவள் அவன் தலை துவட்ட, அவளும் அப்பொழுதுதான் குளித்து முடித்து வந்திருக்கவே, அவள் மேலிருந்து வந்த சோப்பின் வாசமும், ஷாம்பூ வாசமும், அவள் ஈர உடலில் போட்டிருந்த நைட்டி, அவள் அங்க வடிவங்களை மறைக்க முயன்று தோற்றிருக்க, அவள் நெருங்கி நின்ற நிலையில், அவன் கண்களுக்கு அவை விருந்தாக அமைய, அவளைப் பார்க்கவும் முடியாமல், பார்வையைத் திருப்பவும் மனமில்லாமல் தவித்துப் போனான்.

ஒரு நிலைக்குமேல் அவனால் அங்கே இருக்க

முடியாமல், அவளிடமிருந்து வேகமாக விலகினான்.

''தமிழ்! இன்னும் சரியா துவட்டலை'' பாரதி குரல் கொடுக்க, ''இல்ல போதும்'' பார்வை அவள்மேல் படரத்துடிப்பதை மறைத்தவாறு, அங்கிருந்து அகன்று விட்டான். அவன் நிலையை உணர்ந்த பாரதி, மெல்லிய சிரிப்புடன் அங்கிருந்துச் சென்றாள்.

பின்னர் இருவரும் சேர்ந்து அலுவலகம் கிளம்பிச் செல்ல, சின்ன மீட்டிங் வைத்து, இனிமேல் கம்பெனியின் பொறுப்புக்களை, தமிழும் சேர்ந்து பார்த்துக் கொள்வான் என்றும், அது மட்டும் இல்லாமல், தமிழ் தான் கம்பெனியின் முக்கிய முடிவுகளை எடுப்பான் என்றும், இனிமேல் எதுவாக இருந்தாலும் தமிழிடம் கேட்டு முடிவெடுத்த பிறகு, தன் பார்வைக்கு வந்தால் போதுமென்றும் சொல்லிவிடவே, கம்பெனியிலிருக்கும், அவனது நேரடி கண்காணிப்புக்குக் கீழ் இருக்கும் அனைவரும் அவனிடம் பேசத் துவங்கினர்.

அதில் அக்கவுண்ட் செக்ஷனில் இருந்த, நிஷாவுடன் அவன் தினமும் பேசியாகவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானான். பாரதி எப்பொழுதும் அவனோடு இருந்த காரணத்தால், நிஷா அவனிடம் பேச வரும் வேளைகளில் எல்லாம், பாரதி அருகிலிருக்கும் ஒரு நம்பிக்கையில் அவளுடன் சாதாரணமாகவே பேசி அனுப்பினான்.

பாரதியின் முகம் அவனது இந்தச் செய்கைகளில் யோசனையில் சுருங்கியது. ''ஏன் தமிழ்! இப்போ மட்டும் எப்படி நிஷாட்ட தயக்கமே இல்லாம பேசுனீங்க?'' கண்களில் சிரிப்புடன் அவள் கேட்க, ''அதான் நீ இருக்கியே'' அவனும் ஒரு வேகத்திலேயே பதில் சொன்னான்.

''இப்போ நான் இல்லன்னா மட்டும் அவ உங்களை என்ன செஞ்சுடுவாளாம்? குறும்பாகக் கேட்டாள்.

''அதெல்லாம் இல்லை பொண்ணுங்க எப்போ எப்படி மாறுவாங்கன்னு சொல்ல முடியாது. அதுவும்...'' ஒரு வேகத்தில் துவங்கியவன் அப்படியே அமைதியாகி விட்டான்.

அவன் சொல்லாமல் விட்டதில் ஏதோ விஷயம் இருப்பதை உணர்ந்துகொண்டாள் பாரதி. ஆனால், அதை என்னவென்று துருவிக் கேட்க அவள் விரும்பவில்லை. ஆனால், என்றாவது ஒருநாள் கேட்டே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தாள்.

பின்னர் மாலையில் சேர்ந்தே வீட்டுக்குக் கிளம்பிச் சென்றார்கள். ''நீங்க போய் பிரெஷ் ஆகிட்டு வாங்க நான் டிபன் எடுத்து வைக்கிறேன்'' சுதா சொல்ல, அவர்கள் அறைக்குச் சென்றார்கள்.

''ஹப்பா'' என்று சொல்லி, பாரதி படுக்கையில் விழ, அவளைப் பார்த்தவாறே, தன் லேப்டாப் பேகை அதன் இடத்தில் வைத்தவன், குளிக்கச் செல்லப் பார்த்தான்.

''தமிழ் ஒரு பத்து நிமிஷம் ரிலாக்ஸ் ஆகிட்டு போங்க. வந்த வியர்வையோடு குளிக்கப் போவாங்களா? வாங்க'' அவன் எதிர்பாராத நிமிடத்தில், அவன் கையைப் பிடித்து இழுத்து, படுக்கையில் விழ வைத்தாள்.

அவள் இழுத்த வேகத்தில், அவள் மீதே விழப் போனவன், சட்டென சுதாரித்து அவள் அருகில் விழுந்தான். ஆனாலும், அவள் மேனியில் அவன் கைகள் எசகு பிசகாகப் பதிந்துவிட, திகைத்துப் போய், எழப் பார்த்தான்.

பாரதியும் இந்த நிலையை எதிர் பார்க்காமல், ஒரு

நிமிடம் உதட்டைக் கடித்து மௌனமானவள், அவன் எழ முயற்சி செய்யவே, ''சொன்னா கேக்க மாட்டீங்களா?'' தன்னை முயன்று சீராக்கியவள், அவனை அழுத்திப் படுக்க வைத்து, அவன்மேல் சரிந்துப் படுத்தவள், அவன் கண்களைத் துளைக்கும் பார்வை பார்த்தாள்.

பாரதியின் பார்வையிலும், செய்கையிலும் தேகம் முழுவதும் சிலிர்ப்பு ஓட, அவள் பார்வையை சந்திக்க முடியாமலும், அவள் மேனியின் ஸ்பரிசத்தை ரசித்தவாறு, அந்த நிலையை மனக்கண்முன் காண்பவனாக, இமைகளை இறுக மூடிக் கொண்டான்.

அவனிடமிருந்து மெல்லிய அணைப்பையாவது எதிர்பார்த்த பாரதி, அதுகூட நிகழாத ஏமாற்றத்தை மறைத்தவாறு, அவனிடமிருந்து விலகி குளிக்கச் சென்றாள்.

ஏமாற்றத்தால் கலங்கத் துவங்கிய மனதை, 'உனக்கு அவரைப் பற்றி நல்லாத் தெரியும் தானே? தெரிந்து தானே திருமணம் செய்து கொண்டாய் அவன் மாற கொஞ்சம் டைம் கொடு' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

'அவர் மனசு மாறட்டும், இல்ல மாறாமல் போகட்டும். ஆனாப்போ ஜஸ்ட் கட்டிப் புடிச்சால் என்னக் குறைஞ்சுடுமாம் அப்படியே மண்ணு மாதிரி படுத்திருக்கார் இருக்கட்டும் கவனிச்சுக்கறேன்' மனதுக்குள் பேசியவள், தனக்குள் கறுவிக் கொண்டாள்.

படுக்கையில் படுத்திருந்த தமிழோ, அவள் தன்மேல் படுத்திருந்த பக்கத்தை, தன் இடக் கையால் வருடிக் கொண்டிருந்தான். பாரதியின் இந்த விளையாட்டுத்தனம், குறும்பு அவனுக்குப் பிடித்திருந்தது. ஆனால், அவனாக அவளை நெருங்கவோ, தொடவோ, அவனுடைய தயக்கம்

அவனை விடவில்லை. 'உன்னால மட்டும் எப்படி முடியுது பாரதி' கொஞ்சம் பொறாமையாகவே கேட்டுக் கொண்டான்.

அதேநேரம் பாரதி குளித்துவிட்டு வெளியே வர, தமிழ் தன் வலக்கையையும், நெஞ்சையும், இதமாக வருடுவதையும், இதழ்களில் உறைந்த புன்னகையையும் பார்த்தவள், 'அடப்பாவி இப்படி உருகுறவன் பிறகு ஏண்டா பேசாமல் இருக்க? உன்னை இப்படியே விட்டேனா பார்' அவள் குறும்பு தலை தூக்க, தன் கப்போர்டை படார் என்ற சத்தத்தோடு திறக்க, அதில் கலைந்தவன், அவளைப் பார்த்தான்.

அவளோ அவனைக் கவனிக்காமல், நிதானமாகத் தன் உடையை எடுத்து மாற்றினாள். அவளது செய்கையில் தமிழ் மூச்சு விடவும் மறந்தவன், இமைக்கக் கூட மறந்து, படுக்கையில் இருந்தவாறே, தலையைத் திருப்பி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். வாழ்நாளிலேயே இப்படி ஒரு காட்சியை அவன் கற்பனை கூட செய்துப் பார்த்ததில்லை. மூச்சடைத்தது அவனுக்கு.

அவன் நிலையைப் பார்த்து, பொங்கிய சிரிப்பை அவனுக்குக் காட்டாமல் மறைத்தவள், "தமிழ்! நீங்க குளிக்கலையா? சரி நீங்க இங்கேயே இருங்க. நான் போய் உங்களுக்கும் சேர்த்து டிபன், காபி இங்கேயே கொண்டு வரேன்" அவனிடம் சொன்னவள், அவன் பதிலை எதிர்பார்க்காமல் சென்றுவிட்டாள்.

அவள் சென்ற பிறகும், அவன் கண் முன், அவன் பார்த்த காட்சியே விரிய, அவன் ஆண்மை அவனை சோதிக்கும் போலிருக்க, சட்டென எழுந்து குளிக்கச் சென்றான்.

''அம்மா அன்னைக்கு நான் உங்ககிட்ட திரும்பத் தந்த என்னோட கொலுசு எங்கே? அது எனக்கு வேணும்'' கொலுசைக் கேட்ட மகளை, என்னவோ உலகின் எட்டாம் அதிசயத்தைப் பார்ப்பதுபோல் பார்த்தார் சுதா.

திருமண நாளன்று மட்டும் அணியவே, அவளிடம் கெஞ்சிப், போராடியது அவருக்கு நினைவு வந்தது.

அவர் திகைப்பைப் பார்த்தவள், ''என்னம்மா கொலுசை திரும்ப கொடுத்துட்டீங்களா என்ன? சரி விடுங்க நான் புதுசாவே வாங்கிக்கறேன்'' தோளைக் குலுக்கிச் சொன்னவள், வேலைக்காரியிடம் காபி கேட்டாள்.

தன் அறைக்கு நொடியில் விரைந்த சுதா, அவள் கேட்ட கொலுசை எடுத்துக் கொண்டு அவளிடம் சென்றார். ''பாரதி கொலுசு கேட்டியே'' கேட்டவாறு அவள் கையில் கொடுத்தார்.

''என் பொண்ணை இப்படிப் பார்க்க எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா? சீக்கிரமே எனக்கு ஒரு பேரனோ, பேத்தியோ பெத்துக் கொடு, நான் வளர்த்துக்கறேன். உனக்கு வளர்க்கணும் என்ற கவலை கூட வேண்டாம்'' மகளின் மாற்றம் அவர் வயிற்றில் பாலை வார்த்தது.

அதிலும் அவளது தடுமாற்றமும், மெல்லிய வெட்கமும், தமிழ் பெயரைச் சொல்லும்பொழுதே கண்களில் தெறிக்கும் காதலும், அதை அறிய முடியாத அளவு, அவர் ஒன்றும் அனுபவம் இல்லாதவர் அல்லவே. காதலித்து மணம் புரிந்த அவருக்கா தெரியாது, காதல் கொண்ட மகளின் மனது.

தாயின் பேச்சைக் கேட்டவள் ''சு போங்கம்மா''

கொலுசோடு, காபியும் வாங்கிக் கொண்டு மாடியேறினாள்.

தமிழுக்கு காபி கொடுக்க, அவளை கள்ளப் பார்வை பார்த்தவாறே அதை வாங்கிக் கொண்டான். அவன் பார்வையின் மாற்றம் புரிய, உள்ளுக்குள் பனிச் சாரலாய் குளிரடிக்கும் உணர்வை, அனுபவித்தவாறே, காபியை ரசித்துக் குடித்தாள் பாரதி.

அன்று முழுவதும் தமிழ், ஒருவித பரவச நிலையிலேயே இருந்தான். அதிலும் பாரதியை, அவள் கவனிக்காத பொழுதுகளில், அணுவணுவாக ரசிப்பது அவனுக்குப் பிடித்திருந்தது. அவள் பார்க்கும் வேளைகளில் பார்வையை சடக்கென திருப்பிக் கொள்வான்.

'ஹையோ கட்டுன பொண்டாட்டியை உக்காந்து சைட் அடிச்சே கொல்றானே. அவள் மனம் சிணுங்கியது.

அவனை இன்னும் சீண்டும் விதமாக, ''தமிழ்! மாமா கோவிலுக்குப் போயிட்டு ஃபோன் பண்ணுனாங்களா? நல்லபடியா போய் சேர்ந்தாங்களாமா? இப்போ ஃபோன் பண்ணி பேசுவோமா?'' கேட்டவள், அவன்மேல் சாய்ந்து அமர்ந்தவாறே சுப்ரமணிக்கு அழைத்தாள்.

அன்று அவள் வேண்டுமென்றே, அலமாரியில் வேண்டாம் என்று ஒதுக்கி வைத்திருந்த லோகட் இரவு உடையை அணிந்திருந்தாள். அது சட்டை, பேன்ட் மாடல் இரவு உடை. அவள் அவன்மேல் சாய்ந்திருக்கவே, அந்த லோகட் உடை, பாரதியின் மேலழகை அவனுக்குப் படம் பிடித்துக் காட்டியது.

'இன்னைக்கு என்ன பார்க்குறது எல்லாமே தப்பாவே தெரியுது? அவன் பார்வைக்குப் படும் விஷயங்களை உணர்ந்து அனுபவிக்க, அவன் கையும் மனமும் துடித்தது.

பாரதி தந்தையிடம் பேசிவிட்டுக் கொடுத்த அலைபேசியை வாங்கியவன், என்ன பேசினான், ஏது பேசினான் என்பது கருத்தில் பதியாமலே பேசிவிட்டு வைத்துவிட்டான். பாரதி உறங்க படுக்கையில் படுத்துவிட,

''பாரதி! நீ தூங்கு, நான் இப்போ வரேன்'' சொன்னவன், பொங்கிய தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டுவர, பாடல் கேட்டவாறே உலாவினான். தன்னை ஒரு நிலைக்கு கொண்டுவந்த பிறகே அறைக்குத் திரும்பினான்.

அவன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளத்தான் மனைவி என்பவள் இருக்கிறாள் என்பதை அவனுக்கு யார் சொல்லிப் புரிய வைப்பது?

24

என் உணர்வுகள் சரியா
என் புரிதல்கள் சரியா
என் எண்ணங்கள் சரியா
என் தேவைகள் சரியா
கேள்விகளின் ஊர்வலம்
பதில் சொல்வார் யார்?

தொடர்ந்த நாட்கள் ஒருவித பரவசத்திலும், தடுமாற்றத்திலும், தவிப்பிலும், கடந்து செல்ல, அலுவலக வேலைகளில் தன்னை மூழ்கடித்தான் தமிழ். அவன்

வேலையின் நேர்த்தி ஏற்கனவே தெரிந்திருந்தாலும், கொஞ்சம் முன்னேறியதுபோல் தோன்றிய அவர்கள் உறவு, பின்னடைந்ததாக உணர்ந்தாள் பாரதி.

''ஏண்டா இப்படி இருக்க'' அவனைப் பிடித்து உலுக்கவேண்டும் போல் எழும் ஆத்திரத்தை, முயன்று அடக்குவாள் பாரதி.

ஆனால், தமிழோ, முயன்று தன்னை அவளிடம் அப்படி வெளிக்காட்டிக் கொண்டிருந்தான் என்பதை பாவம் அவள் அறியவில்லை. தமிழ் இப்பொழுது பெண்கள் என்றால் பேசத் தயங்கவில்லை. அதேநேரம், தேவையில்லாத பேச்சும் வைத்துக் கொள்ளவில்லை.

அவனது மாற்றங்களை அவன் உணர்ந்தானா இல்லையா என்பது தெரியாது. ஆனால், பாரதி உணர்ந்தாள். அவள் மனதை அழுத்திய விஷயம் ஒன்றுதான், தன்னிடம் பேசவோ, அருகில் அமரவோ, சேர்ந்து உறங்கவோ தயங்காதவன், தன்னைத் தொட மட்டும் தயங்குவதேன்.

என்னதான் தமிழைப் பற்றி அவளுக்குத் தெரியும் என்றாலும், அவளும் உணர்வுகளும், ஆசையும், ஏக்கமும் கொண்ட சராசரிப் பெண் தானே. திருமணம் முடிந்த இத்தனை நாட்களில் அவன் தன்மேல் சலனப்படுவது உண்மை. ஆனால், அதற்குமேல் அவன் செல்லாதது வருத்தத்தை அளித்தது.

அன்று தமிழ் தாங்கள் அவசரமாக முடிக்க வேண்டிய ப்ளாண்டுக்குச் சென்றுவிட்டு, இரவில் நேரம் கழித்துதான் வீட்டுக்கு வந்தான். அவன் வரும் முன்பாகவே பாரதி தூங்கி விட்டிருந்தாள். அவளை ஒரு நிமிடம் நிதானமாக நின்று ரசித்தவன், குளித்துவிட்டு வந்து பக்கத்தில் படுத்துக்

கொண்டான்.

அவன் படுக்கவும், அவள் அவன் பக்கம் திரும்பிப் படுக்கவும் சரியாக இருந்தது. அன்றும் அவள் சட்டை பேண்ட் மாடல் இரவு உடைதான் அணிந்திருந்தாள். அவள் சட்டையின் கீழ் இரண்டு பட்டன்கள் அவிழ்ந்திருக்க, அவள் இடை பளீரென்று அவன் பார்வையில் விழுந்தது.

பொதுவாக பாரதி சேலை கட்டுவதே கிடையாது. அதனால் அவள் இடையைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவனுக்கு வாய்த்ததே இல்லை. அவன் பாரதியிடம் மறைக்க முயன்ற உணர்வுகள் விழித்துக் கொள்ள, பார்வையை விலக்க முடியாமல், முயலாமல் பார்வையை அவள்மேல் நிலைக்கவிட்டான்.

இரவு விளக்கில் ஒளியில் தெரிந்த அவள் வரி வடிவமும், அழகும் அணுஅணுவாக ரசித்தான். தாள முடியாமல் அவன் கைகள், அவள் இடையை வருடச் செல்ல, அதைத் தடுக்கும் வழி தெரியாமல் தடுமாறினான்.

அவனது இந்தச் செய்கையைத் தொடர்ந்திருந்தால், வரவிருந்த பெரிய விபரீதங்களையும், பாரதியைக் காயப்படுத்துவதில் இருந்தும் தவிர்த்திருக்கலாம். ஆனால். விதி வலியது என்பது சரியாக இருந்தது அவன் விஷயத்தில்.

அன்று காலையில் எழும் பொழுதே மெல்லிய ஏதோ ஒலியை அவன் காதுகள் உணர்ந்தன. அந்த ஒலி அவனுக்கு ஏதோ உணர்வுகளை ஊட்டியது.

மெதுவாக விழி விரித்துப் பார்க்க, பாரதி இங்கும் அங்கும் அலைவது தெரிந்தது. அவள் நடக்கும் பொழுது, அவளிடமிருந்துதான் அந்த ஒலி எழுவதை உணர்ந்தான்.

அவள் காலையே கூர்ந்து பார்க்க, புதிதாக அவள் கால்களில் குடியேறி இருந்தது புதுக் கொலுசு.

'இந்தச் சத்தம் பாரதிகிட்ட இருந்துதான் வருதா?' அவன் கண்களும் மனமும், அவள் கொலுசின் சிணுங்களில் சிக்கித் தவித்தது.

அப்படியே அவளை அருகிலிழுத்து, அந்தக் கால்கள் இரண்டையும் மடியில் தாங்கி, தன் இதழை அதில் புதைத்துக் கொள்ளவேண்டும் போலிருந்தது. அந்த உணர்வை அடக்க முயலாமல், ஆழ்ந்து அனுபவித்தான்.

அன்று பாரதி நிதானமாக, அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். தமிழின் பார்வை தன்னில் நிலைத்திருப்பதைப் பாரத்தவளின் இதழில் ஒரு கள்ளச் சிரிப்பும், ஒருவித நளினமும் வந்து ஒட்டிக் கொண்டது.

அப்பொழுதுதான் நடை பழகுபவள் போல், அவன் முன் நடை பழகினாள். அவளையே விழுங்குவதை போல் பார்த்தவனின் பார்வைகள், கள்ளத்தனமாக அவள் மேனியில் மொய்த்தது. அதிலும் அவள் உடலைத் தழுவி நிற்கும் டிஷர்ட், அவள் கையைத் தூக்கி தலை சீவும் பொழுது, கண்ணாடியில் தெரிந்த அவள் உருவம், கால் கொலுசின் ஒலி அணுவணுவாக அவளை ரசித்துக் கொண்டிருந்தான்.

பாரதியும் தமிழும் இப்பொழுது தனிக்குடித்தனம் வந்திருந்தார்கள். இரட்டை படுக்கையறை கொண்ட ஒரு தனி வீடு. வீட்டைச் சுற்றிலும் சிறிய தோட்டமிருந்தது. தோட்ட வேலைக்கு, சமையலுக்கு, வீட்டு வேலைக்கு என தனித் தனி ஆட்கள் வைத்தாயிற்று.

அவர்களை செட்டில் செய்துவிட்டு, சுப்பிரமணி

சென்னைக்கே கிளம்பி விட்டார். அவருக்கு இன்னும் இரண்டு வருடங்கள் தான் சர்வீஸ் இருப்பதால், அதை முடித்துவிட்டு, அவர்களோடு வந்து விடுவதாகச் சொன்னார்.

அப்பொழுது ஒரு அலைபேசி அழைப்பு வரவே, அதை எடுத்துப் பேசியவளின் செய்கையில் அவசரம் கூடியது. பரபரவென்று வேகமாகக் கிளம்பிச் செல்லப் பார்த்தாள். அவளை அணுவணுவாக ரசித்துக் கொண்டிருக்கும் வேளையில், அவளது அவசரம் அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

''பாரதி எதுக்கு இவ்வளவு அவசரம்? என்னமோ இன்னைக்குத்தான் சைட்டுக்குப் போற மாதிரி, எதுக்கு இவ்வளவு பரபரப்பு..?'' புரியாமலே கேட்டான் தமிழ்.

அவனிடம் சொல்லவா, வேண்டாமா என்று ஒரு நிமிடம் தயங்கியவள், ''தமிழ்! நம்ம சைட்ல ஒரு சின்னப் பிரச்சனை. இஞ்சினியரால் சமாளிக்க முடியலை, அதான் நான் கிளம்பிட்டு இருக்கேன். ஜகதீஷும் ஊர்ல இல்லை. அவன் இருந்தால் எனக்கு துணைக்கு வருவான். அதான் கொஞ்சம் யோசனையா இருக்கு. விடுங்க, நான் பார்த்துக்கறேன்'' அவனுக்கு விளக்கம் கொடுத்தவாறே, தன் தோள்பையை எடுத்தவள், அவனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

அவள் சொல்லச் சொல்ல, தமிழின் முகம் இறுகியதை அவள் கிளம்பும் அவசரத்தில் கவனிக்கவே இல்லை.

அவள் சென்ற பிறகும் சிறிது நேரம் அசையாமல் அப்படியே இருந்தவனின் உணர்வுகள் கொந்தளித்துக் கொண்டு இருந்தது. 'இவ என்னை ஒரு ஆம்பளையாவே

நினைக்கலையா? அண்ணன் இருந்தால் கூட்டி போயிருப்பேன்னு சொல்லுறா, என்னைக் கூப்பிட்டால் நான் வர மாட்டேனா..?

'அவ கூப்பிடலன்னா என்ன? நாமளா போகலாம்' முடிவு செய்தவன், நொடியில் கிளம்பிச் சென்றான்.

அவன் செல்லும்போழுதே, பாரதியைச் சுற்றிக் கூட்டமாக இருப்பதைப் பார்த்தான். கொஞ்சம் ஒதுங்கி நின்று நடப்பதைக் கவனித்தான். அவன் கவனித்தவரை, அவனுக்குப் புரிந்தது இதுதான், அவர்கள் சைட்டில் வேலை செய்த ஒரு ஆள் அன்று குடித்துவிட்டு வேலைக்கு வந்திருக்கிறான்.

அதை கவனித்த சைட் இஞ்சினியர் அவனை வேலையை விட்டு அனுப்பிவிட்டான். ஆனால், அவன் மறுநாள் சாதாரணமாக வேலைக்கு வர, இஞ்சினியர் அவனை வேலைக்கு எடுக்கமாட்டேன் என்று சொல்லவே பிரச்சனை பெரிதாகிவிட்டது.

தொழிலாளர்களும் பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு சப்போர்ட் செய்தார்களே தவிர, இஞ்சினியர் செய்தது சரி என்று சொல்லவில்லை. ஆனால், இஞ்சினியர் செய்ததில் எந்தத் தவறும் இல்லையென்று பாரதி வாதாட அங்கே பிரச்சனை பெரிதாகிக் கொண்டே இருந்தது.

ஒரு கட்டத்துக்கு மேல் பாரதியால் நிலைமையை சமாளிக்க முடியவில்லை. தமிழ், நிலைமை கைமீறி செல்வதைக் கண்டவன், வேகமாக அங்கே சென்றான்.

''இப்போ நீங்க என்னதான் சொல்லுறீங்க'' தமிழின் குரல் ஓங்கி ஒலிக்க, சட்டென அங்கே ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது.

''ஏய் இவர்தாண்டா புது முதலாளி'' ''இவர்தான் நம்ம பாரதியம்மாவோட புருஷன்'' விதவிதமான குரல்கள் எழுந்து அடங்கியது.

தமிழ் இப்பொழுது சரளமாக ஹிந்தி பேசினான். எனவே அவர்களிடம் உரையாடுவது அவனுக்குச் சுலபமாக இருந்தது.

''என்ன சார் சொல்லுறது அவன் செஞ்சது தப்புதான், அதுக்காக அவனுக்கு இனிமேல் வேலையே இல்லன்னு எப்படிச் சொல்ல முடியும்? அதான் குடிச்சுட்டு வந்த அன்னைக்கு அவனை வேலையை விட்டு அனுப்புனப்போ நாங்க எதுவுமே செய்யலையே'' கூட்டத்திலிருந்த ஒருவன் முன்னால் வந்து சொன்னான்.

''ஓஹோ! அப்போ நீங்க என்ன செஞ்சாலும், நாங்க விரல் சூப்பிட்டு வேடிக்கை பாத்துட்டு இருக்கணுமா? அவன் செஞ்ச தப்புக்குத் தண்டனை கொடுக்குறது தப்பா?'' குரல் உயர்த்தாமல், அழுத்தமாகக் கேட்டான்.

''நாங்க எங்கே அப்படிச் சொன்னோம் அதான் அன்னைக்கு அவனுக்கு வேலை கொடுக்கலையே. இப்போ அவன் குடிக்காமல் தானே வந்து இருக்கான். அவனுக்கு வேலை கொடுப்பதில் உங்களுக்கு என்ன தயக்கம்?'' பல குரல்கள் எழுந்தது.

''அப்போ உங்க இஷ்டத்துக்கு நீங்க குடிச்சுட்டு வருவீங்க அதை நாங்க பெருந்தன்மையா ஏத்துக்கணும். அடுத்தநாள் நீங்க குடிக்காமல் வருவீங்க, நாங்க வேலையும் கொடுக்கணும். உங்க நியாயம் ரொம்ப நல்லா இருக்கு'' நக்கலாகச் சொன்னான்.

''அவன் குடும்பத்தைப் பாக்கணுமே சார்'' கொஞ்சம்

சுருதி இறங்கியது அவர்கள் குரலில்.

''அதை அவனல்ல நினைச்சு இருக்கணும். எங்களைப் பார்க்க சொல்லுறீங்க'' தமிழ் இறங்கி வருவதாக இல்லை.

''இப்போ என்னதான் சார் சொல்ல வாறீங்க?'' தமிழின் முடிவு என்னவாக இருக்கும் என்று அறிய முயன்றார்கள்.

''இப்போ கேட்டீங்களே இது நியாயம். இப்போ நாங்க தப்பு செஞ்ச அவன்மேல் நடவடிக்கை எடுக்கலன்னா இதுவே தொடர்கதை ஆகும். எங்களால் அதை அனுமதிக்க முடியாது'' இரும்புக் குரலில் சொல்லி அவர்களைப் பார்த்தான்.

அவன் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அறிய அனைவரும் அமைதியாக இருந்தார்கள். ''அவனுக்குத் தண்டனையும் கொடுக்கணும், அவனுக்கு பாதிப்பும் வரக் கூடாது. அதேநேரம் இந்தச் சம்பவம் தொடர்கதை ஆகாமலிருக்க ஒரே வழிதான் இருக்கு'' தாடையைத் தடவியவாறு யோசிப்பதுபோல் நின்றான்.

''சொல்லுங்க சார் எதுவா இருந்தாலும் நான் ஏத்துக்கறேன். ஆனால், எனக்கு வேலை வேணும். எனக்கு கட்டடம் கட்டுவதைத் தவிர வேற எந்த வேலையும் தெரியாது சார்'' சம்பந்தப்பட்ட தொழிலாளியே கெஞ்சினான்.

''இனிமேல் நாங்க பேசிக்கறோம். நீங்க எல்லோரும் உங்க வேலைக்குப் போங்க'' அனைவரையும் கலைந்து செல்லச் சொன்னான்.

''அதான் அவங்களே பேசிக்கிறேன்னு சொல்லுறாங்களேப்பா வாங்க நாம போகலாம்'' அனைவரும் கலைந்து சென்றார்கள்.

''இங்கே பாருப்பா நீ செஞ்சது பெரிய தப்பு. தொழில் செய்யும் இடத்துக்கு, குடிச்சுட்டு வரலாமா? உன்னைப் பார்த்து மத்தவங்களும் அதையே செய்தால் நாங்க எப்படி வேலையை முடிக்க முடியும்? இப்போ உனக்கு இங்கே வேலை இல்லை. அவன் குறுக்கே பேச வருவதைக் கை காட்டித் தடுத்தவன், ''ஆனால், எங்களோட வேற சைட்டுக்கு நீ போகணும். அங்கே உனக்கு வேலை இருக்கு. நீ அங்கே போறதுன்னா தாராளமா போகலாம். இல்லை இங்கேதான் வேலைக்கு வருவன்னா, இன்னும் ஒரு மாசம் கழிச்சு தாராளமா வரலாம். உன் முடிவு என்னன்னு நீ சொல்லு'' கைகளைக் கட்டிக் கொண்டு, அவனையே பார்த்தவாறு அசையாமல் நின்றான்.

அந்தத் தொழிலாளி விழி பிதுங்கினான். கண்டிப்பாக அவனால் ஒரு மாதம் வேலை இல்லாமல், வீட்டு நிர்வாகத்தை நடத்த முடியாது. அன்றாடம் கூலி இல்லாமல், அடுத்த நாளையே அவனால் கழிக்க முடியாத பொழுது, ஒரு மாதம் என்பது அவனுக்குப் பட்டினி கிடந்து மரிப்பதற்குச் சமம்.

எனவே உடனடியாக அவனது பதிலைச் சொன்னான். ''நீங்க சொல்லுற இடத்துக்கு நான் வேலைக்குப் போறேன் சார் என்னால் ஒரு மாசம் கூலி இல்லாமல் சமாளிக்க முடியாது'' வேதனையாகவும், தவறு செய்த குற்ற உணர்வுடனும் சொன்னான்.

''இனிமேல் இப்படி நடந்துகிட்டீங்கன்னா, எங்கேயுமே வேலை தரமாட்டேன். இதுதான் உங்களுக்கு லாஸ்ட் வார்னிங். போங்க போய் வேலைக்குப் போகும் வழியைப் பாருங்க'' சொல்லிவிட்டு, தன் வேலை முடிந்தது

என்பதுபோல், அங்கே நின்ற பாரதியை திரும்பிக் கூட பார்க்காமல் சென்றான்.

உறைந்துபோய் நின்றிருந்தாள் பாரதி. இப்படி ஒரு சிக்கலான பிரச்சனையை, எவ்வளவு அழகாக முடித்துவிட்டான். தவறு செய்தவனுக்குத் தண்டனையும் ஆயிற்று, அவனுக்கு வேலையும் போகவில்லை, இங்கே இருக்கும் தொழிலாளர்களும், இந்தத் தவறை இனிமேல் செய்ய யோசிப்பார்கள்.

'தமிழ் தமிழ்' அவனை இறுக கட்டிக் கொண்டு, முத்தமிட்டுத் தன் மகிழ்ச்சியை அவனுக்கு உணர்த்தவேண்டும் என்ற வேகம் பிறந்தது அவளுக்கு. கனவிலிருந்து கலைந்து, தமிழைத் தேட,

அந்தநேரம் ஒரு பெண், அவளது குழந்தையுடன் அவன் காலில் வந்து விழுந்தாள். சட்டென இரண்டடி பின் வாங்கினான் தமிழ். "நீங்க யாருங்க..? ஏன் என் காலில் விழுறீங்க? முதல்ல எழுந்திரிங்க, குழந்தையைத் தூக்குங்க'' முள்ளின்மேல் நிற்கும் அவஸ்தை அவன் குரலில்.

பாரதி அவனை நெருங்கி வந்து, அவன் கரத்தில், தன் கரத்தைக் கோர்த்துக் கொண்டாள். "அவரோட மனைவி இவங்க'' குரல் குழைய, தமிழிடம் சொன்னாள்.

"ஐயா! என் வீட்டு அடுப்பில் பூனை தூங்காமல் காப்பாத்துனது நீங்கதான்யா. உங்க மனசு போல, புள்ள குட்டியோட நீங்க நல்லா இருக்கணும். உங்க பேர் எனனங்கையா நீங்கதான் என்னோட குல தெய்வம். உங்க பேரைத்தான் என் பையனுக்கு வைக்கணும்.''

ஒரு ஏழைத்தாயின், எளிய கைம்மாறு இது என்பது

போலிருந்தது அவள் செய்கை.

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்'' சங்கடமாக மறுத்தான் தமிழ்.

''உங்க பேரைச் சொல்லுங்கையா'' அவள் அதிலேயே நின்றாள்.

''அவர் பேர் அன்பு'' பாரதி ஹிந்தியில் சொல்ல, இந்தப் பெயரில் அதிர்ந்துபோய் பாரதியைப் பார்த்தான். அவளோ அதே காதல் பார்வையுடன் அவனைப் பார்த்திருந்தாள். அதைவிட, தான் சொன்ன பெயரில் அவளுமே திகைத்துப் போயிருந்தாள்.

'ஆமா, இந்தப் பார்வைக்கு மட்டும் குறைச்சல் இல்லை' மனதுக்குள் கடுகடுத்தான் தமிழ்.

''உங்களுக்குப் பொருத்தமான பேருங்கையா. நானும் இந்த மனுஷன்கிட்ட, குடிக்காதன்னு தலைப்பாடா அடிச்சுகிட்டன். கேக்கவே இல்லை எங்கே வேலை போய்டுமோன்னு உயிரை கையில புடிச்சுட்டு இருந்தேன். நீங்க பேசத் தொடங்குன உடனேயே எனக்கு நம்பிக்கை வந்துடுச்சுங்கையா இவருக்கு வேலை போட்டு கொடுக்குற இடம், இங்கே இருந்து தூரமா போடுங்க. இங்கே இருக்கும் சேர்க்கை எல்லாம் சரியில்லை. இதை விட்டொழிச்சால் தான், நாங்க நிம்மதியா இருக்க முடியும். செய்வீங்களா ய்யா?'' நன்றியும், எதிர்பார்ப்பும் கலந்து கேட்டாள்.

''நீங்க கேட்ட மாதிரியே செய்யிறோம்'' அவளிடம் சொல்லிவிட்டு, தன் பைக் நிறுத்தியிருந்த இடத்துக்கு பாரதியுடன் வந்தான். தன் கையோடு கோர்த்திருந்த அவள் கையை விலக்கியவன், பைக்கில் சாவியைப் பொருத்தி, அதை கிளப்ப முயன்றான்.

அவன் செய்கையை உணர்ந்து, சட்டென அவன் பைக்கிலிருந்து சாவியை எடுத்தவள், அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தங்கள் காருக்குச் சென்றாள். அவனைப் பிடித்து உள்ளே தள்ளியவள், மறுபக்கம், அவன் அருகில் ஏறி அமர்ந்தாள்.

அதே வேகத்தில் அவனைப் பாய்ந்து அணைத்துக் கொண்டாள். ''அன்பு கலக்கிட்டீங்க என்னால் நம்பவே முடியலை'' ஆச்சரியம் விலகாமலேயே சொன்னாள்.

''எதை? இந்தத் தொடை நடுங்கி எப்படி இதைச் செய்தான்னா?'' அவன் குரல் இறுகிப் போய் ஒலித்தது.

அவன் குரலின் மாறுபாட்டில், அவனிடமிருந்து நொடியில் விலகியவள், அதிர்ந்துபோய் அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் குரலைப் போலவே, முகமும் இறுகி, தாடையும் இறுகி இருந்தது.

பாரதியும் அவனை விட்டு விலகி அமர்ந்தாள். யார் பேச்சைத் துவங்குவது என்று பெரிய பட்டிமன்றமே அவர்களுக்கு நடுவில் நடந்தது.

தமிழால் அந்த மௌனத்தைத் தாங்க முடியவில்லை. காரைத் திறந்து கொண்டு வெளியேற முயன்றான்.

''ஏன் அன்பு இந்த ஒரு மாசத்தில் ஒரு நாள் ஒரு நொடியாவது உங்களை இப்படித் தாழ்வாக நினைக்கிறேன்னு என் கண் பார்வையோ, என் நடத்தையோ, என் பேச்சோ உங்களைக் காயப்படுத்தி இருக்கா?'' துயரத்தோடு ஒலித்த பாரதியின் குரலில், தன் தேகம் முழுவதும் சிலர்க்க அவளைப் பார்த்தான்.

கார் கதவைத் திறந்த அவனது கரங்கள், இப்போது அதை அறைந்து மூடியது.

25

என் பார்வையின் மொழியும்
என் பேச்சின் பொருளும்
என் செய்கையின் விளக்கமும்
புதிதாய்...
எல்லாம் உன்னாலே!

பாரதியின் பேச்சைக் கேட்ட தமிழ் திகைத்தான். இதுவரை ஒரு நொடி கூட, பாரதி அவனை அப்படி நடத்தியதில்லை என்பது அவனது மனசாட்சிக்கு நன்றாகத் தெரியும். எனவே அமைதியாகவே இருந்தான்.

நொடியில் தன்னை நிலைப்படுத்திய பாரதி, தமிழின் கரத்தைத் தன் கையில் ஏந்திக் கொண்டாள். ''ஏன் அன்பு இப்படிச் சொன்னீங்க? நான் உங்களை என்னோட கூப்பிடலைன்னு உங்களுக்குக் கோபம் அப்படித்தானே.

''மூணாவது மனுஷங்களை நாம கூப்பிடணும். ஆனால், நமக்கு உரிமையானவங்களை நாம கூப்பிட அவசியமே கிடையாது. எனக்குத் தெரியும் நீங்க வருவீங்கன்னு, அதான் நான் கூப்பிடாமல் வந்தேன். அதுக்கு உங்களுக்கு இவ்வளவு கோபம்ன்னா இனிமேல் எங்கே போவதா இருந்தாலும் கூப்பிடுறேன் சரியா?''

இந்த ஒரு மாத காலத்தில் தமிழுக்கு பாரதி புரியாத புதிராக இருந்தாளே தவிர, பாரதிக்குத் தமிழின் குணம் அத்துப்படியாகி இருந்தது. அவன் பார்வையின் மாறுதலைக்

கூட அவள் அறிந்து கொள்வாள்.

அவள் எண்ணியது போலவே. தமிழின் கோபம் நொடியில் காணாமல் போனது. ''அப்படின்னா'' அவன் கண்கள் மின்னக் கேட்டான்.

''அப்படின்னா இப்போ நான்தான் நீங்க; நீங்கதான் நான். அப்போ உங்களை நீங்கதான் பாத்துக்கணும். காலையில் நான் சொல்லும்போது, அதென்ன நீ உங்க அண்ணனை கூப்பிடுறது, என்னைக் கூப்பிட்டால் நான் வர மாட்டேனான்னு கேட்டுருக்கணும். அதை விட்டு இப்படி முறுக்கிகிட்டால் ஆச்சா?'' அவன் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்து, காலர் பட்டனைத் திருகியவாறு அவள் கேட்டாள்.

''அப்போ வேணும்னுதான் இப்படி செஞ்சியா நீ'' அவளையே பார்த்தவாறு அவன் கேட்க,

''ஆமா. சரி இப்போ நேர ஆபீஸ் போலாமா... இல்ல, வீட்டுக்குப் போய் சாப்ட்டுட்டு போகலாமா?'' கேட்டவாறு காரைக் கிளப்பினாள்.

''பாரதி! என்னோட பைக் அங்கே நிக்கிது'' அவன் சொல்ல, ''ஆபீஸ் பாயை அனுப்பி எடுத்துக்கலாம்'' காரை ஓட்டியவாறே பதில் கொடுத்தாள்.

அவளது இந்தச் செய்கையில் தமிழ்தான் குழம்பிப் போனான். 'இவ என்ன நினைச்சுட்டு இப்படில்லாம் செய்யிறா?' அவனுக்குச் சுத்தமாகப் புரியவில்லை. ஆனால், இப்பொழுதெல்லாம் அவன், அவள் முகத்தையே யோசனையாக பார்ப்பதையே வேலையாகக் கொண்டிருந்தான்.

காலையில் எழுந்தவுடன், அவனுக்குக் காலை

வணக்கம் சொல்வது முதல், அவன் குளித்து முடித்து வந்தவுடன் தலை துவட்டுவது, தலை கோதுவது, அவனுக்குத் தேவையான உடையை எடுத்து வைப்பது என ஒவ்வொரு விஷயத்திலும் தமிழை அவள் கவனித்துக் கொண்டாள்.

அவன் கையைக் கோர்த்துக் கொண்டுதான் வெளியில் செல்வாள். அலுவலகத்தில் கூட அவன் அருகிலேயே இருந்தாள். இப்பொழுது அவள் இடத்திலிருந்து, நிர்வாகத்தை தமிழ் தான் கவனித்தான். மதியம் சாப்பிடுவது, சாயங்காலம் டீ மாலையில் சரியாக ஐந்து முப்பதுக்கு அலுவலகம் விட்டுக் கிளம்பினால், சரியாக ஆறு மணிக்கு, அவனை அழைத்துக் கொண்டு எங்காவது வெளியில் செல்வாள்.

அவன் கையில், தன் கையை கோர்த்துக் கொண்டு, தோளோடு தோள் உரச, ''தமிழ்! அங்கே பார்த்தீங்களா? அந்தக் குழந்தை ரொம்ப அழகா இருக்குல்ல. இந்த டிரஸ் அழகா இருக்குல்ல'' ஒவ்வொன்றுக்கும் அவனிடம் கருத்துக் கேட்டு, அவன் காதை பஞ்சர் ஆக்காமல் விட மாட்டாள்.

பீச்சுக்குச் செல்லும் வேளைகளில், கடல் மணலில் அவனை உரசியவாறு அமர்ந்து கொள்வதும், சில வேளைகளில் அவனை மடிதாங்கி, அவன் தலை கோதி, நெற்றியில் ஈரமாக முத்தம் பதிக்கும் வேளைகளில், உள்ளுக்குள் உணர்வுகள் கொதித்து அடங்கும் அவனுக்கு.

ஆனால், பாரதியோ எந்தவித சலனமுமே இல்லாமல் அவனுடன் பழகினாள், அதுதான் அவனை குழப்பத்துக்கு உள்ளாக்கியது. அறையில் இருக்கும் வேளைகளில் கூட, அவனை விட்டுப் பிரியவே முடியாதவள் போல், அவன்

அருகிலேயே அமர்ந்து கொள்வாள். அவள் பிளான் வரையும் வேளைகளில், அவன் அருகிலேயே நின்று, அவன் வரைவதை கவனமாகப் பார்ப்பாள். தமிழால் அவள் செய்கையின் அர்த்தங்களைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

தங்கள் நிச்சயத்தின் அன்று, கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் தன்னை முத்தமிட்டவள், அதன் பிறகு அதைப் பற்றிய எண்ணமே இல்லாமல் நடந்துக்கொள்வதை அவனால் சாதாரணமாக எடுக்க முடியவில்லை. அவள் அவனுக்கு அறிமுகப்படுத்திய உணர்வுகளை, சிலிர்ப்பாய் உணர்ந்து, மனதுக்குள்ளேயே அசை போட்டவனுக்கு, அவள் இதழ்களின் ஈரமுத்தம் இன்னும் வேண்டும் என்ற வேட்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்தது.

பாரதியோ முதலிரவில் துவங்கி, இன்று வரை, அவனை விட்டு விலகி இருந்தாள் என்று சொல்ல முடியாது, அதே சமயம், அவனிடம், மனைவிக்குரிய உரிமையிலும், தனித்தன்மையிலும் பழகவில்லை என்பதும் புரிந்தது. அவனது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்த, தேவாவும் அங்கே இல்லை என்பதால், தமிழ் தவித்தான்.

மனைவிதான் முதல் தோழி என்பதை அவன் உணரவில்லை. அவளிடம் தன் சந்தேகத்தைக் கேட்கவும் அவன் தயக்கம் தடுத்தது. தமிழுக்கு அவள் வேண்டும் என்று இப்பொழுதெல்லாம் தோன்றியது. அதிலும் இரவில் தூங்கும் பொழுது, அவன்மேல் ஒரு கையும், காலும் போட்டுக் கொண்டு, அவன்மேல் அவள் சரிந்து தூங்கும் வேளைகளில், 'ஆண்டவா இது என்ன சோதனை?' என்று மனதுக்குள்ளே புழுங்கிக் கொண்டிருந்தான்.

அவன் உணர்வுகள் அவன் வசம் இருக்காமல், அவள்மேல் சரிந்து தன் தாபத்தை தீர்த்துக் கொள்ள, அவனது ஒவ்வொரு அணுவும் துடித்தது. ஆனால், அவளை எப்படி அணுகவென்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. அவன் கரங்களுக்குள் அடங்கியிருக்கும் அவளைத் தொட்டு ஆள, ஒரு நிமிட நேரம் கூட வேண்டாம் என்பது அவனுக்குப் புரியவே இல்லை.

பாரதியின் நிலையோ அவனுக்குக் குறையாமல் தான் இருந்தது. தமிழை அவள் உளமாற நேசித்தாள். மனதுக்குப் பிடித்தவன், உரிமையுள்ளவனின் விலகல் அவளுக்கு எவ்வளவு பெரிய வலியைக் கொடுக்கும் என்பது அவனுக்குத் தெரியாது. ஒவ்வொரு இரவிலும் அவனை நெருங்கிப் படுக்கும் வேளைகளில், இன்று தன்னை ஆள்வானா? என்ற எதிர்பார்ப்பை அவன் பொய்த்துப் போக வைக்கும் நிமிடங்கள் அனைத்தும் அவனுக்காக ஏங்கித் தவித்தது அவள் மனமும் தேகமும்.

அவளுக்குத் தெரியும் அவனை வசமிழக்கச் செய்ய ஒரு நொடி போதுமென்று. ஆனால், அந்த நொடியைத் தன் கையில் எடுத்துக் கொள்ளத்தான் அவள் தயங்கினாள். இரவில் அவன் கழுத்து வளைவில் போட்டு உறங்கும் கையை, அவன் கன்னத்தை வருடாமலும், அவன் பிடரி முடியில் அலையாமலும் தடுக்க, அவள் போராட வேண்டி இருந்தது.

ஒரு நாள் அவன் தோள் வளைவிலிருந்து, தன் தலையைத் தூக்கி, அவன் கண்களுக்குள் ஆழ்ந்து நோக்க, ''என்ன பாரதி தூக்கம் வரலையா?'' என்று அவன் கேட்ட பொழுது, அப்படியே இரண்டு மொத்து மொத்தினால் என்ன

என்று அவளுக்குத் தோன்றியது.

இருபத்திநான்கு மணி நேரமும் அவனோடு இருப்பதால், பெண் என்பவள் இவ்வளவுதான், அவளோடு எப்படிப் பழகவேண்டும் என்பதும் அவனுக்குத் தெரிந்தது. அலுவலகத்தில் உடன் பணிபுரியும் பெண்கள் அவனிடம் பேசும் பொழுது, தடுமாறாமல் அவனால் நின்று பதில் சொல்ல முடிந்தது.

அந்த யோசனையோடே அலுவலகம் வந்தவர்கள், அதன் பிறகு தங்கள் வேலையில் மூழ்கினார்கள். தொடர்ந்த நாட்களும், தமிழின் மனப்போராட்டம், பாரதியின் தவிப்பு என நாட்கள் அதன் போக்கில் கடந்தது.

அன்று சைட்டுக்குச் சென்றார்கள். பொதுவாக அவர்கள் செல்லவேண்டி இருக்காது. ஆனால், அந்த சைட் இஞ்சினியர் வேலையை சரியான நேரத்துக்கு முடிக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருந்தான். எனவே அது என்னவென்று கவனிக்கவே, அந்த இஞ்சினியருக்குத் தகவல் கொடுக்காமலேயே, அந்த சைட்டுக்குச் சென்றார்கள்.

இவர்கள் செல்லும் வேளையில் வேலை மந்தகரமாக நடந்து கொண்டிருந்தது. வேலை செய்பவர்கள் அனைவரும் கொஞ்சம் நிதானமாகவும், அசட்டையாகவும் செய்வது போலிருந்தது. இஞ்சினியர் எங்கே என்று தேட, அவன் அங்கே இருக்கும் சுவடே இல்லை.

''எப்பா இஞ்சினியர் எங்கேப்பா?'' தமிழ் ஒருவரிடம் கேட்க, ''இஞ்சினியர் எல்லாம் இருக்க மாட்டாருங்க. மேஸ்திரிதான் இருக்கார். அதுவும் கீழே எங்கேயாவது இருப்பாருங்க'' சொல்லிவிட்டு அவன் வேலையைத்

தொடரச் சென்றான்.

இருவருக்கும் சுறுசுறுவென்று கோபம் ஏற, இஞ்சினியருக்குத் தொடர்பு கொண்டால், அவனது அலைபேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

தமிழ் வேகமாக மேஸ்திரியை அழைத்து, இஞ்சினியர் அங்கே இல்லை என்பதற்கான ரெக்கார்ட் எல்லாம் தயார் செய்துவிட்டு, அந்தக் கட்டிடத்தை ஒரு முறை பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று அதைப் பார்வையிடச் சென்றார்கள்.

அந்த எட்டு மாடிக் கட்டிடம் உள்பூச்சு அனைத்தும் முடிந்து விட்டிருந்தது. ஒவ்வொரு மாடியாகப் பார்த்துவிட்டு, மாடியிலிருந்து, பேசியவாறே இறங்கிக் கொண்டிருந்தார்கள். தமிழ் முன்னால் செல்ல, பாரதி அவனைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

ஒரு மாடியில் படியில் சில கற்கள் கிடக்க, அதைக் கவனிக்காமல் தமிழ் கால் வைத்துவிட, அது அடிபட்டக் கால் ஆகையால் அடுத்த அடித் தடுமாற, படியில் உருளப் பார்த்தான்.

அதைப் பார்த்த பாரதி, சட்டென அவன் சட்டையைப் பிடித்து, விழாமல் தடுக்கப் பார்க்க, தமிழால் காலை ஊன்ற முடியாமல், அவள் பக்கமே சரிய, தமிழைத் தாங்கிப் பிடிக்கும் சக்தி அவளுக்கு இல்லாமல், அவன் பாரம் முழுவதும், அவள்மேல் தாங்க வேண்டியதாயிற்று.

பிடிமானம் இல்லாமல், இருவருமே சரியத் துவங்கினார்கள். விழப் போகையில் பிடிமானத்துக்காக அவன் கைத் துழாவ, அவள் அணிந்திருந்த டிஷர்ட்டின் காலரைப் பற்ற முயல, சரியாக கழுத்துப் பகுதியில் அவன்

பிடி கிடைக்கவே, அது கொஞ்சம் மெல்லிய துணி ஆகையால், அவனது பலத்தைத் தாங்காமல், நேராகக் கிழிந்தது. துணி கிழியவும், இருவரும் கீழே விழவும் சரியாக இருந்தது. அவள் மேலேயே தமிழ் முழுதாகச் சரிந்து விழுந்தான்.

இப்படி ஒரு நிகழ்வை இருவருமே எதிர் பார்க்கவில்லை ஆகையால், அதிர்ந்துப் போயிருந்தார்கள். நடந்து முடிந்த செய்கையில், பாரதியின் டிஷர்ட் கிழிந்ததை இருவருமே உணரவில்லை. அந்த நிகழ்விலிருந்து முதலில் மீண்ட பாரதி, தன்மேல் விழுந்திருந்த தமிழை, விலக்க மனமே இல்லாமல் விலக்கி எழுந்தாள்.

''தமிழ்! உங்க கால்ல ரொம்ப அடி பட்டுடுச்சா..? வலிக்குதா? பார்த்து வர மாட்டீங்களா? ரொம்ப பெயின் இருந்தால், நாம ஹாஸ்பிட்டல் போகலாம்'' படபடப்பாக, பதட்டமாகக் கேட்டவள், அவன் அருகில் அமர்ந்து அவன் காலைப் பிடித்து ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

அவளது இவ்வளவு பதட்டத்திலும் பேச்சிலும், கேள்வியிலும் தமிழிடமிருந்து எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல் போகவே, 'என்ன மயக்கமாயிட்டாரா..?' பதைப்பாக அவனைத் திரும்பிப் பார்க்க, அவன் பார்வை, தன் மேனியில் நிலைத்திருப்பதைப் பார்த்து, தன்னைக் குனிந்து பார்த்தாள்.

டிஷர்ட் நேராகக் கிழிந்து, சுத்தமாக அவள் மேனியை மறைக்க முயன்று தோற்றிருக்க, உள்ளாடையுடன் அவன் முன்னால் இருப்பதை அப்பொழுதுதான் உணர்ந்தாள். இதுவரை அவளையே வெறித்தவன், அவள் பார்த்ததும், ''பாரதி உன் ஷர்ட்'' அவன் கைகள் அதைத் தொட முற்பட,

''ஹையோ கொஞ்சம் கையை வச்சுட்டு சும்மா இருங்க'' அவஸ்தையாக, அவன் கையைத் தடுத்தவள், அவசரமாக டிஷர்ட்டை இழுத்து, தன் மேனியை மறைத்தாள்.

இருவரும் இன்னும் எழவில்லை. எழ விருப்பமே இல்லாதவர்கள் போன்று உறைந்திருந்தார்கள். இருவருக்குள்ளும் ரசாயன மாற்றம் வேகமாக நிகழ பாரதியோ முற்றிலும் நிலை குலைந்து, இமைகள் மூடி, எதையோ அவனிடமிருந்து எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அவனிடமிருந்து விலகிச் செல்ல அவள் முயலவில்லை. கொண்டவன் அருகில் தானே இருக்கிறேன் என அவள் மனம் அறிவுறுத்தியது.

'ஹையோ ஏன் இன்னும் இப்படி சும்மா இருக்கிறார்?' அவள் இதழ்கள், அவன் இதழ்களுக்காக ஏங்கித் துடித்தது. டிஷர்ட்டை பிடித்திருந்த கரங்கள், அவன் கரங்களுக்காக ஏங்கியது.

கட்டியக் கணவன் முன்னால் தான் இருக்கும் நிலை, அவளுக்குள் வேதியல் மாற்றங்களை மட்டுமல்ல தேகம் சூடாகி அவன் அணைப்புக்காகக் காத்திருந்தாள். 'என்னை ஏதாவது செய்டா' அவள் மனம் அந்த நொடி அவனுக்காக ஏங்கித் தவித்தது.

ஆனால், அவள் எதிர்பார்த்த எதுவும் நிகழாமல் போகவே, நொடியில் அங்கிருந்து எழுந்து, படியில் நடக்கத் துவங்கினாள். அவள் எழுந்து செல்லவே, அதுவரை மூச்சடைக்க, பாரதியை அவ்வளவு நெருக்கத்தில் பார்த்த, அதிர்ச்சியிலிருந்து வெளிவர முடியாமல், அவளை இழுத்தணைத்து, தன்னோடு அவளை இறுக்கிக் கொண்டு, முத்தமிட்டு முன்னேறும் கனவிலிருந்து கலைந்து

எழுந்தான். அப்பொழுதுதான், அவள் டிஷர்ட் கிழிந்திருப்பது நினைவுக்கு வரவே, வேகமாகத் தன் சட்டையைக் கழட்டியவன், அவளை நெருங்கினான்.

''பாரதி பாரதி'' தமிழின் குரல் ஓங்கி ஒலிக்க, ஒரு நிமிடம் நின்றாள். இதுவரைத் தான் நினைத்த எண்ணங்களின் தாக்கம் அவளை விட்டு அகலவில்லை. கிளர்ந்த உணர்வுகள் அடங்க மறுத்தது.

''பாரதி! சாரி நான் வேணும்னு செய்யலை எதோ தெரியாமல்'' தயங்கித் தயங்கி அவன் விளக்கம் கொடுக்க, உள்ளுக்குள் நொறுங்கிக் கொண்டிருந்தாள் பாரதி.

'ஹையோ எனக்கு இந்த சாரி வேண்டாம். நீதான் வேண்டும்' உள்ளுக்குள் குமுறிய தன் தாபத்தை அவனிடம் வெளிப்படுத்த முடியாமல் தடுமாறினாள்.

கண்கள் அவள் அனுமதி இன்றியே கலங்க, இருதுளி நீர் அவள் கன்னத்தில் வழிந்தது. வெடுக்கென நிமிர்ந்து அவனைப் பார்க்க, அவள் கண்களில் வழிந்த கண்ணீரும், அவள் பார்வையும் அவனை ஏதோ செய்ய, அவன் பேச்சு பாதியிலேயே நின்றது.

'நான் உன் மனைவி தானே' அவள் கண்கள் அவனிடம் மௌனமாக கேள்விக் கேட்க, அவன் கண்களின் கேள்விப் புரியாமல் தடுமாறினான் அவன்.

அவள் அங்கிருந்து விலகிச் செல்ல, அவளைத் தடுத்தவன், தன் சட்டையை அவளிடம் கொடுத்தான். அதை மறுக்காமல் வாங்கியவள், ஒரு உதறு உதறிவிட்டு, வேகமாக அணிந்து கொண்டு அங்கிருந்து சென்று காரில் அமர்ந்துகொண்டாள்.

அவள் கோபமாக இருப்பதைப் பார்த்தவன், ''பாரதி!

அதான் சொன்னேனே நான் வேணும்னு''

''வீட்டுக்குப் போகலாம்'' அவனைப் பேச விடாமல், கிட்டத்தட்ட கத்தினாள்.

மறுபேச்சின்றி காரைக் கிளப்பியவன், 'எதுக்கு இவ்வளவு கோபம்..?' குழம்பியவாறே காரைச் செலுத்தினான். வெடித்துக் கிளம்பிய அழுகையை அடக்கியவாறே, கண்மூடி அமர்ந்திருந்தாள் பாரதி.

26

என் உணர்வுகள் காயப்படுவதும்...

என் உணர்வுகள் உயிர்ப்பதும்...

எல்லாம் உன்னாலே!

வீட்டிற்கு வந்தவள், தங்கள் அறைக்குச் செல்லாமல், மற்றொரு அறைக்குச் சென்று கதவை அடைத்துக் கொண்டாள். எதற்காக அழுகிறோம் என்றே தெரியாமல் கண்கள் கலங்கி, அழுகையில் கரைந்தாள்.

அந்தநேரம் தமிழின் அலைபேசி ஒலிக்க, அதில் ஒளிர்ந்த சிவத்தின் எண்ணைப் பார்த்தவன், யோசனையோடே அதை எடுத்தான்.

''சொல்லுங்க மாமா?'' ஏதாவது அவசரமாக இருக்குமோ என்று கொஞ்சம் படபடப்பாகக் கேட்டான்.

''சும்மாதான் மாப்பிள்ளை ஃபோன் செய்தேன். நானும், ஜகதீஷும் பெங்களூர் வந்தோம் எப்படியும் வர

ரெண்டு நாள் ஆகும். அதான் அங்கே சுதா மட்டும் தனியா இருப்பா. முடிஞ்சா நீங்களும், பாரதியும் ஒரு எட்டு பாத்துக்கோங்க. பாரதி எங்கே? அவளுக்கு ஃபோன் செய்தேன் அவ எடுக்கவே இல்லை'' மனைவிமேல் அக்கறையாகச் சொன்னவர், மகளிடம் பேச முடியாத வருத்தத்தில் முடித்தார்.

''பாரதி கொஞ்சம் முடியாமல் படுத்திருக்கா மாமா அவ எழுந்த உடனே நான் அத்தையைப் போய் பார்க்குறேன்'' மேலும் எதையாவது உளறிவிடக் கூடாதே என்று வேகமாக அலைபேசியை வைத்துவிட்டான்.

சிவன் மகளுக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லவே சுதாவுக்கு நொடியில் ஃபோன் செய்து, மகளைச் சென்று பார்க்குமாறு சொன்னார்.

கணவன் இப்படிச் சொல்லவே, ஒரு நிமிடம் துணுக்குற்ற சுதா நொடியில் மலர்ந்தார். ''சரி நான் பார்த்துக்கறேன் நீங்க வைங்க'' அவரிடம் சாதாரணமாகச் சொன்னவர், கைகள் நடுங்க, 'அப்படி இருக்குமோ..' என்ற குதூகலத்தோடு, மகளுக்கு அழைத்தார்.

இங்கே பாரதியோ, எவ்வளவு நேரம் அழுதாள் என்பது அவளுக்கே தெரியாமல், அழுது ஓய்ந்தவள், இறுதியில் தூங்கிவிட்டாள். எங்கேயோ கிணற்றுக்குள் ஒலிப்பது போல, அலைபேசியின் ஓசை கேட்கவே, கைகளால் துழாவி, அலைபேசியை ஆன் செய்து காதில் வைத்தாள்.

''பாரதி உடம்புக்கு என்ன செய்யுது இந்நேரம் படுத்து தூங்கிட்டு இருக்க ஏதாவது விசேஷமா?'' சுதா தன் ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கேட்டார்.

''என்னம்மா கேக்குறீங்க? ஒண்ணும் புரியலை...''

வழக்கமில்லாத மதியத் தூக்கம் பாரதியைப் பிடித்து அழுத்தியிருந்தது.

''இவ வேற நேரங்காலம் தெரியாமல்'' சலித்தவர், ''பாரதி உனக்கு நாள் தள்ளிப் போயிருக்கா?'' நேரடியாகக் கேட்க முடியாமல் சுற்றி வளைத்தார்.

''ம்ச் படுத்தாம வைங்கம்மா'' அலைபேசியை அணைக்கப் போனாள்.

''ஏய் பாரதி! நீ மசக்கையா இருக்கியா?'' கேட்டவர் பாரதிக்கு இதுவும் புரியாது என்பது தோன்றவே நேரடியாகக் கேட்டுவிடலாம் என்று முடிவெடுத்தார். ''பாரதி உண்டாகி இருக்கியா?'' அவர் குரலில் அப்படி ஒரு உற்சாக ஊற்று.

ஏற்கனவே கடுப்பில் இருந்தவள், தாயின் இந்தக் கேள்வியில் கொதிப்பின் உச்சத்துக்குச் சென்றாள். அந்த நினைவிலேயே என்ன சொல்கிறோம் என்று தெரியாமலேயே, ''ஆமா இங்கே தொட்டுக்கவே வழியைக் காணோம் இதில் உண்டாகுறது ஒண்ணுதான் குறைச்சல்'' கேட்டுவிட்டு, தொடர்ந்து அவள் பேசும் முன்னர், அலைபேசி அணைக்கப்பட்டது.

பாரதி விட்ட தூக்கத்தைத் தொடர, சுதா தளர்ந்துப்போய் சோபாவில் அமர்ந்தார். பாரதியின் சொல்லே அவர் காதில் ஒலிக்க, மகள் இன்னும் தன் மகளாகவே இருக்கிறாள் என்ற உண்மையை ஜீரணிக்க முடியாமல் துவண்டார். இல்லை இதை என்னவென்று அறிந்தே ஆகவேண்டும் எப்படியோ ஒரு வழியாக நான்கு மணிவரைப் பொறுத்தவர், அடுத்த நிமிடம், அவரது காரில் இருந்தார்.

அந்தநேரம் பாரதியின் அறைக்கதவு தட்டப்படவே,

உறக்கம் கலைந்து எழுந்தவள், நேரம் பார்க்க, அது மாலை நான்கு மணியைக் காட்டியது.

மதியம் சாப்பிடாதது, அழுதது என அனைத்தும் சேர்ந்து அவளைத் தள்ளாட வைத்தது. ''என்ன?'' உள்ளிருந்தே குரல் கொடுக்க, ''ரொம்ப நேரமாயிடுச்சு பாரதி. எனக்குப் பசிக்குது?'' தமிழின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

'நான் இவரை சாப்பிட வேண்டாம்னு சொன்னேனா' கோபமாகக் கதவைத் திறந்தவள், ''நீங்க போய் சாப்பிடுங்க. நான் குளிச்சுட்டு வந்துடுறேன்'' அவன் முகம் பார்க்காமல் சொன்னவள், கதவைச் சாத்திக் கொண்டாள்.

''நீ வா. நாம சேர்ந்தே சாப்பிடலாம் வெயிட் பண்ணுறேன்'' பிடிவாதமாகச் சொல்லிவிட்டுச் சென்றான்.

''அதெல்லாம் எதுவும் வேண்டாம் நீங்க சாப்பிடுங்க'' கதவைப் படாரெனத் திறந்து, அவனிடம் கத்தினாள்.

அவன் அவள் கோபத்தைக் கண்டுகொள்ளாமல், ''இத்தனை நாளில் நான் ஒரு நாள் கூட, உன்னை விட்டு சாப்பிட்டது கிடையாதே பாரதி. உனக்கு என்னமோ என்மேல் கோபம்னு மட்டும் தெரியுது. ஆனால், அது ஏன்னுதான் தெரியலை. உனக்கு என்மேல் என்ன கோபம்னு சொல்லு, நான் அதைத் திருத்திக்கிறேன் நான்தான் ஏற்கனவே உன்கிட்ட சொல்லியிருக்கேனே எனக்குப் பொண்ணுங்க...''

''ஜஸ்ட் எனஃப் அன்பு. இப்போல்லாம் மத்த பொண்ணுங்ககிட்ட பேசறதுக்கெல்லாம் உங்களுக்குத் தெரியுது. ஆனால், சொந்த பொண்டாட்டிகிட்ட மட்டும்... போதும் என்னை பேச வைக்காதீங்க'' சொல்லிவிட்டுக் கதவை படாரென சாத்திக் கொண்டாள்.

அவள் செய்கையில் உறைந்துப் போய் நின்றிருந்தான் தமிழ். அவள் தன்னை அன்பு என்று சொல்கிறாள், ஆனால், கோபமா இருக்கா 'ஏன் இப்படி?' எவ்வளவு யோசித்தும் பதில்தான் அவனுக்குக் கிடைக்கவில்லை.

பாரதி, ஷவரின் அடியில் நிற்கும்பொழுது, சிந்தை முழுவதும் தமிழே நிரம்பியிருந்தாள். 'எனக்குத்தான் அவரைப் பற்றி தெரியுமே. பிறகு ஏன் இப்படிக் கோபப்படுகிறேன்..? இனிமேல் இப்படி நடந்துக்கக் கூடாது. அவர் மனசில் என்ன நினைக்கிறார்ன்னு தெரியாமல் ச்சே என்ன இது? இருந்தாலும் அவருக்கு என்மேல் சலனமே வரலையா?' இதை நினைக்கும் பொழுதே மீண்டும் கண்ணீர் வரும்போல் இருக்க, இனிமேல் இதை நினைக்கவே கூடாது, என்று நினைத்த பிறகுதான், அவள் மனம் கொஞ்சமாவது அமைதியடைந்தது.

தமிழ் இன்னும் குழம்பிக் கொண்டிருந்தான். 'நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, பாரதி கஷ்டப்படுற மாதிரி எதையோ செஞ்சுட்டேன்னு மட்டும் தெரியுது. ஆனால், என்ன செய்தேன்னு தெரியலையே? மதியம் நடந்ததுக்கு அவளுக்கு கோபம் மாதிரி தெரியலை, அப்போ எதுக்குத்தான் கோபம்?

'அந்தநேரம் நான் என்ன செய்திருக்கணும்னு அவ எதிர்பார்த்தா?' அந்த நிகழ்வை சிந்திக்கையிலேயே அவன் தேகம் சூடேறியது. 'ஹையோ தப்புத் தப்பாவே தோணுதே' சரியாகச் சிந்திப்பதைத் தவறென்று அவன் எண்ணினான்.

அந்தநேரம் பாரதி அங்கே வர, அவன் பார்வை அவள் மேனியில் தடுமாறிப் பாய்ந்து, பிறகு நேரானது. பாரதி எதுவும் நடவாததுபோல், சாதாரணமாக உரையாடினாள்.

அவள் அப்படிப் பேசவே அவனும் தன் குழப்பங்களை விட்டுவிட்டு, அவள் பேச்சில் கலந்தான்.

''அன்பு நாளைக்குக் காலையில் சுஷ்மியும் தேவாவும் வராங்க. நாம காலையில் ஏர்ப்போட் போகணும் ஞாபகம் இருக்கா?'' திடீரெனக் கேட்டாள்.

''ஆமா ஞாபகம் இருக்கு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அத்தை போன் பண்ணியிருந்தாங்க. உன்னை எங்கேன்னு கேட்டாங்க உனக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை, ரெஸ்ட் எடுக்குறன்னு சொன்னேன்.

''அப்படியா என்கிட்டயும் பேசினாங்க ஆனால், நான் என்ன பேசினேன்னே எனக்கு ஞாபகம் இல்லை. அப்போ நல்ல தூக்கத்தில் வேற இருந்தேன்'' அவள் சொல்லிக்கொண்டு இருக்கும் பொழுதே

''பாரதி'' பரபரப்பாக, தன் வயதையும் மறந்து ஓடி வந்தவர், தமிழைப் பார்த்து கொஞ்சம் தேங்கினார்.

''வாங்க அத்தை அதான் நான் பிரச்சனை எதுவும் இல்லன்னு சொன்னேனே பாரதி நல்லாத்தான் இருக்கா'' வேகமாகச் சொன்னான்.

சுதா பாரதியை அழுத்தமாகப் பார்க்க, பாரதி தாயைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். அதை உணர்ந்து, சுதாவின் புருவங்கள் முடிச்சிட்டன.

'பாரதி அம்மாட்ட என்ன பேசித் தொலைச்ச இப்படிப் பார்க்குறாங்களே? எதோ சரியா பேசலன்னு மட்டும் தெரியுது. எப்படியாவது தப்பிக்கணுமே' பாரதியின் மனம் வேகமாகச் சிந்தித்தது.

தமிழின் முன்னால், சுதாவால் எதையும் உடைத்துக்

கேட்க முடியவில்லை. பாரதியும் அதை உணர்ந்து, தமிழை விட்டு இங்கே அங்கே நகராமல், அவன் அருகாமைதான் தனக்குப் பாதுகாப்பு என்று அவனை விட்டு இம்மியும் நகராமல் இருந்தாள்.

சுதா இருவரையும் ஆராய்ச்சிப் பார்வைப் பார்க்கத் துவங்கினார். வெளிப்பார்வைக்கு இருவரும் ஒன்றாக இருப்பதாகத் தெரிந்தாலும், புதுமணத் தம்பதிகளுக்கே உரிய, உரிமையான பார்வைகளோ, செல்லச் சீண்டல்களோ, குறும்புப் பேச்சுக்களோ எதுவும் இல்லாமல், இயந்திரத்தனமாக அவர்கள் நடப்பதாகத் தோன்றியது. அதிலும் பாரதி, மிகுந்த கவனமுடன் நடந்து கொள்வதாக அவருக்குத் தோன்றியது.

''அம்மா! வீட்டில் அண்ணாவும் அப்பாவும் தனியா இருப்பாங்களே. அவங்களுக்கு டின்னர் கொடுக்கணுமே'' நீங்க கிளம்புங்க என்பதை சுற்றி வளைத்துச் சொன்னாள்.

''அவங்க ரெண்டுபேரும் ஒரு கம்பெனி விஷயமா பெங்களூர் போயிருக்காங்க. வர ரெண்டு நாள் ஆகும். நான் இங்கேதான் தங்கப் போறேன்'' அவளை அழுத்தமாகப் பார்த்துச் சொன்னார்.

''அப்படியா சரி நீங்க இவர்ட்ட பேசிட்டு இருங்க. நான் உங்களுக்கு ரூம் ரெடி பண்ணுறேன்'' அவரைத் தமிழிடம் கோர்த்து விட்டுவிட்டே, அங்கிருந்து நகர்ந்தாள்.

மனதுக்குள் பல்லைக் கடித்தவாறே தமிழிடம் பேசிக் கொண்டிருந்தார் சுதா. அதன் பிறகு மூவருமாகப் பேசியவாறே இரவு உணவு முடித்து, அதன் பிறகும் பேச்சுத் தொடர்ந்தது. எவ்வளவு முயன்றும் சுதா எதிர் பார்த்த தனிமை மட்டும் கிடைக்கவில்லை.

சுதாவை அவரது அறையில் விட்டவள், ''அன்பு இன்னைக்கு அந்த இஞ்சினியருக்கு மெமோ கொடுக்க எல்லாம் ரெடி பண்ணிட்டீங்களா? அம்மா எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. நீங்க தூங்குங்க குட் நைட்'' சொன்னவள் தப்பித்தோம், பிழைத்தோம் என்று தன் அறைக்குச் சென்று மறைந்தாள்.

'எத்தனை நாள் தப்பிக்கிறன்னு நானும் பார்க்குறேன்' சுதா மனதுக்குள் எண்ணியவர், பாரமான மனதுடன் படுக்கைக்குச் சென்றார். மகளின் வாழ்வை எண்ணி அவருக்குக் கலக்கமாக இருந்தது.

'தமிழ், பாரதி இருவரின் வாழ்வும் சரியாகத்தான் போய்க்கொண்டு இருக்கிறதா? அப்படி சரியாகத்தான் போகிறது என்றால் பாரதி என்னிடம் பேசுவதை தவிர்ப்பது ஏன்? அவர்கள் வாழ்க்கையை இன்னும் துவங்கவே இல்லையா? இது உண்மை தானா அவளோட நடத்தை எனக்கு அப்படித்தான் சொல்லுது புலம்பினார் சுதா.

'பாரதி அவள் வாழ்க்கையிலும் விளையாட்டுத் தனமாகவே இருக்கிறாளா? தமிழ் நல்லவராக இருக்கபோய் ஆயிற்று. இதுவே வேறு யாராகவாவது இருந்திருந்தால், பாரதியின் வாழ்க்கை என்னவாகி இருக்கும். இல்லைஇல்லை இதை இதை இப்படியே விட முடியாது. என் மகளின் வாழ்க்கை எனக்கு முக்கியம் காலையில் என்ன ஆனாலும் அவளிடம் பேசியே ஆக வேண்டும்' இரவு முழுவதும் புரண்டுப் படுத்தும் அவரால் தூங்கவே முடியவில்லை.

அறைக்குள் வந்த பாரதியைக் கண்டனப் பார்வையுடன் எதிர்கொண்டான் தமிழ். ''நீ செய்யிறது கொஞ்சம் கூட சரியே இல்லை பாரதி'' அதை

வார்த்தையிலும் அப்படியே வெளிப்படுத்தினான்.

''ஏன் நான் என்ன செஞ்சேன்?'' அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

''என் கண்ணைப் பார்த்து பேசு பாரதி. அடிக்கடி என்கிட்ட சொல்லுவியே என் கண்ணைப் பார்த்து பேசுங்கன்னு. இப்போ அதையேதான் நான் உன்கிட்ட சொல்லுறேன். உங்க அம்மா வந்ததிலிருந்து உன்கிட்ட என்னவோ பேசணும்னு நினைக்கிறாங்க. ஆனால், அதை நீ கண்டுக்காமல், அவங்களை வீட்டுக்கு அனுப்புறதிலேயே குறியா இருந்த. இப்போ என்னன்னா அவங்க உன்கிட்ட பேசணும்னு சொல்ல முன்னாடி, இங்கே ஏதோ வேலை இருக்குன்னு, சொல்லிட்டு, அவங்ககிட்ட பேசாமலே வந்துட்ட. ஏன் இப்படில்லாம் செய்யிற? அவங்க மனசு எவ்வளவு வருத்தப்படும்'' உண்மையான வருத்தத்துடன் சொன்னான்.

''இதெல்லாம் நல்லா கவனிங்க. கவனிக்க வேண்டியதை கவனிக்காதீங்க. இப்போ நான் அவங்க கையில் சிக்குனேன் என் காதை பஞ்சர் பண்ணாமல் விட மாட்டாங்க. அதை விட்டுட்டு வந்து தூங்குங்க'' அவன் சொன்னதை அப்படியே சாதாரணமாகத் தள்ளிவிட்டுச் சொன்னாள்.

அவளை வித்தியாசமாகப் பார்த்தவன், ''எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு'' சொல்லிவிட்டு, தன் லேப்டாப்பை எடுத்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்.

''சரி நீங்க வேலையைப் பாருங்க, நான் கொஞ்சநேரம் டிவி பார்க்குறேன். அவன் தோளில் சாய்ந்தவாறே, டிவியின் சேனல்களை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளது செய்கைகளைப் புரியாத பார்வை பார்த்தவாறே இருந்தான்.

அவன் ஆராய்ச்சிப் பார்வையைக் கண்டுக் கொள்ளாமல், ''அன்பு! முடிச்சுட்டீங்களா எனக்கு ரொம்பத் தூக்கம் வருது..'' தூக்கக் கலக்கத்தில் சொன்னாள்.

அவள் தலையில் தன் கன்னத்தை வைத்து அழுத்தியவன், ''தூக்கம் வந்தால் அப்படியே தூங்கும்மா. அதில் என்ன இருக்கு?'' வேலையிலேயே கவனமாக இருந்தவாறு அவளுக்குப் பதில் கொடுத்தான்.

அவளைச் சென்று படுக்கச் சொல்லாமல், அப்படியே தூங்கச் சொன்ன அவனை, நிமிர்ந்துப் பார்த்தாள். ஆனால், அவன் அவளது பார்வையை உணரும் நிலையில் இல்லை. ஒரு கட்டத்தில், அவன் தோளில் சாய்ந்தவாறே தூங்கிப் போனாள்.

தன் வேலையை முடித்தவன், எழுந்துச் சென்று லேப்டாப்பை வைக்கக் கூட, அவனால் முடியவில்லை. ஏனென்றால் அவன் கைகளைக் கோர்த்தவாறு, அவன் தோளிலேயே அவள் உறங்கிப் போயிருந்தாள்.

எட்டி அருகிலிருந்த டீபாவில் லேப்டாப்பை வைத்தவன், பாரதியின் முகத்தை உற்றுப் பார்த்தான். அவளைப் பார்த்தவனின் பார்வையில், மதியம் அவளைப் பார்த்த கோலம் நினைவில் வர, குப்பென வியர்த்து வழிந்தான்.

அதன் பிறகு அவளை, அவனால் பார்க்க முடியவில்லை. ஏதோ தவறு செய்யும் உணர்வு, மனதை ஆக்கிரமிக்க, அவள் தலைக்கு அடியில் கை கொடுத்து, அவளை அப்படியே சரித்து படுக்கையில் படுக்க

வைத்தான்.

அவளைத் தூக்கி நேராகப் படுக்க வைக்க அவனுக்குத் தைரியம் வரவில்லை. தலையணையை எடுத்து அவளுக்கு வைத்தவன், அப்படியே அவள் அருகில் படுத்துக் கொண்டான். என்னவோ அப்படியே அவள்மேல் சரிந்து அவளை ஆக்கிரமிக்கும் வேகம் எழுந்தது.

தன் உணர்வுகளுக்கு அணை கட்ட முடியாமல், தனக்குள் போராடினான். தாள முடியாமல், அவள் கன்னத்தில் தன் இதழை ஒற்றி எடுத்தவன், இன்னும் இன்னும் வேண்டுமென்று எழுந்த ஆசையைத் தனக்குள் புதைத்தான். அதைவிட நல்ல உறக்கத்தில் இருக்கும் அவளைத் தொல்லை செய்வது சரியாகப் படவில்லை. அவளிடமிருந்து விலகிப் படுத்தான்.

அவளது வரி வடிவத்தை விளக்கொளியில் பார்த்தவாறே உறங்கிப் போனான். காலையில் ஐந்து மணிக்கு எழுந்து, அரக்க பரக்கக் கிளம்பிக் கொண்டிருந்தனர் இருவரும்..

அப்பொழுதே சுதாவும் விழித்துவிட்டார். வேலைக்காரர்களை எதிர்பார்க்காமல், அனைவருக்கும் டீ தயாரித்தார். பாரதியும், தமிழும் ஏர்போர்ட் செல்ல கிளம்பி வரவே, அவர்களுக்கும் டீயைக் கொடுத்தார்.

அந்தநேரம் தமிழின் அலைபேசிக்கு ஒரு அழைப்பு வரவே, அதை அட்டெண்ட் செய்ய, அதில் பேசிய தேவாவோ, அவர்கள் வரும் விமானம் நான்கு மணிநேரம் தாமதமாக வருவதாகவும், அவர்களும் தாமதமாக ஏர்போர்ட் வந்தால் போதும் என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

''பாரதி! அவங்க பிளைட் நாலு மணிநேரம் லேட்டா

வருதாம். நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வந்துடுறேன்'' அவர்களுக்குத் தனிமை கொடுத்துவிட்டு அவன் வெளியே சென்றான்.

''அன்பு'' தன் முதுகின் பின்னால் கேட்ட பாரதியின் குரலை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவன் சென்றவுடன் சுதா பாரதியைப் பிடித்துக் கொண்டார். அதேநேரம் தமிழ் உடை மாற்றிவிட்டுச் செல்லலாம் என்று வீட்டுக்குத் திரும்பி வந்தான். ''இங்கே என்ன நடக்குது பாரதி? இது குடும்பமா இல்லை ஹாஸ்டலா?'' சுதாவின் குரல் கோபத்தின் உச்சத்தில் ஒலித்ததில், வீட்டினுள் எடுத்து வைத்த காலை அப்படியே பின்னுக்கு வைத்து, வெளியேற முயன்றான்.

பாரதி அமைதியாக இருக்கவே, அவர் கோபம் இன்னும் எல்லை கடந்தது.

''உங்களுக்குள் எல்லாம் சரியாதான் இருக்கா பாரதி? நீ நடந்துக்குறதைப் பார்த்தால் எனக்கு அப்படித் தெரியலை'' சுதாவின் குரல் சூடு குறையாமல் மறுபடியும் கேட்க, அவன் கால்கள் அங்கேயே ஆணியடித்து நின்றன.

''அம்மா'' தயக்கமாய் ஒலித்தது பாரதியின் குரல்.

''எனக்குத் தெரியும் பாரதி தப்பெல்லாம் உன்மேல்தான் இருக்கும்னு எனக்குத் தெரியும். தமிழை இன்னும் எவ்வளவு நாள் இப்படியே ஏமாத்திட்டு இருக்கப் போற? இது உன்னோட வாழ்க்கை மட்டும் இல்லை. தமிழோட வாழ்க்கையும் அடங்கி இருக்கு. என் கண்ணைப் பார்த்து சொல்லு நீங்க சேர்ந்து வாழ்ந்துட்டுதான் இருக்கீங்கன்னு'' அங்கே கனத்த மௌனம் நிலவியது.

''என்ன காரியம் செஞ்சுட்டு இருக்க நீ? உனக்கு

செல்லம் கொடுத்து ரொம்ப கெடுத்து வச்சுட்டோம். நான் பேரன் பேத்தி வேணும்னு ஒவ்வொரு நாளும், அந்த ஆண்டவன்கிட்ட வேண்டிக்கிட்டு, துடிச்சுகிட்டு இருக்கேன். நீ என்னன்னா தமிழோட வாழ்கையையும் சேர்த்து கேள்விக்குறியாக்கிட்டு இருக்க. ஆம்பளைங்களுக்கு வீட்டுச் சாப்பாடு கிடைக்கலன்னா, ஹோட்டல் சாப்பாடு சாப்பிட கிளம்பிடுவாங்க இப்போ இப்படியே நீ தள்ளியிருந்தால், இன்னும் கொஞ்ச நாளில் என் வாழ்க்கையே போச்சேன்னு நீதான் தலையில் அடிச்சுட்டு அழணும். தமிழும் ஒரு சராசரி ஆம்பளை தானே இன்னும் எத்தனை நாள் உன்னை கெஞ்சிட்டு இருப்பாருன்னு நீ எதிர் பாக்குற?'' மூச்சு வாங்கக் கேட்டார்.

''அதெல்லாம் அவர் அப்படிப் போக மாட்டார்'' வெடுக்கெனச் சொன்னாள் பாரதி.

''ஆமா. அவர் வந்து உன்கிட்ட சொன்னாரா? அடிப்போடி என் அனுபவம் சொல்லாததா'' ஏளனமாக அவளிடம் கேட்டார்.

''அவர் அப்படி இல்லை'' இன்னும் அழுத்தி பாரதி சொல்ல,

''என்ன இல்ல உன் தப்பை மறைக்க அவர் ஆம்பளையே இல்லன்னு சொல்லப் போறியா? உன்ன...'' தன் கோபம், ஆத்திரம் எல்லாம் சேர, ஓங்கி அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டார்.

''அம்மா!'' வீறிட்டு அலறினாள் பாரதி. அது தமிழை ஆம்பளை இல்லை என்று சொன்னதாலா? இல்லை அவளை அடித்ததாலா என்பதை பிரித்தறிய முடியவில்லை சுதாவால்.

அவர் பாரதியை அடிப்பதை, சற்றும் எதிர்பாராத

தமிழ், நொடியில் பாய்ந்து உள்ளே சென்றவன், பாரதியை தன் பக்கம் இழுத்துக் கொண்டான். ''ப்ளீஸ் அத்த...'' அவர் அதிர்ந்து நிற்கும்பொழுதே, பாரதியைத் தங்கள் அறைக்கு அழைத்து வந்துவிட்டான்.

தமிழோ திகைத்துப் போனான். அதைவிட, சுறுசுறு என்று கோபம் தலைக்கேறியது. தன்னுடைய ஆண்மையைக் கேள்விக்குறியாக்கிப் பேசப்படுவதைத் தாங்கவே முடியாமல் போனது. ஒரு ஆண்மகன் கேட்க விரும்பாத வார்த்தைகள் இவை அதுவும் தன் மாமியார் வாயால் கேட்டதும் திகைத்து, கொதித்துப் போனான். ரத்தம் கொதித்து மூளை வெடித்து விடும் அளவுக்குக் கோபம் தலைக்கேறியது .

தன்னுடைய தயக்கத்தை விட்டொழித்து, மனைவியிடம் தன் ஆண்மையை நிரூபித்தால் மட்டுமே இதற்குத் தீர்வு கிடைக்கும். என்பது அவன் மனதில் பதிந்து போனது .

பாரதியை அடித்துவிட்டு, காயப்பட்டது என்னவோ சுதாவின் மனம் தான். பாரதியும் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தாள். தன் தாய், தன்னைக் கைநீட்டி அடித்ததை அவளால் நம்பவே முடியவில்லை. ஆனால், எரியும் கன்னம் சொன்னது அது உண்மைதான் என்று.

தங்கள் அறைக்கு வந்ததைக் கூட உணராமல், கன்னத்தில் கை வைத்தவாறு, நின்ற அவளைப் பார்த்து துடித்துப் போனான் தமிழ். ''ஐ'ம் சாரி பாரதி. எல்லாம் என்னால் தான்'' அவளின் அடிபட்டக் கன்னத்தை வருடினான்.

''என்னால் நீ உங்க அம்மாகிட்ட அடி வாங்கியதை,

என்னால் தாங்கிக்கவே முடியலை பாரதி. எல்லாம் என்னால் தானே. என்னோட பயத்தால், தயக்கத்தால் தானே அதை இத்தோட உடைச்சுக் காட்டுறேன். இனிமேல் நீ இப்படி ஒரு சூழ்நிலையை சந்திக்கவே கூடாது'' சொன்னவன், அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த அவளை, இறுக அணைத்தான்.

அவனுக்கு இந்தச் சூழலை எப்படிக் கையாள வென்றுத் தெரியவில்லை. எனவேதான் பதட்டத்தில், தங்களுக்குள் தாம்பத்ய உறவு ஏற்பட்டுவிட்டால், பாரதி யார் முன்பும் தலை குனிந்து நிற்க வேண்டி இருக்காதே, தன்னையும் ஆண் என்று நிரூபிக்கப்பட்டுவிடும் என்றும் எண்ணினான்.

தாம்பத்யம் என்பது மற்றவரின் விருப்பத்துக் காகவோ, கட்டாயத்துக்காகவோ நடைபெறவேண்டிய ஒன்று இல்லை என்பதும், அது இரு மனங்களின் சங்கமம், காதலின் உச்சம் என்பதை அவன் உணரவே இல்லை.

பாரதியை அணைத்த வேகத்தில், கண்களை இறுக மூடிக் கொண்டு, அவள் முகமெங்கும் முத்தமிட்டவன், அவளோடு கட்டிலில் சரிந்தான். அவன் கைகள் அவசரத்தில் ஒருவித வெறியோடு செயல்பட, அவன் செய்கையில் திகைப்பின் உச்சத்தை அடைந்தாள் பாரதி.

அவன் தொடுவது அவளுக்கு விருப்பம்தான். ஆனால், அது இப்படியில்லை அவள் மனம் கூக்குரலிட, ''தமிழ் நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேளுங்க...'' தன் மேனியில் முன்னேறிய அவன் கரங்களைத் தடுத்தவாறே சொன்னாள்.

தமிழோ அவளது பேச்சைக் கேட்கும் நிலையில்

இருக்கவில்லை. அவன் கைகளும், தேகமும், இதழ்களும் உணரும் அவள் மென்மையில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தான்.

அவன் செய்கைகளில் பாரதியின் உணர்வுகளும் விழித்துக் கொள்ள, எங்கே அவனுக்கு உடன்பட்டு விடுவோமோ என்று அஞ்சினாள். அவன், அவள் மேலிருக்கும் பரிதாபத்தில் இப்பொழுது தொடலாம் ஆனால், பாரதி அவனை மனமார நேசிக்கிறாள். அப்படி உயிராக நேசிக்கும் கணவனின் தொடுகையை மறுக்க வேண்டி இருக்கிறதே என்று மருகினாள்.

காதலாக அல்லாமல், நிர்பந்தத்துக்காக அவன் தன்னைத் தொடுவதை சுத்தமாக விரும்பவில்லை அவள். ஒரு கட்டத்தில் தான் தோற்றுப் போவோம் என்ற நிலை வந்தபொழுது, தன் முழு பலத்தையும் திரட்டி, அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

''என்ன செய்யிறீங்க நீங்க?'' உச்சக் குரலில் கத்த, திகைத்துபோய் அவளைப் பார்த்தான் தமிழ்.

தன்மேலிருந்து அவனைப் பிடித்துத் தள்ளியவள், நொடியில் கட்டிலிலிருந்து இறங்கி நின்றாள். அவளது இயலாமை, கோபம், தன்னிரக்கம் என மொத்தத்தையும் கண்களில் தேக்கி அவனை ஒரு பார்வைப் பார்க்க, அவள் பார்வையின் வேகம் தாங்காமல் தடுமாறித் தலை கவிழ்ந்தான்.

ஆனாலும் தன்னை அவளுக்கு உணர்த்திவிடும் வேகம் பிறக்க, ''என்னை அப்படிப் பார்க்காதே பாரதி உனக்கே தெரியும் நேத்து நான் உன்கிட்ட எவ்வளவு கண்ணியமா நடந்துகிட்டன்னு. இன்னைக்கு உங்க அம்மா

இப்படிச் சொல்லும்போது என்னால் எப்படி அதைப் பொறுத்துக்க முடியும்'' தன் மனநிலையை அவளுக்குப் புரிய வைக்கும் ஆதங்கம் இருந்தது அவன் குரலில்.

''உங்ககிட்ட நேத்து, அப்படி கண்ணியமா நடந்துக்கோங்கன்னு நான் சொன்னேனா? அப்படியே இப்போ இப்படிக் கேவலமா நடந்துக்கோங்கன்னு உங்ககிட்ட கெஞ்சினேனா? இதைவிடக் கேவலமா என்னை நீங்க நடத்தவே முடியாது.

அவளது 'தமிழ்' என்ற அழைப்பே அவனுக்கு அவளது விலகலை உணர்த்த, மேலும் துடித்தான். எப்படியாவது அவளைச் சமாதானம் செய்ய வேண்டுமென்று மனம் துடித்தது. ஆனால், அதை எப்படிச் செய்யவென்றுத் தெரியாமல் விழித்தான்.

''என்னோட நெருக்கமும், என்னோட காதலும் தூண்டாத உங்க ஆண்மையை எங்க அம்மாவோட வார்த்தைகள் தூண்டினால் அதுக்கு என்ன அர்த்தம்?'' அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றி உலுக்கியவள் அவனிடம் ஆதங்கமாகக் கேட்டாள். அவன் கண்களில் புரியாத தன்மையைப் பார்த்தவள், ''என்ன நான் சொல்லுறது புரியலையா?

இந்த ரெண்டு மாசமா இந்த நாலு சுவத்துக்குள்ளே பசை போட்டு ஒட்டிக்காத குறையா உங்களோட ஒவ்வொரு நிமிஷமும் இருந்தப்போ கலையாத உங்களோட கட்டுப்பாடு, கேவலம் மூணாவது மனுஷங்க சொன்ன உடனே கலையுதுன்னா என்ன அர்த்தம்? இந்த உடம்பு ரெண்டும்தான் சேரணும்னு நான் விரும்பியிருந்தா, முதல் ராத்திரி அன்னைக்கே என்னோட உடம்பை உங்களைத்

தொட வைக்க எனக்கு எவ்வளவு நேரமாயிருக்கும்?

ஆனால், நான் அப்படிச் செய்யலையே ஏன்? இந்த ரெண்டு மாசமா உங்களோடவே உரசிட்டு அலைஞ்ச நான், இந்தப் படுக்கையில் மட்டும், உங்களைச் சீண்டாததன் காரணம் என்ன?''

சோர்ந்துப் போய் புலம்பியவள், ''இப்படி எல்லாத்தையும் ஒரு நிமிஷத்தில் பாழாக்கிட்டீங்களே?'' ஓவெனக் கதறினாள்.

அவன் சட்டையிலிருந்து கையை உதறியவள், ''புருஷன்கிட்ட படுக்கையறையில் எந்த மனைவியும் கண்ணியத்தை எதிர்பார்க்க மாட்டா, காதலைத்தான் எதிர்பார்ப்பா. ஆனா நீங்க'' அவனை குற்றம் சாட்டும் பார்வை பார்த்தவள்,

''இப்படி என் மனசை உடைச்சுப் போட்டுட்டீங்களே நான் என் காதல்ல தோத்துப் போயிட்டேன்னு என்னால் நம்பவே முடியலை. போதும் உங்க தியாகத்தை இத்தோட நிறுத்திக்கோங்க என் அம்மாவை சமாளிக்க எனக்குத் தெரியும்'' கண்ணீர் வழியும் தன் கன்னத்தைப் புறங்கையால் துடைத்தெறிந்தவள், அந்த அறையை விட்டு நொடியில் வெளியேறினாள்.

தமிழ்! வெறித்தப் பார்வையுடன், மூச்சுவிடவும் மறந்து, சிலையென அமர்ந்திருந்தான். பாரதியின் பேச்சு மொத்தமும் காதில் ஒலிக்க, ஓவென கத்திக் கதறவேண்டும் போலிருந்தது அவனுக்கு.

* * * * *

27

ஒற்றை வார்த்தையில்
உயிர்க் கருகும் விந்தை
உணர்ந்தேன் நான்
உன் ஒற்றைச் சொல்லில்
எல்லாம் உன்னாலே!

தங்கள் அறையிலிருந்து புயலென வெளியேறிய வளது உள்ளம் உலைக்களமாகக் கொதித்துக் கொண்டிருந்தது. தன் காரை எடுத்துக் கொண்டு, எங்கு செல்கிறோம் என்று இலக்கில்லாமல் சென்றாள். சென்றவளின் கார் நின்றதோ, துர்க்காதேவியின் கோயில்.

காரை விட்டிறங்கியவள், தேவியைத் தொழும் எண்ணம் கூட இல்லாமல், அந்தக் காலை வேளையில் கொஞ்சம் பரபரப்பாக இருந்த ஆலய சன்னிதானத்தை விட்டுக் கொஞ்சம் விலகியிருந்த மண்டபத்தின் ஓரத்தில் சென்று அமர்ந்தாள்.

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, அதில் முகம் புதைத்துக் கொண்டு, தேகம் குலுங்க, மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். அவளுக்குத் தமிழைப் பற்றி ஆதியோடு அந்தமாக அனைத்தும் தெரியும்.

அவனது தயக்கம், பயம், திறமைஇப்படி அனைத்தும் அவளுக்கு அத்துப்படி. ஆனால், அவன் இன்று நடந்து கொண்ட முறையை ஜீரணிக்கவே முடியவில்லை. அவனது

இந்தச் செய்கைக்கு எந்த சப்பைக்கட்டுக் கட்டவும் மனம் வரவில்லை.

அவன் இதழ்கள் தீண்டிய முகமும், அவன் கைகள் தீண்டிய தேகமும் பற்றி எரிந்தது. இவ்வளவு நாள் அவனது விலகலைக் கூட ஏற்க முடிந்த அவளால் அவனது இந்தத் தொடுகையை ஏற்க முடியவில்லை.

இந்த இரண்டு மாதங்களில், அவனது அணைப்புக் காவும், இதழ் முத்தத்துக்காகவும், செல்லச் சீண்டலுக்காகவும் அவள் ஏங்கினாள் தான். அவனுக்கு இதெல்லாம் வராது என்று தெரிந்தும், அவனை தன் வழிக்குக் கொண்டுவர, அவனோடு நெருங்கிப் பழகினாள்.

ஒரு பெண்ணை அவன் உணரவேண்டும் என்பதற்காகவே, தன் இயல்பையும் மீறி, அவனை அமர வைத்துத் தலை துவட்டுவது முதல், அவன் தலை கோதி, நெற்றியில் முத்தமிட்டு, செல்லச் சண்டை போட்டு

அவனாகவே அவளை நெருங்க வேண்டும், அவன் தயக்கங்களைக் களையவேண்டுமென்று விரும்பினாள், ஆசைபட்டாள் தான். ஆனால், அது இப்படியில்லை என்று நெஞ்சம் ஓலமிட்டது. அவன் இப்பொழுது செய்ததற்கு, தன்னைக் காலம் முழுவதும் தொடாமலிருந்தால் கூடப் பரவாயில்லை என்று நெஞ்சம் துடித்தது.

தன் மனதை சமாதானம் செய்யும் வழி தெரியாமல், தனிமையில் கரைந்தாள் பாரதி.

தமிழோ பாரதியின் பேச்சுகள் ஒவ்வொன்றும் அவன் மனதை சம்மட்டியாய்த் தாக்க, அவள் கண்ணீரும், அவள் புறக்கணிப்பும் அவனை வெகுவாகத் துவண்டு போகச் செய்தது.

அவள் கேட்டாளே 'நேற்று அரை நிர்வாணமாகப் பார்த்த பொழுது வெடித்துச் சிதறாத உன் ஆண்மை' ''ஹையோ பாரதி நேத்தே எனக்கு அப்படித் தோணிச்சே ஆனால், அந்த சூழலில் உன்னை அணுகுவது தப்புன்னு என்னை நானே கட்டுப் படுத்திகிட்டன்.

''நைட் கூட உன்னைத் தொடணும்னு தவிச்சேன்நீ நல்லாத் தூங்கிட்டு இருந்த. அப்போ எப்படி உன்னைத் தொடுவது என்ற தயக்கத்தில் விலகி இருந்துட்டேன். ஆனால், அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போ எனக்குப் புரியுது.

''இப்போ அதைச் சொன்னாலும் நீ நம்ப மாட்ட. இது எல்லாத்தையும் விட எப்போ எப்படி நடந்துக்கன்னு எனக்குத் தெரியவே இல்லையே நான் என்ன செய்யட்டும்'' தனக்குள் புலம்பியவன், தேவாவை அழைக்கச் செல்ல நேரமாகவே, பாரதியின் அலைபேசிக்கு அழைப்பு விடுத்தான்.

ஆனால், கால் சென்றுக் கொண்டே இருந்ததேத் தவிர, அவள் அதை எடுக்கவே இல்லை. தமிழின் தவிப்பு அதிகரிக்கத் துவங்கியது. தேவாவை தாங்கள் பிக்கப் செய்வதாக ஏற்கனவே வாக்கு கொடுத்துவிட்டதால், அதை மீறவும் முடியாமல், பாரதியின் எண்ணத்தில் உழளவும் முடியாமல், தன் அத்தையைத் தேடிச் சென்றான்.

அங்கு சுதாவும் துடித்துப் போயிருந்தார்.அவளைத் தான் அடித்த அதிர்ச்சியிலேயே உறைந்து இருந்தார் . பாரதி கோபமாக வீட்டை விட்டு வெளியே செல்வதை அவரும் பார்க்கத்தானே செய்தார். தான் பேசிய பேச்சும், அத்தோடு அடித்ததாலேயே அவள் மனமுடைந்து செல்வதாக

எண்ணித் தவித்தார்.

அவள் அலைபேசிக்கு அவரும் அழைக்க, அந்த அழைப்பையும் அவள் எடுக்கவே இல்லை. அப்பொழுது அங்கே வந்தான் தமிழ். ''அத்த நான் தேவாவை கூப்பிடப் போறேன். பாரதி ஃபோன் செய்தால் நான் ஏர்போர்ட் போயிட்டேன்னு சொல்லிடுங்க'' அவர் முகம் பார்க்காமல், குற்ற உணர்வில் சொன்னவன், அவர் பதிலை எதிர்பார்க்காமல் வெளியேறினான்.

ஒரு கால் டாக்ஸி பிடித்து அவன் ஏர்போர்ட் சென்ற பொழுது, அவனுக்கு முன்பே அங்கே பாரதி இருந்தாள். தான் வந்த டாக்ஸியை அனுப்பியவன், வேகமாக அவள் அருகில் வந்தான்.

''பாரதி'' கரகரத்தத் தன் தொண்டையைச் சரி செய்து அவளை மீண்டும் அழைக்கப் போகையில், தேவாவும், சுஷ்மியும் வருவதைப் பார்த்துவிட்டு, வேகமாக அவர்களை நோக்கிச் சென்றாள் பாரதி.

அவளுடன் பேச முடியாத சூழலை வெறுத்தவாறு, அவள் பின்னால் சென்றான். ''டேய் மச்சான் எப்படிடா இருக்க'' தேவா ஆர்ப்பாட்டமாகக் கேட்டு, அங்கேயே தமிழை கட்டிக் கொண்டான்.

''சுஷ்மி நல்லா இருக்கியா? எப்படி இருக்கீங்க தேவா. வா போகலாம்'' சம்ப்ரதாயமாகக் கேட்டுவிட்டு, சுஷ்மியின் கை கோர்த்தவாறு வெளியேறினாள் பாரதி.

அவள் சுஷ்மியின் கையைக் கோர்த்திருப்பதை ஒருவித இயலாமையோடுப் பார்த்திருந்தான் தமிழ். சுஷ்மியின் கரங்களை விலக்கிவிட்டுத் தன் கரங்களைக் கோர்த்துக் கொள்ளவேண்டும் என்ற வேகம் பிறந்தது.

ஆனால், இருக்கும் சூழ்நிலைக் கருதி அதை அடக்கிக் கொண்டான். அவன் பார்வை முழுவதும் பாரதியிடமே நிலைத்திருந்தது. ''டேய் நான் கேட்டுட்டே இருக்கேன் நீயென்னடா கண்ணைத் தொறந்துட்டே கனாக் காணுற?'' தேவா தமிழைப் பிடித்து உலுக்கினான்.

''ஹங் என்ன கேட்ட'' பாரதியிடமிருந்து தன் கவனத்தைத் திருப்பினான்.

''என்ன கேட்டேனா? ஏண்டா எங்க தேனிலவைப் பத்தி, பக்கம் பக்கமா சொல்லிட்டு வாரேன் நீ என்னடா இப்படி சப்புன்னு ஆக்கிட்ட'' பரிதாபமாகக் கேட்டான்.

''இல்ல ஏதோ யோசனை. சரி சொல்லு உன் பிரயாணம் நல்ல படியா முடிஞ்சுதா?'' ஏதோ கேட்கவேண்டுமே என்பதற்காக கேட்டதுப் போலிருந்தது அவன் செய்கை.

தேவா சட்டென அதே இடத்தில் நின்றான். நின்றவன், தமிழின் கை பிடித்து நிறுத்தினான். ''என்ன விஷயம் தமிழ்? உன் குரலே சரியில்லை?'' அவனைக் கூர்மையாகப் பார்த்தான்.

''ஆமா இங்கே வாழ்க்கையே சரியில்லாமல் போய்ட்டு இருக்கு. இதில் குரல் சரியா இருக்காததுதான் பிரச்சனை போடா'' அவன் கையைத் தள்ளி விட்டான்.

தேவாவின் முகம் யோசனையைக் காட்டியது. தமிழின் வாழ்க்கையில் ஏதோ பிரச்சனை என்பதை நொடியில் கண்டுகொண்டான். ஆனால், அதைக் கேட்கும் இடம் இதுவல்ல என்பது புரிய, அமைதியாகவேச் சென்றான்.

தமிழின் பார்வை ஏக்கமாக பாரதியைத் தழுவி மீள்வதைப் பார்த்தவன், பாரதி இவன் பக்கமே பார்க்காமல்

இருப்பதையும், பாரதி சுஷ்மியிடம் பேசிச் சிரித்தாலும், அதில் உயிர்ப்பு இல்லாததையும் கவனித்தான். பிரச்சனை தமிழின் பக்கம்தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

ஆதரவாக அவன் கரங்களை அழுத்தியவன், அதன் பிறகு அதைப் பற்றியே பேசாமல், சாதாரணமாக உரையாடினான். பாரதி ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து காரைக் கிளப்ப, தமிழ் அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்.

தேவாவும் சுஷ்மியும் பின்னிருக்கையில் அமர, ஏறிய வேகத்தில் தேவா, சுஷ்மியின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டுப் பிரிந்தான். ''உங்க வேலையை ஆரம்பிச்சுட்டீங்களா? வீட்டுக்குப் போற வரைக்கும் கொஞ்சம் பேசாமல் வாங்களேன்'' மெல்லிய குரலில் அவனைக் கண்டித்தாள் சுஷ்மி.

''வீட்டுக்குப் போற வரைக்கும் என்னால் டைம் வேஸ்ட் பண்ண முடியாது. அவங்களும் புதுசா கல்யாணம் ஆனவங்கதான் அவங்களுக்கும் நம்ம ஃபீலிங்ஸ் புரியும்'' சொன்னவன் அவளை நெருங்கி அமர்ந்தான்.

பாரதி, தமிழ் இருவரின் நிலைதான் முள்ளின்மேல் அமர்ந்திருப்பது போலிருந்தது. ரோட்டில் பதித்த பார்வையைத் தப்பித் தவறிக் கூட, தங்கள் இணையின் பக்கம் திருப்பவில்லை.

''ஹையோ கொஞ்சம் தள்ளி உக்காருங்க'' ''என்ன இது?'' ''தேவா'' ''ஏய் சத்தம் போடாதே'' ''எதுக்கு இப்போ தள்ளி உக்காருற?'' நீ அங்கே போனால் எனக்கு வரத் தெரியாதா?'' காருக்குள் ஒலித்த பாட்டுச் சத்தத்தையும் மீறி,

தேவா, சுஷ்மி இருவரின் கொஞ்சல், சிணுங்கள் ஒலி, அவர்கள் செவிகளைத் தீண்டி வதைத்தது.

''சண்டாளப்பய கொஞ்சம் கூட விவஸ்தையே இல்லாமல்'' தமிழ் நறநறவென்று பல்லைக் கடித்தான்.

''மனுஷன்னா புரியும் மரக்கட்டைக்கு எப்படிப் புரியும்'' பாரதி அவனுக்குச் சூடாகப் பதில் கொடுக்க, கண்களை மூடி சீட்டில் சாய்ந்து கொண்டான்.

அப்படியே காரிலிருந்து ஓடிவிட மாட்டோமா என்று இருந்தது தமிழுக்கு. பாரதிக்கோ மீண்டும் கண்ணைக் கரித்துக் கொண்டு வருவதுபோலிருக்க, இமைகளைக் கொட்டி அதை அடக்கினாள்.

சுஷ்மியின் வீடு வந்துவிட, அனைவரும் காரிலிருந்து இறங்கினார்கள்.

''சொல்ல மறந்துட்டேன் நாளைக்கு நாம எல்லோரும் அவுட்டிங் போறோம். நாளைக்குக் காலையில் நாங்களே வந்து உங்களை பிக்கப் பண்ணிக்கிறோம்.

''எந்த சாக்கும் சொல்லக் கூடாது இது நாங்க உங்களுக்கு ஸ்பெஷலா தர எங்க கல்யாண ட்ரீட் ஓகேபாய்'' தேவா அவர்கள் மறுத்துச் சொல்லாத அளவு ஒரே பேச்சாக நிறுத்திவிட்டான்.

சுஷ்மியும் பாரதியிடம் கெஞ்ச, அரை மனதாகச் சம்மதித்தாள் பாரதி. அவர்களிடம் விடை பெற்றுக் கிளம்பினார்கள். காருக்குள் ஒலித்த பாடலின் ஒலியைத் தவிர வேறு எந்த சத்தமும் இருக்கவில்லை.

''பாரதி'' உயிரை உருக்கும் குரலில் அவன் அழைக்க, வெறுமையாகத் திரும்பி அவனைப் பார்த்தாள்.

அவளது வெற்றுப் பார்வையில் தன் உயிர்க்கூடு வெறுமையாவதை உணர்ந்தான் தமிழ். இதுவரை அவள் அவனைப் பார்க்கும் பார்வையில் காதல் நிரம்பி வழியும் ஆனால், இன்று வெற்றுப் பார்வைப் பார்க்க, அந்தப் பார்வையைத் தாங்கும் சக்தி இல்லாமல், மௌனமாகக் கண்களை மூடி, அந்த வேதனையை தொண்டைக் குழியில் அடக்கினான்.

அவன் தொண்டைக்குழி ஏறி இறங்குவதிலிருந்து, அவன் வேதனையின் அளவு அவளுக்கும் புரிய, காரை அசுர வேகத்தில் செலுத்தினாள் பாரதி. அவள் வேகம் அவனுக்குப் பயத்தைக் கொடுக்க, கியர் கம்பின் மேலிருந்த அவள் இடக் கரத்தின் மேல் தன் கையை வைத்து அழுத்தினான்.

'ஏண்டா அப்படிப் பண்ணுன?' அவள் மனம் மௌனமாக அவனிடம் உரையாட, அவன் கரத்தை விலக்காமலே வண்டியைச் செலுத்தினாள். அதைவிட, அவனாகத் தன்னைத் தொடும் முதல் தருணம் என்ற நினைவும் சேர்ந்தே எழ, இப்பொழுது கூட, அவன் தொடுகையை விரும்பும் தன் மனநிலையை அறவே வெறுத்தாள்.

''தேவா.., நாம எப்போ அவுட்டிங் போறதா பிளான் போட்டோம்? நீங்க பாட்டுக்கு அவங்களை வரச் சொல்லிட்டீங்க. எதுவுமே பிளான் பண்ணலையே'' அவனிடம் குழப்பமாகக் கேட்டாள்சுஷ்மி .

''இது சடன் பிளான் தான் அவங்களுக்குள்ளே எதுவோ சரியில்லை சுஷ்மி. தமிழ் இவ்வளவு மனசொடஞ்சு பேசி நான் பாத்ததே இல்லை'' அவனால் இப்பொழுது கூட தமிழ் பேசியதை நம்ப முடியாத திகைப்பில் சொன்னான்.

''நானும் கவனிச்சேன் பாரதி அழுதுருக்கா அதை அவளோட கண் காட்டிக் கொடுத்துச்சு. ஏதோ கடமைக்குப் பேசி சிரிச்ச மாதிரி இருந்துது அவளோட நடவடிக்கை. அதனால் தான் நானும், நீங்க சொன்னதும், பாரதிகிட்ட அப்படியே பேசினேன்'' அவள் குரலிலும் கவலை.

''சரி அவங்க விஷயத்தை விடு என்னைக் கவனி'' சட்டென அவர்கள் பிரச்சனையிலிருந்து வெளியேறி, சரசமாகச் சொன்னான்.

''நல்ல வேளை ஞாபகப் படுத்துனீங்க. வீட்டுக்கு வந்த உடனேயே உங்களைக் கவனிக்கணும்னு நினைச்சேன். காருக்குள்ளே கையைக், காலை வச்சுட்டு சும்மா இருக்க முடியாது என்னமோ இப்போதான் கல்யாணம் முடிஞ்சா மாதிரி, அந்தப் பாடு படுத்துறீங்க

''அதான் ஒரு மாசமா ஹனிமூன் போயிட்டு, போதும், போதுன்ற அளவுக்கு என்னைப் பாடாப் படுத்தினது போதாதா. அவங்க முன்னாடி என் மானத்தை இப்படி வாங்கணுமா?'' கேட்டவாறு அவனை அடிக்கத் துரத்தினாள்.

''ஐயையோ சும்மா இருந்த உன்னை கீ கொடுத்து கிளப்பி விட்டுட்டனா..? நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை அவங்க கோபம் சின்னக் கோபமா இருந்தால் நாம செய்யிற வேலையில் அவங்களும் ம்ம்ம்

''ஆயிடுவாங்கன்னு நினைச்சேன் பார்த்தால் செதுக்கி வச்ச சிலையாட்டம் ரெண்டு பேரும் இருந்தாங்க. அப்போதான் தெரிஞ்சுது, பிரச்சனை பெருசுன்னு. அதான்'' அவள் கைகளிலிருந்து அடிகளை வாங்கியவாறேச் சொன்னான்.

"அதுக்குன்னு நீங்களும் உங்க ஐடியாவும் நாளைக்கு நான் தமிழ் முன்னாடி எப்படி என் முகத்தைக் காட்டுவேன்னு வேண்டாம் ஏன் தான் இப்படி இருக்கீங்களோ?" தலையிலடிக்காத குறையாகக் கேட்டாள்.

"ஆமா அவனுக்கு அவன் பொண்டாட்டி முகத்தைப் பாக்கவே தைரியம் பத்தாது. இதில் நீவேற உன் திருமுகத்தை அவன் பார்ப்பான்னு காமெடி பண்ணிக்கிட்டு" இப்படிச் சொல்லி அதற்கும் சில பல அடிகளை வாங்கிக் கொண்டான்.

விளையாட்டாக இருவரும் பேசிக் கொண்டாலும், இருவருக்கும் தங்கள் நண்பர்களின் வாழ்வைப் பற்றிய கவலை அதிகமாகவே இருந்தது. அதை எப்படியாவது சீர் செய்துவிட வேண்டும் என்ற ஆர்வமும், வேகமும் எழுந்தது.

இங்கே வீட்டுக்கு வந்த பாரதியோ அலுவலகத்துக்கு அழைத்து, முக்கியமாக ஏதாவது, ஃபைலில் கையொப்பம் வேண்டுமென்றால், அவளது அப்பாவின் வீட்டுக்குக் கொண்டு வருமாறுச் சொன்னவள், அறைக்குச் சென்று, உடை மாற்றிவிட்டு, அவள் அம்மாவின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

அவள் அறைக்கு வந்தப் பொழுதும், அவள் உடை மாற்றும் பொழுதும், அவசியமான சில பொருட்களை கைப்பையில் எடுத்து வைக்கும் பொழுதும், அறையை விட்டு வெளியே செல்லும் பொழுதும், அவள் பின்னாலேயே அலைந்து கொண்டிருந்தான் தமிழ்.

அவனால் அவளை எப்படித் தடுக்கவென்றுத் தெரியவில்லை. பாரதி பாரதி என்று அவன் மனம் இடைவிடாமல் புலம்பிக் கொண்டிருந்தாலும், அவனால்

அவளுக்கு எந்த சமாதானத்தையும் சொல்ல முடியவில்லை.

பாரதி விடு விடுவென்று வீட்டை விட்டு வெளியேறி, தன் காரை நோக்கிச் சென்றாள். அவள் பின்னாலேயே ஓடி வந்தவன், ''பாரதி'' 'போகாதே' என்று நுனி நாக்குவரை வந்த வார்த்தைகளை வெளியிடும் முன்னர்,

''நான் கொஞ்ச நாள் அம்மா வீட்டில் இருக்கணும்னு ஆசைப்படுறேன் தமிழ் ப்ளீஸ்'' அவனைத் திரும்பியும் பாராமல் சொல்லிவிட்டு காரில் ஏறிக் கொண்டு அதைக் கிளப்பினாள்.

'ஏதாவது செய் தமிழ் உன்னோட மனைவி உன்னை விட்டு போறேன்னு சொல்லுறா நீ மரம் மாதிரி நிக்கிறியே. எப்படியாவது அவளைத் தடுத்து நிறுத்து' உள்மனம் அவளை விரட்ட, புலன்கள் அனைத்தும் செயல்பட மறுத்தது.

அதற்குள் பாரதி காரைத் திருப்பிவிட, மனமுடைந்துச் செல்லும் அவளுக்கு ஒரு வார்த்தையில் கூட ஆறுதல் சொல்லாமல் இருக்கின்றாயே என்று அவன் மனமே அவனைச் சாடியது.

இப்பொழுது,தான் தவறாக உச்சரிக்கும் எந்த வார்த்தையும், பாரதியைத் தன்னிடமிருந்து நிரந்தரமாகப் பிரித்துவிடும் என்ற உண்மை புரியவே, வார்த்தைகளை மனதில் கோர்க்கும் அளவு நேரமும் அவனிடம் இருக்கவில்லை.

நொடியில் அந்த யோசனைத் தோன்றவே, அவள் கார் கேட்டைக் கடக்கும் முன்னர், அதன் குறுக்கே ஓடிப் போய் நின்று வழி மறித்தான். காரை சடன் பிரேக் போட்டு நிறுத்தினாள்.

அவள் இருந்த பக்கம், கண்ணாடியை வேகமாக அடிக்கவே, காரின் கண்ணாடியைக் கீழே இறக்கினாள். அவள் பக்கம் குனிந்து, அவள் முகத்தின் அருகே நெருங்கியவன், அவள் கண்களுக்குள் ஆழ்ந்து பார்த்தான்.

அவன் பார்வை, அவள் விழியை ஊடுருவி, இதயத்தைத் துளைத்தது. ஆனாலும் வெளியே கொஞ்சம் கூட அசைவே இல்லாமல், சலனமே இல்லாமல் அவனைப் பார்த்தாள்.

தன் வலக்கையால் அவள் கன்னத்தைத் தாங்கியவன், ''பாரதி ஐ லவ் யூ ஐ லவ் யூ பாரதி'' அவன் வார்த்தைகள் மட்டுமல்ல, அவள் கன்னத்திலிருந்த அவன் கையும் நடுங்கியதை அவள் உணர்ந்தாள்.

மேலே என்ன சொல்வது என்று தெரியாமல், தன் மீசை ரோமம் அவள் கன்னத்தில் உரச, மென்மையாக அவள் கன்னத்தில் பட்டும் படாமல் முத்தமிட்டவன், மனமே இல்லாமல், மெதுவாக, மிகவும் மெதுவாக கையை விலக்கியவனின் கண்கள், சிவந்து தடித்திருந்ததைக் கண்டுத் துணுக்குற்றாள் பாரதி.

ஆனாலும் அன்று அவனோடு தங்கும் மனநிலை இல்லாமல், காரைக் கிளப்பிச் சென்றாள். அவள் கார் கண்ணிலிருந்து மறையும்வரை அங்கேயே நின்றிருந்தான் தமிழ்.

* * * * *

28

சந்தோசத்தின் உச்சத்தை
மட்டுமல்ல...
பிரிவின் வலியையும்
உணர்ந்தேன்... உன்னால்!

தங்கள் வீட்டுக்கு வந்த சுதாவால், அன்றாட வேலையைச் சரியாகச் செய்யவே முடியவில்லை. மகளைக் கை நீட்டி அடித்துவிட்டோமே என்று தவித்துப் போனார். பாரதியின் அலைபேசிக்கு அழைக்க, அவள் அவற்றை கண்டுகொள்ளவே இல்லை.

அவள் பேசாததும், அவரை மிகவும் வருத்தப்பட வைத்தது. கணவனுக்கோ, மகனுக்கோ பேசலாம் என்றால், தான் அடித்ததைச் சொன்னால், அவர்களும் சேர்ந்து தன்னைத்தான் கோபிப்பார்கள், சென்ற வேலையை முடிக்காமலே கிளம்பி வந்து விடுவார்கள் என்று தோன்றவே, அந்த சிந்தனையையும் கை விட்டார்.

அவர் தவிப்பை அதிகரிப்பதுபோல், வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்கவே, 'பாரதியாக இருக்குமோ' என்ற எண்ணம் தோன்றவே தன் வயதையும் மறந்து, அறையிலிருந்து எழுந்து கிட்டத்தட்ட ஓடி வாசலை அடைந்தார்.

அவரை ஏமாற்றாமல், காரிலிருந்து பாரதியே இறங்கினாள். அவள் கண்கள் கலங்கி, முகம் வீங்கி,

பார்க்கவே பரிதாபமாக இருந்தாள்.

பாரதி கண் கலங்கி இதுவரை சுதா பார்த்ததே கிடையாது. இன்று தான் அடித்ததாலேயே மகள் அழுவதாக எண்ணிக் கொண்டு, அவள் நெருங்கி வரும் முன்னால், அவளை நெருங்கி அணைத்துக் கொண்டார்.

''சாரி பாரதி அம்மா தெரியாமல் அடிச்சுட்டேண்டா இந்த அம்மாவை மன்னிச்சுடுடா. அழாதடா உன் வாழ்க்கை பற்றிய பயத்தில் தான் அம்மா அப்படி நடந்துட்டேண்டா'' அவள் கன்னம் வருடியவரின் குரல் கலங்கி இருந்தது.

''பரவாயில்லம்மா நீங்கதானே அடிச்சீங்க நீங்க இதுவரை என்னை அடிச்சதே கிடையாதே என்ற வருத்தம் எனக்கு இருந்துட்டே இருந்துது. அது இன்னையோட போச்சு'' சொன்னவள் சிரிக்க முயன்று தோற்றாள்.

''அம்மா நான் உங்க மடியில் கொஞ்ச நேரம் படுத்துக்கவா'' அவள் ஏக்கமாகக் கேட்க,

''இதென்னடா கேள்வி முதல்ல உள்ளே வா'' அவளை அழைத்துச் சென்றவர், வேலைக்காரியிடம், ஜூஸ் கொண்டுவரச் சொல்லிவிட்டு, அவளை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

தாயின் மடியில் படுத்தவள், எதற்கு அழுகிறோம் என்று தெரியாமலேயே அழுது கரைந்தாள். தமிழின் அந்த நடத்தைக்காக அழுதாளா? அவன் குணம் தெரிந்தும், அவன் நெருக்கத்தை எதிர்பார்த்த தன் மனதை நினைத்து அழுதாளா?

இல்லையென்றால் தான் வீட்டிலிருந்து கிளம்பும் பொழுது, கண்களில் காதலைத் தேக்கி, தன்னிடம் காதல் சொன்ன கணவனை நினைத்து அழுதாளா? இந்தக் காதலை

அவ்ன் முதலிலேயே ஏன் சொல்லவில்லை என்று நினைத்து அழுதாளா? அவளுக்கேத் தெரியவில்லை.

ஆனால், தாய் அடித்ததற்காக அழவில்லை என்பது மட்டும் அவளுக்குத் தெரிந்தது. தன் மடியில் படுத்து குலுங்கியழும் மகளை என்ன சொல்லித் தேற்றவென்று சுதாவிற்குத் தெரியவில்லை.

''இந்த அம்மா உன்னை அடிச்சதுக்காடா இவ்வளவு அழுகை. அம்மா உன்னை அடிக்க உரிமை இல்லையா என்ன?'' அவள் இப்படி அழுவது பொறுக்காமல், ஆதங்கமாகக் கேட்டார்.

''தாய் மிகவும் வேதனைப் படவே, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். தாயே ஆனாலும் தங்கள் விஷயத்தைத் தாயிடம் பகிர்ந்துகொள்ள அவள் விரும்பவில்லை. கொஞ்சம் மன வருத்தத்தில் தமிழை விட்டு வந்து விட்டாள் தான்.

அதற்காக அவனைப் பற்றி யாரிடமும் குறை சொல்ல அவள் தயாராக இல்லை. அவன் செய்த செயலின் தாக்கம் குறைய அவளுக்குக் கொஞ்சம் நேரம் தேவைப் பட்டது.

வேலைக்காரி ஜூஸ் கொண்டு வரவே, மறுக்காமல் அதை வாங்கிக் குடித்தவள், ''நான் ரூம்க்குப் போய் ரெஸ்ட் எடுக்குறேம்மா ஒரு ரெண்டுநாள் இங்கே இருந்துட்டு போகலாம்னு பார்க்குறேன்'' தயக்கமாகவேச் சொன்னாள்.

வேறு நாளாக இருந்திருந்தால், மாப்பிள்ளை இல்லாமல், நீ மட்டும் எப்படி இங்கே தங்கலாம் என்று சண்டை போட்டிருப்பார். ஆனால், இன்று தன் மகள் இங்கே தங்குகிறேன் என்று சொல்லவே, சந்தோசமாகவே சம்மதித்தார்.

அறைக்குச் சென்ற பாரதிக்கு கொஞ்சம் யோசிக்க வேண்டி இருந்தது. தமிழிடம் தான் பட்ட கோபம் சரிதானா என்றே அவள் யோசிக்க வேண்டி இருந்தது.

முதல் வேலையாகக் குளித்து, உடை மாற்றிவிட்டு, படுக்கையில் அமர்ந்து யோசித்தாள். தமிழின் கூச்ச சுபாவத்தை விட்டுவிட்டு அவனைப் பற்றி சிந்தித்தால், அவனிடம் எந்த குறையும் இருக்கவில்லை.

சில நாட்களாக அவளிடம் மட்டுமல்ல, அலுவலக பெண் ஊழியர்கள், வேலை நடக்கும் இடங்களில் இருக்கும் பெண்களிடம் கூட, சகஜமாகப் பேசிப் பழகினான்.

ஆனால், இன்று தன் தாய் பேசியதைக் கேட்ட பிறகு, அந்தச் சூழலை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல்தான், தடுமாற்றத்தில் அப்படி ஒரு முடிவிற்கு வந்துவிட்டான், என்று நிதானமாக யோசிக்கும் பொழுது அவளுக்குப் புரிந்தது.

அதிலும் தாய் தன்னைக் குறை சொல்லி அடித்துவிட்டார், என்ற காரணத்துக்காக, தங்கள் இருவரையும் அந்த பழியிலிருந்து காக்கவே அப்படி அவசரப்பட்டு நடந்து கொண்டான் என்பதும் புரிந்தது.

ஆனால், இப்படி ஒரு காரணத்துக்காக அவன் தன்னைத் தொட்டதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. தான் வீட்டை விட்டுக் கிளம்பும் வேளையில் அவன் துடித்த துடிப்பு, அவள் கோபத்தைக் கொஞ்சம் குறைத்தது என்றால்

காரின் குறுக்கே வந்து, தன் கண்களுக்குள் பார்த்து அவன் காதல் சொன்னது அவளை அசைத்துப் பார்த்தது. அதிலும் அவன் குரலும், கையும் நடுங்கியதை உணர்ந்தப்

பொழுது, அவன் கைகளை அழுத்தி தைரியம் சொல்ல விழைந்த தன் எண்ணத்தை, அந்தநேரம் அடக்கவே அவள் மிகுந்த சிரமப் பட்டாள்.

அவனது அவ்வளவு தயக்கத்திலும், தயங்கித் தயங்கித் தன் கன்னத்தில் பதிந்த அவன் இதழ்களின் வெம்மையை நினைக்கும் பொழுது, இப்பொழுதும் தேகம் சிலிர்த்தது. தன் பாராமுகம் அவனை இவ்வளவு பாதிக்கிறது, அவன் தயக்கங்களை உடைக்க வைக்கிறது என்பதை நினைக்கும் பொழுது, அவளுக்கு வாழ்க்கையைத் துவங்க புது வழி கிடைத்ததாக உணர்ந்தாள்.

அந்த யோசனை தோன்றிய பிறகு, கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தாள். ஆனாலும் தமிழை விட்டு வந்தது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. இப்பொழுதே கிளம்பிச் சென்றுவிடுவோமா என்று எண்ணினாள்.

ஆனால், நோய் சரியாக, கசப்பு மருந்தை குழந்தைகளுக்குக் கொடுப்பதுபோல், இந்த சிறிய பிரிவை கசப்பு மருந்தாக அவனுக்கு கொடுக்க விரும்பினாள். எப்படியாவது அவன் தன்னைத் தேடி வந்துவிட மாட்டானா என்று எண்ணினாள்.

தன்னிடம் அவன் சொன்ன காதல் உண்மையென்றால் அவனால் அவள் இல்லாமல் இருக்க முடியாது என்று உறுதியாக நம்பினாள். அவள் நம்பிக்கை இரவு பதினொன்றை கடக்கும் வேளையில் ஆட்டம் கண்டது.

இதற்குமேல் அவன் வருவான் என்ற நம்பிக்கை இல்லாமல் படுக்கையில் விழுந்தாள். எப்படியும் நாளை தேவா வெளியே செல்லவேண்டும் என்று சொல்லியிருப்

பதால், தன்னைத் தேடி வருவான் என்று எண்ணியவள், தூங்கக் கண்களை மூடினாள்.

அவள் கண்களை மூடி உறக்கத்துக்குச் செல்லும் வேளையில், தன் அறையின் கதவு மெதுவாகத் திறப்பதைப் பார்த்தாள். உறக்கம் முற்றிலும் தொலைந்து போக, வருவது யார் எனப் பார்க்க, வெளிச்சத்தில் இருந்து, இருட்டான அவள் அறைக்குள் நுழையவே,

இருட்டு தன் கண்களுக்குப் பழக, தமிழ் அங்கேயே ஒரு நிமிடம் கண்களை மூடிக் கொண்டு நின்றான். தமிழைப் பார்த்ததும், பாரதியின் மனதிலிருந்த பாரங்கள் அனைத்தும் விலகியோட, அவனை இறுக கட்டிக்கொள்ள வேண்டும்போலிருந்தது.

அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு படுத்திருந்தாள். அதைவிட, தமிழ் என்ன செய்வான்? என்று அவளுக்கு அறியவேண்டி இருந்தது. தமிழோ இருட்டு கண்களுக்குப் பழகியவுடன், தான் கொண்டுவந்த பையை ஓரமாக வைத்தவன், நிதானமாக அவள் கட்டிலை நெருங்கினான்.

இருளில் அவள் வரிவடிவை நிதானமாகப் பார்த்தவன், படுக்கையில் அமர்ந்தவாறு நிதானமாக அவள் முகத்தை ஆராய்ந்தான். ஒப்பனையே இல்லாமல் ஒரு பெண் இவ்வளவு அழகாக இருக்க முடியுமா?

யோசனை மனதுக்குள் ஓட, அவள் முகத்தை ரசிக்கத் தடையாக, அவள் முகத்தில் விழுந்து நர்த்தனமாடிய கற்றை முடியை, அவள் காதுக்குப் பின்னால் ஒதுக்கினான். ஒதுக்கிய பின்னும், அவன் கையை விலக்கிக் கொள்ள மனமில்லாமல் அவள் கன்னத்தை மெதுவாக வருடியது.

மூச்சடைத்தது பாரதிக்கு தமிழின் நெருக்கம் ஒன்றும்

புதிதில்லை பாரதிக்கு. ஆனால், அவனது இந்த வகையான நெருக்கம் புதிது. இவ்வளவு நெருக்கத்தில், இமைக்க மறந்த அவன் பார்வையும், அவனது தொடுகையும், கன்னத்தை வருடுவதும்

'ஏண்டா இப்படிக் கொல்ற?' தவித்துப் போனாள் பாரதி. தன் நடிப்புத் தூக்கத்தை தொடரவும் முடியாமல் அவனது நெருக்கத்தில் இயல்பாக இருக்கவும் முடியாமல்,

எங்கே தன் வியர்வை அவனுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று, இதயம் படபடப்பதை அடக்கியவாறு, அமைதியாக இருந்தாள்.

''பாரதி நீ இல்லாத அந்த வீட்டில் என்னால் இருக்க முடியலை பாரதி அதான் கிளம்பி வந்துட்டேன். நீ தூங்க முன்னாடியே வந்தால் எங்கே என்னை வீட்டுக்குப் போகச் சொல்லிடுவியோன்னு பயந்துட்டு இவ்வளவு லேட்டா வரேன்'' சொன்னவன், அவள் தலை வைத்திருந்த தலையணையில் தலை வைத்து, அவள் முகத்தையே நெருக்கத்தில் பார்த்தவாறுப் படுத்தான்.

'நீ எப்போ வருவன்னு தவிச்சுட்டு இருந்தேண்டா' பாரதி மனதுக்குள் அவனுக்குப் பதில் கொடுத்தாள்.

''பாரதி எனக்கு நிஜம்மாவே நீ வேணும் கொஞ்ச நாளாவே நான் நானா இல்லை பாரதி ஆனா எனக்கு உன்னைத் தொடுற அளவு தைரியம் இல்லையே நான் என்ன செய்யட்டும்?'' அவளிடமே கேட்டவன்,

''தயவுசெய்து என்னை வெறுத்துடாதே பாரதி என்னால் அதைத் தாங்க முடியாது நம்ம வீட்டில் நீ இல்லாம அரை நாள் கூட என்னால் இருக்க முடியல அதிலும்

உன்னோட இந்த கொலுசு சத்தம் இல்லாமல்'' சொன்னவன், எழுந்து அவள் கால் கொலுசிலிருந்த முத்துக்களை லேசாக வருடினான்.

தமிழ் தன் கால்களைத் தொடவே அனிச்சையாக காலை விலக்க நினைத்தவள், முயன்று தன்னைக் கட்டுப்படுத்தியவாறு அசையாமல் இருந்தாள்.

அந்த முத்துக்களையே சிறிது நேரம் வருடியவன், மதியம் பாரதி வீட்டைவிட்டு வந்தது முதல் நடந்த சம்பவங்களை நினைத்துப் பார்த்தான்.

இதுவரை பாரதி இல்லாமல், அந்த வீட்டுக்குள் அவன் தனியாக ஒரு நொடி கூட இருந்தது இல்லை. அப்படியிருக்கையில் இந்தத் தனிமை அவனைப் பயமுறுத்தியது.

'நான் செய்தது பெரிய தப்புதான் என்னை மன்னிச்சுடு பாரதி வந்துடு பாரதி நீயில்லாமல் என்னால் இங்கே இருக்க முடியலை' அவன் வாய் அவளிடம் விடாமல், ஏக்கமாக மன்னிப்பை வேண்டியது.

'இவ்வளவு நாள் என் காதலும், நெருக்கமும் செய்ய முடியாததை, யாரோ ஒருவர் சொன்ன வார்த்தை செய்துவிட்டதா என் காதலையும், என்னையும் இதற்குமேல் நீங்க அவமானப் படுத்த முடியாது' பாரதியின் பேச்சு, காதில் ஒலிக்க, தான் செய்த தவறின் அளவு கூடிக் கொண்டே போவதை உணர்ந்தான்.

ஐந்து மணிக்கு வேலைக்காரி காபி கொண்டுவந்து வைக்க, அதைத் தொடக்கூட பிடிக்காமல் அமர்ந்திருந்தான். இப்படியே இருந்தால் தனக்குப் பயித்தியமே பிடித்துவிடுமோ என்று அஞ்சிய வேளையில் அங்கே

வந்தான் தேவா.

தான் வந்தது கூட தெரியாமல், சிலையாக அமர்ந்திருந்த தமிழை உலுக்கினான். அவன் உலுக்கவே ''பாரதி வந்துட்டியா?'' கேட்டவாறு திரும்பியவன், அங்கே தேவாவை எதிர்பார்க்காமல் திகைத்தான்.

''தேவா நீ இங்கே'' தடுமாறியவன் ''வாடா'' ஒரு வழியாக வரவேற்றான்.

''நான் வர்றது இருக்கட்டும், பாரதி எங்கே?'' கூர்மையாக நண்பனைப் பார்த்தவாறுக் கேட்டான்.

அவன் கேள்வியில் தடுமாறியவன் ''வெளியே போயிருக்காடா நீவா காபி குடிக்கிறியா?'' கேட்டவன் நண்பனுக்கும் காபி கொண்டுவரச் சொன்னான்.

''இந்தக் காபியைக் குடிக்கத்தான் நான் இவ்வளவு தூரம் வந்தேனா?'' நண்பனை முறைத்தவன்,

''என்ன பிரச்சனை தமிழ்? நீ இவ்வளவு டிஸ்டர்ப்டா இருந்து நான் பார்த்ததே இல்லையே'' தேவாவின் குரலில் வழக்கமாக இருக்கும் விளையாட்டுத்தனம் கொஞ்சம் கூட இருக்கவில்லை.

''என்னடா என்னென்னவோ சொல்லுற? அதெல்லாம் எதுவும் இல்லை'' அவனுக்கு காபியைக் கொடுத்தவாறே சொன்னான்.

''சரி நான் கேட்டால் நீ எதுவும் சொல்லமாட்ட நான் வாத்திக்கே ஃபோன் பண்ணுறேன் நீ அவர்ட்டயே பேசிக்கோ'' சொன்னவன் தன் அலைபேசியை எடுக்கவே கோபமாக அதைப் பிடுங்கினான்.

''நானே ஏகப்பட்ட பிரச்சனையில் இருக்கேன் இதில்

நீவேற ஏண்டா?'' சலித்துப் போனான் தமிழ். அதில் ஒளிந்திருந்த வேதனையையும் கண்டுக் ?ண்டான் தேவா.

எழுந்து வந்து அவன் தோள்களை ஆதரவாக அழுத்தினான். ''உங்களுக்குள் என்ன பிரச்சனை தமிழ் சொல்ல முடியும்னா சொல்லு இல்லன்னா வேண்டாம்'' ஆதரவாகச் சொன்னான்.

தமிழுக்கும் அப்பொழுது ஒருவரின் யோசனை தேவையாக இருந்தது. மடைதிறந்த வெள்ளமாக தன் மனதிலிருப்பது துவங்கி, தங்களுக்குள் நடந்து முடிந்தவற்றை அவன் சொல்ல, அதுவரை அமைதியாக இருந்த தேவாவோ

''உன்னையெல்லாம் ஏண்டா சுனாமி தூக்கலை'' தன் தலையிலேயே அடித்துக் கொண்டு நண்பனிடம் கத்தினான் தேவா.

29

உன் கால்கொலுசின் ஓசையில்
தொலைந்துபோக ஆசை
உன் கைகோர்த்துக் கொண்டு
நடைபழக ஆசை
எல்லாம் உன்னாலே!

தமிழ் சொன்ன அனைத்தையும் அமைதியாகக் கேட்ட தேவா, சடாரென கோபம் கொண்டு கத்தவே,

அதிர்ந்துவிட்டான் தமிழ். தமிழின் அதிர்ந்த முகத்தைப் பார்த்தவன், தன் கோபத்தைக் குறைத்துக் கொண்டான்.

''ஏண்டா அப்போ முத ராத்திரிக்கு அவ்வளவு அட்வைஸ் கொடுத்தேனே அங்கே போய் என்னடா செஞ்ச?'' கோபமாகக் கேட்டான்.

''அது போடா நீ ரொம்ப ஈசியா சொல்லிட்ட உள்ளே இருக்க எனக்குதானே தெரியும் கஷ்டம்'' சிலிர்த்துக் கொண்டான்.

''ஆமா உன்னை சிங்கத்தோட குகையில தனியா அனுப்பினேன் கஷ்டப்படறதுக்கு நீயெல்லாம் வில்லனுங்க ளோட சண்டை போடத்தாண்டா லாயக்கு. அப்போவே பாரதி உன்னைப் பத்தி ஒரு முடிவுக்கு வந்திருப்பா

''அதுக்குத்தான் அவ்வளவு சொல்லி அனுப்பினேன் அப்படியிருந்தும் இவ்வளவு சொதப்பினால் அப்போ இவ்வளவு நாள் என்னதாண்டா செய்த'' அவனால் சமாதானம் ஆகவே முடியவில்லை.

''அட போடா'' சலித்துக் கொண்டான்.

''கேட்டதுக்குப் பதில் சொல்லாமல் தமிழ் கேக்குறேன்னு தப்பா நினைக்காதே உனக்கு எல்லாம் ஒழுங்கா வேலை செய்யுது தானே'' சீரியசாகக் கேட்டான்.

தேவா அப்படிக் கேட்கவே, தமிழின் முகம் வாடியது. ''நீயே என்னை இப்படிக் கேட்டால் நான் என்னதாண்டா செய்யட்டும்?'' வருத்தமாகவே கேட்டான்.

''நீ வருத்தப்படணும்னு நான் இப்படி கேக்கலை தமிழ் இப்படி ஒரு அழகான பொண்டாட்டியைப் பக்கத்தில் வச்சுட்டு அழகு பாத்துட்டு இருந்திருக்கியே என்ற

அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் தாண்டா கேக்கேன்

''நான்லலாம் கல்யாணத்துக்கு முன்னாடியே சுஷ்மியை விட்டு ஒரு நிமிஷம் கூட விலகி இருக்க முடியாம இருந்தேன். ஆனால், நீ கல்யாணத்துக்குப் பிறகும் என்னால் நம்பவே முடியலடா'' அவன் குரலில் சுத்தமாக நம்பிக்கையே இல்லை.

''இப்போ நீ நம்பாமல் இருக்கன்னு உன்கிட்ட எல்லாம் என்னால் நிரூபிக்க முடியாது'' எரிச்சலாகச் சொன்னான்.

''ஆமா இந்த வியாக்கியானத்துக்கு எல்லாம் குறைச்சல் இல்லை. கட்டுன பொண்டாட்டியைத் தொடத் துப்பில்லை உனக்கெல்லாம்'' ஆத்திரமாகத் துவங்கியவன் பாதியிலேயே நிறுத்திவிட்டான்.

''சரிடா உன் மனசைத் தொட்டு சொல்லு நிஜமாவே உனக்கு அந்தமாதிரி எந்த எண்ணமும் வரவே இல்லையா?'' தேவாவால் சுத்தமாக நம்ப முடியவில்லை.

''கடுப்பக் கிளப்பாமல் வீட்டுக்குக் கிளம்புடா நான் என் விஷயத்தைப் பார்த்துக்கறேன் இவ்வளவு நேரமா என்ன சொல்லிட்டு இருந்தேன் எனக்கும் ஆசையாத்தாண்டா இருக்கு ஆனால், என்னால் அவளை நெருங்க முடியலடா'' மனதில் இருந்ததை அப்படியே சொன்னான்.

தலையிலேயே அடித்துக் கொண்டான் தேவா ''கட்டுன பொண்டாட்டியை நெருங்க, என்னடா நேரம் காலம் பார்த்துட்டு இருக்க வேண்டியிருக்கு? அதான் அவங்களைப் பார்த்ததும் ஆசையா இருந்ததுன்னு சொன்னியே

''பிறகு ஏண்டா பேசாமல் இருந்த செஞ்சுருக்க வேண்டியதுதானேடா?'' கொலைவெறியானான் தேவா.

''போடா தூங்கிட்டு இருக்க ஒரு பொண்ணைத் தொடுறது தப்பு'' தமிழ் வேகமாகச் சொல்ல

''உன் நினைப்பில் தீய வைக்க நீ ஒரு அடி முன்னேறினாலே எல்லாம் சரியாயிடும் டா இப்போகூட ஒண்ணும் கெட்டுப் போகலை,

''நான் சொல்லுறதைக் கேளு இப்போவே அவங்க வீட்டுக்குக் கிளம்பிப் போஅப்படியே'' அடுத்து தேவா சொன்னவற்றைக் கேட்ட தமிழின் கண்கள் திகைப்பையும், அதிர்ச்சியையும் காட்டியது.

''என்னடா இப்புடி சொல்லுற?'' புருவம் தூக்கி, விழிகளை உருட்டி, எச்சில் கூட்டி விழுங்கியவாறு கேட்ட தமிழின் தோற்றத்தைப் பார்த்த தேவாவுக்கும் பாவமாகத்தான் இருந்தது. ஆனால், இப்பொழுது அதைப் பார்த்தால் நண்பனின் வாழ்க்கை சரியாகாதே.

எனவே அதைக் கண்டுக் கொள்ளாமல் இன்னும் சொல்லிக்கொண்டே போனான்.

''தமிழ்! இப்போ நான் சொன்னதைக் கேக்கலன்னா உனக்குத்தான் இன்னும் கஷ்டம். பாரதியும் எவ்வளவு நாள்தான் பொறுமையா இருப்பாங்கடா? சொன்னா புரிஞ்சுக்கோ தமிழ் நாளைக்கு நாம வெளியே போகும் பிளான் இருக்குல்ல

''என்ன செய்வியோ எனக்குத் தெரியாது இப்போவே நீ பாரதி வீட்டுக்குப் போய் நான் சொன்னதை எல்லாம் செய்யிற நாளைக்கு நாங்க உன்னைக் கூப்பிட வரும்போது நீங்க உண்மையான புருஷன் பொண்டாட்டியா இருக்கணும் புரிஞ்சுதா?'' மேலும் பல அறிவுரைகள் கொடுத்துவிட்டே அங்கிருந்து சென்றான்.

தேவா சென்ற பிறகும் யோசனையாகவே இருந்த தமிழ் பாரதி இல்லாத அந்த வீட்டில் இருக்க முடியாமலேயே, அவளைக் காண கிளம்பி வந்திருந்தான்.

பாரதியின் காலின் கொலுசிலேயே தன்னை மறந்து இருந்தவன், பாரதி காலை அசைக்கவே நினைவிலிருந்து மீண்டான். பாரதியோ, தமிழின் மூச்சுக்காற்று தன் காலில் விழும் சூட்டின் வெம்மையைத் தாங்க முடியாமலேயே காலை நகர்த்தினாள்.

கனவிலிருந்து கலைந்தவன், எழுந்து மீண்டும் பாரதியின் தலையணையிலேயே தலை வைத்துப் படுத்து, இமைக்காமல் அவள் முகத்தையே பார்த்தான். அவன் பார்வையின் வேகம் தாங்காமல் உள்ளுக்குள் உருகினாள் பாரதி.

'இப்படிப் பார்த்தே என்னை கர்ப்பமாக்கிடலாம்னு நினைக்கிறானா? தத்தி பார்த்துட்டே இருக்கு பாரேன்' மனதுக்குள் அவனை வசைமாரி பொழிந்தாள்.

அவள் சிந்தையைக் கலைக்கவென்றே அவன் பேசத் துவங்கினான். ''பாரதி ரூமுக்குள்ளே வந்த உடனே உன்னை கட்டிப் புடிச்சு, கன்னா பின்னான்னு முத்தம் கொடுக்கச் சொன்னான் அந்த முட்டாப்பய இப்படி இவ்வளவு அழகா தூங்கிட்டு இருக்க உன் தூக்கத்தை நான் எப்படி கலைக்க

''ம் இப்படித்தான் நேத்து ராத்திரியும் தவிச்சுப் போயிட்டேன் ஆனால், அதை இப்போ சொன்னால் நீ நம்புவியா?'' அவள் உறங்குவதாக நினைத்துக் கொண்டு தன் உள்ளத்தைத் திறந்தவன், அவளை இன்னும் நெருங்கினான்.

அவன் நெருக்கமும் பேச்சும் தவித்துப் போனாள்

பாரதி. அவனை அப்படியே இறுக்கிக் கொண்டால் என்ன..? என்ற எண்ணம் அவளை ஆக்கிரமித்தது.

'நேத்து ராத்திரியுமா? பிறகு ஏண்டா பேசாமல் இருந்த' மனதுக்குள் அவனிடம் கேள்வி கேட்டாள்.

''இது மட்டுமா'' அவன் இடைவெளிவிட

'இன்னும் என்ன?' மனதுக்குள்ளே கேட்டாலும், ஆர்வம் கொப்பளித்தது அவளிடம்.

''நீ போடுறியே ஒரு பைஜாமா அதிலும் அந்த லோ நெக் பைஜாமா அம்மாடி! அன்னைக்கு அப்படித்தான்.., அதுபாட்டுக்கு விலகி...'' கேட்ட பாரதிக்கு மூச்சடைத்தது.

'ஆண்டவா! எந்தக் கோலத்தில் இருந்தேன்னு தெரியலையே! அடப்பாவி! ராத்திரியெல்லாம் முழிச்சிருந்து என்னைப் பார்க்குறதுதான் உன் வேலையா?' அவன் தன்னை ரசிக்கவே இல்லை, சலனப்படவில்லை என்று, தான் மனதுக்குள்ளேயே வெதும்பியிருக்க,

அவனோ தன்னை அணுவணுவாக ரசித்திருப்பதை, அவன் வாயாலேயே அறிந்தப் பொழுது வானத்தில் பறப்பதுப் போலிருந்தது அவளுக்கு. இன்னும் அவன் பேச்சைக் கேட்க ஆர்வமானாள்.

''அந்தப் பைஜாமா விலகி உன்னோட இடுப்பு வயிறு இன்னும்''

'ஹையோ! மேலே சொல்லாதடா!' அவள் இதயம் துடிக்கும் துடிப்பில், எங்கே தன் மார்புக்கூட்டைப் பிய்த்துக்கொண்டு வெளியே விழுந்துவிடுமோ என்று அஞ்சினாள்.

அவனோ எந்தத் தடையுமில்லாமல் தொடர்ந்து

கொண்டிருந்தான். ''அந்த இருட்டில் கூட..., உன் இடுப்பு எவ்வளவு வெள்ளையா தெரிஞ்சுது தெரியுமா? அப்படியே என் கை உன்னைத் தொட, என் பேச்சைக் கேட்காமலேயே வந்துடுச்சு.

''எப்படியோ ரொம்பக் கஷ்டப்பட்டு என்னைக் கட்டுப்படுத்திக்கிட்டன். பின்ன தூங்கிட்டு இருக்க உன்னை எப்படித் தொடுறது? அது தப்புல்ல! அதான் அன்னைக்கு நான் பட்ட கஷ்டம், எனக்குத்தான் தெரியும்!'' என்று சொன்னவன் விட்ட அனல்மூச்சில் மெழுகாக உருகிக் கொண்டிருந்தாள் பாரதி.

'பிறகு ஏன் செய்யலை?' பாரதியின் நிலை விவரிக்க முடியாததாக இருந்தது.

''இப்போகூட, என்னால் தள்ளியிருக்க முடியலதான். ஆனால்,, நீ மதியம் சொன்னியே ஒரு வார்த்தை 'என் காதல் செய்யாததை யாரோட வார்த்தையோ செய்யுதான்னு?' அதுதான் என்னை இப்போ தடுக்குது.

''இந்த நிமிஷம் நான் உன்னைத் தொட்டு நீ என்னை விலக்கித் தள்ளிட்டா என்னால் அந்த வலியைத் தாங்கிக்கவே முடியாது. நான் என்னோட காதலை முதல்ல உனக்குப் புரிய வைக்கணும். பிறகுதான் உன்னைத் தொடும் தைரியம் எனக்கு வேணும்.

''நம்ம வீட்டில் நீயில்லாமல் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாமல், ஓடி வந்திருக்கேன். எனக்கு நீ வேணும் பாரதி மனைவியா, தாயா சகோதரியா எல்லாமா எனக்கு நீ வேணும். அதிலும் மனைவியா உன்னை நான் ஏற்க எனக்கு உன் ஆதரவு வேணும் பாரதி

''அதுக்கு உன்னோட ஒத்துழைப்பு ரொம்ப முக்கியம்.

என்னால் எடுத்த உடனே அதைச் செய்ய முடியும்னு தோணலை பாரதி. என்னை புரிஞ்சுப்பியா'' அவன் குரல் கெஞ்சியது.

தமிழின் பேச்சைக் கேட்ட, பாரதியின் கண்களில் கண்ணீர்த் துளி, அதை அவன் அறியாமல் நாசூக்காகத் தலையணையில் புதைத்தவள், 'உங்களை நான் புரிஞ்சுக்காமல் யார் புரிஞ்சுப்பா? நீங்கதான் என்னை இன்னும் புரிஞ்சுக்கலை தமிழ்.

'உங்க மனசுக்குள் இருக்குறதை முதல்லையே சொல்லியிருந்தால்எப்போவோ நம்ம வாழ்க்கை சரியாகி இருக்குமே. இப்போகூட எதுவும் கெட்டுப் போகலை, நீங்க எவ்வளவு தூரம் போறீங்கன்னு நானும் பார்க்குறேன்' காதலாகி கசிந்துருகினாள்.

'உங்களை மாத்தணும், உங்க தயக்கத்தை போக வைக்கணும்னு மட்டும்தான் இவ்வளவு நாள் நினைச்சுட்டு இருந்தேன். இனிமேல் என் காதலால் உங்களை குளிப்பாட்டி, உங்க காதலை வெளியே கொண்டுவர வைக்கிறேன் பாருங்க' மனதுக்குள் உறுதி எடுத்தாள்.

அதன் பிறகுதான் அவளால் நிம்மதியாக கண் மூட முடிந்தது. இரவு தமிழின் பேச்சைக் கேட்டவாறே விழித்திருந்ததில், எப்பொழுது உறங்கினோம் என்றே தெரியாமல் உறங்கினாள் பாரதி.

எனவே காலையில் நேரம் போவதே தெரியாமல் அசந்து உறங்க, அவள் வைத்திருந்த அலாரத்தை, தமிழ் அணைத்து வைத்தான். அதன் பிறகு அவன் உறங்காமல், விடிகாலை வெளிச்சத்தில் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவில் விட்ட பேச்சைத் தொடர்ந்தான் தமிழ். தன் பேச்சை பாரதி கேட்கவேண்டும், தன்னைப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற எந்த எண்ணமும் அவனுக்கு இல்லை. தன் மனதிலிருக்கும் எண்ணங்களை வெளியே கொட்ட வேண்டும் என்பது மட்டுமே அவன் நினைப்பாக இருந்தது.

ஒரு வழியாக உறக்கம் கலைந்த பாரதியைத் தீண்டியது தமிழின் வார்த்தைகள்தான். ''ஏய் அதெப்படி கொஞ்சம் கூட கலையாமல் அப்படியே படுத்து தூங்குற?எப்பவுமே அலாரம் வைக்கிறது மட்டும்தான் உன் வேலையா?

''அதை நிறுத்துறது மத்தவங்க வேலையா? கும்பகர்ணி எப்படித் தூங்குறா பாரு உன்ன'' என்றவன் வேகமாக அவளை முத்தமிடும் எண்ணத்தில் வேகமாக நெருங்கினான். அவனது திடீர் நெருக்கத்தை எதிர்பார்க்காத பாரதி திகைத்து கண் விழித்தாள்.

ஆனால், அவனோ, அவள் கண்விழித்ததை உணராமல், ''சாரி நான் இன்னும் பல் விளக்கவே இல்லை. பல் விளக்கிட்டு வந்து உன்னை கிஸ் பண்ணுறேன்'' சுத்தத்தின் சிகரமாக விளக்கம் கொடுத்து விலகினான்.

'கிழிச்ச ஒரு உம்மா குடுக்க தைரியமில்லாமல் எப்படியெல்லாம் கதை விடுறான் பாரேன்' அவளுக்கு நிஜமாகவே கடுப்பாக இருந்தது.

அவன் எழுந்து செல்லப் போகையில் அவனது அலைபேசி ஒலிஎழுப்ப, பாரதி விழித்துவிடக் கூடாதே என அவசரமாக அதை எடுத்தான். ஆனால், பாரதியோ அப்பொழுதுதான் விழிப்பு வந்தவள் போல் எழுந்து,

தலைகாணியை எடுத்து அவன்மேல் எறிந்துவிட்டு கால்களை உதைத்து நடந்தவாறு, பாத்ரூம் சென்றாள்.

பாரதியின் செய்கையை விளங்காமல் பார்த்தவன், 'நேற்றைய கோபமா இருக்குமோ' என்ற அவன் சிந்தையைக் கலைத்தது அலைபேசிவழியாகக் கசிந்த தேவாவின் காட்டுக் கூச்சல்.

''அடச்சீ எதுக்குடா இப்படி காதுக்குள்ளே கத்தித் தொலையிற'' அலைபேசியை எடுத்துவிட்டு, காதை வேகமாக விரல் விட்டுக் குடைந்துகொண்டான்.

''ஆமா இவ்வளவு கத்திப் பேசியே உன் காதுக்குள்ளே விழலை. இதில் ரகசியம் பேசிட்டாலும் அது கிடக்கட்டும் நேத்து அசத்திட்ட இல்ல ம்ம்ம்'' தேவாவின் குரல் உற்சாகத்தில் கூவியது.

''அட போடா சொல்லுறது ஈஸி செய்யிற எனக்குத்தானே தெரியும் அதோட கஷ்டம். பாரதிட்ட நான் இன்னும் சாரி கூட கேக்கலை அதுக்குள்ளே ஆனாலும் காலையில் ட்ரை பண்ணினேண்டா''

''வொர்க்அவுட் ஆகலையா'' சலித்தான்.

''இல்லடா நான் ப்ரெஷ் பண்ணவே இல்லை அதான்'' தமிழ் இழுக்க ஊரிலிருக்கும் அனைத்து கெட்டவார்த்தைகளையும் சொல்லி அவனைத் திட்டினான் தேவா.

''நீ உம்மா குடுக்குறதுக்கும் அதுக்கும் என்னடா சம்பந்தம் என்னால் முடியாதுடா சரி நீங்க உங்க காரை எடுத்துட்டு ஒரு பதினோரு மணிக்கு எங்க வீட்டுக்கு வந்துடுங்க. நாம அப்படியே வெளியே போகலாம் நீ வா உன்கிட்ட நேர்ல பேசிக்கிறேன்'' கடுப்படித்துவிட்டு

அலைபேசியை வைத்தான்.

அவன் அலைபேசியை வைக்கவும், பாரதி வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. இரவு உடையிலிருந்து, சாதா உடைக்கு மாறியவள், அறையிலிருந்து வெளியே செல்ல முயன்றாள்.

இவ்வளவு நேரம் அமைதியாக இருந்தவன், அவள் வெளியே செல்லப் போகையில், அவளைத் தடுத்தான். ''பாரதி நேத்து நான் ஏன் அப்படி நடந்துகிட்டன்னு எனக்கு சத்தியமா தெரியலை. நான்தான் அப்படி நடந்து கிட்டனான்னு கூட என்னால் நம்பவே முடியலை.

''அப்போ ஏதோ ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு அப்படி நடந்துகிட்டன், என்னை மன்னிச்சுடு பாரதி. ஆனால், நான் நேத்து உன்கிட்ட சொன்ன ஐ லவ் யூ மட்டும் நிஜம்'' அவள் தன்னை புரிந்து கொள்ள வேண்டுமே என்று தவிப்பாய் இருந்தது அவனுக்கு.

அவன்மேல் பாரதிக்கு இருந்த கோபங்கள் அனைத்தும் நேற்று அவள் யோசனையில் பாதி குறைந்தது என்றால், இரவு முழுவதும் அவன் பேசியதைக் கேட்ட பிறகு சுத்தமாகக் குறைந்திருந்தது. எனவே குறும்பு தலை தூக்க,

அவனை நெருங்கியவள், அவன் வயிற்றில் கை வைத்து தள்ள, படுக்கையில் மல்லார்ந்து விழுந்தவன், விழுந்த வேகத்தில் எழுந்து அமர்ந்தான்.

அவளையே மலங்க மலங்கப் பார்த்தான். பாரதியோ அதைக் கண்டுக் கொள்ளாமல், தன் வழக்கமான காதல் பார்வையுடன் அவனை நெருங்கியவள், அவன் கண்களுக்குள் ஆழ்ந்துப் பார்த்து, ''இப்போ யோசிச்சா நேத்து அந்தத் தப்பு நடந்திருந்தா நல்லா இருந்து

இருக்கும்னு தோணுது''

தன் கன்னம் அவன் கன்னத்தோடு இழைய, அவன் தலைமுடியை மிருதுவாக விரல் விட்டு கலைத்தவள், தன் இதழ்களை அழுத்தமாக அவன் நெற்றியில் பதித்தாள்.

பின்னர் சற்று விலகி, ''நான் ப்ரெஷ் பண்ணிட்டேன்'' குறும்பாக சொல்லிவிட்டு சென்றுவிட்டாள். சுத்தமாக நெகிழ்ந்துப் போனான் தமிழ்.

அதிலும் அவளது பேச்சும், நெருக்கமும், இதழ் முத்தமும் தன்னால் முயன்றும் முடியாத ஒன்றை, அவள் எப்படி இயல்பாகச் செய்கிறாள் என்று ஆச்சரியமும் அடைந்தான். அவளுக்குத் தன்மேல் கோபமில்லை என்பது, அவளது இந்தச் செய்கையில் தெரியவர, அவன் தேகம் முழுவதும் ஆனந்த ஆலைகள்.

30

எனக்குள் நுழைந்து,
என்னை மாற்றி,
என்னையே எனக்கு...
அறிமுகம் செய்கிறாள்!

பாரதியின் பேச்சிலும், இதழ் முத்தத்திலும் மயங்கி இருந்தவன், அவள் சொன்ன, 'நான் ப்ரெஷ் பண்ணிட்டேன்' என்ற வார்த்தையில் கனவு கலைய, அதிர்ந்து எழுந்தே விட்டான்.

''பாரதி என்ன சொன்னா? அப்படின்னா நான் காலையில் பேசியதை மட்டும் கேட்டாளா? இல்லையென்றால் எல்லாவற்றையுமா?'' இந்த எண்ணம் எழுந்தவுடனே, பாரதியிடம் கேட்டே ஆகவேண்டும் என்று தோன்றியது.

வேகமாகக் காலைக் கடன்களை முடித்தவன், கீழே இறங்கி வந்தான். ஹாலில் அவள் இல்லாததைப் பார்த்தவன், அவள் எங்கே என்று பார்வையைச் சுழலவிட, வீடே மயான அமைதியில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

எப்பொழுதும் அவர்கள் வீட்டில் மூன்று நான்கு வேலையாட்களாவது இருப்பார்கள். இன்று யாரையும் காணாமல், சிலவேளை கிச்சனில் இருப்பாளோ என்ற சந்தேகத்தில் அங்கே செல்ல, தனக்கு முதுகு காட்டியவாறு, கையில் தோசைக் கரண்டியுடன் அவள் நிற்பதைப் பார்த்தான்.

சாதாரணமான ஸ்கர்ட் மற்றும் காட்டன் சட்டையில், பழக்கமில்லாத வேலையில் சட்டையின் முதுகுபுறம் வியர்வையில் குளித்திருக்க, முடியை மொத்தமாகத் தூக்கி ஒரு கிளிப்பில் அடக்கியிருக்க, அதுவும் தாறுமாறாக கலைந்திருக்க, பின்னங்கழுத்தோ, முத்து முத்தாக வியர்வையில் பூத்திருந்தது.

அவளது அந்தத் தோற்றம் தமிழின் தாபத்தைத் தூண்ட, 'கட்டிப் புடிச்சு கன்னா பின்னான்னு முத்தம் கொடுத்துடடா' தேவாவின் குரல் காதில் ஒலிக்க, குருவிலேகியம் சாப்பிட்டவன்போல், அவன் உணர்வுகள் கட்டவிழ, அதை அடக்க முயலாமல், நொடியில் அவளை நெருங்கினான்.

ஏதோ ஒரு வேகத்தில் வந்துவிட்டவன் அவளை எந்தப்பக்கம் முத்தமிட என்று தெரியாமல் தடுமாறினான். ''பா பா ம்கும் பாரதி'' அவன் தன்னை நெருங்கியதை அவளும் உணர்ந்தே இருந்தாள்.

என்ன செய்கிறான் என்று பார்ப்பதற்காகத்தான் அமைதியாக அப்படியே நின்றிருந்தாள். அட்லீஸ்ட் தன்னை அணைக்கவாவது செய்வான் என்று அவள் எதிர்பார்க்க, அவனது தடுமாறிய அழைப்பு பாரதியை எதுவோ செய்ய அவன் பக்கம் திரும்பினாள்.

அப்படித் திரும்பும் பொழுது தேவைக்கு அதிகமாகவே அவனோடு இழைந்தவாறே திரும்பினாள். அவன் விலகுவான் என்று அவள் எதிர்பார்க்க, அவனோ கண்களில் அலைப்புறுதலுடன் அவளையே வெறித்தான்.

'என்ன?' புருவம் உயர்த்தி, அவள் விழிகள் அவனுக்குள் ஊடுருவி கேள்வி கேட்க, தன் கைகளை எடுத்து கிச்சன் மேடையில், அவளை சிறை செய்தவாறு இன்னும் நெருங்கினான்.

பார்வையில் சம்மதத்தைத் தேக்கி அவனைப் பார்க்க, அவன் கைகளோ அவள் இடையை அணைக்கவா அவள் தோளை அணைக்கவா அவள் முகத்தைத் தாங்கவா என வேகமாக இடம் பெயர முனைந்தது.

ஆனால், அவனால் அதை செயல்படுத்த முடியவில்லை. பார்வையோ அவள் முகமெங்கும் மொய்க்க, அவள் இதழ்களில் நிலைத்த அவன் பார்வையை அவனால் திருப்பவே முடியவில்லை.

அவனது தவிப்பையும், தடுமாற்றத்தையும் சரியாக புரிந்து கொண்டவள், எதிலோ தோற்றுப் போகும்

உணர்வுடன், 'இதற்குமேல் என் சம்மதத்தை நான் எப்படிச் சொல்ல?' என்பதுபோல் வேதனையாக அவனைப் பார்க்க,

அவள் வேதனைப்படுவதை தாங்க முடியாமல், ''ஒரு பொண்ணை எங்கேயெல்லாம் தொடலாம், தொடக் கூடாதுன்னு தெரியலை பாரதி'' தன் தடுமாற்றத்தின் காரணத்தை அவளிடம் வார்த்தையில் வடிக்க முயன்றான்.

தன் வலியை மறைத்தவள், தோசைக் கரண்டியை மேடையில் வைத்தவள், நொடியில் அவன் சட்டையைப் பிடித்து இழுத்து தன்னோடு இறுக்கினாள். அவன் கரங்களைத் தன் இடையில் தவழவிட்டாள்.

தமிழோ தன் கைகளைக் கொண்டு, மேலும் அவளைத் தன்னோடு இறுக்கினான். அவன் பின்னந்தலையில் கை கொடுத்து, அவனை தன்னை நோக்கி இழுத்து, அவன் காதுக்குள் ''இப்போ என்னை நீங்க எங்கேயெல்லாம் தொட்டுட்டு இருக்கீங்களோ அங்கேயெல்லாம் ஒரு பொண்ணை தொடக் கூடாது

''ஆனால்,'' சற்று இடைவெளி விட்டவள் ''பொண்டாட்டிக்கிட்ட அந்த வரைமுறையெல்லாம் கிடையாது. கன்னாபின்னான்னு தொடலாம் சரியா'' பாரதியின் குரல், அவனது நெருக்கத்திலும், இறுகிய அணைப்பிலும், நெகிழ்ந்து குழைந்து வெளிவந்தது.

''அப்படியா அப்போ'' கேட்டவனின் கரங்கள், அவள் இடையிலிருந்து, வியர்வையில் நனைந்திருந்த அவள் சட்டையின் ஈரத்தில் அலைந்து, அழுத்தியது. அதே நேரம் அவன் இதழ்கள் அவள் முகம் நோக்கிக் குனிய,

''பாரதி கிச்சன்ல எதைப் போட்டு தீய்க்கிற ஏதோ தீயிற வாசனை வருது'' தாயின் குரலில், தமிழிடமிருந்து

தன்னைப் பிடுங்கிக் கொண்டு, திரும்பி நின்றாள்.

தமிழுக்கோ பொங்கிய உணர்வுகள் அடங்காமல் அவனை பொசுக்கத் துவங்கின. ''பாரதி'' ஏக்கமாக ஒலித்தது தமிழின் குரல்.

பாரதியும் அவனுக்குக் குறையாத தவிப்போடுதான் இருந்தாள். ஆனால், இருக்குமிடமும், தாயின் வருகையும் அவள் உணர்வுகளை சட்டென வடிய வைத்தன.

ஆனால், தமிழால் அவ்வளவு சுலபத்தில் அதிலிருந்து வெளியே வர முடியவில்லை. ''பாரதி'' இன்னும் விலகாமலே அவளை அழைத்தான்.

''தமிழ் நீங்க ஹாலுக்குப் போங்க நான் காபி கொண்டு வரேன்'' தாய் வந்துவிடவே அதற்குமேல் அவளால் எதுவும் செய்ய முடியாத நிலையில் கொஞ்சம் அழுத்தமாகவே சொன்னாள்.

பாரதியின் வார்த்தையும், சுதாவின் வருகையும் அவனை அரை மனதாக அங்கிருந்து நகர்த்தியது.

கிச்சனுக்குள் வந்த சுதாவோ நொடியில் நிலைமையை கணித்தவர், ''பாரதி நீ மாப்பிள்ளையோட இரு நான் எல்லாம் எடுத்துட்டு வாரேன்'' அவளை அனுப்ப முயன்றார்.

''இல்லம்மா தனியா நீங்களும் எவ்வளவுதான் செய்வீங்க. அதுவும் மொத்தமா எல்லா வேலைக்காரங்களுக்கும் ரெண்டுநாள் லீவ் கொடுத்து அனுப்பணுமா?'' தாயிடம் சலித்துக் கொண்டாள்.

''அவங்களுக்கும் லீவ் கொடுக்கணுமே ஏதோ அவங்க ஏரியாவில் கோவில் திருவிழாவாம் அதான் நான் மட்டும்தானே, ஏதாவது செஞ்சுக்கலாம்னு நினைச்சேன்.

நீயும் எங்கேயோ வெளியே போகணும்னு சொன்ன?'' அவளிடம் கேட்டார்.

''ஆமா தேவா வரேன்னு சொன்னார். எத்தனை மணிக்குன்னு தெரியலை. நீங்க வாங்க நான் தமிழ்ட்ட கேட்குறேன்..'' தாயிடம் பேசினாலும், அவள் மனம் முழுவதும் தமிழ் என்ன செய்து கொண்டிருக்கிறானோ என்பதிலேயேச் சுழன்றது.

தாயிடம் பேசிவிட்டு ஹாலுக்கு வர, அங்கே சோபாவில் தலையில் கை வைத்தவாறு, தமிழ் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவன் அருகில் அமர்ந்து, அவன் தோளை அழுத்தியவள், ''தமிழ்'' கனிவாக அவனை அழைத்தாள்.

எப்படியாவது அவளை முத்தமிட்டுவிடவேண்டும் என்ற எண்ணமும் வளர்ந்து வேர்விடத் துவங்கியது. பாரதியால் தன்னிடம் இவ்வளவு இயல்பாக நடக்க முடியும்போது, ஏன் என்னால் முடியாது? என்னால் முடியும்.

பாரதிக்கு நல்ல கணவனாக எல்லா விதத்திலும் நான் மாறியே ஆகவேண்டும். இன்று வெளியே செல்லும் முன்னர், பாரதியை முத்தமிட்டே ஆகவேண்டும் என்று தனக்குத் தானே முடிவெடுத்துக் கொண்டான்.

அதை செயல்படுத்தும் முனைப்புடன், தன் அருகிலிருந்த பாரதியை நிமிர்ந்து பார்த்தான். ஈரத்தில் பளபளத்த அவள் இதழ்களைப் பார்த்தவனின் மூச்சு தாறுமாறாக வெளிவரத் துவங்கியது.

இதுவரை அவன் முகத்தில் வந்துபோகும் கலவையான பிம்பங்களையே பார்த்துக் கொண்டிருந்தவள், அவனது பார்வை தன் இதழ்களில் நிலைப்பதையும்,

அவனது தடுமாற்றத்தையும், தற்போதைய அவன் தேவையும் புரிய, அவனைப் பார்ப்பதை தவிர்த்தாள்.

பாரதி தன்னைப் பார்க்காமல், முகத்தைத் திருப்பவே, வேகமாக அவள் கன்னங்களில் கை கொடுத்து, தன் பக்கம் திருப்பியவன், அவளை நோக்கி மெதுவாகச் சரிந்தான். திடுமென அவன் கரங்களை விலக்கியவள், ''அம்மா வராங்க'' அவனிடம் உரைத்தவள், வேகமாக விலகி அமர்ந்தாள். பாரதி அவனிடமிருந்து விலக, விலக, அவளை ஆக்கிரமிக்கவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது அவனுக்கு.

அவள் விட்ட இடைவெளியை அவன் நொடியில் நிரப்ப, அவன் எண்ணம் புரிந்தவள், எதேச்சையாக செய்வதுபோல், அங்கிருந்து எழுந்து தாயிடம் சென்றாள். ஏமாற்றமாக உணர்ந்தான் தமிழ்.

''தமிழ் சாப்பிட வாங்க'' அங்கிருந்தே அவள் அழைக்க, வேண்டா வெறுப்பாக எழுந்து சென்றான்.

ஏனோ தானோவென்று இரண்டு சப்பாத்தியை விழுங்கியவன், பாரதியைப் பார்த்தவாறே எழுந்து கை கழுவச் சென்றான். பாரதியும் சாப்பிட்டுவிட்டு அறைக்குச் செல்ல, தமிழ் உடை மாற்றிக் கொண்டிருந்தான்.

''தேவா, நம்ம காரில் போய் அவனை பிக்கப் பண்ணிக்கச் சொன்னான். கிளம்பிட்டன்னா போகலாம்'' கண்ணாடியில் தெரிந்த அவள் பிம்பத்தைப் பார்த்தவாறே சொன்னான்.

''அப்படியா சரி இருங்க கொஞ்சம் கசகசன்னு இருக்கு. ஜஸ்ட் பாடி வாஷ் பண்ணிட்டு வந்துடுறேன்'' சொன்னவள், பாத்ரூமுக்குள் சென்று மறைந்தாள்.

அப்போது பார்த்து ,அவர்களின் தொழில் முறை நண்பர் ஒருவர் அவசரமாக அவனை சந்தித்துப் பேச வந்துவிட்டதால் ,அவளை முத்தமிட்டே ஆகவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது .

அவர் இருவருடனும் பேசிவிட்டு , அவர்கள் தேவா வீட்டுக்குப் போகும் வழியில் , தன்னை இறக்கிவிட்டுப் போகுமாறு சொல்லிவிடவே , அதே போல் செய்துவிட்டு , தேவாவின் வீட்டை அடைந்தனர் .

வெளியிலிருந்து ஹாரன் அடிக்க, அவர்கள் இருவரும் வரும் வழியைக் காணோம். எனவே இருவரும் காரை விட்டுவிட்டு, இறங்கி வீட்டுக்குள் சென்றார்கள். வீட்டில் சுஷ்மியின் பெற்றோர் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இருக்கவில்லை.

அழைப்புமணியை அழுத்தியும் எந்த சத்தமும் இருக்கவில்லை. கதவில் கைவைக்க, அதற்காகவே காத்திருந்ததுபோல் உடனே திறந்து கொண்டது. ''வீட்டை தொறந்து போட்டுட்டு எங்கே போனான்?''எண்ணியவன், அவன் அலைபேசிக்கு அழைப்பு விடுத்தான்.

வீட்டிற்குள் இருந்து தேவாவின் அலைபேசி ஒலிக்கவே, அலைபேசியை அணைத்துவிட்டு, இருவரும் கொஞ்சம் பதட்டமாகவே வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

நுழைந்தவர்களை வரவேற்றது சுஷ்மியின் குரலே. ''தேவா உங்க மொபைல் அடிக்குது'' அவள் குரல் குழைந்து ஒலித்தது.

''எவனாவது வெட்டிப்பய ஃபோ பண்ணுவான். நீ வா'' அவன் அப்படிச் சொல்லவே, வெளியே இருந்த

பாரதிக்கு சிரிப்பு வரும்போலிருந்தது. அவள் தமிழை, அவன் அறியாதவாறு கவனிக்க, தமிழ் கோபத்தை அடக்கப் போராடுவது தெரிந்தது.

''என்ன தேவா காலங்காத்தாலே ஆரம்பிச்சுட்டீங்க. அம்மா அப்பா இப்போ வந்துடுவாங்க. டிபன் வேற சாப்பிடலை பசிக்குது''

''நானே அவங்க வர முன்னாடி வேலையை முடிக்கணும்னுதான் பார்க்குறேன், நீதான் விட மாட்டேங்குற'' சரசமாகக் கேட்டான்.

''இருபத்திநாலு மணிநேரமும் இந்த நினைப்புதானா?'' அலுத்துக் கொண்டாள்.

''புதுசா கல்யாணம் முடிச்சுட்டு இந்த நினைப்பில் இல்லாமல், வேற எந்த நினைப்பில் இருக்குறதாம்? இப்படி பேசியே நீ டைம் வேஸ்ட் பண்ணுற'' சுஷ்மியை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ஹையோ கொஞ்சம் போய் டோர் ம..ம்'' அவள் மேலே பேச அவள் இதழ்கள் அவள்வசம் இருக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு, மூச்சுவாங்க விலகியவள் ''மூச்சுகூட விட முடியாமல் என்ன தேவா'' சிணுங்கினாள்.

''அப்போ நீ நல்லா மூச்சுவாங்கு நான் என் வேலையைப் பார்க்குறேன்'' சொன்னவனின் கரங்கள் அவளை வளைத்து இறுக்க, தவித்துப் போனாள்.

''தேவா ஒரு நிமிஷம் நான் சொல்லுறதை கேளுங்க'' அவனது வேகத்துக்கு அணை போட முயன்றாள்.

''நீ சொல்லிட்டே இரு, நான் கேட்டுட்டே இருக்கேன்'' அவன் வேலையை விடாமல் தொடர்ந்தான்.

''அதெல்லாம் முடியாது கையை வச்சுட்டு சும்மா இருந்தால்தான் சொல்வேன்'' அழுத்தமாகச் சொன்னாள்.

''உன் கால்ல வேண்ணா விழுறேன். ஒரு பத்து நிமிஷம் பேசாமல் இரேன்'' தேவா வெட்கமே இல்லாமல் அவளிடம் கெஞ்சினான்.

''இப்படிக் கெஞ்சித் தொலையிறீங்களே!'' அளவம் காட்டினாள்.

''நான் என்ன அடுத்தவகிட்டயா கெஞ்சினேன் உன்கிட்ட தானே பரவாயில்லை விடு'' வெளியில் இருப்பவர்கள்நிஜமாகவே இவர்கள் கொஞ்சிக் கொள்வதாக நினைக்க, இந்த நாடகத்தை அரங்கேற்றும் இவர்களோ கதவிடுக்கின் வழியாக, தமிழ், பாரதியின் செய்கைகளை கண்காணித்துக் கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் பேச்சுச் சத்தம் துல்லியமாக இவர்களைத் தீண்ட, திகைப்பின் உச்சியில் நின்று கொண்டிருந்தான் தமிழ். அவனது எண்ணமெல்லாம் 'இப்படித்தான் பொண்டாட்டியைக் கொஞ்சணுமா? கெஞ்சணுமா? என சிந்தித்துக் கொண்டிருந்தது.

பாரதியோ 'கொஞ்சுறதுதான் கொஞ்சுறாங்க கதவை மூடிட்டு கொஞ்சுறதில்ல இதுங்க இருக்க நிலையைப் பார்த்தால் இப்போதைக்கு வராதுங்க போலவே' ஒரு பெருமூச்சு அவளிடமிருந்து கிளம்பியது.

சுஷ்மியின் மேல் மெல்லிய பொறாமை உணர்வும், தன்னிரக்கமும் போட்டி போட்டது அவள் முகத்தில். இருவருக்குமே அங்கே நிற்பது தவறு என்று தெரிந்தாலும், தங்கள் வாழ்வைப் பற்றிய நினைப்பில் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரம் ஏதேதோ ஓசைகள் தமிழ், பாரதி இருவரின் செவிகளைத் தீண்ட முள்ளின்மேல் நிற்கும் அவஸ்தையில் நெளிந்தார்கள் இருவரும்.

31

ஈருடல் ஒருடலாக
ஈருயிர் ஓருயிராக
சங்கமிக்கும் நிமிடம்
எல்லாம் உன்னாலே!

இறுதியில் ஒரு முடிவுடன் இருவரும் வெளியேறத் திரும்புகையில், ''ஏன் சுஷ்மி நீ ஏன் பாரதிகிட்ட பேசக் கூடாது?'' என்ற வார்த்தைகள், அவர்களை நகர விடாமல் தேக்கியது.

''இப்போ நான் பாரதிகிட்ட சண்டைன்னு உங்ககிட்ட யார் சொன்னா?'' கேலியாக ஒலித்தது சுஷ்மியின் குரல்.

''விளையாடுற பார்த்தியா'' போலியாக கோபித்துக் கொண்டான்.

''நான் விளையாடலை நீங்கதான் புரியாமல் பேசுறீங்க. தமிழ்தான் கொஞ்சம் கூட விவஸ்தையே இல்லாமல், அவங்க குடும்ப விஷயத்தை உங்ககிட்ட சொன்னால் நாங்களும் அப்படியே இருக்க முடியுமா?'' நிஜமான சூடு அவள் குரலில்.

''இதில் என்ன தப்பிருக்கு? இப்போ உடம்பு

சரியில்லன்னா ஹாஸ்பிடல் போறதில்லையா? அதே மாதிரிதான், அவனுக்கு வாழ்க்கையில் ஒரு பிரச்சனை, என்ன செய்யன்னு என்கிட்ட ஐடியா கேட்டான் அதில் என்ன தப்பு?'' தேவாவும் வாதிட்டான்.

''நீங்க என்ன டாக்டரா?'' நக்கலாகக் கேட்டாள்.

''இந்த விஷயத்தில் அவனுக்கு நான் டாக்டர் தான்'' அவனும் அதேபோல் பதில் கொடுத்தான்.

''நீங்க ஆம்பளைங்க எப்படி வேண்ணாலும் பேசிக்குவீங்க. ஆனால், பெண்களால் அது எப்பொழுதும் முடியாது தேவா. சில விஷயங்களை நட்பே ஆனாலும் எங்களால் வெளிப்படையா பேசிக்க முடியாது.

''அதிலும் தமிழ் பற்றி நீங்க என்னை அவகிட்ட பேசச் சொல்லுறது அப்படியே நான் அவகிட்ட பேசினால், அவளோட மனசு என்ன பாடுபடும் தெரியுமா? ஒரு உண்மையைச் சொல்லவா..?

''இப்போ உங்களை விட, தமிழை அவ சரியா புரிஞ்சுட்டு இருப்பா. அவளால் முடிந்த எல்லா முயற்சியையும் அவ செய்துட்டுதான் இருப்பா. அவ வாழ்க்கையில் அவளுக்கு இருக்க அக்கறையை விடவா நமக்கு இருக்கும்? கண்டிப்பா இல்லை அப்படியே நமக்கு அக்கறை இருந்தாலும், அதை இந்த விஷயத்தில் நாம காட்ட முடியாது.

''காட்டவும் கூடாது தமிழ், மனது வைக்க வேண்டிய விஷயம் இது. கட்டுன பொண்டாட்டிகிட்ட என்ன ஈகோவும், கௌரவமும், கண்ணியமும் வேண்டிகிடக்கு? அதெல்லாம் எதில் எதில் இருக்கணுமோ, அதில் அதில் தான் இருக்கணும்.

''அதை விட்டுட்டு என்னை அவ புரிஞ்சுக்கணும்னு

அவர் சொல்வதில் எந்த அர்த்தமும் இல்லை. உங்களால் முடிஞ்சதை நீங்க செஞ்சுட்டீங்க. பாரதியால் முடிந்ததை அவ செஞ்சிருப்பா. இப்போ தமிழோட முறை

''அவரால் என்ன முடியும்னு அவர் சொல்லட்டும், செய்யட்டும். கொஞ்சநாள் ஒதுங்கி இருந்து வேடிக்கை பாருங்க. அவர் மனசை முதல்ல அவர் திறக்கட்டும் அதை விட்டுட்டு, பாரதிகிட்ட என்னை பேசச் சொல்லுற வேலையெல்லாம் இங்கே வேண்டாம்'' ஒரு முடிவோடு ஒலித்தது அவள் குரல்.

அவர்களது பேச்சைக் கேட்டு உண்மையாகவே பாரதிக்குக் கோபம் உச்சியில் நின்று ஆடியது. தன் குடும்ப விஷயம், தன் தாய்க்குக் கூடத் தெரியக் கூடாது என்று தான் நினைக்க, தமிழோ, தேவாவிடம் அதைக் கடை பரப்பியிருக்கிறான் என்பதை அவளால் தாங்கவே முடியவில்லை.

கண்களில் கனலுடனும், குற்றம் சாட்டும் பார்வையுடனும் அவள் தமிழைப் பார்க்க, தவித்துப் போனான் தமிழ். 'இல்லை.., அப்படிப் பார்க்காதே' என்ற பாவனையில் அவளைக் கெஞ்சல் பார்வை பார்த்தான்.

கதவின் இடைவெளி வழியாக இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த தேவாவும் சுஷ்மியும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஏய் இது ரெண்டும் தேறாத கேசுங்க சரி நீ முதல்ல போ நான் பின்னாடியே வாரேன்'' தேவா சுஷ்மியைத் தள்ளினான்.

''இது நல்லாருக்கு இவ்வளவுநேரம் ஜம்பமா நாடகம் போட்டது நீங்கதானே முதல்ல நீங்களே போங்க'' அவள்

நொடித்துக் கொண்டாள்.

''இவ்வளவு நேரம் செய்தது ஒண்ணுமே கிடையாது பினிஷிங் டச்னு சொல்லுவோமே அதுவும் கச்சிதமா இருக்க வேண்டாம் என் செல்லம் இல்ல போடா'' சுஷ்மியின் தாடையைப் பிடித்துக் கெஞ்சினான்.

''தேவா நீங்களும் என்னவோ சொல்லுறீங்கன்னு நானும் பாரதி வாழ்க்கை சரியாகணும்னு ஒண்ணு ஒண்ணா செய்யிறேன். பார்த்தால் எல்லாம் சொதப்பல் வேலையாவே இருக்கு'' அலுத்துக் கொண்டாள்.

''நான் என்ன செய்ய? இந்தத் தமிழ் இப்படி ஒரு களிமண்ணா இருப்பான்னு எனக்குத் தெரியாமல் போச்சே. இப்போகூட பாரு பொண்டாட்டி பக்கம் பார்க்காமல் எந்த கோட்டையைப் பிடிக்கலாம்னு யோசிச்சுகிட்டு இருக்கான். இவனையெல்லாம் வச்சுகிட்டு'' தலையிலேயே அடித்துக் கொண்டான்.

''பாரதி பாவங்க'' சுஷ்மி சொல்ல,

''அதுக்கு என்னால் எதுவும் செய்ய முடியாது?'' தேவா தோளைக் குலுக்க, அவன் தலையிலேயே நன்றாக குட்டினாள்.

''ஆஆ'' அவன் அலற, சுஷ்மி அறையிலிருந்து வெளியேறினாள்.

அவள் பின்னாலேயே ஓடி வந்தவன், அப்பொழுதுதான் தமிழை பார்த்தவன்போல நடித்து, ''டேய் தமிழ்! நீ இங்கே என்னடா பண்ணுற? பாரதி நீங்களுமா? வாங்க என்ன சொல்லாமல் கொள்ளாமல்'' போலியாக வியந்தான்.

கொலைவெறியானான் தமிழ். ''ஏண்டா என்னமோ வெளியே போகலாம் கிளம்பி வாங்கன்னு சொல்லிட்டு கதை விடுறியா?'' அவனைப் பாய்ந்து அடித்து துவம்சம் செய்யும் வெறி இருந்தது அவன் கண்களில்.

தங்களை வரச் சொல்லிவிட்டு, இப்படி பாரதியிடம் தன்னை மாட்டி விட்டுவிட்டானே என்று ஆத்திரமாக வந்தது அவனுக்கு.

''ஓ அதை நான் மறந்தே போயிட்டேன். ஒரு அரைமணிநேரம் வெயிட் பண்ணுங்க அதுக்குள்ளே''

''நீ ஒரு ம'' இடைபுகுந்து கத்திய தமிழ்! பாரதி, சுஷ்மி இருப்பதால் பேச்சை பாதியிலேயே நிறுத்தினான்.

பாரதியோ ''சாரி தேவா எனக்கு இன்னைக்கு வெளியே வரும் மூட் இல்லை. நான் வீட்டுக்குக் கிளம்புறேன்'' சொல்லிவிட்டு அவர்கள் பதிலைக் கூட எதிர் பார்க்காமல், காருக்கு விரைந்தாள்.

''மவனே உன்னை வந்து கவனிச்சுக்கறேண்டா'' விரல் நீட்டி எச்சரித்துவிட்டு வெளியேறினான் தமிழ்.

''நல்லதுக்கே காலமில்லை ஒரு கல்யாணம் ஆன பையனை, பொண்டாட்டி முன்னாடி இப்படி அசிங்கப்படுத்திட்டு போறானே'' சத்தமாகப் புலம்பியவன், சுஷ்மியை மெதுவாகத் திரும்பிப் பார்க்க, 'உங்களுக்கு இது தேவையா?' என்ற பாவனையில் அவள் நின்று கொண்டிருந்தாள்.

அதை சரியாகப் புரிந்து கொண்டவன், ''வாழ்க்கையில சில அடிகள் விழத்தான் செய்யும். அதையெல்லாம் பார்த்தால் ஆகுமா?நீ வா நாம கண்டினியு பண்ணலாம்'' அவள் இடையில் கை போட்டு இழுத்தான்.

''உங்களை திருத்தவே முடியாது''

''உனக்கும் தெரிஞ்சுபோச்சா அது சரி விடு ஊருக்கே தெரிஞ்ச விஷயம், உனக்கு தெரிஞ்சால் பரவாயில்லை'' அதையும் அவன் சாதாரணமாக எடுத்துக் கொள்ள, முடிவில் சுஷ்மிதான் பின்வாங்கவேண்டி இருந்தது.

''பாரதி கோபமா இருக்காங்க'' சட்டென சீரியசானாள்.

''அதான் தமிழ் கூட இருக்கானே இன்னைக்கு அவ அடிக்கிற அடியில் பையன் திருந்திடுவான். அதுக்குதானே அவங்களை கிளப்பி விட்டுருக்கோம். விடு பாத்துக்கலாம்'' கேலியாக சொல்ல முயன்றாலும், அவன் குரலிலும் மெல்லிய வருத்தம் இழையோடியது.

இருவரும் ஒருவர் ஒருவரை ஆதரவாக அணைத்துக் கொண்டார்கள்.

பாரதியோ இருக்கும் மனநிலையில் தாய் வீட்டுக்குச் சென்றால், அவர் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லி மாளாது என்பதால், தங்கள் வீட்டுக்குக் காரைச் செலுத்தினாள்.

தமிழோ இன்னும் குழப்பத்துக்கு உள்ளானான். அதைவிட, எங்கே பாரதி தன்னைவிட்டுச் சென்று விடுவாளோ என்ற பயம் அதிகரித்தது. இதுவரை அவளிடம் தன் மனதைத் திறக்காமலிருந்த, தன் முட்டாள்த்தனத்தை அறவே வெறுத்தான். அவள் இப்பொழுது தன் தாயின் வீட்டுக்குச் சென்றால், தன்னால் அவளிடம் மனம் திறந்து பேசமுடியாது என்று அவனுக்குத் தோன்றியது. ஆனாலும் நம் வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லக்கூட முடியாமல், தயக்கமாகவே அமர்ந்திருந்தான்.

தன் யோசனையிலேயே இருந்தவன், அப்பொழுது தான் கார் செல்லும் பாதையை கவனித்தான். பாரதி தங்கள் வீட்டுக்குச் செல்வதே தமிழுக்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது. அதுவே அவனுக்கு ஒரு பெரிய நம்பிக்கையை அளித்தது.

காரை வீட்டின் முன்னால் நிறுத்தியவள், தங்கள் அறைக்குள் செல்லவே, அவளுடனே சென்று, அவளை இறுக அணைத்துக் கொண்டான். பாரதியோ, இருக்கும் கோபத்தில் அவனை என்ன செய்யவென்றே தெரியாமல், அவன் அணைப்பிலிருந்து விடுபட போராடினாள்.

''விடுங்க அன்பு என்னைத் தொடாதீங்க எனக்குப் பிடிக்கலை'' தன் செய்கையில் மட்டுமல்லாமல், வார்த்தையாலும் தன் எதிர்ப்பைக் காட்டினாள்.

தமிழோ அவளை இன்னும் இன்னும் இறுக அணைத்தானே தவிர, ஒரு இன்ச் கூட நகரவில்லை.அவளது 'அன்பு' என்ற அழைப்பே, அவளுக்குத் தன்மேல் கோபமில்லை என்பதை அவனுக்கு உணர்த்த, அவன் அணைப்பு உடும்பாக இறுகியது. அவன் முதுகில் தன்னால் ஆனமட்டும் அறைந்தாள். அவளது அடிகளையும் வாங்கிக் கொண்டு அசையாமல் இருந்தான்.

அவன் வாயோ ''பாரதி பாரதி நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா? எங்கே நீ என்னை விட்டு போய்டுவியோன்னு நினைச்சு தவிச்சுப் போயிட்டேன்.

''இப்போ சொல்லுறேன் நீ இல்லாமல் என்னால் இந்த வீட்டுக்குள்ளேயே ஒரு நிமிஷம் இருக்க முடியலை. அப்படியிருக்கும் போது, நீ இல்லாத வாழ்க்கையை என்னால் நினைச்சுக் கூட பாக்க முடியலை பாரதி.

''உன்னோட இந்த விரல்கள் என் விரலைக் கோர்த்து வழி நடத்திய உன் கரிசனம் இந்த வீட்டுக்குள் மட்டுமில்லை, என் மனசு புல்லா நீ இருக்க. ஒவ்வொரு விஷயத்திலும் என்னை நீ பார்த்துக்கிட்ட விதம்'' அவன் ஒவ்வொரு வார்த்தைக்கும், அவனது அணைப்பு இறுகியது.

''ஒரு தாயைப் பிரிஞ்ச குழந்தையா தவிச்சுப் போயிட்டேன் பாரதி'' இதைச் சொன்னபொழுது அவன் தேகத்தில் ஓடிய நடுக்கத்தை, அவள் தேகம் உணர்ந்தது.

அதை உணர்ந்தாலும் உருகிய மனதை இறுக்கியவாறே, அவனை போலியாக விலக்க முயன்றாள். ஆம் அவளால் இப்பொழுது முழு மூச்சாக எதிர்க்க முடியவில்லை.

''நீ இல்லாமல் நான் இருப்பதே உயிரோடு இருக்கும் பிணத்துக்கு சமம் பாரதி. என்னோட காதலையும், நேசத்தையும் உனக்கு தெரியப்படுத்துவதில் வேண்ணா நான் தோத்துப் போயிருக்கலாம்.

''ஆனால், நீ என்னோட எல்லாமா இருந்தாய் என்பதும், ஒவ்வொரு நிமிஷமும் நான் உன்னோட அன்பிலும் கவனிப்பிலும் குளிர் காஞ்சுட்டு இருந்தேன் என்பதும் அப்பட்டமான உண்மை.

''உன்னோட இந்த அன்பையும் நேசத்தையும் நான் இழக்கத் தயாரா இல்லை. எனக்கு நீ வேணும் வேணுமே வேணும் அப்படியே உனக்கு என்னை விட்டு போகணும்னா தாராளமா போ

''ஆனால், நீ இந்த வீட்டுப் படியைக் கடக்கும் பொழுது என்னோட உயிர் இந்த உடம்பை விட்டுப் போயிருக்கும்'' அவன் குரலில் அப்படி ஒரு உறுதி.

அவனது இந்தப் பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துவிட்டாள் பாரதி. தன் பிரிவை அவன் தாங்கவே மாட்டேன் உயிரையே விட்டுவிடுவேன் என்று சொன்னதில் துடித்துப் போனாள்.

தன் மேல் இவ்வளவு நேசம் வைத்திருக்கும் இவன் ஏன் அதை வெளிப்படுத்த மறுக்கிறான்? தன்னை நெருங்காமல் இருப்பதேன்? இந்தக் கேள்வியே அவளைக் குடைந்தது.

ஆனாலும் தன் உருகலை அவனுக்குக் காட்டாமல், போலியாக அடித்து, திட்டி, திமிறி ஓய்ந்து போனது என்னவோ பாரதிதான். அவள் ஓய்ந்து போனபிறகுதான் தன் அணைப்பை கொஞ்சம் தளர்த்தினான்.

''ப்ளீஸ் பாரதி நான் சொல்வதை கொஞ்சம் கேளேன்உன் கோபத்தில் கண்டிப்பா நியாயமிருக்கு. நான் இல்லன்னு சொல்லலை எனக்குத் தெரியாத விஷயங்களை, நான் எப்படித்தான் தெரிஞ்சுக்கிறது.

''அதனால்தான் தேவாகிட்ட பேச வேண்டியதா போச்சு. அதை உன்கிட்ட பேசினால் ஆகாதான்னு நீ கேக்க வருவது எனக்குப் புரியுது. ஆனால், எனக்கு நடந்த சில விஷயங்களின் தாக்கம் அதை செய்ய விடாமல் தடுத்துடுச்சு'' அவள் என்னவென்று கேட்பாளா என்று அறிய இடைவெளி விட்டான்.

பாரதி அசையப்போவதில்லை என்பதுபோல் இறுக்கமாக இருந்தாள். அதை உணர்ந்தவன், ''தேவா என்னோட நண்பன் மட்டுமில்லை, அவன் என்னோட சொந்தக்காரனும் கூட. எனக்கு சின்ன வயசில் இருந்தே பொண்ணுங்கன்னா பேசறதுக்கு ரொம்பவே தயக்கம்.

''ஆனால், தேவா அப்படிக் கிடையாது. நானும் அவனும் பத்தாம் வகுப்புக்குத் தனியா டியுசன் சென்டர் போனோம். அங்கே பொண்ணுங்களும் இருந்தாங்க. தேவா எல்லார்ட்டயும் பேச, என்னால் ஒரு பொண்ணுகிட்ட கூட பேச முடியலை.

''அதை அந்தப் பொண்ணுங்க அவங்களுக்கு சாதகமா எடுத்துகிட்டாங்க. தேவா இல்லாத வேளை, என்கிட்ட பேச வருவாங்க. நானும் அவங்க கேட்டதுக்குப் பதில் சொல்ல முயற்சி செஞ்சேன்.

''ஆனால், என்னால் முடியலை என்பதுதான் சரியா இருக்கும். அப்போ ஒரு பொண்ணு, திடீர்ன்னு என்கிட்ட வந்து ஐ லவ் யூ சொன்னா என்னால் நம்பவே முடியலை. அப்போ பயம்தான் அதிகமா இருந்துச்சு.

''இது சரிவராதுன்னு அவகிட்ட சொல்லிட்டு வெளியே போயிட்டேன். போனவன் மறந்து விட்டுட்டுப்போன நோட்டை எடுக்கலாம்னு திரும்ப வந்தால், அவங்க எல்லோரும் சேர்ந்து என்னைப் பற்றி கேலி பேசிட்டு இருந்தாங்க.

''என்கிட்ட ஐ லவ் யூ சொன்ன பொண்ணு, வேற ஒருத்தனை லவ் பண்ணுறதாகவும், அவன்கிட்ட காதலைச் சொல்ல, என்கிட்ட ட்ரைனிங் எடுத்ததாகவும் சொல்லிச் சிரிக்கவே, என்னால் அதை தாங்கவே முடியலை.

''அதுக்குப் பிறகு நான் அவங்க வழிக்குப் போகவே இல்லை. ஆனாலும் அவங்க என்னை சீண்டுறதை விடவே இல்லை. நான் படியேறி வரும்போது என்னை வழி மறிக்கிறது, இடிக்கிறது, என்னை பொட்டன்னு'' மேலே

சொல்ல முடியாமல் அவன் தேகம் இறுகி, ஒரு விறைப்பு ஓடியது.

தமிழின் மனதில் இப்படி வேதனைகள் மண்டிக் கிடக்கும் என்று அறியாத பாரதி திகைத்து, பின் சுதாரித்து அவனைத் தன் மடியில் கிடத்தி, தன் வயிற்றோடு அணைத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் கலங்கியவன், நொடியில் தன்னை மீட்டுக் கொண்டு, ''அத்தோடு விடாமல் அன்னைக்கு நான் கிளாஸ் ரூமுக்குள் போகும்போது, குறுக்கே வழி மறிக்கவே, ஆத்திரத்தில் அவள் கையைத் தட்டி விட்டேன்.

''அப்போ எங்க சார் வரவே நான் அவ கையைப் பிடிச்சு இழுத்தேன்னு சொல்லிட்டா. அவளோட தோழிகளும் அதுக்குச் சப்போர்ட் செய்ய, அவர் என்கிட்ட என்னன்னு கூட கேட்காமல், என்னை ரொம்பத் திட்டிட்டார்.

''டியூசனுக்கு தேவா அப்பப்போதான் வருவான் என்பதால் அவனுக்கு இந்த விஷயம் எல்லாம் தெரியவே செய்யாது. என்னாலும் அவன்கிட்ட இதெல்லாம் சொல்லவே முடியலை. அன்னையோட டியூசனுக்கு முழுக்குப் போட்டேன். அப்போவே எனக்கு ஒரு வெறுப்பு

''இந்த பொண்ணுங்ககிட்ட எப்பவும் எதுவும் வச்சுக்கக் கூடாதுன்னு. ஆனால், விதி அத்தோடவும் விடலை. இன்ஜினியரிங் லாஸ்ட் வருஷம் ஒரு ப்ராஜெக்ட்க்கு, என்னோட ஒரு பொண்ணையும் கம்பைன் பண்ணி விட்டாங்க.

''அவ என்னோட வொர்க் பண்ண வந்தா. நல்லா பேசினா எல்லாம் நல்லபடியாதான் போயிட்டு இருந்துது.

கொஞ்ச நாளில் அவளோட நடவடிக்கையில் சின்ன மாற்றம். என்னைத் தொட்டுப் பேசி பழகினாள்.

''நானும் அதை சாதாரணமா எடுத்துட்டு விட்டுட்டேன். எங்க ப்ராஜெக்ட்டும் நல்லபடியா முடிஞ்சுது. அது முடிஞ்ச ரெண்டாவது நாள் ஒருத்தன் என்கிட்ட வேணும்னு வம்புக்கு வந்தான். என்னன்னு விசாரிச்சா என்கூட ப்ராஜெக்ட் செய்த அந்தப் பொண்ணோட லவ்வராம்.

''என்னால் தான் அவனோட காதல் பிரிஞ்சுடுச்சுன்னு ஒரே தகராறு. கடைசியா அவன் தொல்லை தாங்க முடியாமல், நல்லா கவனிச்சு அனுப்பினபிறகுதான் என்னால் நிம்மதியாவே இருக்க முடிஞ்சுது. கோபத்தில் அந்தப் பொண்ணைப் போய் பார்த்து என்னன்னு கேட்டால்

''அவனை கழட்டி விடறத்துக்கு என்னை யூஸ் பண்ணிகிட்டன்னு ரொம்ப கூலா சொல்லுறா. சுத்தமா வெறுத்துப் போச்சு. அப்போ இருந்தே மனசளவில் நான் பொண்ணுங்களை ரொம்பவே வெறுத்தேன்.

''இந்த பொண்ணுங்ககிட்ட எப்படி பேசிப் பழகணும்னு, எனக்குத் தெரியவே இல்லை அந்தப் ப்ராஜெக்ட் பொண்ணுகிட்ட ரொம்பவே கவனமா பேசி நடந்துகிட்டன். ஆனாலும் அவளும் என்னை யூஸ் பண்ணிட்டு போய்ட்டா.

''என்னோட இந்த அனுபவங்கள் தான், பொண்ணுங்களையே விலக்கி வைக்க வைத்தது, கல்யாணம் என்ற ஒன்றையே வெறுக்கவும் வச்சது. ஏன்னா பொண்ணுங்க எல்லாமே சுயநலவாதிங்க, தங்களோட நலனுக்காக என்னவேண்ணா செய்வாங்கன்னு நான்

நினைச்சேன்.

''அது மட்டுமில்லை, வெளியே ஒரு மாதிரியும், மனசுக்குள் ஒரு மாதிரியும் நடந்துப்பாங்கன்னும், என்னை மாதிரி ஒரு ஆம்பளையை எந்தப் பொண்ணுக்குமே பிடிக்காதுன்னும் நம்பினேன்.

''அதனால் தான் கல்யாணத்துக்கு நீ சம்மதம் சொல்லிட்டியான்னு கேட்டு, எப்படியாவது நம்ம கல்யாணத்தை நிறுத்திடணும்னு முடிவோடதான் அங்கே வந்தேன். ஆனால், என் முடிவை பின்வாங்க வைத்தது, உன்னோட காதலும்'' கொஞ்சம் தயங்கியவன் ''முத்தமும்தான்.

''தொடர்ந்த நாட்களில் உன்னோட நெருக்கமும், காதலும் புரிந்தாலும் என்னோட ஆசையும், தேவையும், தாபமும் ஒவ்வொரு நாளும் அதிகரித்தாலும், என்னால் உன்னை நெருங்க முடியாததற்குக் காரணம் ஒண்ணே ஒண்ணுதான்'' அதற்குமேல் சொல்ல முடியாமல் நிறுத்திவிட்டான்.

பாரதிக்கு அவன் எதனால் தயங்குகிறான் என்று தெரிந்தே ஆகவேண்டும் என்ற வேகம் பிறக்கவே, அதுவரை இருந்த மௌனத்தைக் கலைத்து, ''என்ன அது?'' தன் மடியிலிருந்த அவன் முகத்தை நிமிர்த்தி, அவன் கண்களுக்குள் பார்த்துக் கேட்டாள்.

இந்த வார்த்தையைக் கேட்கும் முன்பே அவள் குரல் நடுங்கியது. தன்னைப் பற்றியும் அவன் மனதுக்குள் ஏதோ எண்ணம் ஓடுகின்றது என்பதை மிகச் சரியாகப் புரிந்து கொண்டாள்.

அவனால் சொல்ல முடியவில்லை. 'சொல்ல மாட்டேன்' என்பதுபோல் தலையை மறுப்பாக ஆட்டினான்.

''இப்போ சொல்லப் போறீங்களா இல்லையா..?'' அவன் முடிகளுக்குள் கை கோர்த்து, அவனை உலுக்கிக் கேட்க, ''நான் அதைச் சொல்லணும்ன்னா நீ முழுசா என் மனைவியாகி இருக்கணும்'' அவனும் இப்பொழுது அவள் கண்களுக்குள் பார்த்து அசராமல் சொன்னான்.

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?'' புரியாமல், குழப்பமாகக் கேட்டாள்.

''சம்பந்தம் இருக்கு'' சொன்னவன், தன் தலையை அவள் பிடியிலிருந்து உருவியவன், அவள் வயிற்றில் முகம் புதைத்துக் கொண்டான்.

''அன்பு வேண்டாம் முதல்ல என்னன்னு சொல்லுங்க'' அவனை விலக்கி எழ முயன்றாள்.

அவனது கைகள் அவளை இடையோடு சேர்த்து அழுத்தி, படுக்கையில் வீழ்த்த, அவன் முகமோ, மெதுவாக, அழுத்தமாக முன்னேறியது. அவளது கரங்கள் அவன் கரங்களுக்குள் சிறைபட்டிருக்க, அவனைத் தடுக்க முடியாமல் சோர்ந்தாள்.

''அன்பு இது சரியே இல்லை தப்பு'' கிளர்ந்து எழும் உணர்வுகள் அவள் எதிர்ப்பை முழு மூச்சாக வெளிப்படுத்த விடவில்லை.

அழுத்தமாக முன்னேறிய அவன் முகமோ, அவள் மேனியில் புதைந்தது. ''பரவாயில்லை இதுவரை நான் தப்பு செய்ததே கிடையாது. இப்போ செஞ்சுட்டு போறேன்'' அவன் இதழ்கள், அவள் மேனியில் உரச, அவள் எதிர்ப்புக்கள் சுத்தமாகத் தொலைந்து போனது.

"அன்பு" தாபத்தில் அவள் குரல் ஒலிக்க, அவள் கரங்களுக்கு விடுதலை கொடுத்தவன், தன் கரங்களை அவள் மேல் தவழவிட்டான்.

அவள் கரங்களோ அவன் முதுகில் அலைந்தது. அவன் கரங்கள் ஒருவித அவசரத்தில் செயல்பட, இதழ்களோ அவள் இதழ்களில் தன் முற்றுகையை அரங்கேற்றியது. தமிழ் அவளுக்குக் கொடுக்கும் முதல் முத்தம்

அவன் முத்தத்தின் வேகத்தில் தடுமாறிப் போனாள் பாரதி. அவனோ கள்ளுண்ட வண்டாக இன்னும் இன்னும் அவளை ஆக்கிரமித்தான். அவன் கரங்களின் வேகமும், இதழ்களின் ஆக்கிரமிப்பும் தாள முடியாமல், இந்த உலகிலிருந்து, எங்கோ வெட்டவெளியில் பறப்பதுபோல் உணர்ந்தாள்.

அவனது சிறு தயக்கம் உணர்ந்து, அவனுக்கு ஆதரவாக செயல்பட்டாள். அவன் தேவையுணர்ந்து தன்னை அவனுக்கு முழு மனதாகவே கொடுத்தாள். இருவரும் ஒருவர் ஒருவரில் கலந்து, ஓருடலாகக் கரைந்து, களைத்து உறங்கினர்.

முதலில் கண்விழித்த தமிழ்! தன்மேல் படுத்து உறங்கும் பாரதியைப் பார்த்து, அவளது கலைந்த தோற்றத்தில் தன்னை மறந்து, அவள் தலையை நீவி, அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

✶ ✶ ✶ ✶ ✶

32

உலகை வென்ற உணர்வு
இது உன்னை வென்றதாலா?
இல்லை என்னை இழந்ததாலா?
எல்லாம் உன்னாலே

ஒருவர் மற்றவரில் கரைந்து, கலந்து, களைத்து உறங்க, தமிழின் இதழ்கள் தன் நெற்றியில் ஈர முத்தம் பதிக்க, உறக்கம் கலைந்து கண்விழித்தாள் பாரதி.

''பாரதி இப்போ டைம் என்ன தெரியுமா? சாயங்காலம் அஞ்சு மணி. நாம காலையில் சாப்பிட்டது. மதியம் சாப்பிடலை, சாயங்காலம் காபி குடிக்கலை, உனக்குப் பசிக்கலையா?'' அவள் நெற்றியில் முட்டியவாறு கேட்டான்.

''ம் பசிக்குது ஆனால், எழ மனசே இல்லையே'' அவன் தோள் வளைவில் முகம் புதைத்தவாறு சொன்னாள்.

''அப்போ சரி நீ தூங்கிட்ட இரு. நானே உன்னை குளிக்க வச்சு, சாப்பாடு ஊட்டி, அப்படியே தூங்க வைக்கிறேன்'' அவன் சிரிக்காமல் சொல்ல, அவனை பொய்யாக அடித்தாள்.

''ஹேய் நான் கேலி செய்யிறேன்னு நினைச்சியா? நிஜமாதான் சொன்னேன்'' அவளிடம் உரைத்தவன், அவள் எதிர்பாராத வேளையில், அவளை தூக்கிக் கொண்டு, பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

அடுத்த ஒருமணிநேரம், அவர்களது கேலி, கிண்டல், குளியல், கூடல் எனக் கழிய, அறையை விட்டு அவர்கள் வெளியே வருகையில் நேரம் ஆறுமணியைக் கடந்திருந்தது.

பாரதி வேலைக்காரர்களிடம் சொல்லி, அவசரமாக கேசரியும் பஜ்ஜியும் செய்யச்சொல்லி காபி அருந்தினார்கள். இருவரின் பார்வையும் ஒருவரை ஒருவர் விழுங்கிக் கொண்டிருந்தது.

அதே நேரம் அங்கே தேவாவும், சுஷ்மியும் வந்தார்கள். தங்கள் கனவைக் கலைத்தவர்கள், ''வாங்க வா சுஷ்மி காபி குடிங்க'' சொன்னவாறு அவர்களுக்கும் காபி கொடுத்தாள்.

''இவ்வளவு நேரம் காபி குடிக்காமல் என்ன செஞ்சுட்டு இருந்தீங்க? அதுசரி தமிழ் ஒரு ஓரமா உக்காந்து அழுதுட்டு இருப்பான்னு பார்த்துட்டு போகலாம்னு வந்தால் ரெண்டுபேரும் விழுந்து புரளாத குறையா இருக்கீங்க?'' ரெண்டுபேரையும் குறு குறுவென்று பார்த்தான்.

பாரதி தன் அறைக்கு நழுவிவிட, அவளைப் பின்தொடர்ந்தாள் சுஷ்மி. ''என்ன சுஷ்மி நாம போட்ட திட்டம் வின் ஆச்சா..? தோத்து போச்சான்னு பார்க்க வந்தீங்களா?'' அவளையே கூர்மையாகப் பார்த்துக் கேட்டாள்.

''அப்படில்லாம் எதுவுமில்லையே'' தடுமாறினாள் சுஷ்மி.

''சுஷ்மி உனக்கு பொய் சொல்ல வரலை, விட்டுடு. எப்படியோ எனக்கு நீங்க நல்லதுதான் செய்து இருக்கீங்க. எனக்கு உங்கமேல எந்த கோபமும் இல்லை. சொல்லப்போனால் இப்படி ஒரு அருமையான நட்பு

கிடைக்க நான் கொடுத்து வச்சு இருக்கணும்.

''உங்களோட தூண்டுதலால் தான், இன்னைக்கு அவர் மனசிலிருந்த எல்லாம் வெளியே வந்து இருக்கு. நாங்களும் எங்க வாழ்க்கையைத் துவங்கி இருக்கிறோம். இப்படி ஒரு நட்பு கிடைக்க நாங்க கொடுத்து வச்சிருக்கணும் சுஷ்மி'' ஆத்மார்த்தமாகச் சொன்னாள்.

இங்கே தேவா தமிழைக் கேலி செய்தே ஒரு வழி செய்தான். தமிழும் அவனுக்கு இணையாகப் பேசினான். அதன் பிறகு அனைவரும் சேர்ந்து வெளியில் இரவு உணவை முடித்துவிட்டே அவரவர் வீட்டுக்குச் சென்றார்கள்.

சென்றவர்களுக்கு அன்றைய இரவு அடுத்த முதலிரவாக அமைந்தது. தமிழின் தடுமாற்றங்களை, தயக்கங்களை, தாழ்வு மனப்பான்மையைக் களைய முயன்றாள் பாரதி. ஆனால், அவள் எவ்வளவு கேட்டும், அவளை அவன் நெருங்க முடியாததற்கு என்ன காரணம் என்பதை அவன் சொல்ல மறுத்துவிட்டான்.

நாட்கள் வாரங்களைக் கடக்க, அலுவலக வேலை, தங்கள் அன்னியோன்னியம், நெருக்கம் என அனைத்திலும் முன்னேறினார்கள் பாரதியும் தமிழும்.

தமிழ் ஒரு படி மேலே போய், வீட்டில் பாரதி எங்கே இருக்கிறாளோ அங்கேதான் அவனும் இருப்பான் என்று, மற்றவர் கேலி செய்யும் அளவு முன்னேறியிருந்தான். ஆனால், அதைப்பற்றி தமிழ் கவலையே பட்டதில்லை.

பாரதியும் தன்மேல் உயிரையே வைத்து தன்னுடனே இருக்க விரும்பும் தமிழின் நெருக்கத்தை அன்னியோன்னி

யத்தை விரும்பினாள். அதேபோல் அலுவலகத்தில், ஒரு முதலாளிக்குரிய தோரணையை விடாமல், கம்பீரமாக வளையவரும் தமிழை, உயிராக நேசித்தாள் பாரதி.

சுதாவும் அவர்களின் நெருக்கத்தை உணர்ந்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் துவங்கிவிட்டதை அறிந்து, துர்க்கா கோவிலுக்குத் தங்கத்தால் சூலம் கொடுத்து தன் வேண்டுதலை நிறைவேற்றினார்.

பாரதியும், தமிழும் தங்கள் தேனிலவுப் பயணத்தையும் முடித்தவர்கள், தங்கள் அன்றாடப் பணிக்குத் திரும்பினார்கள். அன்று சைட்டில் வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்கும் வேளையில்,

பாரதிக்கு நிற்க முடியாமல் கண்கள் இருட்டிக் கொண்டு வர, அருகிலிருந்த தமிழின் தோளிலேயே சரிந்தாள். தமிழ் துடித்துப் போனான்.

அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தும் அவள் மயக்கம் தெளியாமல் இருக்கவே, அவளை தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தான்.

சுதாவுக்கும் தகவல் கொடுத்துவிடவே, அவர்களும் பதட்டமாகவே வந்து சேர்ந்தார்கள். அவுர்கள் பயந்ததற்கு மாறாக, பாரதி தாயாகப்போகும் இனிப்பான செய்தி சொல்லப்படவே, சந்தோஷம் கரை புரண்டது.

படுக்கையிலிருந்த பாரதியை நெருங்கி, அவள் கரங்களை அழுத்தியவன், மற்றவர்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல், பாரதியின் நெற்றியில் அழுந்த முத்தமிட்டான். அவனது இந்த முத்தமே சொன்னது அவன் மாற்றத்தை.

இதைப் பார்த்தவாறே தேவாவும், சுஷ்மியும் அங்கே வரவே, அவனுக்கும் விஷயம் தெரியவர, ''அடப்பாவி நீ, ரொம்ப நல்லவன்னு நினைச்சேனேடா..'' அவன் வாயைப் பிளந்தவாறு, வாய்மேல் கை வைத்து அலற, அவனை அடிக்கத் துரத்தினான் தமிழ்.

அந்த இடமே கோலாகலமானது.

பாரதியை தமிழ் கவனமாக கண்ணுக்குள் வைத்து பாதுகாத்தான். சுப்பிரமணி பாரதியைப் பார்க்கவேண்டும் என்று சொல்லவே, அவளையும் அழைத்துக் கொண்டு தந்தையைப் பார்க்கச் சென்றான்.

பாரதிக்கு அப்பொழுது ஏழாம் மாதமாகையால் வயிறு நன்றாக மேடிட்டு இருந்தது. வழக்கமில்லாத பயணத்தில், பாரதியின் கால்கள் இரண்டும் நீர் கோர்த்து வீக்கமாக இருந்தது.

அந்தக் கால்களோடு கிச்சனில் நின்று வேலை செய்ய, சுப்பிரமணி அவளைக் கடிந்து கொண்டார்.

''நீ எதுக்கும்மா இந்தக் காலோட நின்னு வேலையை செஞ்சுட்டு இருக்க. நீ போய் ரூம்ல ரெஸ்ட் எடு நான் சமைக்கிறேன்'' அவளோடு போராடிக் கொண்டிருந்தார்.

மாமனாரும், மருமகளும் செல்லச் சண்டை போடுவதை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் தமிழ்.''டேய் இங்கே என்ன திருவிழாவா நடக்குது இப்படி உக்காந்து ஆன்னு பார்த்துட்டு இருக்க'' தன் வயதையும் மறந்து உற்சாகமாக வளையவரும் தந்தையை கண்களில் மகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு உணவு அனைவரும் சேர்ந்து உண்ணவே

''பார்த்தியா பார்வதி நம்ம மருமக கையால் சமைச்ச சாப்பாடு நல்லா இருக்கு'' கண்ணில் வழிந்த ஈரத்தை துடைத்தவாறே சாப்பிட்டார்.

பாரதி அவரைப் பார்க்க, ''எங்க அம்மாகிட்ட சொல்லாமல் எங்க அப்பாவால் எதையுமே செய்ய முடியாது. அவங்க எங்களோடவே இருக்குறதாத்தான் அப்பா இன்னும் நம்புறாங்க, நானும்'' சின்னக் குரலில் அவளுக்கு விளக்கினான்.

சுப்ரமணியின் நேசத்தின் அளவில் மெய் மறந்தாள் பரரதி. அனைவரும் சாப்பிட்டு முடித்து, தோட்டத்தில் வந்து அமர்ந்தார்கள். பேச்சு தமிழின் சின்ன வயது, தொழில் என திசை திரும்ப, தமிழைப் பற்றிக் கேட்பதில் பாரதியும் ஆர்வமாக கலந்து கொண்டாள்.

இறுதியில் தமிழ் எப்படி மும்பை வர சம்மதித்தான் என்று பாரதி கேட்கவே, இங்கே அந்த அரசியல்வாதியின் மூலமாக அவனுக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றிச் சொன்னார்.

''ஹையோ அப்போ எப்படி நீங்க இங்கே இருக்கீங்க? அவங்களால் உங்களுக்கும் ஏதாவது ஆபத்து வந்துடப் போகுது..'' படபடப்பாகச் சொன்னாள்.

''அந்தப் பிரச்சனை அப்போவே சரியாப் போச்சும்மா. நான் தமிழுக்கு இன்னும் ஏதாவது ஆகிடுமோன்னுதான் ரொம்பப் பயந்தேன் . எனக்கும் ஏதாவது தொல்லை வரா மாதிரி இருந்தால் , அப்போவே நானும் கொஞ்ச நாள்ல மும்பை வந்து இருப்பேன் ''

தன் கணவனின் வீரதீரச் செயலைக் கேட்டு, மெய்

சிலிர்த்து அமர்ந்திருந்தாள் பாரதி.

அத்தோடு அவனைக் காதலும், பெருமிதமும் கலந்த பார்வைப் பார்க்க, தன் மீசையை முறுக்கியவாறே, அவளை பார்த்து கண்ணடித்தான்.

''ம்ம்ம்'' உதட்டைப் பிதுக்கி அவனுக்கு அழகு காட்டினாள்.

''உள்ளே வா! அந்த உதட்டை, கடிச்சு வைக்கிறேன்! உதட்டசைவில் அவன் சொல்ல,

''நான் ரெடி!'' அவளும் அதேபோல் பதில் கொடுக்க, இருவருமே ஒருவரைப் பார்த்து மற்றவர் சிரித்துக் கொண்டார்கள்.

நேரம் போவதே தெரியாமல் பேசியவர்கள், ''ம்ச்! மறந்தே போயிட்டேன் பார்த்தியா? உன் கால் ஏற்கனவே வீக்கமா இருக்கு. இதில், காலைத் தொங்கப் போட்டே உக்காந்து இருக்க?

''முன்னாடியெல்லாம் இப்படிப் புள்ளத்தாச்சியோட கால் வீங்குனா அவளுக்கு மனசுக்குள் ஏதோ நிறைவேறாத ஆசை இருக்கு. அதை தீர்த்து வைங்கன்னு சொல்லுவாங்க!'' எனத் தன்போக்கில் சொன்னவர், அவர்களை தூங்கப் போகச் சொன்னார்.

அறைக்குள் வந்த மனைவியை அணைத்துக் கொண்டான். ''உனக்கு கஷ்டமா இருக்கா? இங்கே வேலை செய்யிறது?'' அக்கறையாகக் கேட்டான்.

பாரதியைப் பொறுத்தவரை அவள் வீட்டு வேலை செய்யும் தேவையே இதுவரை நேர்ந்தது இல்லை, எனவேதான் கேட்டான்.

''எனக்கு சந்தோசமாத்தான் இருக்கு அன்பு அதிலும் மாமா எனக்கு ஹெல்ப் பண்ணுறது எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு. எங்க வீட்டில் அப்பாவோ, அண்ணனோ அவங்க காபி குடிச்ச கப்பைக் கூட கழுவ மாட்டாங்க. ஆனால், மாமா எல்லா வேலையும் அவரே செஞ்சுட்டு, உங்களையும் பார்த்துட்டு கிரேட் தெரியுமா? எனக்கு உங்க அப்பாவை ரொம்ப புடிச்சு இருக்கு'' அவனைப் பார்த்து குறும்பாகக் கண்ணடித்துச் சொன்னாள்.

''உனக்கு என் அப்பாவைப் பிடித்ததில் எனக்கு எந்தப் பொறாமையும் இல்லை எங்க அப்பா, முன்னாடி என்னைக் கல்யாணம் செய்யச் சொல்லும்போது வர்ற மருமக உங்களை உக்கார வச்சு ஆக்கிப் போடுவான்னு கனவு காணாதீங்கன்னு சும்மா சொல்லுவேன்.

''ஆனால், நீ நான் விளையாட்டுக்குச் சொன்னதைக் கூட உண்மையாவே ஆக்கிட்டு இருக்க'' அவள் நெற்றியில் முட்டியவாறு சொன்னான்.

''அதெல்லாம் விடுங்க மாமா சொன்னதைக் கேட்டீங்களா? கால் வீங்கி இருந்தா பொண்ணுக்கு நிறைவேறாத ஆசை இருக்குனு அர்த்தமாம்'' அவனை குறும்பாகப் பார்த்துச் சொன்னாள்.

''என் பொண்டாட்டிக்கு அப்படி என்ன ஆசைன்னு சொல்லுங்க நிறைவேற்றிடுவோம்'' அவன் கைகள் அவளை வளைக்க,

''ச்சு விளையாடாதீங்க'' அவன் கைகளைத் தடுத்தாள்.

''இது இல்லையா வேற என்ன?'' அவன் இதழ்கள் அவள் கன்னத்தில் ஊர்வலம் போய், அவள் கழுத்தில் இளைப்பாறியது.

அவனுக்கு வாகாக இழைந்தவள், ''இப்போ நான் சொல்லவா வேண்டாமா ?'' சிணுங்கினாள்.

''சரி சொல்லு'' தன் விளையாட்டை கொஞ்சம் நிறுத்தினான்.

''அது வந்து அது நீங்க ஏற்கனவே நான் கேட்டு பதில் சொல்லாத அந்தக் கேள்விக்கு எனக்கு விடை தெரியணும் அவ்வளவுதான்'' அவன் சட்டை பட்டனைத் திருகியவாறு சொன்னாள்.

அவளுக்குச் சொல்வதில் அவனுக்கு இப்பொழுதும் தயக்கம் இருந்தாலும் இந்த மாதிரி நேரத்தில் அவள் கேட்பதை மறுக்க மனம் வரவில்லை. எனவே கொஞ்சம் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு அவளிடம் சொல்ல முயன்றான்.

அதற்குமுன் அவனுக்கு வேறு ஒன்று அறிந்தே ஆகவேண்டும், மிகுந்த திறமையானவளும், தைரியமான வளும், ஒரு தனித்தன்மையும் நிமிர்வும் கொண்டவள் எப்படித் தன்னை விரும்பினாள் ஏற்றுக் கொண்டாள் என்பதை தெரிந்தே ஆகவேண்டும் போலிருந்தது.

''பாரதி நான் எல்லாமே உனக்குச் சொல்லுறேன். ஆனால், அதுக்கு முன்னாடி நீ எப்படி எப்போ என்னை விரும்பின? உனக்கு என்னைப்பற்றி முழுமையா தெரிந்திருந்தும் எப்படி என்னைத் திருமணம் செய்ய சம்மதிச்ச?'' அவளிடம் கேட்டான்.

அவனைப் பார்த்து கடகடவென்று சிரித்தவள், ''ரொம்ப சீக்கிரம் கேட்டுட்டீங்க போங்க'' அவனை கேலி செய்தாள்.

''கிண்டல் பண்ணாமல் சொல்லு பாரதி. நீ எவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்தன்னு உனக்குப் புரியவே இல்லை. அது எனக்குத் தெரியும், அதான் கேக்குறேன் இல்லன்னா உனக்கு மேரேஜ் லைஃப்ல இன்ரெஸ்ட் இல்லாமல்'' அவள் மேடிட்ட வயிற்றைத் தடவியவாறு அவன் கேட்டுக் கொண்டிருக்க, வெடுக்கென அவன் கையைத் தள்ளிவிட்டாள்.

அவளது விலகலைத் தாங்க முடியாமல் ''ப்ளீஸ் பாரதி என்னமோ எனக்குத் தெரிஞ்சுக்கணும்னு தோணிச்சு. கண்டிப்பா உனக்கு என்னைவிட பெட்டரா ஒருத்தன் கிடைச்சிருப்பான். அப்படியிருக்கும்போது, ஒரு கோழையான என்னைப் போய்'' அவன் அப்படிப் பேசவே அவன் வாயைத் தன் கரங்களால் மூடினாள்.

''உங்களைக் கோழைன்னு யார் சொன்னது? நீங்களும் சராசரி ஆண் மகன்தான். ஆனால், குழந்தையிலிருந்தே பெண்களோடு பழகாததாலும், சில பெண்களுடன் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தாலும் ஏற்பட்ட தயக்கம்னு வேண்ணா சொல்லலாம்'' அவனைத் திருத்தினாள்.

''சரி சரி அப்படியே இருந்துட்டுப் போகட்டும். நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..'' அவன் அதிலேயே இருந்தான்.

''அன்பு எப்பவுமே ஒரு பெண்ணை, தன்னோட பெண்மையை உணர வைக்க, தன்னைப் பெண்ணாகவே உணரவைக்க முடியும் ஒருவனைத்தான் அவ விரும்புவா. அப்படிப் பார்த்தால் நான் உங்க அருகில் மட்டும்தான் ஒரு பெண்ணாக உணர்ந்தேன்'' அவள் சொல்லி முடிக்கவே, அவன் நம்பாதத் தன்மையுடன் அவளைப் பார்த்தான்.

அதை உணர்ந்தவள், ''என்ன நம்ப முடியலையா? எப்பவுமே என்னைச் சுற்றி இருந்தவர்கள் மத்தியில் , எல்லாருமே ஆண்களாக இருந்தும் அதுவரை , என்னை நான் பெண்ணாக உணர்ந்ததே இல்லை .அப்படி ஒரு சந்தர்ப்பம் இருந்ததே கிடையாது. ஆனால், நீங்க மட்டும்தான், நான் நெருங்கும் போது, என்னை விட்டு விலக நினைச்சீங்க.

''என்னை தவிர்க்க நினைச்சீங்க. நீங்க அனிச்சையா செய்த அந்தச் செயலே, நான் ஒரு பெண் என்பதை எனக்கு உணர்த்தியது. அதே நேரம் உங்களோட தொழில் திறமை, நேர்த்தி, பழகும் விதம். உங்களால் முடியாது என்ற பிறகும் கூட, சுஷ்மி வரும்வரை எனக்குத் துணையா இருந்தது இப்படிப் பட்ட விஷயங்கள் தான் எனக்கு உங்க மேல ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியது. என்னை அறியாமலேயே நான் உங்களை ரொம்ப விரும்பினேன்.

''உங்களோட இந்தத் தயக்கத்தைப் போக வைக்கணும், சாதாரணமா மாற்றணும் இப்படியெல்லாம் என்னை மீறியே தோன்றத் துவங்கியது. உங்களோட இந்தக் குணங்களையே நான் எனக்குள்ளே ரொம்ப ரசிச்சு, விரும்பி இருக்கேன்.

''அந்த நேரத்தில் தான் நம்மோட திருமண அறிவிப்பு அன்னைக்கு, உங்களை எந்த சூழலிலும் இழக்க விரும்பாமல் தான் உங்களுக்கே உங்களை உணர்த்தவும், என்னோட காதலை, நேசத்தை உங்களுக்கு தெரிவிக்கவும் தான், உங்களை கிஸ் பண்ணினேன். ஆனா, அதைச் செய்தபோது நான் தவித்த தவிப்பு எனக்குத்தான் தெரியும். எங்கே நீங்க தவறா நினைத்து விடுவீங்களோ என்னைக்

கேவலமானவளா'' அவளை மேலே சொல்ல விடாமல் அவள் வாயை மூடினான்.

''தயவுசெய்து அப்படி சொல்லாதே பாரதி. உன் அருகில் மட்டும்தான் நான் நிறைவை உணர்ந்தேன். ஒரு மதிப்பை உணர்ந்தேன் அன்னைக்கு மட்டும் நீ அதைச் செய்யாமல் இருந்திருந்தால், கண்டிப்பா நான் திருமணத்துக்கு சம்மதித்திருக்கவே மாட்டேன் உன்னையும் இழந்திருப்பேன். அன்னைக்கு அந்தச் சூழலில் அது நடந்த பிறகுதான் சில மென்மையான உணர்வுகளையே நான் உணர்ந்தேன் அப்படியிருக்கும்போது உன்னைப்போய் தவறா'' சொன்னவன் இப்பொழுது தைரியமாக அவள் இதழ்களில் கதை எழுத, அவன் முத்தத்தில் மூழ்கினாள்.

ஒரு வழியாக அவன் முத்தம் முடிவிற்கு வர, பாரதி தொடர்ந்தாள். ''எது எப்படி இருந்தாலும், கண்டிப்பா உங்களை இழக்கக் கூடாது என்பதில் உறுதியா இருந்தேன். ஒவ்வொரு நாளும் என்னோட நெருக்கத்தையும், காதலையும் உங்களுக்குப் புரிய வைக்க முயன்றேன்.

''நீங்க நெருங்கி வருவது மாதிரியிருக்கும். ஆனால், அப்படியே விலகிடுவீங்க. என்னால் அதைத்தான் தாங்கவே முடியலை. உங்களுக்கு என்னைப் பிடிக்கலன்னா கூடப் பரவாயில்லை. பிடிச்சிருந்தும் ஏன் அப்படி நடந்து கிட்டீங்க..'' அன்றைய நாளின் தவிப்பு அவளிடம்.

அவளது தவிப்பை உணர்ந்தவன், அவளை மென்மையாக, ஆதரவாக அணைத்துக் கொண்டான். அவளும் அன்றைய ஏக்கத்தை போக்கிக் கொள்பவள் போன்று, தன் முகத்தை அவன் நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டாள்.

அந்த மௌனத்தைக் கலைத்தான் தமிழ்.

''அது வந்து பாரதி என்னோட ஆசையும், தேவையும், தாபமும் ஒவ்வொரு நாளும் அதிகரித்தாலும், என்னால் உன்னை நெருங்க முடியாததற்குக் காரணம் ஒண்ணே ஒண்ணுதான்'' இதே இடத்தில் மறுபடியும் நிறுத்தினான்.

''அன்பு இதை நீங்க ஏற்கனவே சொல்லிட்டீங்க'' அவன் முகத்தைத் திருப்பி, அவன் கண்களோடு கண் கலந்தாள்.

''சொன்னா நீ சிரிக்கக்கூடாது. கோபப்படக்கூடாது'' சிறு பிள்ளைத்தனமாகக் கேட்டான்.

அவள் முறைக்கவே ''இல்ல எனக்கு செக்ஸ் பத்தி எதுவுமே விலாவரியா தெரியாது நான் என்னோட உணர்ச்சி வேகததில் உன்னைத் தொட்டு என்னால் உன்னை'' தயக்கமாக இழுக்க,

''அன்பு!'' கிட்டத்தட்டக் கத்தியவள், அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

''அது மட்டுமில்லை அப்படியே முடிஞ்சுட்டாலும் நான் எதுக்குமே லாயக்கில்லையோன்னு நீயும் என்னை கேலி செஞ்சுடுவியோன்னு ரொம்ப பயம். சொல்லப் போனால் மனசுக்குள் ஒவ்வொரு நாளும் நான் மருகக் காரணம் இதுதான்'' ஒரு வழியாக தன் மனதுக்குள் இருந்த அனைத்தையும் கொட்டிவிட்டான்.

''ஐயோ அன்பு நம்ம வாழ்க்கையை கேவலம் இந்தச் செக்ஸ் தான் முடிவு பண்ணும்னு நீங்க எப்படி நினைச்சீங்க. எனக்கு உங்களைப் பற்றி முழுசாத் தெரியும். அப்படியிருக்கும்போது இப்படி ஒரு காரணத்துக்கு வேண்டி

உங்களை கேலி செய்வேன்னு நீங்க எப்படி நினைக்கலாம்?

''அது மட்டுமில்லை இந்த பாரதிகிட்ட இருந்து தமிழைப் பிரிக்கும் சக்தி எந்த ஒரு விஷயத்துக்கும் கிடையாது. பாரதியையும் தமிழையும் எப்பொழுதும் பிரிக்கவே முடியாது'' என்று குழைந்தவள்,

''உங்களை என்ன செய்தால் தகும் நாங்கல்லாம் செக்ஸ்ல பிஹெச்டி முடிச்சுட்டா கல்யாணம் செஞ்சு கிட்டோம். லூசுப்பையா இந்தக் காரணத்தை மட்டும் முதல்லையே சொல்லியிருந்தீங்க உங்களை என்ன செஞ்சிருப்பேன்னு எனக்கே தெரியாது'' என்று கோபமாகி, அவனை சரமாரியாக அடித்தாள்.

அவள் கரங்களைத் தடுத்தவன், ''என்னோட அந்தப் பயம், தயக்கம், அனைத்தையும் தகர்த்தெறிய உதவியதே உன்னோட அன்பும், காதலும் நெருக்கமும் தான். என்னோட இந்த மாற்றம், தைரியம், நிமிர்வு எல்லாம் உன்னாலே கிடைத்ததுதான் பாரதி.

ஒரு பொண்ணோட முகம் கூட பார்த்து பேச முடியாமல், தயங்கி, தவித்து, தொடை நடுங்கியா இருந்த என்னை, இவ்வளவு தைரியமா, பத்து பெண்கள் மத்தியில் கூட, நிமிர்வா பேச வைத்தது நீதான். சொல்லபோனால் இந்த நமது பந்தம், நமக்கென்று ஒரு உறவு இப்படி என் வாழ்வில் அமைந்த எல்லாமே உன்னாலே தான்'' சொன்னவனின் தேவைகள் தொடர, ஆசை மனைவியாக அதை நிறைவேற்றினாள் பாரதி.

தமிழ் என்ற தனி மனிதனின் வாழ்வில், அவன் அன்னையாக, தோழியாக மனைவியாக என எல்லாமாக மாறிப் போனாள் பாரதி.

அவனுக்கென்று புது உறவும் அவள் கருவில் உருவாகியிருக்கும் அவனது மகளும் வந்து, அவன் வாழ்க்கை தேவதைகளின் மத்தியில் தொடரும் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

சுபம்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

எல்லாம்
உன்னாலே
இன்பா அலோசியஸ்
வெளியீடு